# ஆழ்வார்கள் காலநிலை

பேராசிரியர்

மு. இராகவையங்கார்

மணிவாசகர் நூலகம்
சிதம்பரம்

மணிவாசகர் நூலகம்
சிதம்பரம்



புதியபதிப்பு : 15, ஆகஸ்டு, 1981

உரிமை செறிவு

பதிப்பாசிரியர்:

ச. மெய்யப்பன், எம். ஏ.

விலை ரூ. 16-00

எங்கள் வெளியீடுகள் கிடைக்குமிடம்

மணிவாசகர் நூலகம்
99, லிங்கி செட்டித் தெரு, சென்னை-600 001
258, மேலமாசி வீதி, மதுரை-625 001

அச்சிட்டோர் : கற்பகம் அச்சகம், சென்னை-600 002

# முகவுரை

## (முதற்பதிப்பு)

மதுரைமாநகரில் 1926 ஆம் பிப்ரவரி மீ, **மதுரைத் தமிழ் சங்கத்தாரும்** 'ஒய். யெம். ஸி. ஏ.' சங்கத்தாரும் சேர்ந்து நடத்திவந்த உபந்நியாசத் தொடர்களிலே- மதுரைப் பிரபல வக்கீல் **ஸ்ரீமாந் : எஸ். சேஷ ஐயங்கார் அவர்கள்,** தலைமையின்கீழ் ஆழ்வார்கள் காலநிலை என்ற விஷயம் என்னால் உபந்நியாசிக்கப் பெற்றது. அப்போது யான் கூறியவை அச்சில் வெளி வருவதை அன்பர் பலரும் விரும்பினமையின், மயிலாப்பூர்த் தமிழர் கல்விச் சங்கத்தில் நடை பெறும் **தமிழர் நேசன்** பத்திரிகையில் முறையே அவற்றை எழுதி வெளியிட்டு வரலானேன். அவ்வுபந்நியாசப் பிரதி பெறவிரும்பிப் பலரும் அடுத்தடுத்து எனக்கு எழுதிவருகின்ற மையால் புதிய திருத்தங்களும் கீழ்க்குறிப்புக் களுமிட்டுக் குலசேகரப் பெருமாள் சரிதம் முடியவுள்ள பாகத்தை **ஆழ்வார்கள் காலநிலை**யின் முதற் பகுதியாக இப்போது வெளியிடு கின்றேன். இந்நூலைத் "தமிழர் கல்விச் சங்கம்" பிரசுரங்களுள் ஒன்றாகக் கொண்டு அச்சுக் குரியவற்றை யெல்லாம் அன்புடன் செய்து உதவியவர் —ஷை அக்கல்விச் சங்கத்தின் காரியதரிசியும் சென்னை அட்வொகேட்டு களுள் ஒருவருமான நண்பர்; ஸ்ரீமான் **பி. என். அப்புஸாமி ஐயரவர்கள்** பி. ஏ., பி. எல். இவர்கள் பேருதவி என்னால் என்றும் மறக்கற்பால தன்று. இந்நூலில் இரண்டாம் பகுதியையும் ஞான பரிபூர்ணர்களான ஆழ்வார்கள் திரு வருளை முன்னிட்டு விரைந்து முடிக்கக் கருதி யுள்ளேன்.

திருவல்லிக்கேணி,
13—2—1929

இங்ஙனம்,
மு. இராகவையங்கார்.

# பதிப்புரை

**ச. மெய்யப்பன், எம். ஏ.,**
தமிழ் விரிவுரையாளர்,
அண்ணுமலைப் பல்கலைக்கழகம்

தமிழ் இலக்கிய உலகில் இரட்டைப் புலவர்கள் இணைந்து பாடிய புலவர்கள். ஒருவர் முற்பாதியைப் பாட மற்ருெருவர் பிற்பாதியைப் பாடி நிறைவு செய்ய இணைந்து வாழ்ந்தவர்கள். இலக்கண உலகில் விசாகப் பெருமாளையர், கந்தப்பையர் ஆகிய இருவரும் சிறந்த புலமையாளர்கள்; தணிகை தந்த செல்வர்கள். ஆய்வு லகில் ரா. இராகவையங்காரும் மு. இராகவையங்காரும் குறிப்பிடத்தக்க பேரறிஞர்கள்.

ஐயங்கார் இருவரும் நெருங்கிய உறவினர்; பாண்டித்துரைத் தேவரால் தோற்றுவிக்கப் பெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தலைமையாளர்கள்; அச்சங்கம் வளரப் பாடுபட்ட ஆசிரியர்கள். மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளிவந்த "செந்தமிழ்" என்னும் இதழ், வாழ்வும் வளமும் பெற உதவிய கருத்துக் கொடையாளர்கள். சேதுபதி மன்னர்களின் அன்புக்குப் பாத்திரமான புலமைச் செல்வர்கள்.

மு. இராகவையங்கார் கால ஆய்விலும் கல்வெட்டு ஆய்விலும் மிக வல்லவர், சென்னைப் பல்கலைக் கழகம் பெருமுயற்சி கொண்டு தொகுத்த தமிழ் அகராதியில் இவர் பங்கு தலையாயது. "செந்தமிழ்" வாயிலாக இவர் தொகுத்து வெளியிட்டு நூலாக்கிய பெருந்தொகை, இவர் "கொங்குதேர் வாழ்க்கையர்" என்பதற்கு நல்ல சான்று. "தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி" இவரின் இலக்கணப் புலமையும் ஒப்பாய்வும் காட்டும் இலக்கண நூல். இவர் வாழ்ந்த காலம் - இருபதாம் நூற்ருண்டின் முற்பகுதி - தமிழக வரலாறு தெளிவு பெற வேண்டும் என்று அறிஞர்கள் அயராது பாடுபட்ட காலம். கோபிநாதராவ், வெங்கையா போன்ற அறிஞர்கள் கல்வெட்டுக்களை ஆராய்ந்து பல்லவர் பாண்டியர் சோழர் வரலாறுகளை வெளியிட்டனர். துப்ராயில், டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார்,

எச். கிருஷ்ண சாஸ்திரி, தஞ்சை ராவ் பகதூர் கே. எஸ். சீனிவாச பிள்ளை, எம். சீனிவாச ஐயங்கார், பி. டி. சீனிவாச ஐயங்கார், கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி ஆகியோர் தமிழக வரலாறு காண முனைந்து ஆய்வு நூல்களும் கட்டுரைகளும் வரைந்தனர். இந் நிலையில் இவர்களிடையே வாழ்ந்து கால ஆய்வும் கல் வெட்டு ஆய்வும் செய்த பேராசான் மு. இராகவையங் கார். இவரின் கருத்துக்களை ஏற்றவர் பலர்; மறுத்தவர் பலர். என்றாலும் வரலாற்று ஆய்வுலகில் இவர் ஒரு மைல்கல். "சாசனத் தமிழ்க்கவி சரிதம்" என்னும் இவரது நூல், இவரின் கல்வெட்டு ஆய்வுக்கு நல்ல சான்று. கால ஆய்வுக்கு இவர் எழுதிய "ஆழ்வார்கள் காலநிலை" தக்க எடுத்துக்காட்டு. மு. இராகவையங்கார் அவர்களுக்கு நூற்றாண்டுவிழா முடிந்து விட்டது. அவர் படைத்த 'ஆழ்வார்கள் காலநிலை' வெளிவந்து ஐம்பது ஆண்டுகள் ஆய்விட்டன. என்றாலும் அவருடைய ஆராய்ச்சி, மூத்துவிடவில்லை; ஆய்வாளர்களுக்கு மூல பண்டாரமாகவே விளங்குகின்றது.

ஆழ்வார்கள், ஆசாரியர்கள் வரலாறுகளைக் கூறு வதில் கருடவாகன பண்டிதர் இயற்றிய திவ்ய சூரி சரி தமும், பின்பழகிய பெருமாள்சீயர் மணிப்பிரவாள நடையில் எழுதிய ஆறாயிரப்படி குருபரம்பரையும் முதன்மையானவை. இவற்றைக் கொண்டே ஆழ் வார்கள் ஆசாரியர்கள் வைபவங்களை அறிந்தனர். இவ் வரலாற்றில் ஆசாரியர்கள் வரலாறு, ஆய்வுக்கு உகந்த தாக உள்ளது. ஆழ்வார்கள் வரலாறுகளோ புராணச் சாயல் பெற்றுவிட்டன. அவர்கள் துவாபரயுக இறுதி யிலும் கலியுகத் தொடக்கத்திலும் அவதரித்தார்கள் எனப் புராண காலங்களை அவர்களுக்கு உரியதாக அந் நூல்கள் கூறின. இந்நிலையில் சிறந்த வைணவரான மு. இராகவையங்கார், இக் காலம் பொருத்தமற்றது என்று எண்ணினார். கி. பி. 823-ல் தோன்றிய நாத முனிகளுக்கு முற்பட்டும் சங்க காலத்திற்குப் பிற்பட்டும் வாழ்ந்தவர்கள் ஆழ்வார்கள் எனத் தக்க சான்றுகள் தந்து நிறுவினார். இவர் முடிவு செய்த காலக்குறிப்பே பின்வந்த அறிஞர்களால் பெரிதும் போற்றப் பெற்றது;

பின்பற்றப் பெற்றது. இவ்வகையில் "ஆழ்வார்கள் காலநிலை"க்குத் தனி இடம் உண்டு.

இக் காலத்தில் "கூட்டு முயற்சி" ஆய்வுலகில வேண்டும் என்று வற்புறுத்துகின்றனர். ஆதலின் எண்ணிய கருத்துக்களைத் தக்காருடன் கலந்து முடிவு செய்யும் கூட்டாய்வு நெறி போற்றப்படுகின்றது. இந் நெறியை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரேயே போற்றியவர் மு. இராகவையங்கார். ஆண்டாள் தம் திருப்பாவையில் "வெள்ளி எழுந்தது வியாழம் உறங்கிற்று" என்று பாடுகின்ருர். இக் குறிப்பைக் கொண்டு இக் காலம் கி. பி. 731 என்று மு. இராகவையங்கார் முடிவு செய்துள்ளார். இம்முடிவுக்காக இவர் அக்காலத்தில் காலக் கணிதத்தில் வல்லவராக விளங்கிய சௌமிய நாராயண ஐயங்கார், கே. ஜி. சேது ஐயர், கே. ஜி. சங்கர ஐயர், சோமசுந்தர தேசிகர் ஆகியோரைக் கலந்து தம் கருத்துக்கு அரண் செய்து கொண்டார் என்ருல் இவரின் ஆய்வு வேட்கை வெளிப்படும்.

இவர் நடுநிலை ஆய்வாளர்; வைணவர்களை மறந்தும் புறந்தொழா மாந்தர் என்பர். இவர் அந்நெறியினர் என்ருலும் சைவ நாயன்மார்களை மதித்த திறத்தினை ஆழ்வார்கள் காலநிலை காட்டுகின்றது. "அவதரித்த சம்பந்த மூர்த்திகள்" என்றும், "ஏழாம் நூற்றுண்டில் சைன பௌத்தர்கள் தென்னுட்டில் மேலோங்கியிருந்தவர் என்பதும் அப்பரும் சம்பந்தரும் வாதாடி அவரது ஆதிக்கத்தைத் தொலைத்தவர்கள் என்பதும் சரித்திரப் பிரசித்தமானவை" என்றும் இவர் எழுதியிருப்பன, இவரின் சமநிலை ஆய்வுக்குத் தக்க சான்றுகள்.

நாயன்மார் வரலாற்றில் மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் மிக விரிவானது. தமிழ்க்கடல் மறைமலையடிகள் இப்பொருள் குறித்துப் பெருநூலே படைத்தார். மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் போலவே ஆழ்வார்கள் வரலாற்றில் திருமங்கையாழ்வார் வரலாறும் காலமும் மிக விரிவானது. ஆதலின் மு. இராகவையங்கார் ஆழ்வார்கள் காலநிலையில் நூறு பக்கங்கள் இப்பொருள் பற்றி ஆராய்ந்துள்ளார். இவ்விரிவான

ஆய்வு, இலக்கிய வரலாற்றில் திருப்புமையமாக அமைந்தது.

இக்காலத்தில் எம். ஃபில், பிஎச். டி. போன்ற சிறப்புப் பட்டங்களுக்கான ஆய்வு நெறிகள், முறைப் படுத்தப்பட்டுள்ளன. இந்நெறி பற்றிய நூல்களும் வெளி வந்துள்ளன. இந்நிலையில் ஐம்பதாண்டுகளுக்கு முன் ஆய்வு நெறி எவ்வாறு இருந்தது என அறிதற்கு இந் நூல் பெருந்துணை செய்யும். ஒரு பொருளை எடுத்துக் கொள்ளல்; அப்பொருள் பற்றிய கருத்துக்களைத் திரட்டல்; உண்மை காணுதல்; மாறுபட்ட கருத்துக் களைச் சான்றுகாட்டி மறுத்தல்; தம் கருத்து நிறுவுதல் என்னும் ஆய்வு நெறியே, இவரது நெறி. "கிடைத் துள்ள சாதனங்களையெல்லாம் திரட்டிக் கொண்டு ஒரு சார்புமின்றிச் சரித்திரகாரன் ஒருவன் செய்யும் ஆராய்ச்சி போன்றதேயன்றி, சம்பிரதாய முறையுள் நின்று கூறுவதன்று" (பக். 30) என இவர் குறித்தலால் இவரின் வரலாற்று நோக்கும் உண்மை காணும் போக்கும் பெறப்படும்.

சிறந்த ஆய்வு நூலாகத் திகழும் இது, ஆய்வு நெறி வளர்ந்திருக்கும் இக் காலத்தில் கிடைத்தற்கரிய நூலாகிவிட்டது. இதனை மணிவாசகர் நூலகம் மறு பதிப்பாகக் கொண்டு வந்துள்ளது. ஆசிரியரின் வேணவாவுக் கேற்ப, பின்னர் வந்த கட்டுரைகளையும் இப் பதிப்பில் இணைத்து வெளியிடுவதில் பெருமகிழ்வு அடைகிறோம். இந்நூல் வெளிவரத் துணை நின்ற திருவாளர்கள் **மு. சண்முகம்பிள்ளை**, பேராசிரியர் **பார்த்த சாரதி** இருவருக்கும் எங்கள் நன்றியுரியது. இந் நூல் நூலகத்தின் வளர்ச்சிக்கும் தமிழ் ஆய்வுக்கும் ஏற்றது. நல்ல-பயனுள்ள நூல்களை வெளியிடும் மணிவாசர் நூலகத்திற்குத் தொடர்ந்து ஆதரவு தந்து அந்நூலகத் தினை ஊக்கப்படுத்துதல், தமிழ் மக்களின் பொறுப்பு. இது மணிவாசகர் நூலகத்திற்கு என்றும் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடையேன்.

**ச. மெய்யப்பன்.**

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | ... | 1 |
| 2. | முதலாழ்வார் மூவர் | ... | 36 |
| 3. | திருமழிசையாழ்வார் | ... | 50 |
| 4. | பெரியாழ்வார் | ... | 73 |
| 5. | ஸ்ரீ கோதையார் | ... | 102 |
| 6. | திருமங்கை மன்னன் | ... | 130 |
| 7. | தொண்டரடிப் பொடியாழ்வார் | ... | 240 |
| 8. | திருப்பாணாழ்வார் | ... | 244 |
| 9. | குலசேகரப் பெருமாள் | ... | 246 |
| 10. | சடகோபரும் அவர் அருளிச் செயல்களும் | ... | 276 |
| 11. | அருளிச் செயற் பாடவமைதி | ... | 291 |



பேராசிரியர்

**மு. இராகவையங்கார்**

# ஆழ்வார்கள் காலநிலை

## முதலாம் அதிகாரம்

## முன்னுரை

இன்று பிரசங்கிக்கும்படி இச்சங்கத்தாரால் எனக்கு நியமிக்கப்பெற்ற பொருளுரை "ஆழ்வார்கள் காலநிலை" என்பது. அவதார புருஷர்களும் ஞானபரி பூரணர்களுமான பழைய திருமாலடியார்களைப் பற்றிப் பேசும்படி நான் நியமிக்கப்பெற்றது எனது பெரும் பேறேயாகும். அப்பேற்றை நான் பெறினும் அப்பெரி யோர்களுடைய மாட்சிகளை அறிஞர்களான நீங்கள் மதிக்கும்படி எடுத்துரைக்கக்கூடிய திறமை என்னிடஞ் சிறிதுமில்லை. ஆயினும், உங்கள் நியமனப்படி நான் கூறப்புகும் சிறுவார்த்தைகளும் அப்பெரியாரைப் பற்றியனவேயாதலால், எவ்வகையினும் நீங்கள் அவற்றை விருப்பாய் ஏற்றுக் கொள்வீர்களென்ற உறுதியுடன் தெரிந்த சிலவற்றைக் கூறத் தொடங்கு கின்றேன்.

இன்று எடுத்துக்கூறப்புகும் 'ஆழ்வார்கள் கால நிலை' என்ற விஷயத்தில், அவர்கள் வாழ்ந்த காலங்கள்

இன்ன வென்பதையும் அக்காலத்து வைணவசமய மிருந்த நிலைமை இத்தகையதென்பதையும் விளக்க விரும்புகிறேன். இவற்றைக் கூறப்புகுமுன், அவ்வாழ் வார்கள் அவதாரத்துக்கு முன்னிருந்த தென்னாட்டு வைணவசமய நிலைமையை ஆராய்ந்து தெரிந்து கொள்ளுதல் நலம். ஆதலின் அதனை முதலில் நோக்குவோம்.

## வைணவசமயத்தின் பழைமை பெருமைகள்

பழைமையும் பெருமையும் வாய்ந்த இப்பரத கண்டத்தில் அநாதியாக நிலைபெற்றுள்ள மதங் களிலே, திருமால் சமயமும் ஒன்றென்பதற்கு வேத வேதாங்கங்களும் இதிகாச புராணாதிகளுமே தக்க சான்றாக உள்ளன. இதனை விரித்து விளக்கற்குரிய வடமொழி தென்மொழி நூல்கள் மிகுதியாக உள்ளமை யால், இதுபற்றி நாம் இங்கு ஆராய வேண்டுவதில்லை. அதனால், வடவேங்கடம் தென்குமரிக் கிடைப்பட்ட தமிழகத்தில் வைணவசமயத்தின் பழைய நிலைமை எத்தகையதென்பதே இங்கு நோக்கற்குரியது.

தென்னாட்டின் சமய சரித்திரங்களை நீள ஆராய்ந்து செல்லுமிடத்து, திருமாலைப் பரதெய்வமாகக் கொண்டு வழிபட்டுவருங் கொள்கை, அந்நாட்டு மக்களிடம் அநாதியாகவே தோன்றியுள்ளது என்றமுடிபு பெறப் படத் தடையில்லை. முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்று நான்காகப் பகுத்துக்கொண்டு இந்த ஞாலத் துக்கு **நானிலம்** என்ற பெயரைத் தமிழர் இட்டு வழங்கிய போதே, திருமால் வணக்கமும் இங்கு உண்டாகி விட்டது. தமிழ்ப்பெருமுனிவராகிய அகத்தியனாரின்

தலைமை மாணுக்கராகச் சொல்லப்படும் ஆசிரியர் தொல்காப்பியனுர், அந்நான்கு நிலங்களையும் அவற்றுக்குரிய தெய்வங்களுடன் வைத்துப் பாகுபடுக்கு மிடத்தே—

> **" மாயோன் மேய காடுறை யுலகமும்**
> **சேயோன் மேய மைவரை யுலகமும்**
> **வேந்தன் மேய தீம்புன லுலகமும்**
> **வருணன் மேய பெருமணலுலகமும்**
> **முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்**
> **சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே."**
>
> (பொருளதி. அகத்திணை, 5.)

என்று கூறுகின்றுர். இதனுல், மாயோனுகிய திருமால்—முல்லை என்ற காடும் காட்டுச்சார்புமான நிலத்திற்கும், சேயோனுகிய முருகன்—குறிஞ்சி என்ற மலையும் மலைச் சார்புமான நிலத்திற்கும், வேந்தனுகிய இந்திரன்—மருதம் என்ற ஊரும் ஊர்ச்சார்புமான நிலத்துக்கும், வருணன்—நெய்தலாகிய கடலும் கடற்சார்புமான நிலத்துக்கும் உரிமைபூண்ட தெய்வங்களென்பதும், அத்தெய்வவழிபாடுகள் தொல்காப்பியர்க்கு மிகவும் முற்பட்ட காலத்திலேயே தமிழ் மக்களாற் கைக்கொள்ளப்பட்டவை என்பதும் நன்கு விளங்கும். இந்நான்கு நிலங்களோடு 'முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து—நல்லியல் பழிந்து' பாலையை ஐந்தாநிலமாகக் கொண்டு, அதற்குக் கொற்றவையைத் தேவதையாகக் கூறுவர், பிற்பட்ட ஆசிரியர்.[1]

இத்தெய்வங்களுள்ளே, இந்திர வருணர்களுக்கு அவ்வவர் நிலவுரிமை பற்றியமைந்த தனிக் கோயில்

---

1. தொல்காப்பியம், அகத்திணை. 30—இளமபூரணருரை.

களேனும் ' அவரை வழிபட்டுவந்த கொள்கைகளேனும் இருந்தனவென்று தெரியவரவில்லை. ஆனால் திருமால், முருகக்கடவுள், கொற்றவை என்பார்க்கு அவ்வாறமைந்த கோயில்களும் வழிபாடுகளும் பழங்கால முதல் இன்றுவரை இந்நாட்டில் உள்ளன. எனவே, வைணவம், கௌமாரம், சாத்தம் போன்ற கொள்கைகள், தமிழகத்தில் விளங்கிய ஆதிசமயங்கள் என்பது பெறப்படத் தடையில்லை.

இத்தெய்வப்படிவங்கள் அமைந்த கோட்டங்கள் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே பெருகி விளங்கின என்பதும், அவற்றையும் அவற்றின் அறப்புறங்களையும் அரசர் நேரிற் சென்று பாதுகாத்து வந்தனரென்பதும்,

**" மேவிய சிறப்பி னேனோர் படிமைய**
**முல்லை முதலாச் சொல்லிய முறையாற்**
**பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்**
**இழைத்த வொண்பொருள் முடியவும் பிரிவே."**

(தொல். அகத். 30)

என்ற சூத்திரத்துள்[2] அவ்வாசிரியர் கூறுதலால் அறியலாம். இங்ஙனங் கோயில்கொண்ட கடவுளருள்,

---

1. 'வருணராஜா, இந்திரராஜா'வின் கோயில்கள் தஞ்சையிலிருந்தன வென்று சாஸனமும் (s. i i. i, p. 414.), இந்திராயுதமுள்ள 'வச்சிரக் கோட்டம்' என்ற கோயில் காவிரிப்பூம்பட்டினத்தி லிருந்ததாகச் சிலப்பதிகாரமும் (9, 12) கூறும்; ஆயினும், அவை திக்குப்பாலக வணக்கம் பற்றியும், அவ்வவ்விடத்துக்கமைந்த சிறப்பியல்புகள் பற்றியும் நிருமிக்கப்பட்டனவேயன்றி, நிலவுரிமை பற்றியவை அல்ல என்க.

2. இச் சூத்திரத்திற்கு உரையாசிரியரான **இளம்பூரணவடிகள்** கூறிய பொருளே ஈண்டுக் கொள்ளப்பட்டது. அவர்,

திருமால் முல்லைநிலத்தெய்வமாதலின், அப்பெருமான் மேவிய கோயில்கள் காடும் காட்டுச்சார்புமான இடங்களிற்றான் ஆதியில் அமைந்திருந்தனவாதல் வேண்டும். இப்பொழுதுள்ள பழைய திருமால் திருப்பதிகள் பெரும்பாலும் அவ்வாறமைந்திருந்தவை என்றே கருதற்குரியன.

முல்லைக்குரிய தமிழ்மக்களை ஆயர் என்று தொல்காப்பியர் கூறுவர்.[1] அதனால், அவ் வாய்க்குலத்துள் ஒளித்துவளர்ந்த கண்ணபிரானே, முல்லை நிலத்து மக்கள் தம் தொழுகுலமாக வணங்கிவந்த திருமாலவதார மூர்த்தி யாயினர். அப்பெருமானது பாலசரித்திரங்களாகத் தமிழாயர்கள் வழங்கிவந்தவை பலவாம்[2]. அவற்றுள், அப்பெருமான் நப்பின்னை என்ற ஆயர்குல வணங்கை—அவ்வாய்க்குல வழக்குப்படி கன்யாசுற்க

---

'மேவிய சிறப்பி னேனோர் படிமைய' என்பதற்கு—'நால்வகை நிலத்தினும் மேவிய சிறப்பையுடைய மக்களையல்லாத தேவரது படிமையவாகிய பொருள்கள்' என்று பொருளும், ''சிறப்பி னேனோர்' என்றதனால், சிறப்புடையார் மக்களுந் தேவருமாகலின் மக்களல்லாதாரே தேவரென்று பொருளாயிற்று; படிமை என்பது **ப்ரதிமா** என்னும் வடமொழித் திரிபு; அது தேவர்க் கொப்புமையாக நிலத்தின்கட் செய்தமைத்த தேவர்மேல் வந்தது. அவருடைய பொருளாவன 'பூசையும் விழாவும் முதலாயின' என்று விசேடமும் எழுதியிருத்தல் பெரிதும் பொருத்த முடையதாதல் காண்க. நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்துக்கு வேறு பொருள் கூறுவர்.

1. தொல். அகத்திணை. 21.

2. 'தமிழ் நாட்டில் வழங்கிய கண்ணபிரான் சரிதங்கள்' என்ற தனி வியாசத்துள், இதனை விரித்து விளக்கியுள்ளேன். (செந்தமிழ், தொகுதி 8, பகுதி, 4.)

மாக விடுக்கப்பட்ட ஏழுவிடைகளையுந் தழுவியடர்த்து[1] —மணம் புரிந்த சரிதம், தமிழ்நாட்டிற் பிரபலம் பெற்ற தோடு தமிழ்மக்களால் நாடகமாக நடிக்கப்பெற்றும் வந்தது.

> " ஆயர்பாடியி லெருமன்றத்து
> மாயவனுடன் றம்முனொடிய
> வாலசரிதை நாடகங்களில்
> வேலெனெடுங்கட் பிஞ்ஞையொடாடிய
> குரவையாடுதும் யாமென்றாள்
> கறவைகன்றுதுயர் நீங்குகவெனவே."
>
> (சிலப். ஆய்ச். குரவை.)

> " மாமணி வண்ணனுந் தம்முனும் பிஞ்ஞையும்
> ஆடிய குரவையிஃ தாமென நோக்கியும்"
>
> (மணிமே. 19, 65-6.)

என்று இளங்கோவடிகளும் சாத்தனாரும் கூறுவன வற்றாலும் பிறவற்றாலும் இச்செய்தி விளங்கும்.

வடநாட்டார் இராதாதேவியைக் கண்ணன் காதலி யருட் சிறந்தவளாகக் கொண்டாடுதல்போல, தென்னாட் டவராற் பண்டைக்காலமுதலே பாராட்டப்படுந்தேவி இந் நப்பின்னைப்பிராட்டியே என்பதும், இச்செய்தி தமிழ் மக்களாலன்றிப் பிறநாட்டாரால் அறியப்படாததொன்று என்பதும் குறிப்பிடத்தக்கன.

முல்லைநிலத்தவர் வணங்கிவந்த இக்கண்ணபிரான் வழிபாடு, தொல்காப்பியர்காலத்தே ஏனைநிலத்துக்

---

1. இது தமிழ்நூல்களில், 'ஏறுகோடல்' எனப்படும். இதன்முறைகளை முல்லைக்கலி முதலியவற்றிற் கண்டுகொள்க.

கடவுளர்வழிபாடுகளினும் சிறப்புடைய தாயிருந்த தென்றே சொல்லலாம்.[1]

அகத்திணையொழுக்கந் தொடங்குதற்கிடமான குறிஞ்சியை ஏனைப்புலவர்போலத் தாமும் முதலில் வைத்துக் கூறாது, திருமாலுக்குரிய முல்லையை முதலாகக் கொண்டு தொல்காப்பியர் எண்ணுதல் ஒரு சிறப்பியல்பு பற்றிய தென்றே கருதத்தகும். இவ்வாறே, மன்னர்க்குத் திருமாலை உவமை கூறும் பூவைநிலை யென்னும் புறத்துறைச்செய்தி கூறுமிடத்தே—

" மாயோன் மேஎய மன்பெருஞ் சிறப்பிற்
றுவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்" [2]
(தொல். அகத். 60.)

என்று புருடோத்தமனது இறைமைக்குணங்கள் புலப் படுமாறு பலபட விசேடித்து அவ்வாசிரியர் கூறுதலுங் காணலாம். இப்பெருந் தலைமைபற்றியே **மால்** என்ற சொல்—பிறர்க்குரித்தாகாத நாராயண நாமம்

---

1. அகத்திணை முறையில் அமைக்கப்பட்ட சங்க நூல்களிலே தொல்காப்பியமும் ஐந்திணையைம்பதும் ஒழிய ஒழிந்தனயாவும், முல்லையல்லாத திணைகளுள் ஒன்றை முதலாகக் கொண்டனவாம். தொல்காப்பியரைப்போலவே, மாறம்பொறையனாரும் "மல்லர்க் கடந்தா னிறம்போன் றிருண்டெழுந்து" எனத்திருமாலை முதலிற் கூறி முல்லைத் திணை தொடங்குதலை அவரியற்றிய ஐந்திணையைம்பது என்ற நூலான் அறிக.

2. "மாயோனைப் பொருந்திய, நிலைபெற்ற பெருஞ் சிறப்பினையுடைய, கெடாத விழுமிய புகழைப் பொருந்திய பூவைநிலை" என்பது **இளம்பூரணருரை**. இத்தொடர்க்கு வேறு பொருளொன்றை நலிந்துகொள்வர், நச்சினார்க்கினியர்.

போல—தனித்த தமிழ்த்திருப்பெயராக மாயோனொருவற்கே தொன்றுதொட்டு வழங்கிவருதலும் கண்டுகொள்க.[1]

இவ்வாறு, தமிழகந் தோன்றியகாலத்தே உடன் தோன்றித் தலைமை பெற்று நின்ற திருமால் வணக்கமும் கோயில்களும் அக்கடவுளது பேரடியார்களாற் பெருகியிருக்கவேண்டும் என்பது நாம் சொல்ல வேண்டியதில்லை. திருமால் தலங்களிலே திருவரங்கம், திருவேங்கடம், திருமாலிருஞ்சோலை, திருவெஃகா போன்றவை மிகப் பழைமை பெற்றனவாகும். திருமாலை முற்படவைத்துக் கூறும் பரிபாடலிலும், சிலப்பதிகாரம் முதலியவற்றிலும் இத்தலங்களிற் கோயில் கொண்டருளும் அர்ச்சாவதார மூர்த்திகளின் திருக்கோலங்கள் மிக அழகாகச் சிறப்பிக்கப்பட்டுள்ளன.

" நீலமேக நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்தது போல
ஆயிரம் விரித்தெழு தலையுடை யருந்திறற்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்."

என்று திருவரங்கத்துத் திருமாலையும்,

" வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
இருமருங் கோடிய விடைநிலைத் தானத்து
மின்னுக்கொடி யுடுத்து விளங்குவிற் பூண்டு

1. திருமாலின் சகச்சிரநாமங்களுள், **ப்ருஹத், மஹான்** என்ற திருநாமங்கள் இப்பெயருடன் ஒப்பிடத்தக்கன.

நன்னிற மேக நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிள ரார மார்பிற்பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்க ணெடியோ னின்ற வண்ணமும்."
(சிலப் 11, 35—51)

என்று திருவேங்கடத்துத் திருமாலையும் இளங்கோவடிகளும்,

" புவ்வத் தாமரை புரையுங் கண்ணன்
வெளவற் காரிருண் மயங்குமணி மேனியன்
எவ்வயி னுலகத்துந் தோன்றி யவ்வயின்
மன்பது மறுக்கத் துன்பங் களைவோன்
* * *
நலம்புரீஇ யஞ்சீர் நாம வாய்மொழி
துவென வுரைத்தனெ முள்ளமர்ந் திசைத்திறை
ர ர ந் தடியுறை யியைகெனப்
பெரும்பெய ரிருவரைப் பரவுதுந் தொழுதே"
(பரிபா. 15)

எனத் திருமாலிருஞ்சோலைத் திருமாலை இளம்பெருவழுதியாரும்,

" ..............................நீடுகுலைக்,
காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னுங்கண்"
(பெரும்பாண். 371—3)

எனக் கச்சித்திருமாலைக் கடியலூர் உருத்திரங்கண்ணனாரும் கூறுதல் காண்க.

ஆதியில் முல்லை நிலத்துக்கு உரியவாயிருந்த திருமால்கோயில்கள், அக்காலத்தே குறிஞ்சி மருதம்

முதலிய நிலங்களிலும் பரவுவனவாயின. இவற்றினும், கண்ணபிரான் வழிபாடே மிகுதியும் வழக்குப் பெற்றிருந்த தென்னலாம். கண்ணபிரானை அப்பிரானது காதற்றேவியாக மேற்கூறிய நப்பின்னைப்பிராட்டியுடனும், நம்பி மூத்தபிரானுன பலதேவருடனும் சேர வணங்கிச் சிறப்பித்துவந்த செய்தி சங்கநூல்களால் நன்கறியப்படும்.

இஃதன்றிப் பலதேவர்க்குத் தனிக்கோயில்களும் அக்காலத்து அமைந்திருந்தன.

**" வால்வளை மேனி வாலியோன் கோயிலும்**
**நீல மேனி நெடியோன் கோயிலும்.''**

(சிலப். 5, 171—2)

**" உவணச் சேவ லுயர்த்தோ னியமமும்**
**மேழிவல னுயர்த்த வெள்ளை நகரமும்.''**

(ஷை 14, 8—9)

எனப் புகாரிலும் மதுரையிலும் இருந்த அத்தகைய கோயில்களை இளங்கோவடிகள் குறிப்பிடுதலுங்காண்க. இப்பலதேவர் கோயில், 'வெள்ளை நாகர் கோட்டம்' 'வெள்ளை நகரம்' என்ற பெயர்பெற்றிருந்தது[1]. இவ்வாறு தனிக்கோயிலிற் பலதேவரை வணங்கிவந்த வழக்கு, கடைச்சங்கத்துக்குப் பிற்பட்டகாலத்தில் இருந்ததில்லையென்றே சொல்லலாம்.

கண்ணனும் பலதேவரும் ஒன்றுசேர்ந்துள்ள கோலத்தை அக்காலத்துப்புலவர் வணக்கமுகத்தானும்[2]

---

1. சிலப். 5, 171—2; 9, 10.

2. 'பொற்பனை வெள்ளையை யுள்ளா தொழுகின்ஞு, சக்கரத்தானை மறப்பின்ஞு' (இன்ஞு. 1) "மாயவனுந்

உவமைமுகத்தானும் பலபடப் பாராட்டலாயினர். அழகர்கோயிலென்ற திருமாலிருஞ்சோலையில், இவ்விருவர் திருவுருவங்களுஞ் சேரவிருந்தனவென்று பரிபாடல் (15) கூறும். இத்தகைய கோயில்களும் பிற்காலத்தே அருகிவிட்டன[1]. இப்பலராமகிருஷ்ணர்களே சங்கர்ஷண வாசுதேவர் என்ற திருநாமத்தால் வழங்கி, 2000-ஆண்டுகட்கு முற்பட்ட வடநாட்டாரும் வணங்கிவந்தனரென்பது பழைய வடநூல்களாலும் சாஸனங்களாலும் அறியப்படுகின்றது.[2]

இங்ஙனம் தமிழ்நாட்டிற் சிறப்புற்றிருந்த திருமால் கோயில்களும் வழிபாடுகளும் ஆரியநன்மக்களது வைதிகமுறைக்கேற்பவும் வைணவாகமமுறைக் கேற்

---

தம்முனும் போலே மறிகடலுங்—கானலுஞ்சேர் வெண்மணலுங் காணுயோ" (திணைமாலை. 58) என்பன முதலியன காண்க.

1. கண்ணன், தம்முனாகிய பலதேவருடனும் நப்பின்னைப்பிராட்டியுடனும் எழுந்தருளியுள்ள நிலை, பழைய திருப்பதிகளிலொன்றான திருவல்லிக்கேணியில் இன்றும் காணப்படுதல் அறியத்தக்கது.

2. இராஜபுதனத்து உதய புர ஸம்ஸ்தானத்துள்ள கஸுண்டி (Ghasundi) என்ற கிராமத்திற்கண்ட சாஸனமொன்று, பகவத் சங்கர்ஷண வாஸுதேவர்களுக்கு அங்குள்ள விஷ்ணுவிலையத்தே பாகவதரொருவர் செய்துள்ள கற்றிருப்பணியையும், தக்ஷிணதேசத்து (Deccan) நானாகட்டத்துக் (Nanaghat) குகையிற் கண்ட சாஸனம் அவ்விரு தெய்வங்களும் பிரதிஷ்டை பெற்ற செய்தியையும் கூறுவன என்றும், இவ்விரண்டும் 2100-வருஷங்கட்கு முற்பட்ட சாஸனங்களென்றும் தெரிய வருகின்றன. (Quarterly Journal of the Mythic Society, Bangalore. Vol. XI, p. 87.)

பவும் அமைந்திருந்தன. வைணவாகமங்களாவன, பாஞ்சராத்திரமும் வைகானசமுமாம்.

" ...........மலைமிசைநின்றோன்
...............................
புள்ளணி நீள்கொடிப் புணர்நிலை தோன்றும்.''
(சிலப். 11, 136)

" செங்கட்காரி கருங்கண் வெள்ளை
பொன்கட் பச்சை செங்கண் மாஅல்.''
(பரிபா. 3, 81—82.)

என, கோயிற்களிற் கருடத்துவச அமைப்பும், சங்கருடண வாசுதேவ பிரத்தியும்ந அநிருத்தர்களென்னும் வியூகாவதாரங்களும் பிறவும் சங்கச்செய்யுள்களிற் பயிலுதலினின்றும், அவ்வாகமவழியே கோயில்களும்[1] கொள்கைகளும் பண்டைக்காலத்தில் அமைந்திருந்தன என்பது பெறப்படும்.

**பாகவதர்—பகவர்**

திருமால்வழிபாட்டிற் சிறந்த பெரியாரைப் **பாகவதர்** என்ற பெயராற் பண்டைத் தமிழ்மக்கள் வழங்கலாயினர்; ''பாகவதர் நாராயண சமயத்தோர்'' என்பது திவாகரம். பகம் எனப் பெயரிய ஷட்குணங்களால்[2] பரிபூர்ணனை திருமாலின் சம்பந்தமுடையார்' என்பது இதன்பொருள்.

---

1. 'செங்கணான் கோச்சோழன் சேர்ந்த கோயில்' என்று திருமங்கை மன்னனாற் பாடப்பெற்ற **திருநறையூர்** என்ற நாச்சியார் கோயிலில், இவ்வியூகாவதார மூர்த்திகளனைவரும் ஒருங்கெழுந்தருளியிருத்தல் அறியத்தக்கது.

2. ஷட்குணங்களாவன—அறிவு, திரு, ஆட்சி, ஆற்றல், அவாவின்மை, புகழ் என்பவை (விஷ்ணு புராணம்).

திருமாலடிமையிற் சிறந்த இல்லறத்தாரை **அடியார்** என்றும், உலகப் பற்றற்ற அத்தகைய துறவிகளைப் **பகவர்** என்றும் முன்னோர் வழங்கிவந்தனர். இச்செய்தி—

"...அச்சுதன் றன்னை ஞானவிதி பிழையாமே
மேவித்தொழும் அடியாரும் பகவரும் மிக்கதுலகே."
(திருவாய். 5, 2, 9)

"நீறு செவ்வே யிடக்காணில் நெடுமாலடியா
ரென்றோடும்." (ஷை. 4 4, 9)

"விரும்பிப் பகவரைக் காணின் வியலிடமுண்டானே
யென்னும்." (ஷை. 4, 4, 7)

பத்தர்களும் பகவர்களும்............. தொழுதிறைஞ்ச" (பெரியாழ். திரு. 9, 6) எனவரும் பெரியார் திருவாக்குகளால் அறியப்படும். பகவன் என்ற சொல் ஏனைக் கடவுளர்க்குப் பொதுவாக வழங்குவதேனும், விஷ்ணு பத்தியில் மேம்பட்ட துறவிகட்கன்றி வேறு சமயத்து அடியார்க்குப் பகவர் என்ற வழக்குப் பழைய தமிழ் நூல்களிற் பயிலாமை அறியத்தக்கது. குடமூக்கிற் பகவர்[1] நிலாத்துக்குறிப்பகவர்[2] எனப் பிற்காலத்து விஷ்ணு பத்தர்களான முனிவர்களும் இப்பெயர் பெற்றிருத்தல் காணலாம். திரிதண்டதாரிகளான இவ்வைஷ்ணவ சந்நியாசிகளையே 'முக்கோற்பகவர்' என்று வழங்கலாயினர், பழைய தமிழ்மக்கள்.

"எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலும்

---

1. யாப். வி. 93
2. பெரிய திருமொழி, 8, 1, 1, வியாக்.

நெறிப்படச் சுவலசைஇ வேருேரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை யந்தணீர்."
(கலித். 8)

" செக்கர்கொள் பொழுதினன்......
முக்கோல்கொ ளந்தணர் முதுமொழி நினைவார்போல்."
(ஷை. 129)

" கற்ருேய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோ லசைநிலை கடுப்ப" (முல்லைப்பாட்டு, 3)

எனச் சான்ருேர்கள் இப்பகவரைச் சிறப்பித்தல் காண்க. இவற்றுள், அந்தணர் என்பதற்கு "காஷாயம் போர்த்த குழாங்கள்' என்று நச்சிஞர்க்கினியர் பொருள் கூறுவர்.

" நூலே கரக முக்கோல் மணையே
ஆயுங் காலை யந்தணர்க் குரிய" (தொல். மரபி, 70.)

என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுவதும், பகவரான இத்திரிதண்ட சந்நியாசிகளையேயாம்.[1] இம்முக்கோல் முனிவர், தலயாத்திரையாகத் தமிழக மெங்குஞ் சஞ்சரித்து வருபவரென்பது, அகத்திணைக் களவியலில் "முக்கோற் பகவரை விஞதல்" என்ற உடன்போக்குப் பகுதியுள்வருந் துறையாலுந் தெரியலாம்.[2]

---

1. இவரைக் 'குடீசக சந்நியாசிகள்' என்பர் வட நூலார்.

2. "உடன்போய தலைவியின் பின்சென்ற செவிலி இடைச்சுரத்து முக்கோற் பகவரைக்கண்டு, 'இவ்வகைப் பட்டாரை ஆண்டுக் காணீரோ' என வினவியாட்கு 'அவரைக்கண்டு அஃது அறமெனவே கருதிப்போந்தேம்;

இவற்றால், திருமாலடியாரான துறவிகள், சங்க காலத்தும் அதற்கு முன்பும் தமிழ் மக்களாற் பெரிதும் போற்றப்பட்டு வந்தவர் என்பது தெளிவாம்.

திருமாலை வணங்குங் கொள்கை முற்காலத்தே பிரபலம் பெற்றிருந்ததென்பது, மணிமேகலைச் சமயக் கணக்கர் தந்திறங்கேட்ட காதையுள் வைணவவாதம் கூறப்படுதலால் அறியப்படும்.

**" காதல் கொண்ட கடல்வணன் புராண**
**மோதினன் நாரணன் காப்பென் றுரைத்தனன்"**

(மணிமே. 27, 98-9)

என்று சாத்தனார் கூறுதலினின்றும் விஷ்ணுபுராணம் போன்ற திருமாலைப்பற்றிய புராணங்கள் சங்ககாலத்தே பெருவழக்குப் பெற்றிருந்த செய்தி தெரியலாம்.

**வைணவப் புலவர்கள்**

சங்க காலத்தேயிருந்த நல்லிசைப் புலவர் பலர் பரமபாகவதர்களாக விளங்கினர். பரிபாடலில் திருமாலைப்பற்றிச் சிறப்பித்த கடுவனிளவெயினனார், கீரந்தையார், நல்லெழினியார் முதலியோர் பாடல்கள்,

---

நீரும் அவர்திறத்து எவ்வம்பட வேண்டா' என எடுத்துக் காட்டி அவர் (பகவர்) தெருட்டியது" (கலித். 9, அவ.) என்று இத்துறைச்செய்தியை நச்சினார்க்கினியர் விளக்குதல் காண்க. இம்முக்கோற் பகவர் திருமாலடியாராக இருத்தல் பற்றியே அவரைக் கூற ஒருப்படாது, அவர்க்குப் பிரதியாகப் பாசுபதர் காளாமுகர் போன்ற சிவபத்தராகிய **விரதியரை, அவ்வாறு** செவிலி உடன்போக்கில் வினவுவதாகச் சிவனடியாரான **வாதவூரடிகள்** தம் திருக்கோவையுள் (242) பாடியிருத்தல் இங்கு அறியத்தக்கது.

அக்கடவுளிடம் அன்னோர் கொண்டிருந்த பரமபத்திக்குச் சிறந்த சான்றாகவுள்ளன. வைஷ்ணவ சமய மூல தத்துவங்கள் பலவும் ஆழ்வார்கள் வாக்கிற்போல இவர்கள் பாடல்களினும் காணப்படுதல் ஆய்ந்தறிதற் குரியது. இவரன்றி விளக்கத்தனார்[1], கவிசாகரப் பெருந்தேவனார்[2] முதலாகவுள்ள வேறு புலவர்களும் வைணவசமயிகளாகவே தெரிய வருகின்றனர்.

## வள்ளுவர் உள்ளம்

தொல்காப்பியனார்நீங்க, திருவள்ளுவரினும் பழைமை பெருமை வாய்ந்த புலவர் யாவருளர்? அப் புலவர்பெருமானைப்பற்றி வழங்கும் கதைகளின் உண்மை எத்தகையதாயினும், அவர்தம் வாக்களவிற் கொண்டு நோக்குமிடத்துத் திருமால் சமயத்துக்கு அவர் காலத்திருந்த சிறப்பியல்பு வெளியாகத் தடையில்லை.

> **“ சமயக் கணக்கர் மதிவழி கூறாது**
> **உலகியல் கூறிப் பொருளிது வென்ற வள்ளுவன்.”**
> (கல்லா.)

என்று சிறப்பிக்கப்படும் அத்தெய்வப்புலவர், பிற கடவுளர் எவரையுங் குறிப்பிடாத நிலையில்—

---

1. *யான்* **செந்தமிழ்ப்** *பத்திரிகையிற் பதிப்பித்துவரும்* **‘பெருந்தொகை’ என்ற நூலின் 15ஆம்** *பாடலையும்,* **அதன் கீழ்க்குறிப்பையும் நோக்குக.**

2. **“பூவிற்குத்** *தாமரையே பொன்னிற்குச் சாம்புனதம்* **—ஆவிற்** *கருமுனியா யானைக் கமரரும்பல்*—**தேவிற் றிருமால் எனச்** *சிறந்த தென்பவே—பாவிற்கு வள்ளுவர்வெண் பா”* **என்ற** *திருவள்ளுவமாலை வெண்பா* **(36) இப்புலவர் வாக்காதல் காண்க.**

[1] " மடியிலா மன்னவ னெய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லா மொருங்கு'' (610).

[2] " தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல்
தாமரைக் கண்ணா னுலகு'' (1103)

என்று கூறுதல் அவருள்ளக்கிடையைத் தெள்ளிதிற் புலப்படுத்தக் கூடியதன்றோ? இவற்றுள், முன்பாட்டில் வரும் 'அடியளந்தான் தா அயதெல்லாம்' என்றதொடர், 'அசுரர்க்கு உரிமையானதைத் தன்னுரிமையாக்க வேண்டித், திருமால் தன்னடியால் அளந்துபெற்ற எல்லாவுலகும்' என்ற கருத்துடனிற்றலும், இரண்டாங் குறள்— இயற்கைப்புணர்ச்சி நிகழ்ந்தபின் தலைவனது தளர்ந்தநிலையை நோக்கி, 'நிரதிசயவின்பத்திற்குரிய நீ இச்சிற்றின்பத்திற்கு இன்னையாதல்தகாது' என்ற பாங்கற்கு அத்தலைவன் கழறிக் கூறிய கூற்றாக நிற்றலும் அறியத்தக்கன.

இக்குறள்களினின்றும், இலீலாவிபூதி நித்திய விபூதி என்ற இருவகைப் பெருஞ்செல்வங்கட்குந் தனியிறைமை திருமாற்கேயுரியதென்ற வைஷ்ணவ சமயக் கொள்கை, வள்ளுவனார் திருவுள்ளத்துக்கும் ஒத்ததென்பது நன்குபெறப்படும்.

---

1. "தன்னடியளவானே எல்லாவுலகையும் அளந்த **இறைவன** கடந்த பரப்புமுழுதையும், மடியிலா அரசன் முறையானன்றி ஒருங்கே எய்தும்'' என்பது **பரிமேலழகருரை.**

2. "ஐம்புலன்களையும் நுகர்வார்க்குத் தாம்விரும்பும் மகளிர் மெல்லிய தோளின்கட்டுயிலுந் துயில்போல வருந்தாமலெய் தலாமோ, அவற்றைத் துறந்த தவயோகிகளெய்தும் செங்கண்மாலுலகம்'' என்பது **பரிமேலழகருரை.**

தாமரைக் கண்ணுன் உலகு-பரமபதம்;[1] அப்பரம பதத்தினும் மேம்பட்ட நிரதிசயவின்பப்பேறு வேறுண்டு என்பது அத்தெய்வப்புலவர் கருத்தாகக் கொள்ளற் குரியதன்று. அது கருத்தாயின், 'உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை' என்றபடி, அவர் ஒரீஇக் கூறிச் சிறப்பித் தற்கு எடுத்துக்கொண்ட உவமை பெரிதும் இழுக்குறு மென உணர்க.

## அரசர்கள்

இனி, பரமபாகவதரான இப்புலவர்களன்றிப் பண்டைத் தமிழரசர் பலரும் திருமால்பத்தியிற் சிறந் திருந்தனர். செல்வக்கடுங்கோ வாழியாதன் என்ற சேரர் பெருந்தகை "மாயவண்ணனை மன்னுறப் பெற்றவன்" என்று பதிற்றுப்பத்திற் புகழப்படுகின்ருன்[2]. கோச் செங்கணுன் என்ற சோழவரசன் திருநறையூர்த் திருமா லிடம் பரமபத்தி பூண்டிருந்தவனென்று திருமங்கை மன்னன் கூறுவர். இளம்பெரு வழுதியார் என்ற பாண்டியர்குலத்தோன்றல் திருமாலிருஞ்சோலைப் பெரு மானிடம் பேரன்புபூண்ட பரமபாகவதரென்பது பரி பாடலின் 15-ம் செய்யுளால் நன்குவிளங்கும்.

## அடியார்களின் அவதார காரணம்

சங்கநாளில் வைணவம் சைவம் போன்ற வைதிக மதங்களை அரசர்களும் அடியார்களும் பெரிதும் ஆதரித்

---

1. 'சுகவெள்ளம் விசும்பிறந்து' என்ற திருவாய்மொழித் தொடர்க்கு எழுதப்பட்ட உரைப்பகுதியுள் "விசும்பு என்றது பரமபதமாய், **தாமரைக்கண்ணுனுலகு** என்னக்கட வதிறே, சுகாதிசயத்துக்கு" எனவரும் ஈட்டின் பந்தி இங்கு அறியத்தக்கது. இதனுல், பரிமேலழகர் கொண்ட கருத்தே முன்னேருங் கொண்டதென்பது விளங்கும்.

2. 7-ஆம் பத்துப் பதிகம்.

தும் போற்றியும் வந்தமையால், நாடுமுழுதும் அன்னோர் நல்வழியையே பின்பற்றியொழுகிய தென்பது நன்கறியப்படுகின்றது.

## சைன பௌத்தம்

அக்காலத்தே சைனபௌத்த மதங்களும் அச்சமயத்தவர் முயற்சியால் தென்னாட்டிற் சிறுகப்பரவியிருந்ததேனும், வைதிகமதங்களின் செல்வாக்கை அவை அடைந்தனவல்ல. ஆனால் சங்ககாலத்துக்குப் பின்னர்—அஃதாவது உத்தேசம் கி. பி. 5, 6-ம் நூற்றாண்டு முதலாக—வடநாடெல்லாம் உரக்க வீசிப் போந்த சைன பௌத்தங்களாகிய சண்டமாருதம் தென்னாட்டிலும் சுழன்றடிக்கத் தொடங்கியது.

தமிழரசரின் . தலைமைநகர்ப் புறஞ்சேரிகளினும்[1] வைதிகர் வாழிடங்களினும் இச்சமயத்தவர் தங்கித் தங் கொள்கைகளைப் பரப்பியும் சைனபௌத்தப் பள்ளிகளையும் உபதேச கூடங்களையும் தாபித்தும் வந்தனர். தங்கள் சமயங்களைப் பிரபலப்படுத்துவதில் இன்னோர் கொண்டிருந்த ஆற்றலும் ஊக்கமும் அதிசயமானவை. வடகலைகளிற் பெரும் பயிற்சியும் வாக்குவன்மையும் பெற்று நின்ற இவர்கள், தாம் சென்ற நாடுகளிலெல்லாம் தத்தம் சங்கங்களைத் தாபித்தும் தேசபாஷைகளை நன்கு கற்று அவற்றின் மூலம் தஞ்சமயக் கொள்கைளைத் தக்கவாறு பெருக்கியும் வந்தனர்.

---

1. மதுரை வஞ்சி முதலிய தலைநகரங்களில் சைன பௌத்தப் பள்ளிகளும் உறைவிடங்களும் நகரின் எயிற்புறவிருக்கையில் அமைந்திருந்த செய்தி, சிலப்பதிகாரம்—புறஞ்சேரியிறுத்த காதையாலும், மணிமேகலை வஞ்சிமாநகர் புக்க காதையாலும் அறியலாம்.

இவர்களுள் சைனர்கள், தமிழ் மொழியிற் செய்த இலக்கிய இலக்கண நூல்களும் சமயசாத்திரங்களும் பிறவும் பலவென்பதும், அவற்றிற் சில, அவர்க்குப் புறம்பான சமயத்தாரும் பாராட்டும்படி இன்றுவரை நின்று நிலவுதலும் யாவரும் தெரிந்தனவாம்.[1] சைனரும் பௌத்தரும் தருக்கசாத்திரத்தில் மிக்க பயிற்சியுடையராயிருந்தமையின், ஏனைச் சமயிகளை வாதப் போருக்கிழுத்துத் தங்கள் ஆற்றலைக் காட்டிவந்தனர்.

**"போதியார் பிண்டியா ரென்றவப் பொய்யர்கள்**
**வாதினு லுரையவை"**

(தேவா. பக். 376, பாட். 10. சுவாமிநா. பதிப்பு.)

**"தடுக்கமருஞ் சமணரொடு தருக்கசாத் திரத்தவர்சொல்**
**இடுக்கண் வருமொழி"**

(ஷை. 822, 10.)

**'தருக்கினுற் சமண்செய்து'**

(பெரிய திருமொழி. 6, 1, 7.)

**"தற்கச் சமணருஞ் சாக்கியப்பேய்களும்"**

(திவ். இராமானுச நூற். 98)

என்று வைதிகசமயமுன்னோர் இவரது தருக்கவாற்றலை சிறப்பாகக் குறிப்பிடுதல் காணலாம்.

---

1. "முன்னோ ரொழியப பினனோா பலரினுள, எந்நூலாரும் நன்னூலாருக், கிணையோ வென்னுந் துணிவே மன்னுக" எனச் சுவாமிநாத தேசிகரும் (இலக். கொத். 8, உரை) "பல்கலைக் குருசில் பவணந்தியென்னும், புலவர் பெருமான் புகழ்போல விளங்கி நிற்றலான்" எனச் சங்கர நமச்சிவாயப் புலவரும் (நன். 137 உரை.) கூறுதல் காண்க.

சைன முனிவர் கையாண்ட அநசநமுதலிய கடு நோன்புகளும் மந்திரதந்திர வன்மையும் தமிழர்க்கு அன்னோரிடமிருந்த மதிப்பை மிகுதிப்படுத்தியன. இவர்களை அரசரும் பிறருங் கௌரவித்து வந்ததுமட்டுமன்றி, அவருட் சிலர் அம்மதங்களைத் தழுவி இவர் நோக்கம் முடிவு பெறுதற்குப் பெருந்துணையுமாயினர். இவ்வாறு இவர்க்கு அநுகூலராய் நின்ற தென்னாட்டரசருள்ளே, பல்லவர்களைச் சிறந்தவராகச் சொல்லலாம். சைனமதத்தின் செல்வாக்கு, ஏனையவற்றினும் 6, 7ஆம் நூற்றாண்டுகளிற் செழித்திருந்ததற்கு இவ்வரசர்களே காரணபூதராயினர்.

இங்ஙனம் பேரரசர்களது ஆதரவும், அம்மதப் பிரசாரகரது பேருழைப்பும் சைனசமயத்தை உச்ச நிலைக்குக் கொண்டு வந்தனவென்றும், வேள்வி முதலிய சடங்குகளில் விசேடப் பற்றுக் கொண்டொழுகிய வைதிகமதங்கள் இதன் முன்னே மேலோங்க இடமின்றித் தளர்வடையத் தொடங்கின என்றும் சொல்லத் தடையில்லை.

## மாற்றமும் வளர்ச்சியும்

இவ்வாறு புறச்சமயவெழுச்சியால் நாட்டார்க்கு வைதிகமதங்களிற் பற்றுக் குறையவும், அவற்றின் பழைய தர்மங்கள் தளர்வடையவும் நேர்ந்ததே, அம்மதங்களிற் பெரியோர்களுடைய அவதாரங்கள் நிகழ்வதற்குக் காரணமாயிற்று. இக்காலத்தே சைவ வைஷ்ணவ அடியார்களிற் சிறந்தோர் பலர்தோன்றி, சநாதன தர்மங்களை மலைமேலிட்ட விளக்காக்கி வைத்தனர்.

இன்று நான் எடுத்துக் கொண்ட விஷயத்துக்கேற்பத் திருமாலடியாரான அத்தகைய பெரியோர்களைப் பற்றித் தெரிந்தவற்றை இனிக் கூறுகின்றேன்.

## *ஆழ்வார் வரலாறுகளைப்பற்றிய கொள்கைகள்*

ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தின்படி அம்மதப் பிரவர்த்தகர்களான பெரியோர்கள் இருவகைப் பிரிவினர் ஆவர். அவர்களை **ஆழ்வார்கள், ஆசாரியர்கள்** என்பர். இவர்களுள் ஆழ்வார்களென்போர் அவதாரபுருஷர்களாகவும், ஞானபரிபூரணர்களாகவும், வைஷ்ணவ சமயத்தின் முதல்வர்களாகவும் விளங்கினவர்கள். ஆழ்வார் என்பதற்கு 'பகவத்குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுவோர்' என்று பொதுவாக உறுப்புப் பொருள் கூறப்படுவதுண்டு. இப்பெயர் வழக்கிற்குத் திவ்யப் பிரபந்தங்களிற் பிரமாணம் காணப்பட்டிலதேனும், பண்டைச் சாஸனங்களினும் நூல்களினும் இச்சொல் பெரிதும் பயின்றுளது.[1]

---

1. **சோழசாஸனங்களில்** — 'ஆழ்வார திருவரங்கதேவர்க்கு' s. i i. iii. p. 150) 'திருவத்தியூராழ்வாரைப் பாடியருளின ஸ்ரீ பூதத்தாழ்வாரும்' (ஷை, பக். 164) என்று **திருமால்மூர்த்தங்கட்கும்**, 'தீக்காலி வல்லத்துத் திருத்தீக்காலியாழ்வாரை' 'மதுராந்தகன் கண்டராதித்தனூர் ஆழ்வாரை ஸஹஸ்ரகலச மாட்டுவிக்க' (ஷை பக். 102) என்று **சிவமூர்த்தங்கட்கும்**, 'ஆழ்வார் பராந்தகன் குந்தவைப் பிராட்டியார் (ஷை. ii. பக். 69), 'நம்பெருமாள் (அபயன்) திருத்தங்கையார் மதுராந்தகியாழ்வார்' (ஷை, i v. பக். 18) 'குலோத்துங்கசோழன் மகளார் அம்மங்கையாழ்வார்' (ஷை பக். 35) என்று **அரசர்குல மகளிர்க்கும்**, 'வாணகோவரையர் தங்களாச்சி...விச்சாதிரியாழ்வார்' (ஷை. பக். 153) 'கருணாகரனூரான தொண்டைமானூர் தேவியார் அழகிய மணவாளனியுடையாழ்வார்' (ஷை. No. 862) என, அரசரைச் சார்ந்த **தலைவரின் மகளிர்க்கும** வழங்குதலே யன்றி, **நூல்களில்**— 'இனிப் பிறக்கக்கடவ **மயித்திரியாழ்வாரான** புத்ததேவர்க்கு'

இனி ஆசாரியர் என்போர், அவ்வாழ்வார்கட்குப் பிற்காலத்தே அவர்கள் அருளிச்செயலின் வழியைப் பின்பற்றி ஸ்ரீவைஷ்ணவ தரிசனத்தைப் பிரவசனஞ் செய்து, நாட்டை உய்யக்கொண்ட பெரியோராவர். இவர்கட்கெல்லாந் தலைவரானவர், ஸ்ரீமந்-நாதமுனிகள் என்பது பலருமறிவர்.

**வரலாறுகள்**

ஆழ்வார் ஆசாரியர்களென்ற இவ்விருவகைப் பெரியார்களின் வரலாறுகளைக் கூறும் நூல்கள்

---

(தக்கயாகப். 193, உரை), 'புத்தனுடைய என்பாகிய **தாது ஆழ்வார்**' (நீலகேசி, மொக்கல. 82, உரை), 'ஈழ மடிப்படுத்த **தாடையாழ்வார்**'(புத்தசரித்திரம். பக் 25) என்று '**புத்ததேவர்க்கும்** அவர் சம்பந்தமுடையார்க்கும், **அவிரோதியாழ்வார்** (திருநூற்றந்தாதி) எனச் **சைனமுனிவர்க்கும்** கூறப்படுதல் காண்க. இதனால் கடவுளர்க்கும், அடியார்கட்கும், மக்களிற் சிறந்த இருபாலார்க்கும் இச்சிறப்புப் பெயர் முற்காலத்தே பெருவழக்கிலிருந்த செய்தி தெரியலாம். திருச்சிற்றம்பலத் தாள்வார், கோவிந்தபாடி யாள்வார், ஆள்வார் அரிகுல கேசரி தேவர் (s. i. i. iii, 380, 342, 248,) என இஃது **ஆள்வார்** என்றும் சாஸனங்களிற் பயிலும். இங்ஙனம் பெருகிய வழக்குக்களிலிருந்து" இச்சொற்கு **ஸவாமி, பெரியோர்** என்பதே பண்டைப்பொருளாக வேண்டுமென்று தோற்றுகின்றது. 'பிறரை அடிமைகொண்டு ஆள்பவர்' என்ற பொருளில் ஆள்வார் என்று வழங்கிவந்தது, பின்பு ளகரழகர வேற்றுமையின்றி ஆழ்வார் எனத் திரிந்ததோ வென்றும், பெண்பாலரான திருமாலடியார் ஒருவர் **ஆண்டாள்** என்றும், ஆசாரியத்தலைவரிற் சிலர் **ஆளவந்தார் ஆண்டான்** என்றும் வழங்கப்பெறுவதை நோக்குமிடத்து, **ஆள்** என்பதே ஆழ்வார் என்பதற்குப் பகுதியோ என்றும் சங்கிக்க இடமுண்டு.

பலவாம். அவற்றுள், ஸ்ரீராமாநுஜர்காலத்தே அவர் திருவடி சம்பந்தம் பெற்று, அவரால் ஸ்ரீரங்கநாதனுடைய வைத்தியசாலைக்குத் தலைவராய் நியமனம் பெற்று விளங்கியவரும், கவிவைத்யபுரந்தரர் என்ற சிறப்புப்பெயர் பெற்றவருமான **கருடவாகன பண்டிதரால்**[1] வட மொழியில் காவியரூபமாகச் சுவைபெருக இயற்றப் பெற்ற திவ்ய சூரிசரிதமும், ஸ்ரீ நம்பிள்ளையின் திருவடி சம்பந்தம்பெற்ற **பின்பழகிய பெருமாள் சீயரால்** மணிப் பிரவாள நடையில் செய்யப்பெற்ற ஆறாயிரப்படி குரு பரம்பரையும் பழைமை பெற்றனவாகும்.

இவை யன்றி, பிரபந்நாமிருதம், பிரமதந்திரஸ்வதந்திரசியர் இயற்றிய குரு பரம்பரை முதலாகப் பிற்காலத்து நூல்களும் சிலவுள.

ஆழ்வார்கள் வைபவங்களுடன் நாதமுனிகள் முதலாகவுள்ள ஆசாரியர் வரலாறுகளையும் இச்சரித்திர கிரந்தங்களினின்று நாம் ஒழுங்காகவே தெரிந்து கொள்ளக்கூடும். இவைகூறும் வரலாறுகளுள் ஆசாரிய

---

* 1 இக் கருடவாகனபண்டிதர் எம்பெருமானாரான ஸ்ரீராமாநுஜயதிவரர் காலத்தவரே என்பதற்கு, அவ்விராமாநுஜர் வைபவத்தில் அப்பெரியார் திருநாடலங்கரித்த செய்தியைக் கூறுது, தாம் நூல்செய்த காலத்து அவர் எழுந்தருளியிருந்தவராகவே எழுதிச்செல்வது சிறந்த சான்றாகும். ஏனைய குரு பரம்பரைகள் யாவும் எம்பெருமானார் திருநாடலங்கரித்த செய்தியை விரிவாகவும் உருக்கமாகவும் விடாது கூறுதலுங் காண்க. ஸ்ரீராமாநுஜர்க்கு ஒரு நூற்றாண்டுக்குப் பின் ஆறாயிரப்படி குருபரம்பரை இயற்றிய பின்பழகிய பெருமாள் சீயர், தம்நூலுள் இத்திவ்யசூரிசரிதத்தைக் குறிப்பிட்டு அதன் சுலோகங்களைப் பிரமாணங்காட்டுதலாலும் அதன் பழைமை வலியுறுவதாம்.

வைபவங்களாக உள்ளவை ஆராய்ச்சிமுறைக்கு அமைந்தவையாதலால், அவற்றுட் பெரும்பகுதியும் அவ்வாராய்ச்சிவல்லாரால் அத்துணையாகச் சங்கிக்கப் படவில்லை. ஆனால், அந்நூல்களிலே பிற்பட்டவற்றிற் கண்ட ஆழ்வார்கள் காலங்களிலும், வேறுசில வற்றிலுமே தடைகள்-பல நிகழ்ந்து வருகின்றன.

## ஒரு கருத்து

முற்கூறிய திவ்யசூரிசரிதம், ஆறுயிரப்படி இரண்டினும், நம்மாழ்வாரொருவர்க்கன்றி வேறெவர்க்கும் அவதார காலங்கள் குறிக்கப்படவில்லையாதலால், பிற்பட்ட நூல்களிற் கண்ட காலக்குறிப்புக்கள் இடைச் செருகலாகவேண்டும் என்பது அன்னோர் கருத்து, ஆழ்வார்களுட் சிறந்த நம்மாழ்வார்க்கும், ஆசாரியத் தலைவரான நாதமுனிகட்கும் நேரான தொடர்பிருந்ததென்று திவ்யசூரிசரிதமும் ஆறுயிரப்படி குரு பரம்பரையும் கூறுவதாக அவர்கள் கருதுகின்றனர். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டே நம்மாழ்வார் காலத்தை அவர்கள் அறுதியிடுவர்.

ஆனால், அவர்கள் கூற்றுக்கு உண்மையில் அந்நூல்களிலே யாதொரு தெளிவான ஆதாரமும் இல்லை. இதனை, நம்மாழ்வாரைப் பற்றிக் கூறுமிடத்து நன்கு விளக்குவேன். சுருக்கமாக ஒன்றுமட்டும் இங்கே அறிதற்குரியது; அஃதாவது—அவர்கள் கருத்துப்படி நம்மாழ்வார்க்கும் நாதமுனிகட்கும் நேரான சம்பந்தமிருந்திருப்பின், ஆழ்வார் ஆசாரியர் என்ற **விபாகத்துக்கே** சிறிதும் இடமில்லாதொழியும்.

ஆழ்வார்களே ஆசாரியர்களாய்த் தலைமை வகித்து விளங்கவும், நாதமுனிகட்கு அத்தலைமை இல்லாமற்

போகவும் இடமேற்படும். அதனால், ஆழ்வார்கட்கும் ஆசாரியார் கட்கும் இடையே தொடர்ச்சியற்றிருந்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை. அத்தொடர்பின்மை எவ்வளவு காலம் நீடித்திருந்ததென்பதே இங்கு விடை தரவேண்டிய கேள்வியாகும்.

ஆழ்வார்கட்குத் துவாபரயுகவிறுதியும் கலியுகாரம்பமும் அவதார காலங்களாகக் கொண்டு, அவரவர் அவதரித்த கல்யப்தம், வருஷ மாச திதி வார நக்ஷத்திரங்கள் இவையென்று பிற்பட்ட குரு பரம்பரைகள் கூறுகின்றன.

திருமங்கையாழ்வாரைப்பற்றி சரித்திரவறிஞர் இக்காலக் குறிப்புக்களில் சிறிதும் நம்பிக்கை கொள்ளாமைக்கு, அவை முற்பட்ட திவ்யசூரி சரிதம் ஆறுயிரப்படிகளில் காணப்படாமை மட்டுங் காரணமன்று; பாண்டவருள் ஒருவனான அருச்சுனன் மகன் அபிமன்யு தொடங்கி 25-ம் தலைமுறையில் உதித்த உதயனனுடைய தேவி வாசவதத்தையின் வரலாற்றைத் திருமங்கை மன்னன் பாடுதலாலும், சாக்கிய வமிசத்து உதித்த கௌதம புத்தரால் தாபிக்கப்பெற்று அவர் பெயர் வாய்ந்த மதத்தைச் சார்ந்தவரைச் **சாக்கியர்** என்ற பெயரால்[1] வழங்கலாலும் பாரதயுத்தத்துக்கும், கௌதமசாக்கியர் அவதரித்த காலத்துக்கும் பின்பே சடகோபர் முதலிய ஆழ்வார்கள் அவதரித்தவர்களாதல் வேண்டும் என்பதும், அவர்களருளிச் செயல்களிற் கண்ட தமிழ் நடையின் போக்காலும் இலக்கணவமைதிகளாலும் சொற்பொருள் வழக்குக

1. '**இலிங்கத்திட்ட புராணத்தீருஞ் சமணருஞ் சாக்கியரும்**' (திருவாய். 4, 10, 5) '**சமணர் மிண்டர் விதியில் சாக்கியர்கள்**' (திருமாலை, 8).

ளாலும் அவரெல்லாம் கடைச்சங்கத்துக்குப் பிற்பட்ட காலவிசேடங்களில் விளங்கியவர்கள் என்பதுமே அன்னோர் முடிபு.

" சங்கமுகத் தமிழ்மாலை பத்தும் வல்லார்"
(பெரிய திரு. 3, 4, 10)

" சங்கத் தமிழ் மாலை முப்பதும்" (திருப்பாவை. 30)

என்று, அச்சங்கத்தை அப்பெரியார்கள் குறிப்பிடுதலாலும், அச்சங்க காலத்துத் தமிழரசனான கோச்செங்கணானுடையதும், 8 ஆம் நூற்றாண்டினனாகத் தெரிந்த பல்லவமல்லனுடையதுமான வரலாறுகளைப் பழைய சாஸனங்களும் நூல்களும் கூறுமுறையே திருமங்கையாழ்வார் பாடுதலாலும், அவ்வாழ்வாா திருஞான சம்பந்தரோடு ஒருகாலத்தவரென்று குருபரம்பரைகள் கூறுவதாலும், அச்சம்பந்தர்காலம் 7-ம் நூற்றாண்டென்பது சந்தேகமறக் கொள்ளப்பட்டுச் சைவர் பலருடைய சம்மதமும் பெற்றுள்ளமையாலும் திருமங்கையார் காலம் மேற்கூறியவற்றிற்குச் சில வாயிரவாண்டு முற்பட்டதென்பது பொருந்தாதாம்— என்றிவை போன்றன பலவும் நவீன சரித்திரவாராய்ச்சி வல்லாரின் வாதங்களாகும்.

## விநோத வாதங்கள்

இங்ஙனம் வாதிப்பவரிற் சிலர் ஆழ்வார்கள் காலத்தை அறுதியிட்டுக் கூறும் கொள்கைகளோ மிக விநோதமானவை. ஸ்ரீவல்லபன், குலசேகரன் என்ற பெயர்களை இராமாநுஜர் காலத்துக்குப் பிற்பட்ட பாண்டியகேரளவரசர்சிலர் கொண்டுள்ளதைக் கண்டதும், பெரியாழ்வார் குலசேகரப்பெருமாளிருவரும்

அவ்வாசாரியத் தலைவர்க்குப் பிற்பட்டவர்கள் என்று எழுதிவிட்டனர் ஒருசிலர்.

மாறங்காரி, மதுரகவி என்ற பெயர்கள் பாண்டியன் மந்திரியொருவனுக்கு வழங்கியிருத்தலைச் சாஸனத்திற் பார்த்ததும் காரிமாறன் என்ற நம்மாழ்வார், அம்மாறங் காரியின் மகனென்றே கருதிவிட்டனர் வேறு சிலர்.

மற்றுஞ் சிலரோ, நாயன்மாரது தேவாரத்தைப் படித்தே ஆழ்வார்கள் பதிகம் பாடத் தெரிந்து கொண்டனர் என்று கூசாது எழுதினர்.

வேறு சிலர், இதற்குப் பிரமாணங் காட்டுவார் போல, 'அடியாரும் பகவரு மிக்கதுலகே' என்ற திருவாய்மொழித் தொடருள் 'அடியார்' என்று சிவனடியாரான நாயன்மாரையே நம்மாழ்வார் குறித் தனர் என்று கூறினர்.[1]

இன்னுஞ்சிலரோ—"உன் திருவடிச் சூடுந் தகைமை யினர்- எப்படி யூரா மிலைக்கக் குருட்டாமிலைக்கு மென்னும்-அப்படி யானுஞ் சொன்னேன்" என்று நம்மாழ்வாரால் கூறப்பட்டவர் "ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்து" என்று பாடிய மாணிக்கவாசகரே என்று வரைந்து வெளிப்படுத்தினர்.

இங்ஙனமே ஆராய்ச்சியின்றியும், போதிய பொருளுணர்ச்சியும் வழக்குணர்ச்சியும் இல்லாமலும் பலரும் பலபட எழுதிவருவாராயினர்.

---

1 **அச்சுதன்** றன்னை...மேவித்தொழு மடியாரும்' என்றும் '**உன் திருவடிச்** சூடுந் தகைமையினர்' என்றும், அடியார் திருவடி என்பவற்றுக்கு முன்னிற்கும் சொற்களின்பொருள் இன்னோர்க்குப் புலப்பட்டதில்லை.

## நோக்கும் போக்கும்

இங்ஙனம் குறை கூறுவதால், ஒரு சார்பின்றி ஒழுங்கான முறையில் ஆழ்வார் சரித்திரங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்பவரே இல்லையென்று நான் கருதுவதாகவேனும், இத்தகைய ஆராய்ச்சி செய்தற்குரியதன்று என்பது என் கருத்தென்றேனும் எவரும் நினைக்கக்கூடாது.

சாஸனங்களும் மற்றக்கருவிகளும் பல்கிப் பெருகி வருதலால் உலக சரித்திரங்கள் அவாவுடன் ஆராயப் பெற்றுவரும் இக்காலத்தே, தெய்வத் தன்மை வாய்ந்த அடியார்களின் கால நிலைகளைத் தெரிந்துகொள்ள நம்மவர் அவாவுவதும் இயல்பேயாம். அத்தகைய அவாவால் விளையும் ஆராய்ச்சிகளைத் தடுக்க முயல்வதும், அதன் பயனான முடிவுகளைத் தக்க காரணமின்றி ஒதுக்குவதும் நவீனவுலகத்தின் முன் நடவாதசெயல்கள் என்பது தெரிந்ததே. அவ்வாராய்ச்சிகளால் உண்மை முடிபுகள் பல ஏற்படக் கூடுமாதலால், அவற்றை யாவரும் ஏற்றற்குரிய காலம் அதிக தூரமின்றி நெருங்கியுள்ளதென்பதில் ஐயமில்லை.

தம் காலத்தில் மக்களிடம் வழங்கிய கர்ணபரம்பரைச் செய்திகளை ஒருமுகப்படுத்தி முன்னோர் எழுதி வைத்த சரித்திரக்குறிப்புக்களுடன் பிற சாதனச் செய்திகள் மாறுபடக் கூடுமாயின், அவற்றை ஆராய்ச்சி செய்வதே பெருங்குற்றமென்ற கொள்கை, சிலவாண்டுகட்குமுன் நம்மவரால் ஆதரிக்கப்பட்டவளவு இப்போதில்லையென்றே சொல்லலாம். அத்தகைய கொள்கையை ஆதிமுதலே **அநாதரித்து** வருபவருள் யானும் ஒருவனென்பது பலரும் அறிவர். இப்போதும் அம்முறையில் நின்றே ஆழ்வார்களைப் பற்றி நீண்ட

காலமாக ஆராய்ந்துவந்த என் முடிபுகளை ஒரு தொகுதியாக இப்போது நான் வெளியிடப்புகுகின்றேன்.

## எனது ஆய்வு

இவ் உபந்நியாசம், இதுகாறுங் கிடைத்துள்ள சாதனங்களை யெல்லாந் திரட்டிக்கொண்டு ஒருசார்புமின்றிச் சரித்திரகாரனொருவன் செய்யும் ஆராய்ச்சி போன்றதேயன்றி, சம்பிரதாயமுறையுள் நின்று கூறுவதன்று. வைஷ்ணவசம்பிரதாயிகள் அல்லாதபிறரும் சாஸனவாராய்ச்சிவல்லாரும் ஆழ்வார்கள்சம்பந்தமாகக் கூறும் சரித்திரகாலக் குறிப்புக்களை நன்குசோதித்து, அறிஞர்கள் ஒப்பக்கூடிய முறையில் உண்மைகளை ஆராய்ந்து வெளியிடவேண்டும் என்பதே எனது முயற்சியாகும்.

அதனால், ஆழ்வார்திருவாக்குக்களால் அவர்காலநிலைகளாகத் தெரியவருபவை யாவை? வேறு நூல்களும் சாஸனங்களும் அவற்றுக்கு எவ்வளவில் துணையாகின்றன?—என்பனவே நான் விவரிக்கவிரும்பும் விஷயங்களாம்.

முதலாவதாக நான் இங்கே கூறுதற்குரியது—கலியுகத்தொடக்கத்தின் முன்னும்பின்னும் ஆழ்வார்கள் அவதரித்தவர்கள் என்பதற்குப் பழைய நூற்பிரமாணம் இல்லையென்பதேயாம். மேலே கூறியபடி திவ்யசூரி சரிதம், பின்பழகிய பெருமாள்சீயர் குருபரம்பரை என்ற பழைய நூல்களிரண்டினும் ஆழ்வார்கட்கு மாதங்களும் நக்ஷத்திரங்களுமன்றி வேறு கூறப்படவில்லை. அதனால் நம்மாழ்வார்க்குமட்டும் அந்நூல்கள் கூறும் ஏனைப் பஞ்சாங்ககாலங்கள் இடைச்செருகல் என்றே கொள்ளற்

குரியன. இவற்றை, அவ்வாழ்வாரைப் பற்றிக் கூறு மிடத்து விவரிப்பேன்.

## சங்க காலத்துக்குப் பிற்பட்டார்

சரித்திரவறிஞரெல்லாங் கருதுமாறு, ஆழ்வார்கள் கடைச்சங்ககாலத்துக்குப்பின் வாழ்ந்தவர்களே என்பது. சங்க நூல்களிலும் சாஸனங்களிலும் நன்குபயின்றவர் யாவரும் எளிதில் அறியக்கூடியதென்பதில் ஐயமில்லை.

இவ்வாறு, ஆழ்வார்கள் சங்கத்துக்குப் பிற்பட விளக்கியவர்களே என்பது ஆராய்ச்சியில் தெளிவாகப் பெறப்படுமாயின் அதனை மறைப்பது எதன் பொருட்டு? அதனால் அவர்களது இணையற்ற பெருமைக்குவந்த குறைவென்னை? ஆசாரியர்களெல்லாம் பிற்பட அவதரித் திருப்பதால் அவர்க்கு நேர்ந்த இழுக்குண்டோ? ஆதலால், இத்தகைய ஆராய்ச்சியின் பயனான முடிவு களை அகாரணமாகப் புறக்கணித்தல் நல்லறிஞர்க்கு உரியதன்றென்க.

## நாதமுனிகள் காலத்திற்கு முன்னே

ஆழ்வார்களெல்லாம், ஆசாரியருள் தலைவரான ஸ்ரீமந் நாதமுனிகட்கு முற்பட்ட காலத்தவர் என்பது மேலே கூறப்பட்டது. அந்நாதமுனிகள் கி. பி. 823-ல் அவதரித்தவர் என்பது, பிரபந்நாமிருதம், கோயி லொழுகு முதலிய நூல்களால் தெரியலாம். இக்காலம், மற்ற ஆசாரியபரம்பரைகட்கு மிகவும் இயைந்துவரு கின்றது. 823-ல் அவதரித்த நாதமுனிகள் 918-ல் பரம பதித்தார் என்று அந்நூல்களினின்று நாம் அறியலாகும். இதனால் அப்பெரியார் 95 திருநக்ஷத்திரங்கள் எழுந்தருளி யிருந்தவர் என்பது பெறப்படும். பரமயோகியாகக் கூறப்படும் அவர்க்கு இவ்வயது பெரியதுமில்லை. இவ்

விஷயமாகவும் நம்மாழ்வாரைப்பற்றிக் கூறுமிடத்து விரிவாகப்பேச நேரும். ஆக, இங்கே சுருக்கமாகவும் ஐயமில்லாமலும் தெரிந்து கொள்ளற்குரியது யாதெனின், கி. பி. 823-க்கு முற்பட்டதான காலமே, எல்லா ஆழ்வார்களும் எழுந்தருளியிருந்தது என்பதேயாம்.

நாதமுனிகள் காலத்தும் அவர்க்குப்பின்பும் ஆழ்வார்கள் அவதரித்தவர்கள் என்றுசிலர்விடாப் பிடியாகக் கூறிவருவது பிரபிதாமகன் கல்யாண காலத்தில் அவன் பேரன் தாம்பூலம் வழங்கினனென்ற கதைபோன்றதேயன்றிப் பிறிதில்லை.

ஆகவே, சங்ககாலத்துக்குப் பின்னும் நாதமுனிகளது அவதாரகாலமன 823-க்கு முன்னும், ஆழ்வார்கள் எவ்வெந்நூற்ருண்டில் விளங்கியிருந்தனரென்பதே இனி ஆராயத்தக்கது.

## ஆழ்வார்கள் வரிசை

ஆழ்வார்கள் அவதாரக்கிரமம் அடியில்வரும் ஸ்ரீ மணவாளமாமுனிகள் திருவாக்கால் அறியலாம்:—

> **" பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை**
> **அய்ய னருண்மாறன் சேரலர்கோன்—துய்யபட்ட**
> **நாதனன்பர் தாட்டூளி நற்பாண னற்கலியன்**
> **ஈதிவர்தோற் றத்தடைவா மிங்கு.'' (உபதேச. மாலை.)**

திவ்யசூரிசரிதமுடையார்நீங்க மற்றக் குருபரம்பரையாசிரியர் பெரும்பாலாரும் இம்முறைவைப்பையே கொள்ளினும், நம்மாழ்வார் மதுரகவிகள் இருவர் வைபவங்களையும் எல்லாவாழ்வார்கட்கும்பின் இறுதியில் வைத்து அவர்கள் எழுதுகின்றனர். இவர்க்கெல்லாம் முற்பட்டவரும், ஸ்ரீராமாநுஜர் காலத்தவருமான திரு

வரங்கத்தமுதனார், தம் இராமாநுச நூற்றந்தாதியில் மேற்கண்ட குருபரம்பரையாசிரியர் கூற்றுக்குச் சிறிது மாறுக ஆழ்வார்கள் அவதாரமுறையை[1] அமைத்துளார். இவற்றினின்று, ஆழ்வார்கள் அவதாரக்கிரமம் பற்றிப் பூர்வாசாரியர்கள் ஒருபடியாஎ கருத்துடைய ரல்ல ரென்பது தெரியலாம்.

இனி, திவ்யசூரி சரிதங்கூறும் முறைவைப்பு, மேற் கூறிய வெண்பாவுக்குப் பெரிதும் ஒத்ததேயாயினும் அதனுட்கண்ட ஆழ்வார் வரலாறுகள் பல அமிசங் களில் மற்றக் குருபரம்பரைகளினும் வேறு பட்டன வாகும்.

திருமாலடியார்கள் பன்னிருவரையும் ஒரு காலத் தவர்களாகவே அந்நூல் கூறிச் செல்கின்றது. நம் மாழ்வாரைப் பிரதானராகக்கொண்டு அவர் திருமுன்பு எல்லா ஆழ்வார்களும் குழுமித் தத்தம் திவ்யப்பிரபந் தங்களைப் பாடி ஆனந்தித்து அளவளாவிய செய்தியை அச்சரிதநூலுட் காணலாம்.[2] பெரியாழ்வார் தம்

---

1. இராமாநுசநூற்றநதாதி, 8-முதல் 19-வரையுள்ள பாசுரங்களில் முதலாழ்வார் மூவர், திருப்பாணாழ்வார், திருமழிசையார், தொண்டரடிப்பொடிகள், குலசேகரப் பெருமாள், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கை மன்னன், நம்மாழ்வார், மதுரகவிகள் என்ற முறைவைப்புக் கூறப்படுதல் காண்க.

2 வடமொழியிலமைந்த இக்காவியம், எட்டயபுரம் ஸம்ஸ்தான வித்வான் ஸ்ரீ. உ. வே. திரு. வீ. **சாமி ஐயங்கார் ஸ்வாமி**யால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, மதுரை **ஹரிசமயதிவாகர** பத்திராதிபரால் அப்பத்திரிகைப்பிரசுர மாக வெளியிடப்பட்டுள்ளது. இம்மொழிபெயர்ப்பின் 12-ம் அத்தியாயத்து 91, 92-ம் பக்கங்களில் மேற்கூறிய வரலாறு களைக் கண்டுகொள்க.

திருமகளாரான ஸ்ரீ கோதையின் திருமணத்தைச் சடகோபர் திருவுள்ளத்துக்கேற்ப அவர் திருநகரியிலே நடத்திப்போந்த சிறப்பை அக்காவியம் பலபடப் புனைந்து கூறும். ஸ்ரீசடகோபர், ஆண்டாள் பாசுரங் களைக்கேட்டு உருக்கமும் இரக்கமும் அடைந்தனர் என்றும் அது கூறுதல் காணலாம். இக்காலத்தே திருமங்கை மன்னன் தம் களவுத் தொழிலில் முனைந்து நின்றனர் என்றும், ஸ்ரீகோதை அழகிய மணவாளனை மணந்து மணக்கோலமாகத் திருவரங்கஞ்செல்லும் இடை வழியில் வழிமறித்து, வாள்வலியால் அவர் மந்தி ரோபதேசம் பெற்றனர் என்றும் சொல்லப்படுகின்றன. இன்னும் உள்ள வேறுபாடுகளை, அவ்வவ்வாழ்வாரைப் பற்றிக் கூறுமிடத்திற் குறிப்பிடுவேன்.

இவ்வாறு திவ்யசூரிசரிதத்திற்கண்ட வரலாறுக ளெல்லாம் அந்நூல் தோன்றிய ஸ்ரீராமாநுஜ முனிவரர் காலத்தே ஆழ்வார்களைப் பற்றிப் பிரபலமாக நாட்டில் வழங்கிவந்த செய்திகள் என்றே கொள்ளத் தடை யில்லை. அச்செய்திகள் யாவும் சரித்திரவுண்மைக் குரியன என்று நாம் கொள்ள முடியாது.

ஆயினும் அவற்றினின்றும் நம் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளத் தக்கன சிலவுள. அவையாவன:— ஆழ்வார்களிற் பெரும்பாலாரும் ஒரு காலத்தவர்களே என்பதும், அவருள் நம்மாழ்வார் பிரதானராக அவர் காலத்தே கருதப்பட்டவர் என்பதுமே யாம்.

ஆழ்வார்களெல்லாம் சமகாலத்தவர்கள் என்ற செய் தியைப் பின்பழகியசீயர்குருபரம்பரை தெளிவாகக் கூறியதில்லையேனும், நம்மாழ்வாரை **அவயவி**யாகவும், ஏனையாழ்வார்களை அவர்க்கு அவயவங்களாகவும் அந் நூல் கூறுவதற்கு இதுவே கருத்தாதல் வேண்டும்.

ஏனையாழ்வார்கட்கு மற்றக் குருபரம்பரைகள் கூறும் வெவ்வேறு பஞ்சாங்க காலக் குறிப்புக்களை இவரது ஆறுயிரப்படி நூலிற் காணுமையாலும், திவ்ய சூரிசரிதத்தை இவர் பிரமாணமாக எடுத்தாளுதலாலும் மேற் கூறிய கருத்து வலியுறுகின்றது. ஆதலால், ஆழ்வார்கள் அவதாரக் கிரமம், மேற் கூறிய வரவர முனிகளின் வெண்பாவின்படி அமைதல் பொருந்து மென்பதும், அவர்களிற் பெரும் பாலாரும் ஒரு நூற்றுண்டுக்குள் முன்பின்னுக அவதரித்துச் சமகாலத் தவராக விளங்கியவர் என்பதும் மேற் கூறிய பழைய சரித்திர நூல்களிரண்டையுங் கொண்டு நாம் தெரிந்து கொள்ளலாம்.

## எனது ஆய்வு வழிகள்

பின்னெழுந்த குருபரம்பரைகளில் ஆழ்வார்கள் அவதார காலங்களாகக் குறிப்பிடப் பெற்ற பஞ்சாங்க காலக் குறிப்புக்களுக்கு இன்னது பிரமாணம் என்பது தெரியவிடமில்லாமையால், அவற்றைச் சிறந்த கருவி களாகக்கொண்டு அறிஞர் சிலர் கணித்து வெளியிட் டுள்ள வெவ்வேறுன காலவரையறைகளை இவ்வாராய்ச் சிக்கு விசேடமாகத் தழுவிக்கொள்ளக் கூடவில்லை. அவற்றிற் சில, ஆழ்வார் திருவாக்கால் அறியப்படும் சரித்திரச் செய்திகட்கு இயையாதனவாகவும் உள்ளன. ஆதலால், ஆழ்வார்கள் விஷயமாக யான் கூறுவன வற்றுக்கெல்லாம் திவ்யசூரிசரிதமும், பின்பழகிய பெருமாள் சீயர் குருபரம்பரையுமே ஆதாரங்களாவன என்பதும், அவையும் ஆழ்வார்களால் நேரே கூறப் படும் பாசுரங்கட்கு இயையாதன வாயின், அத்திருவாக் குக்களே பெரும் பிரமாணங்களாகக் கொள்ளப்படும் என்பதும் அறியத்தக்கன.

ஆழ்வார்கள் சரித்திரங்களாக வழங்குவன யாவரும் நன்கறிந்தவையாதலால், அவற்றை விரிக்க வேண்டிய தில்லை. ஆதலின், ஆராய்ச்சிக்குரியவளவில் சுருங்கவே கூறி, ஆழ்வார்கள் திருவாக்கால் அறியக்கிடக்கும் சரித்திரப் பகுதிகளையும் அவர்கள் கால நிலையையும் இனி விளக்க முயல்வேன்.

## இரண்டாம் அதிகாரம்

# முதலாழ்வார் மூவர்

### *பொய்கையாழ்வார்*

**பொ**ய்கையார், பூதத்தார், பேயார் என்ற மூவரும் **முதலாழ்வார்கள்** என்றழைக்கப்படுவர். இவர்கள் அயோநிஜர்களாய் ஒரே மாதத்தில் அடுத்தடுத்த நக்ஷத்திரங்களில் அவதரித்தவர்கள் என்பதும், தனித் தனியே நாட்டில் சஞ்சரித்து வந்த இவர்கள் திருக்கோவலூரிலே ஒரு வீட்டின் ஒடுக்கமான இடைகழியில் மழை பெய்த ஒரு நாளிரவு நெருங்கித்தங்க நேர்ந்தபோது, திருமால் இவர்கட்கு அருள்புரிய விரும்பி இவர்கட்கிடையில் நான்காமவராக இருந்து இருளில் மிகுதியாக நெருக்கினரென்பதும், அவ்வாறு துன்புறுத்துபவர் யாவர் என்பதனை அறிதற்கு வேறு விளக்கின்மையால் தங்கள் ஞானமாகிய விளக்கேற்றிப்பாட, அப்பெருமான் அங்கு அவர்கட்குக் காட்சி கொடுத்தனர் என்பதும் பிரபலமான சரிதங்களாகும்.

இவர்களுள் பொய்கையார் காஞ்சியிலும், பூதத்தார் திருக்கடன்மல்லையிலும், பேயார் மயிலாப்பூரிலும் அவதரித்தவர்களென்றும், இவர்கள்மூவரும் திருவல்லிக் கேணியில் யோகத்தில் எழுந்தருளியிருந்த திருமழிசை யாழ்வாரைச் சந்தித்து அளவளாவினரென்றும் குரு பரம்பரைகள் யாவும் கூறும்.

27-வருஷங்கட்கு முன்பு **பொய்கையார்** என்ற தலைப்பெயரிட்டுச் **செந்தமிழில்** நீண்ட வியாச மொன்று எழுதியுள்ளேன்.[1] அதனில், யான் கூறிய முடிவின் சுருக்கம் அடியில் வருமாறு:—

யாப்பருங்கல விருத்தி என்ற பழைய உரை நூலில் "பொய்கையார் பாட்டு" என்ற குறிப்புடன் சில வெண்பாக்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. இவ்வெண்பாக்கள் சில திரையர் முதலிய அரசரைப் பற்றியும் புகழ்வன. இப்பொய்கையாரை—"சாவவுங் கெடவும் பாடவல்லவரும், முக்காலமுமுணர்ந்தவரு மாகிய இருடி" என்று அவ்விருத்திகாரர் எழுது கின்றனர். ஆரிடச் செய்யுள்கட்கு அவ்விருத்தி காட்டிய உதாரணங்களுள், பொய்கை வாக்கு என்று குறிப்பிடப்பெற்ற இரண்டு வெண்பாக்கள், பொய்கை யாழ்வார் அருளிய முதற்றிருவந்தாதியில் உள்ளன. இதனுல் இருடியாகிய பொய்கையாரும், ஆழ்வாரகிய பொய்கையாரும் களவழிபாடிய பொய்கையாரும் ஒருவரேயாதல் வேண்டும் என்றும், இவர்கள் வெவ்வேருனவர் என்பது, 11-ம் நூற்றுண்டுத் தமிழ்ப் புலவர்கள் கொண்ட கருத்தன்றென்றும் தெரிகின்றன— என்பதே.

---

1. *செந்தமிழ். தொகுதி-1, பகுதி-6.*

இவ்வாறு பல வருஷங்கட்கு முன்பு பொய்கையாழ்வாரைப்பற்றி எழுதப்பட்ட என் முடிவைச் சரித்திர வறிஞர் சிலா முழுதுந் தழுவிக் கொண்டனர்.[1]

ஆனால் வேறு சிலர் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.[2] இவர்கள் ஆசங்கையெல்லாம், சங்ககாலத்தவரான பொய்கையார் உலகப்பிரவிருத்தியுடையவராகவும் அரசர்க்கு நண்பராய் அவர்களைப் பாடியவராகவும் தெரிதலின், நாக்கொண்டு மானிடம்பாடாதவரும் யோகியுமான பொய்கையாழ்வாராக அவர் ஒருபோதும் ஆகார்—என்பதேயாம்.

இவ்வாக்ஷேபம் என்கூற்றைப் பற்றியதன்றிப் பழையதோர் உரைகாரர் கொள்கையைப் பற்றியதென்பது இங்கு அறியத்தக்கது. யாப்பருங்கலவிருத்தியுடையார் எழுதியவை உண்மைக்கு மாறுபடுமாயின், அதுபற்றி எனக்கு அதிகக் கவலையில்லை. ஆனால் பழைய பெரிய உரைகாரரொருவரது கூற்று அக்காலத்துப் பிரபல வழக்கொன்றைப்பற்றியே அமைந்திருக்க வேண்டுமென்றும், அதனை அவ்வளவு எளியதாக ஒதுக்கி விடுவது ஏற்கத் தகாததென்றும் நான் வற்புறுத்துவேன். முன்னோரான அவர் கூற்றுத் தக்க காரணமின்றியே தள்ளுதற்குரியதாயின், வேறு எதுதான் கொள்ளுதற்குரியதாகும்?

---

1. ('தென்னிந்திய வைஷ்ணவசரிதம்' (Early History of Vaishnavism in South India) என்ற தம் நூலில் (பக் 67—73) டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் முதலியோர் இக்கொள்கை கொண்டெழுதி யிருத்தல் காண்க.

2. தஞ்சை: ராவ்பகதூர்: K. S. ஸ்ரீநிவாசபிள்ளையவர்கள் முதலியோர் (தமிழ்வரலாறு, பக். 176-7)

அவ் யாப்பருங்கல விருத்தியுடையாரோ 11-ம் நூற்றுண்டின் முற்பகுதியினர் ஆவர். பிற்பட்ட வீர சோழிய வுரைகாரர் தண்டியலங்காரமுடையார் இவர்கள் போல, வீரராசேந்திரன், முதற்குலோத்துங்கன் முதலிய பிரபல சோழர்களைப்பற்றிய பாடலொன்றையும் அவர் தம்முரையுள் ஆளாமையே இதற்குப் போதிய சான்றும்.[1] ஆகவே அவரெழுத்துக்கள் யாவும் குருபரம்பரைகள் எழுதப்பட்டதற்கு முன்பே வழங்கிய தமிழ்நாட்டுப் பழஞ் செய்திகளாதலால் சரித்திரவாராய்ச்சிக்கு அவை சிறந்த சாதனங்களென்று கொள்ளத் தடையில்லை என்க.

இனி, அவ்விருத்திகாரர் ஆரிடமான கவிகட்கு உதாரணங்காட்டி வருமிடத்தே—"அவை உலகியற் செய்யுட் கோதிய உறுப்புக்களின் மிக்குங் குறைந்தும் வரும்" என்றும், அவ்வாரிடம் பாடுதற்குரியார்—"ஆக்குதற்குங் கெடுத்தற்கும் ஆற்றலுடையோராய் முக்காலமும் உணர்ந்த இருடிகள்"என்றும், அவராவார்—பொய்கையார், குடமூக்கிற்பகவர், பூதத்தார், காரைக் காற்பேயார், மூலர் முதலியோர் என்றும் எழுதி, அவ்வாறு மிக்குங்குறைந்துமுள்ள அவர் பாடல்களை மேற்கோள்காட்டிச் செல்கின்றனர்.

ஈண்டுக் குறிக்கப்பட்ட ஆரிடக் கவிகளெல்லாம், யோகிகளான முதலாழ்வார்களுள்ளும் நாயன்மார் களுள்ளும் சேர்ந்த அடியார்களாக விளங்குதல் குறிப் பிடத்தக்கதாம். இவற்றுட் பொய்கையார் பாடிய ஆரிடச்செய்யுள்:—

---

1. செந்தமிழ், 24-ம் தொகுதியுள் 'அமிதசாகரர்' என்ற தலைப்பெயரின்கீழ் யான் எழுதிய ஆராய்ச்சியுள், இவ்விருத்தி காரரைப் பற்றியுங் குறிப்பிட்டுள்ளேன்.

"வஞ்சி வெளிய குருகெல்லாம் பஞ்சவன்
நான்மாடக் கூடலிற் கல்வலிது
சோழ னுறந்தைக் கரும்பினிது தொண்டைமான்
கச்சியுட் காக்கை கரிது."

என்பது முதலியன. மூலர் பாடிய ஆரிடச் செய்யுள்:—

"இலைநல வாயினு மெட்டி பழுத்தாற்
குலைநல வாங்கனி கொண்டுண லாகாது
இளையாள், முலைநலங் கொண்டு முறுவலிக் கின்ற
வினையுடை நெஞ்சினை வெய்துகொ ளீரே"

என்பது. பூதத்தாரும் காரைக்காற் பேயாருஞ் சேர்ந்து பாடிய ஆரிடச் செய்யுள்:—

"கறைப்பற் பெருமோட்டுக் காடு கிழவோட்
கரைத்திருந்த சாந்தைத்தொட் டப்பேய்
மறைக்க வறியாது மற்றுந்தன் கையைக்
குறைக்குமாங் கூன்கத்தி கொண்டு."

என்பது. இவற்றுட் பொய்கையார் பாடிய ஆரிடச் செய்யுள் தமிழரசர் நால்வரையும் பற்றித் தெரியலாம். மூலர் வாக்காகக் குறித்த ஆரிடப்பாட்டு திருமந்திரத்தில் 204-ம் செய்யுளாக உள்ளது. ஆனால், அவ்விருத்தியில் மிக்குவந்ததாகக் குறிக்கப்பட்ட கூன்சீர், இப்போதுள்ள திருமந்திரப் பதிப்புக்களிற் காணப்படவில்லை; அன்றியும், அப்பாடல் பாடபேதமுங் கொண்டுளது. இதனினின்று மூலரும் திருமூலரும் ஒருவரே என்பது அவ்விருத்திகாரர் கருத்தென்பது தெரியலாம். இனி அவ்விருத்தியில், காரைக்காற் பேயார், என்றும், காரைக்காற் **பேயம்மையார்** என்றும்

---

1. யாப்பருங்கல விருத்தி, 93 (பக். 350-52.)

பிரதிபேதமுள்ளன.[1] இதனால், அப்பெயர்கள் நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவரான காரைக்காலம்மையாரையே குறிப்பன என்பதுந் தெளிவாகின்றது.

இனிப் பேராசிரியர் நச்சினார்க்கினியர் முதலிய உரைகாரர்கள், விருந்து என்ற நூற்பகுப்புக்கு— "பொய்கையார் முதலாயினார் செய்த அந்தாதிச் செய்யுள்"களை உதாரணங்களாகக் காட்டுகின்றனர்.[2] 'பொய்கையார் முதலாயினார் அந்தாதிகள்' என்பதனால், பூதத்தார்பேயார் திருவந்தாதிகளும் தழுவப்பட்ட செய்தி விளங்கும். ஆதலால் முதலாழ்வார்களின் அருளிச்செயல்களையே அவ்வுரைகாரர் குறிப்பிடுதல் தெளிவாம்.

நச்சினார்க்கினியர் "யோகிகளாய் உபாயங்களால் முக்காலமும் உணர்ந்த மாமூலர் முதலியோர் அறிவன்றே எத்து அணைநிலைவகையோராவர். அவர்க்கு மாணாக்கராகித் தவஞ் செய்வோர் தாபதபக்கத்தராவர்" என்று, பழைய செய்தியொன்று வழங்குதலை அறிந்தெழுதுவர்.

இவற்றால், பொய்கையார் முதலிய திருமாலடியார்களும், திருமூலர் காரைக்காற்பேயார் முதலிய சிவனடியார்களும் சமயவழியாகப் பிரபலம் பெற்றதற்கு முன்பே, பரம்பரையாகவந்த தமிழ்நாட்டு வழக்கு முறையால், ஆக்கவும் கெடுக்கவும் ஆற்றலுடைய தமிழ்ப் பெருமுனிவர்களாகக் கருதப்பட்டும், அவர்கள் திருவாக்குப் பழைய நூலுரைகளில் எடுத்தாளப்பட்டும் வழக்கிலிருந்தன என்பது தெரியலாம்.

---

1. ஐங்குறு நூறு, முன்னுரை பக்கம் 14.
2. தொல்காப்பியம், செய். 239, பேரா. நச். உரை.

பொய்கையார் வாக்காக யாப்பருங்கல விருத்தி காரர் காட்டிய வெண்பாக்களுள், தமிழரசர்மூவரும் தொண்டைமானும் கூறப்படுகின்றனர். இதனல் தமிழிருடியாகிய பொய்கையார், தங்காலத்து அரசர் களுடன் பழகியவரென்பது பெறப்படும். இவ்வாறு, முனிவர்களான இன்னேர் உலகப்பிரவிருத்தியுடை யராய் மானிடம் பாடினரெனல் பொருந்துமா என்று சிலர் சங்கிப்பர். பரிசுபெற்று உயிரோம்புங்கருத்தோடு மானிடம்பாடிய புலவருள் ஒருவராக இவரைக் கருதுவது என்னே? உலகநன்மை புரிய விரும்பியும், அரசர்க்கு இடித்துறுதி கூறுதல் பற்றியும், மற்றும் அவரது பெருந்தன்மைகளைக் கருதியும் இப்பெரியார்கள் மானிடம்பாட நேர்ந்ததாயின் அஃது இவர்க்குக் குறை வாகுமோ?[1] பொய்கையார் போன்ற முனிவர்களாலும் பாடப்பெற்றவராயின், அவ்வரசர்கள் பெருமையால் நிறைந்தவர்களாகவே கருதத் தடையென்னை? அதனல்,

"கோவாகி மாநிலங் காத்துநங் கண்முகப்பே
மாவேறிச் செல்கின்ற மன்னவரும்—பூமேவும்
செங்கமல நாவியான் சேவடிக்கே யேழ்பிறப்புந்
தண்கமல மேய்ந்தார் தமர்"

(இரண். திருவந், 69)

என்று பூதத்தாழ்வார் அருளியபடி, அவர்காலத் தரசர்கள் திருமாலடிமையிற் சிறந்த பெரியோராய் விளங்கினர் என்றே கொள்ளற்குரிய ரென்க. அன்றியும்—

"பழுதே பலபகலும் போயினவென் றஞ்சி
யழுதே னரவணைமேற் கண்டு—தொழுதேன்" (16)

1. தொல்காப்பியம், புறத். 70, நச். உரை.

என்று பொய்கையாரே கூறியவாறு, இளமையில் அரசர் போன்றவரைச் சார்ந்திருந்து அன்னோர் காலம் போக்கிய குறிப்புப் புலப்படுதலாலும் இஃது அமைத்துக் கொள்ளத்தகும்.

இவ்வாறு, அரசர்க்கு நண்பராய் ஏதோ சந்தர்ப்பத்துக்கேற்ப அவர்களைப் பாடியிருத்தலால், போரிற் பிடிக்கப்பட்ட சேரனைச் சிறை நீக்கி உய்விப்பதற்காகச் சோழன் கோச் செங்கணானைக் களவழி நாற்பது என்ற நூலாற் புகழ்ந்த பொய்கையார், மேற்கூறிய தமிழ் முனிவரான பொய்கையாழ்வாராகவே இருத்தல் கூடும் என்பது என் கருத்து.[1]

இங்ஙனம் பாடியது, தம் பேரருளால் ஒருவனது துன்பநீக்கும் அறச்செயல்பற்றியதேயன்றிப் பரிசில் நோக்கிய தன்றென்பதும், பாடப்பட்ட அரசன் திருமங்கைமன்னன் புகழுமாறு, பாகவதசிரோமணி யென்பதும் நாம் தெரிந்துகொள்ளத்தக்கன. ஒருகால், களவழிபாடிய பொய்கையாரைப்பற்றிய முடிபு எத்தகையதாயினும், யாப்பருங்கல விருத்தியுடையார் கூறிய பொய்கையார் ஆழ்வாரின் வேறல்லர் என்பதே முன்னோர் கருத்து என்பது ஒருதலையாமென்க.

இப்பொய்கையார்வாக்காக மேலேகுறித்த நூல்களும் பாடல்களுமன்றி, புறநானூற்றுள் கோக்கோதை மார்பன் என்ற சேரனைப் பற்றியுள்ள 48, 49-ம் பாடல்களும், கோச் செங்கணான் என்ற சோழனைப்பற்றியுள்ள

---

1. **இன்னருளின், மேதக்க பொய்கை கவி** கொண்டு வில்லவனைப், பாதத் தளைவிட்ட பார்த்திவனும் (விக்கிரம சோழனுலா) என்று, கவிச்சக்கரவர்த்தியாகிய கூத்தரும் சேரமானைச் சிறை நீக்கிய பொய்கையாரது பெருங்கருணைத் திறத்தை விசேடித்துப் பாடியது நோக்கற்பாலது.

74-ம் புறப்பாட்டும், நற்றிணை 18-ம் செய்யுளும் பன்னிரு பாட்டியலிற் சில சூத்திரங்களும் இப்பெரியார் இயற்றியனவாகக் காணப்படுகின்றன.[1]

“ ஆழி யிழைப்பப் பகல்போ மிரவரிற்
றேழி துணையாத் துயர்தீரும்—வாழி
நறுமாலை தாராய் திரையவோஒ வென்னுஞ்
செறுமாலை சென்றடையும் போழ்து”

---

1. **இன்னிலை** என்ற பெயர்புனைந்த நூலொன்று 45-வெண்பாக்களில் நாற்பாலுடையதாகப் பொய்கையாராற் பாடப்பட்டதெனவும், அது மதுரையாசிரியர் என்பாரால் தொகுக்கப்பட்டதெனவும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அஃதொன்று எனவும், அதனை யியற்றியவர் ஆழ்வாராகிய பொய்கையாரே ஆதல் வேண்டுமெனவும் எழுதிச் சிலவாண்டுகட்குமுன்பு உரையுடன் வெளியிடப்பெற்றுள்ளது. தொல்காப்பியம், யாப்பருங்கலம் என்பவற்றின் பழைய உரைகளிலே, வெவ்வேறு இலக்கணவமைதிகட்கு எடுத்துக்காட்டப்பட்டனவும் புலவர்பலராற் பாடப்பெற்றனவுமாகிய வெண்பாக்கள் சில இந்நூலின் இடையிடையே கூட்டியுங் குறைத்தும் மாற்றியும் அமைக்கப்பட்டுள்ளன. அவை யொழிந்த ஏனைப்பாடல்கள் யாவும், பழையசான்றோருடைய வெண்பாக்கட்கு இயல்பாயமைந்த செப்பலோசைத்திறமும், குறித்த பொருளைப் புலப்படுத்தற்குரிய சொன்னயந்தொடைநயங்களும் பொருட்பொலிவும் சிறக்கப்பெருமலும், ஆயினும் பழைமைதோன்றுமாறு முன்னோராண்ட சொல்வழக்கினும் செய்யுள் வகையினும் ஒரு சில பெய்யப்பெற்றும் உள்ளன. இந்நூல் முழுவதும் பொய்கையார் ஒருவரேசெய்ததாயின், அதனைத் தொகுத்தவர் மதுரையாசிரியர் என்பது பொருந்தவில்லை. புலவர் பலராற் பாடப்பெற்ற செய்யுட்களே பின்னோரால் தொகுக்கப்படுதற்கு உரியவன்றி, தனிநூலாக ஒருவரால் இயற்றப்பட்டதொன்றைத். தொகை நூலாக முன்னோர் யாண்டும்

என்று யாப்பருங்கலவிருத்தியில் (பக். 518) பொய்கை வாக்காகக் கண்ட வெண்பாவால், இவர் திரையனொருவனைப் புகழ்ந்துள்ளமை தெரியலாம். திரையரென்பார், பல்லவரைப் போலவே அவர்க்கு முன் தொண்டை நாடாண்ட தமிழரச வகுப்பினராவர். இத்திரையருட் பல்லவரும் அடங்கியவராகக் கருத ஆதாரங்கள் உள்ளன.[1]

---

வழங்காமை காணலாம். "நாலடி நான்மணி நாநாற்பது ஐந்திணை முப்பால் கடுகங் கோவை பழமொழி மாமூலம் இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு" என்ற பாடற்படி, கைந்நிலை என்று பெயர்பெற்றுள்ள நூலைக் கீழ்க்கணக்குக்களுள் ஒன்றாகக் கொள்வதில் எத்தடையும் இதுகாறும் நிகழ்ந்திலது. அகப்பொருள் பற்றியமைந்த அப்பழைய நூலின் சிதைப்பிரதிகள் தமிழ்ப்பெரியார் சிலரிடத்தும், மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும் உள்ளன. அத்தகைய நூலொன்று உண்டென்பதை அறியாமையாலோ, வேறெக் காரணத்தாலோ—'இனிய, நிலையுடைய காஞ்சி' என்ற பொருளில் வந்த "இன்னிலைய காஞ்சி" என்ற பாடத்தை மாற்றி, இன்னிலை என்பது ஒரு நூலென்று கொண்டு, அவ்வாறு கொண்டதற்கேற்றதொரு நூலையும் பாடிப் பொய்கையாரை அதன் ஆசிரியராக்கினரோ என்ற சங்கை பெரிதும் நிகழ்கின்றது. இதனை இயற்றியவர் பொய்கையாழ்வார் ஆதல் வேண்டும் என்று சிலர் கருதியது பெருந்தவறேயாம். சொற்பொருட் சுவைகள் பெருகி நிற்கும் அவர் திருவந்தாதியின் வாக்கிற்கும், அவையின்றிக் கருகி நிற்கும் இதன் போக்கிற்கும் சிறு தொடர்பும் காண்டலரிது. இந்நூலின் சொற்பொருளமைதிகளினும் அதிசங்கை நிகழ இடமுண்டேனும் அவற்றை விரிப்பதற்கு இஃது இடமன்று. சுருங்கக் கூறுமிடத்து, இது பழைய பொய்கையாரதன்றி நற்பெயர் விழையா விற்பனரான பொய்கையார் ஒருவராற் புனைந்து விடப்பட்ட நூலென்றே கூறற்குரியது என்க.

1. திரைய மன்னருள், **பல்லவத்திரையர்** என்ற பிரிவினரும் ஒருவர் என்று **தொண்டை மண்டலப்**

## பூதத்தாழ்வார்

இனிப் பூதத்தாழ்வார் அவதாரஸ்தலம் திருக்கடன் மல்லை என்ற ஊர் என்று குருபரம்பரைகள் கூறுகின்றன. இது மாமல்லபுரம் என்றும் வழங்கும். இக் கடன்மல்லையைத் தம் திருவந்தாதியில் (70) இவ்வாழ்வாரும் பாடுகின்றார். பழைய சிறந்த கடற்றுறை முகங்களுள் ஒன்றாகவும், அதனால் கடல்வளம் மிகப் பெற்றதாகவும் இவ்வூர் பண்டைக்காலத்தே விளங்கிய தென்பது—

**"புலங்கொணிதிக் குவையோடு புழைக்கைம்மாக் களிற்றினமும்**
**நலங்கொணவ மணிக்குவையுஞ் சுமந்தெங்கு நான்றொசிந்து**
**கலங்களியங் கும்மல்லைக் கடன்மல்லைத் தலசயனம்**
**வலங்கொண்மனத் தாரவரை வலங்கொள்ளென் மட**
**நெஞ்சே"**

(பெரிய திருமொழி, 2, 6, 6,)

என்ற திருமங்கை மன்னனது பாசுரத்தாற் றெரியலாம். கடன்மல்லை என்பது, மரக்கலங்க ளியங்கிக் கொழிக்கும் கடல்வளம்பற்றி வந்த பெயரே என்று பொருள் கூறுவார்போல—"கலங்க ளியங்கும் மல்லைக் கடன் மல்லை" என்று அவ்வாழ்வார் பாடுதல் அறியத்தக்கது.

---

பட்டயங் கூறுகின்றது. (The Tamils 1800 years ago, p. 48). அன்றியும், கடலினின்றும் வந்தேறியவர் அத்திரையர் வழியினர் என்பதற்கேற்ப, பல்லவர் நாணயங்களிற் கப்பலுருவம் அமைந்திருத்தலும், அத்திரையரைப் போலவே நாககன்னியிடத்தினின்று உற்பத்தியானவராகப் பல்லவர் கூறப்படுதலும் ஒப்பிடத்தக்கன. (Dr. Dubreuil's *The Antiquities of Pallavas*).

மல்லை என்பது வளமென்ற பொருளில், ஆழ்வார்கள் பாசுரங்களில் அடிக்கடி பயிலுதலுங் காண்க.[1]

இவ்வாறு கடல்வளம் பெற்றிருந்த பண்டைத் துறைமுகபட்டினம், முதல் நரசிம்ம பல்லவனால் பின்பு புதுப்பிக்கப்பட்டு மாமல்லன் என்ற அவன் சிறப்புப் பெயரும் வாய்ந்ததனால் மாமல்லபுரம் என்ற புதுப் பெயரும் அதற்குப் பெரு வழக்காயமையலாயிற்று.

மகாமல்லனை நரசிம்மபல்லவனால் புதியதாக உண்டாக்கப்பட்டதே இவ்வூரென்றும், அதனால் 'மாமல்லை' என்ற பெயர் வாய்ந்த அவ்வூரைப்பாடிய பூதத்தாழ்வார் அவ்வரசன் காலமாகிய 650-க்குப் பின்பே இருந்தவராதல் வேண்டுமென்றும் கருதினர் சரித்திரவறிஞர் சிலர்.[2] இக்கொள்கை உறுதியுடையதென்று நாம் கொள்வதற்கில்லை.

நரசிம்மபல்லவனால் முன்னில்லாதிருந்த ஊரொன்று புதியதாக நிருமிக்கப்பட்டு அவன் பெயர் கொடுக்கப் பெற்றது என்பதற்குச் சாஸன முதலிய ஆதரவு ஒன்றுமேயில்லை.

திருக்கடன்மல்லை என்ற மாமல்லபுரத்திலுள்ள ஆதிவராகர் சந்நிதியுள், இப்பல்லவனுக்கும் இவன் தந்தை சிம்மவிஷ்ணுவுக்கும் சிலையுருவங்கள் அமைக்கப் பெற்று அவற்றின்மேலே அவர்கள் பெயர்களும் வரையப்பட்டுள்ளன என்று தெரிகின்றது.

---

1. 'மல்லை மாமுந்நீர்' (பெரிய திருமொழி. 4, 3, 6; 8, 6, 4) எனக் காண்க.

2. The History of Sri Vaishnavas, p 16.

மாமல்லனுன நரசிம்மவர்மனுல் தனியே புதியதாக உண்டாக்கப்பட்டதே அந்நகரமாயின், தன் பிம்பத்தையன்றித் தந்தைபாட்டர்களின் உருவச் சிலைகளையும் அவன் அங்கு அமைக்க வேண்டிய நியாயமில்லை. அதனுல், மகாமல்லனுகிய நரசிம்மவன்மனுடைய பாட்டன் காலத்துக்கு முன்பே அப்பட்டினம் விளங்கியிருந்ததென்பதும், அவ்வூர்க் கோயில்கள் சில அம்மகாமல்லன் முன்னேராற் கட்டப்பெற்று அவர்கள் உருவச் சிலைகளையும் உடையவாயிருந்தன என்பதும் நன்கு பெறப்படும். சங்க காலத்தும், தொண்டை மண்டலத்தின் சிறந்த தலைநகரமாகக் கடன்மல்லை விளங்கியதென்பது, சிறுபாணுற்றுப்படையில் இவ்வூர் பெரிதும் சிறப்பிக்கப்படுதலால் அறியப்படும். இதன் விரிவு திருமங்கை மன்னன் விஷயமாக எழுதுமிடத்து விளக்கப்படும்.

மல்லை என்றும் அவ்வூர் ஆழ்வார் திருவாக்குக்களில் வழங்குகின்றது. இது, கடல்வளமுடையது என்ற பொருளில் வந்த கடன்மல்லை என்பதன் குறுக்கமாகும். "மாமல்லை கோவல் மதிற்குடந்தை" என்று பூதத்தாழ்வார் அருளிய தொடருள் 'மல்லை' என்பதற்குக் கொடுக்கப்பட்ட விசேடணம்—

**"நீளோதம், வந்தலைக்கு மாமயிலை மாவல்லிக் கேணியான்"**

என்ற திருமழிசைப்பிரான் வாக்கிற்போல வந்த அடைசொல்லாகக் கொள்ளற்குரியதன்றி, பிறர்கருத்துப்படி, மாமல்லபுரம் என்பதன் திரிபாகவே கொள்ள வேண்டுமென்னும் நியதியில்லை. ஆகவே, அக்கடன்மல்லைத் திருமாலைப்பாடிய பூதத்தாழ்வாரையும், அவர் காலத்தவர்களான பொய்கை பேயாழ்வார்களையும் 7-ம் நூற்றுண்டுக்கும் பிற்பட்டவர்களாகக் கொள்பவரின்

கருத்து அத்துணை வலியுடையதன் றென்பது விளங்கும்.

இனி, பூதத்தாரும் காரைக்காற் பேயம்மையாருஞ் சேர்ந்து பாடிய ஆரிடவெண்பாவாக யாப்பருங்கல விருத்தியுடையார் காட்டிய பாட்டு மேலே குறிக்கப் பட்டது. அதனுல், அப்பெரியாரிருவரும் ஒரு காலத்தவ ரென்பதே அவ்வுரையாளர் கருத்தென்பது பெறப்படும். "அவையடக்கியலே" என்ற தொல்காப்பியச் சூத்திர வுரையுள் (113)—

"திரைத்த விரிக்கிற் றிரைப்பினு வாய்போல்
உரைத்த வுரைபோகக் கேட்டு—முரைத்த
பயன்றவர் செய்வார் சிலரேதந் நெஞ்சத்
தியன்றவர் செய்வார் பலர்"

என்ற வெண்பாவைக் காட்டி 'இது பூதத்தார் அவை யடக்கு' என்றெழுதினர், பேராசிரியரும் நச்சினுர்க்கினி யரும். இவ்வெண்பா ஆழ்வாரான பூதத்தாருடையதோ பிறருடையதோ தெரிந்திலது. இனிப் பேயனுர் என்ற சங்ககாலத்துப் புலவரொருவர் உளர். அவரையும் பேயாழ்வாரையும் ஒருவரென்று கருதற்கிடமில்லை. இப் பேயாழ்வாரைப் பற்றித் தமிழ் நூல்வழியாக வேறு செய்தியும் கிடைத்திலது.

இனி, ஆழ்வார்களை யெல்லாம் ஒரு காலத்தவராகத் திவ்யசூரிசரிதம் கூறுதல் மேலே குறிக்கப்பட்டது. அஃது அவ்வாறு கூறினும், முதலாழ்வார்களை ஏனை யோரினும் முற்பட்ட தொகுதியினராகக் கொள்வதே பொருத்தமென்று தோற்றுகின்றது. நம்மாழ்வார் முதலிய எண்மரைக் கலிபிறந்த பின்னும் முதலாழ் வார்களைத் துவாபர யுகத்தினிறுதியினும் வைத்துக்

குருபரம்பரைகள் கூறும் வேறுபாட்டினின்று, அம் மூவரும் முற்பட்ட தொகுதியினர் என்பதே முன்னோர் கருதது என்பது தெரியலாம்.

ஏனை ஆழ்வார்கள் போல, பிற்கால வழக்குப் பெற்ற விருத்தமுதலிய செய்யுள் விகற்பத்தைக் கொள்ளாது, பழைமையாகிய வெண்பா வொன்றுனே தம் இயற்பாத் திருவந்தாதிகளை இவர்கள் அருளிச்செய்திருத்தலும், ஏனையர் வாக்கிற்போல பௌத்தம் சைநம் முதலிய சமயவாதம்பற்றிய செய்திகளேனும் மதமாற்சரியமேனும் இவர்கள் வாக்கிற் பயிலாமையும் இவர்களது பழைமைக்கு ஏற்ற சான்றுகின்றன.

அதனுல், இன்னோர் நம்மாழ்வார் முதலியோரினும் இரண்டொரு நூற்றுண்டு முற்பட விளங்கியவர் என்றே கொள்ளற்குரியர். அதனுல், பெரும்பாலரான ஆழ்வார்கள் ஒரு காலத்தவராக இருந்தமைபற்றி, இம் முதலாற்வாரையும் அவ்வடியார் தொகுதியிற் சேர்த்துத் திவ்யசூரிசரிதம் கூறலாயிற்றென்றே தோற்றுகிறது.

---

## மூன்றும் அதிகாரம்

# திருமழிசையாழ்வார்

### தோற்றம்

இவர், தொண்டைநாட்டுள்ள திருமழிசை என்ற தலத்தில், பகவானை ஆராதித்துவந்த பார்க்கவ முனிவர்க்கு அவர் பத்தினியிடம் பிண்டருபமாக அவதரித்து, அவர்களால் வழியிடையே அநாதரவாகக்

கைவிடப் பெற்றவர். இப்பிண்டம் சில நாட்களில் உருப்பெற்ற குழந்தை வடிவாகி அழுது சோர்ந்து கிடப் பதைக் கண்ட திருவாளர் என்ற சதுர்த்தரொருவர் இதனை எடுத்து வளர்த்துவர, இதுவும் வளர்ந்து இளமையிலேயே பரஞான முதிர்ச்சிபெற்ற யோகியாக விளங்கியது.

இப்பெரியாரது குழந்தைப் பருவத்தில் இவரது மகிமையறிந்து பால்கொடுத்து வந்த பாகவத ரொரு வர்க்கு இவரருளாற் பிறந்த கணிகண்ணர் என்பவர், இவருக்கு இணைபிரியாத் தொண்டராயினர்.

## தவ நெறியில்

திருமழிசையார், உண்மைத் தத்துவம் இன்ன தென்பதை உணரமுயன்று, சைனம் பௌத்தம் சைவ முதலிய எல்லாச் சமயங்களையும் ஆராய்ச்சி செய்து முடிவில் திருமாலே பரதெய்வமென்று தெளிந்து, அப் பெருமானை இடைவிடாது தியானித்துக் கொண்டு திருவல்லிக்கேணியில் நெடுங்காலம் யோகத்தில் எழுந் தருளியிருந்தார். அப்போது, பரம யோகிகளும் முதியோர்களுமான முதலாழ்வார் மூவரும், திருவல்லிக் கேணிக்கெழுந்தருளித் திருமழிசையாரது பிரபாவ மறிந்து அவரைச் சந்தித்து அளவளாவிப் பிரிந்தனர்.

## இளமை தந்தார்

பின்பு, இப்பெரியார் அம்முதலாழ்வார்கள் அவத ரித்த தலங்களைத் தரிசித்துவிட்டுத் திருக்குடந்தைக்குச் செல்லத்தொடங்கி, இடையில் கச்சித் திருவெஃகாவில் எழுந்தருளியிருந்தபோது, ஆங்குத் தமக்கு உரிய கைங்கரியஞ்செய்துவந்த கிழவியொருத்தியைக் குமரி

யாக்கியருளினர். இவ்வற்புதச் செய்தியை அறிந்த அந்நகரத்தரசன் தன் கிழத்தனத்தையும் நீக்கிவைக்க ஆழ்வாரைத் தன்னிடம் அழைத்துவரும்படி கணி கண்ணர்மூலம் தெரிவிக்க, ஆழ்வார் அதற்கிணங் காராக, சினங்கொண்ட வேந்தன் அவ்விருவரும் தன்னகரைவிட்டு வெளியேறும்படி கட்டளையிட்டனன்.

## கடவுளையும் அழைததுச் சென்ருர்

உடனே, திருமழிசையார் திருவெஃகாவில் அறிதுயிலமர்ந்த திருமாலையும் தம்முடன் வெளியேறும்படி வேண்டி, அப்பெருமானைப் பரிவாரங்களுட்பட உடனழைத்துக்கொண்டு கணிகண்ணரோடும் அந்நகரத்தை விட்டு நீங்கினர். இச்செய்தியறிந்த அரசன் ஆழ்வாரது பிரபாவமறிந்து, அவரைப் பெருமாளுடன் திரும்புமாறு பிரார்த்தித்தழைத்து அவர்க்குத் தொண்டுபூண்டனன்.

பின்பு, திருமழிசையாழ்வார் திருக்குடந்தை என்ற கும்பகோணஞ் சென்று, அங்கே யோகத்தில் நெடுங் காலம் எழுந்தருளியிருந்து, திருச்சந்த விருத்தம், நான் முகன் திருவந்தாதிகளை அருளிச்செய்து பின் பரமபதம் அடைந்தார்—என்பது இவ்வாழ்வாரது சரித்திரச் சுருக்கமாகும்.

இவ்வரலாற்றினின்றும், முதலாழ்வார் மூவரும் திருமழிசைப் பிரானுக்கு ஆண்டிலும் அறிவிலும் முதிர்ந்தவர்களென்பதும், அந்நால்வரும் ஒருகாலத்தவர் என்பதும் தெரியலாம்.

## பல்லவரைப் பற்றியது

காஞ்சியில் ஆட்சிபுரிந்த அரசன் இன்னனென்று திவ்யசூரிசரிதம் கூறவில்லையேனும், அவன் பல்லவமி

சத்தவனென்று பின்பழகிய பெருமாள் சீயர் குருபரம்பரை முதலியன கூறுகின்றன. இது பழையதொரு வரலாற்றைப் பற்றி வழங்கியிருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. 3-ம் நூற்றாண்டுக்கு முன்பு, காஞ்சீபுரத்தைத் தலைநகராகக்கொண்டு பல்லவர் தென்னாடாண்டவர் என்பதற்கு எவ்வகையாதாரமும் இல்லையென்று சரித்திரவறிஞர் கருதுவர். இக்கருத்து உண்மையுடையதாயின், திருமழிசையாழ்வார் அந்நூற்றாண்டுக்குப் பின்பே விளங்கியவர் என்பது பெறப்படும்.

இவ்வாழ்வார்நாளிலிருந்த பல்லவர் இன்னார் என்று தெரிய இடமில்லையேனும், பழையோராகிய பொய்கையார்க்குச் சமகாலத்தவராகக் கூறப்படுவதால், திருமழிசைப்பிரான், முற்பட்ட பல்லவவேந்தர் சிலரது ஆட்சிக்காலத்தில் விளங்கியிருந்தவர் என்றே கருதலாம். அன்றியும், இவ்வாழ்வார் திருவாக்கினின்றே அறியப்படும் மற்றொரு குறிப்புமுண்டு.

**" காப்பு மறந்தறியேன் கண்ணனே யென்றிருப்பன்**
**ஆப்பங் கொழியவும் பல்லுயிர்க்கும்—ஆக்கை**
**கொடுத்தளித்த கோனே குணப்பரனே யுன்னை**
**விடத்துணியார் மெய்தெளிந்தார் தாம்.''**

(நான். திருவந், 93.)

என்று தம் திருவந்தாதிப் பாசுரத்தில் திருமாலை இவ்வாழ்வார் **குணப்பரனே** என்று விளித்தல் காணலாம்.

**குணபரன் - விளக்கம்**

குணபரன் என்ற பெயர் முதல் மகேந்திரவர்மனுக்கு உரியதென்பது சாஸனங்களால் தெளியப்பட்டது. இப்பல்லவன் பெயரால் திருமாலை ஆழ்வார் கூறுதல், அவ்விருவரும் ஒருகாலத்தவரென்பதைக்

குறிப்பிக்கும் என்பது சிலர் கருத்து.[1] இவ்வூகம் முதலில் எனக்கு விநோதமாகவே தோற்றியது.

ஆயினும், திருமாலின் திருநாமங்கள் எண்ணிறந்தன இருப்பவும், ஆழ்வார்களெவரும் எடுத்தாளாத இந்நாமத்தால் திருமழிசையாழ்வார், பெருமானை விளிப்பது ஒருகருத்தை உட்கொண்டதுபோலும் என்று, அவர் காலநிலையோடு பொருந்தநோக்கும் போது புலனாகின்றது.

பல்லவ வேந்தர்களைத் தெய்வாமிச முடையவர்களாகக் கருதியும், அவர்களை ஸத்தியபராக்கிரமன், ஸகலகல்யாணன், புருஷோத்தமன், பராபரன், திரைலோக்யவர்த்தனன், ஸ்ரீநிதி, அநூபமன் என்றித்தகைய கடவுட்பெயர்களால் வழங்கியும் அக்காலத்து மக்கள் சிறப்பித்துவந்த செய்தியைச் சாஸனங்களினின்றும்[2] அறியலாம். சருவேசுவரனுக்குரிய இத்தகைய பொருள்சேர் புகழ்ச்சிப் பெயர்களைச் சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினரான மக்கட்குத் தங்காலத்தார் கண்டவாறு வழங்கியிருப்பது ஆழ்வார்க்கு மிக்க வெறுப்பை உண்டாக்கியிருக்கவேண்டும் என்பது நிச்சயம்; 'நாக்கொண்டு மானிடம்பாடேன்' என்பர் இப்பெரியார்.

அதனால், தன்காலத்தரசன் தனக்குத்தகாத குணபரன் என்ற பெயரைத் தரித்திருப்பதினும் வெறுப்புற்று, 'அஃது அனந்தகல்யாணகுண பரிபூர்ணனுய்

1. காலஞ்சென்ற ஸ்ரீ **எம். ஸ்ரீநிவாஸ ஐயங்கார்,** எம.ஏ., அவர்களே முதன்முதல் இவ்வாறு கருதினவர். **(The Tamil studies. pp. 305-6).**

2. **S. I. I. vol i pp. 1—4.**

அதனுல் குணப்ருத் என்ற திருநாமம் பெற்ற எம்பெருமானுக்கே உரியதாம்' என்ற திருவுள்ளத்துடன் குணப்பரனே என்று பெருமானை இவர் அழைத்திருத்தல் கூடியதேயன்ரே?

தீர்த்தகரர் என்று சைநசமயப் பெரியோர்களுக்கு வழங்கும் பெயர் அவர்க்குச் சிறிதும் ஏற்காதது என்ற கருத்தால்—

**" பண்டிப் பெரும்பதியை யாக்கிப் பழிபாவங்**
**கொண்டிங்கு வாழ்வாரைக் கூருதே—எண்டிசையும்**
**பேர்த்தகர நான்குடையான் பேரோதிப் பேதைகாள்**
**தீர்த்தகர ராமின் திரிந்து''**

என்று, பூதத்தாழ்வார் உண்மையான தீர்த்தகரராகும் வழி இஃதென்று அருளிச்செய்தலும்,

**" மலைநா டுடைய மன்னே போற்றி**
**கலையா ரரிகேசரியாய் போற்றி''**

என்று, 'அரிகேசரி எனப் பாண்டியர்கொண்டுள்ள சிறப்புப்பெயர் சிவபிரானுக்கே ஏற்றது' என்ற குறிப்புத் தோன்ற வாதவூரடிகள் பாடுதலும் இங்கு ஒப்பிட்டறியத் தகும்.[1]

இவ்வாறே ஆழ்வாரும் குணபரப்பெயரையே குணப்பரனென வழங்கினர் என்பது ஏற்றுக் கொள்ளப்

---

1. இவ்வாறன்றி "ஏவந்தராய் விண்ணவராய்... மற்றெல்லாமாய்'' என்று இவ்வாழ்வாரும், (நான். 83). "பெருந்துறை மேய தென்னவன் சேரலன் சோழன்'' (திருவாசகம், குயிற்பத்து,7) எனத் திருவாதவூரடிகளும் பாடியவாறு, 'திருவுடைமன்னர் உருவமாக நின்று அருள் புரிபவனும் கடவுளே' என்ற கருத்துடன் இவ்வாறு கூறினர் எனினும் பொருந்தும்.

படின், அப்பெயர்கொண்ட மகேந்திரவர்மனது ஆட்சிக் காலத்தை (618—642) திருமழிசையாரது வாழ்நாளின் பிற்பகுதியாகக் கொள்ளலாம். இவ்வாறு கொள்வதற்கு அடியில் வருமாறு அவர் காலநிலையும் இயைந்துள்ளமை அறியத்தக்கது.

முதலாழ்வார்கள் வாழ்ந்தருளிய காலத்தே அவர்கள் அவதரித்து மகிமைபெற்ற காஞ்சிமண்டலத்திலும் பிற இடங்களிலும் சைனபௌத்தமதங்கள் செழித்து அவர்கள் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தனவாயிருந்தன என்று சொல்வதற்கில்லை. 'அரனதிகம் உலகளந்த அரிய திகம்' என்று அதிக வேற்றுமை பாராட்டிய பிற்கால நிலைபோலின்றி அவ்விரு கடவுளரும் ஒரு பரம்பொருளின் உருவவேறுபாட்டினரே என்ற கொள்கை முதலாழ்வார் மூவர் திருவுள்ளங்களிலும் குடிகொண்டிருந்ததனால், சைவமதவைஷம்யமான கருத்துக்கள் அவர்கள் திருவந்தாதிகளிற் காண்பதரிதாகும்.

" முதலாவார் மூவரே யம்மூவ ருள்ளும்
முதலாவான் மூரிநீர் வண்ணன்" (15)

" அரனா ரணனும மான்விடைபுள் ளூர்தி
உரைநூல் மறையுறையுங் கோயில்—வரைநீர்
கருமமழிப்பளிப்புக் கையதுவேல் நேமி
உருவமெரி கார்மேனி யொன்று" (5)

" ஏற்றான்புள் ளூர்ந்தா னெயிலெரித்தான் மார்விடந்தான்
நீற்றான் நிழன்மணி வண்ணத்தான்—கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையா னீண்முடியான்
கங்கையா னீள்கழலான் காப்பு" (74)

"பொன்றிகழு மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகந் தாய நெடுமாலும்—என்றும்
இருவரங்கத் தாற்றிரிவ ரேனு மொருவன்
ஒருவனங்கத் தென்று முளன்'' (98)

எனப் பொய்கையாழ்வார் தம் முதல் திருவந்தாதியினும்,

"தாழ்சடையு நீண்முடியு மொண்மழுவுஞ் சக்கரமும்
சூழரவும் பொன்னுணுந் தோன்றுமால்—சூழுந்
திரண்டருவி பாயுந் திருமலைமே லெந்தைக்
கிரண்டுருவு மொன்ரு யிசைந்து''

எனப் பேயாழ்வார் தம் மூன்றுந் திருவந்தாதியினும் பாடிய பாசுரங்களும் பிறவும் மேற்கூறிய கருத்தை விளக்கவல்லன. இனித் திருமழிசைப்பிரான் வாக்கை நோக்குமிடத்து, அவர் நாளில் சமய வாதங்கள் நாட்டிற் பெருகியிருந்தன என்பது நன்கு புலனாகும்.

"அறியார் சமண ரயர்த்தார் பவுத்தர்
சிறியார் சிவப்பட்டார் செப்பின்—வெறியாய
மாயவனை மாலவனை மாதவனை யேத்தாதார்
ஈனவரே யாதலா லின்று (நான் முகன். 6)

"நாரா யணனென்னை யாளி நரகத்துச்
சேராமற் காக்குந் திருமால்தன்—பேரான
பேசப் பெறுத பிணச்சமயர் பேசக்கேட்
டாசைப்பட் டாழ்வார் பலர்'' (ஷை. 14)

"சாக்கியங் கற்றேஞ் சமண்கற்றேஞ் சங்கரனர்
ஆக்கிய வாகமநூ லாராய்ந்தோம்—பாக்கியத்தாற்
செங்கட் கரியானைச் சேர்ந்தியாந் தீதிலோம்
எங்கட் கரியதொன் றில்''.

(பின்பழகிய. குருபரம். பக். 10.)

என்ற ஆழ்வார் பாசுரங்களால் மேற்கூறிய செய்தி வெளியாகும். அன்றியும், சைவ வைணவர்க்குள் மாற்சரியங்களும் இவர்காலத்திருந்துவந்தன.

" மற்றுத் தொழுவா ரொருவரையும் யானின்மை
கற்றைச் சடையான் கரிகண்டாய்"

(நான்முகன். 26)

" பிதிரு மனமிலேன் பிஞ்ஞகன் றன்னோ
டெதிர்வ னவனெனக்கு நேரான்"

(ஷை. 84)

" காணினு முருப்பொலார் செவிக்கினாத கீர்த்தியார்
பேணினும் வரந்தர மிடுக்கிலாத தேவரை
ஆணமென் றடைந்துவாழு மாதர்காள்"

(திருச்சந். 69)

என்பனபோன்ற இவர் பாடற்றொடர்கள், முதலாழ்வார் போக்கிற்கு முற்றும் வேறுபட்டன வென்றேசொல்லத் தக்கன.

இவ்வாறு சமய விரோதங்கள் செறிந்து நிகழ்ந்தது குணபரனாகிய மகேந்திரவர்மனது ஆட்சிக்காலமேயாம். இப்பல்லவனே முதலில் சைனசமயத்தவனா யிருந்து, திருநாவுக்கரசுநாயனாரால் சைவமதத்திற்குத் திரும்பப் பெற்றவன் என்பர். இக்குணபரன் சைவப்பற்றுடையனா யினும், ஏனைய வைதிக மதங்களில் வெறுப்புக்காட்டி வந்தவனல்லன். மகேந்திர வாடியில்[1] திருமால்கோயி

1. இவ்வூர், சோழசிம்மபுரத்தை அடுத்துளது. இதன குடைவரைக் கோயிலிற்கண்ட சாஸனத்தால், 'மகேந்திர விஷ்ணுகிருகம்' என்பது அவ்வூர்த் திருமால் கோயிலின் பழையபெயர் என்று தெரியவருகின்றது. (Ep. Rep. 13 of 1896).

லொன்று இப் பல்லவனுற் கட்டப்பட்டிருப்பதும், மாமல்லபுரத்து ஆதிவ்ராகர் சந்நிதியில் இவனது உருவச்சிலை அமைந்திருப்பதும் வைஷ்ணவசமயத்தும் இவன் வைத்திருந்த அபிமானத்துக்கு உற்ற சான்றுகளாம்.

குணபரனது சமயச்சார்பு இத்தகையதாயினும், இவன் மகன் நரசிம்மவர்மனும், இவன் தந்தை சிம்ம விஷ்ணுவும் பரமவைஷ்ணவர்கள். இவர்கள் போன்ற அரசரது ஆதரவுகளாலும், பெரியோர் அவதாரங்களாலும் சைவம்போலவே திருமால்சமயமும் நாட்டில் தழைத்திருந்ததென்றே சொல்லத்தகும். திருமழிசைப் பிரானுக்குச் சிறிது முற்பட்டவர்களாக விளங்கிய முதலாழ்வார் காலத்தில் ஆட்சிபுரிந்து வந்த பல்லவவேந்தர் திருமாலடிமைத்திறத்திற் சிறந்திருந்தவரென்பது,

> **"கோவாகி மாநிலங் காத்துநங் கண்முகப்பே**
> **மாவேறிச் செல்கின்ற மன்னவரும்—பூமேவுஞ்**
> **செங்கமல நாவியான் சேவடிக்கே யேழ்பிறப்புந்**
> **தண்கமல மேய்ந்தார் தமர்"**

என்ற பூதத்தாழ்வார் திருவாக்கால் விளங்கும். மாமல்லபுரம் என்று பின்பு பெயர்பெற்ற திருக்கடன் மல்லையில் அவதரித்த இவ் வாழ்வாரால் தங்"கண்முகப்பே மாவேறிச் செல்கின்ற மன்னவ" ராகக் கூறப்பட்ட திருமாலடியாரான அரசர், சிம்மவிஷ்ணுவும் அவன் முன்னோரு மாகவே கொள்ளத் தடையில்லை [1] என்க.

---

1. மகேந்திரவர்மனைச் சைவனுகக் கூறததகுமாயினும், அவன் தந்தை சிம்மவிஷ்ணுவையும், அவன் முன்னோரான பல்லவரிற் பலரையும் **பரம பாகவதர்**கள் என்று விசேடித்துச் சாஸனங்கள் கூறுகின்றன. (Ind. Ant. Vol. V. pp 50, 154:

இவ்வாறு பல்லவர்களால் அபிமானிக்கப்பெற்று வளர்ந்த வைணவமும் சைவமும் புறமதத் தவரைத் தாக்குவதில் ஒன்றிய கருத்துடையவாக இருந்திருக்கக் கூடுமேனும், அவ்விருசமயத்தார்க்கும் வேறுவகையில் உள்ளார்ந்த மாற்சரியங்கள் இல்லாமற் போகவில்லை. இதற்கு மேற்காட்டிய திருமழிசையார் வாக்குமட்டுமே யன்றி—

" நூறு கோடி பிரமர்கள் நுந்தினர்
ஆறு கோடி நாராயண ரங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறி லாதவ னீச னொருவனே".

" தாயினு நல்ல சங்கர னுக்கன்ப
ராய வுள்ளத் தமுதருந் தப்பெறார்
பேயர் பேய்முலை யுண்டுயிர் போக்கிய
மாயன் மாயத்துப் பட்ட மனத்தரே"

என்பனவும், இலிங்கபுராணம், திருக்குறுந்தொகை போன்ற பதிகங்களில் அமைந்த அப்பர் பாடல்களும், தம் தேவாரப் பதிகங்களின் ஒன்பதாங்கவிதோறும் திருமாலைத் தாழவுரைப்பதையே சங்கற்பமாகக் கொண்ட சம்பந்தர் பாடல்களும் வைஷ்ணவ சமயக் கொள்கை ஒருபுறம் வளர்ச்சிபெற்று வந்ததையும், அதனினும் சைவத்தில் அதிகப்பற்றுத் தமிழ்மக்கட்கு

---

Vol. XV. p, 274) "நம் கண்முகப்பே மாவேறிச் செல்கின்ற மன்னவரும், செங்கமல நாவியான் சேவடிக்கே யேழ் பிறப்பும்...தமர்" என்று, தம் காலத்தரசர் பரம்பரையே வைஷ்ணவர்கள் எனப் பூதத்தார் இரண்டாந்திருவந் தாதியில் (69) பாடுதற்கு இயையவே, சாஸனங்களும் அக்காலத்துப் பல்லவரைக் கூறுதல் அறியத்தக்கதாம்.

உண்டாகும் நோக்கத்துடன் அவ்வாறு பாடப்பெற்றன என்பதையுங் குறிப்பிக்கக் கூடியனவாம். ஆனால் பொதுப்பகைவரான புறச்சமயிகளுடன் பெரும்போர் புரிந்து சநாதனதர்மங்களைப் போற்ற வேண்டியிருந்த நிலையில், வைதிகர்களான தங்கட்குட் பெரிய விரோதங்களை வளர்த்துக்கொள்ள அவ்விரு சாராரும் விரும்பியிரார் என்றே கருதலாம். சைவவைணவ வாதம் நிகழ்ந்ததாக அவ்விரு சமய நூல்களினும் பழைய வரலாறு காணப்படாமையும் நோக்கத்தக்கது.

இவற்றால், அவைதிகர்களுடன் சமயவாதஞ் செறிந்து நிகழ்ந்த மகேந்திரவர்மனது ஆட்சியின் ஒரு பகுதியே திருமழிசைப்பிரானுக்கும் உரியகாலமென்று கொள்வது பெரிதும் பொருந்தும் எனலாம். இதற்கேற்ப, **குணபரன்** என்ற பல்லவன் பெயரையே பொருட்பேறு சிறத்தல்பற்றி இவ்வாழ்வார் திருமாலுக்கு வழங்கலாயினர்—என்று மேற்கூறிய கருத்தும் ஏற்புடையதாயின், அப்பல்லவன் ஆட்சி புரிந்த 7 ஆம் நூற்றாண்டின் தொடக்கமே, திருமழிசையாழ்வாரது வாழ்நாளின் பிற்பகுதியென்று நாம் ஒருவாறு கூறலாம். பரமயோகியாய் நெடுங்காலம் வாழ்ந்தவர் என்று இவ்வாழ்வாரைக் குருபரம்பரைகள் ஒருங்கு கூறுகின்றன. அதனால், இப்பெரியார் 6, 7 ஆம் நூற்றாண்டுகளின் பின்முன் பகுதிகளினும், இவர்க்கு மூத்தவர்களும் 'முக்காலமும் உணர்ந்த இருடி'களுமான முதலாழ்வார் மூவரும் 5, 6 ஆம் நூற்றாண்டுகளின் பின்முன் பகுதிகளினும் எழுந்தருளியிருந்தவர்கள் என்று மேற்கூறிய செய்திகளைக் கொண்டு துணிவதில் எவ்வகைத் தடையும் நிகழ இடமில்லை. சோழன் செங்கணானைக் களவழியாற் பாடிய பொய்கையார்

முதலாழ்வார்களுள் முன்னவரே என்று கருதுவதற்குத் தக்க காரணங்களிருத்தல் மேலே விளக்கப்பட்டது.[1]

இச்செங்கணான் கடைச்சங்கத்தரசருள்ளே பிற்பட்டவன் என்பது சங்க நூல்களை ஆராயுமிடத்து நன்கு பெறப்படும்.[2] பழைய சோழ சாஸனங்கள்

1. கவிச்சக்கரவர்த்தியாகிய கூத்தர் தம் இராசராசனுலாவில்...''**சொன்மாலை நல்லவன் பொய்கை** களஃழி நாற்பதுக்கு, வில்லவன் காற்றளையை விட்டகோன்'' என்று சிறப்பிக்கின்றார். ''சுடராழி யானடிக்கே சூட்டினென் **சொன்மாலை**'' என்று தம் திருவந்தாதியைப் பொய்கையாழ்வார் தொடங்குதலின், அதனை உட்கொண்டே கூத்தர் அப்பெரியாரை அவ்வாறு விசேடித்தனர் என்று கொள்ளத் தகும். சொன்மாலை நல்லவன்—பாமாலையாகிய திருவந்தாதியைப் பாடிய நல்லடியார் என்றவாறு. விக்கிரம சோழனுலாவில், **இன்னருளின் மேதக்க பொய்கை** என்று அப்புலவரே பாடிய தொடர்—திருமாலின் பேரருள் பெற்றுச் சிறந்தவர் அப்பெரியார் என்ற கருத்துடன் அமைக்கப்பட்டதாகக் கருதவும் இடமுண்டு.

2. சோழன் செங்கணான், சேரமான் கணைக்கா லிரும்பொறையைப் போரில் வென்று அகப்படுத்தியபோது, சேரனைச் சிறைமீட்டல் வேண்டி அச்சோழன்மேற் களவழி பாடிய பொய்கையாரே, கோக் கோதை மார்பன் என்ற சேரனையும் 48-ம் புறப்பட்டாற் பாடியுள்ளார் இவ்வாறு, இப்புலவர் காலத்தவர்களாகத் தெரியும் கணைக்காலிரும்பொறை, செங்கணான், கோக்கோதை மார்பன் என்ற அரசர் மூவரும் முற்பட்ட சங்கப் புலவரெவராலும் பாடப் பெற்றவர்களாகத் தெரியவாராமையின், அன்னோர், கடைச் சங்கத்துக்குச் சிறிது பிந்திய காலத்தில் வாழ்ந்தவர்களென்று கருதத்தகும்.

நற்றிணையுள் (18)—''மூவன்...எயிறழுத்திய கதவிற் றொண்டி'' என்று பொய்கையார் வாக்கிற் கண்ட செய்தி,

சிலவும்' இவனை அவ்வாறே குறிப்பிடுகின்றன.

இவற்றால், இச்சோழன் ஏறக்குறைய ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவனென்று கருதல் குறைவாகாது. ஆகவே செங்கணான் வாழ்ந்த அந் நூற்றாண்டும் அடுத்த நூற்றாண்டுமே பொய்கையார் முதலியவர்க்கும் ஏற்றதாதல் கண்டுகொள்க.

---

சிலர் கருதுவதுபோல், அப்புலவர் காலத்து நிகழ்ச்சியாகக் கொள்ள வேண்டுதவன்று.

புறநானூற்றுள் (48)—"தொண்டி, அஃதெம்மூரே யவனெம் மிறைவன்" என்று இப்புலவர் பாடியது, தாம் எடுத்துக்கொண்ட புலவராற்றுப்படைத் துறைக்கேற்ப ஆற்றுப்படுக்கும் புலவன் கூற்றாகக் கூறியதேயன்றிப் பிறிதன்றெனபதும் அறியத்தக்கது.

இனிப்பொய்கையாரால் பாடப்பட்டவனாக மேலே கூறியதிரையன் என்பவன், சிலர் கருதுவதுபோல், பெரும் பாணாற்றுப்படை கொண்ட இளந்திரையன் என்று கொள்வதற்கு ஆதாரமின்று; அவ்விளந்திரையன் வழியில் வந்த சிற்றரசனாகக் கொள்ளற்குரியனென்க.

1. சோழ வமிசாவளியை விரிவாகக் கூறும் அன்பில், திருவாலங்காடு, கன்னியாகுமரி முதலிய இடங்களிலமைந்த சாஸனங்கள், செங்கணானைக்—கரிகாலன் வழித் தோன்றலாகவும், 9 ஆம் நூற்றாண்டினனான விசயாலயனுக்கு முன்னோனாகவும் இடைப்பட வைத்துக் கூறுகின்றன. இதனால் விசயாலயனுக்கு முன் பிரபலம் பெற்றிருந்த சோழன், செங்கணான் ஒருவனே என்பது பெறப்படும். திருஞான சம்பந்த மூர்த்திகளால் இச்சோழன் பாடப் பெற்றிருத்தலின், 7-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதே அவ்வரசன் காலமாகும்; அஃது ஐந்தாம் நூற்றாண்டெனல் பொருந்துமென்க.

இனி, அவ்வாழ்வார்கட்கு உரிய காலமாக மற்ருெருவர் எழுதிய கருத்தொன்றையும் இப்போது எடுத்துக்கொண்டு ஆராய்வது அவசியமாயுள்ளது. முதற்றிருந்தாதியுள் (77)—

**" வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவு மஃகாத**
**பூங்கிடங்கி னீள்கோவற் பொன்னகரும்**
**—நான்கிடத்தும்**
**நின்ருன் இருந்தான் கிடந்தான் நடந்தானே**
**என்ருற் கெடுமா மிடர்"**

என்பது பொய்கையார் பாசுரம்: இதனுட் கூறப்பட்ட வேங்கடம். **விண்ணகர்,** வெஃகா, கோவல் என்ற நான்கு தலங்களும், பல்லவரது தொண்டைமண்டலத்தைச் சார்ந்தனவே என்றும், திருமாலின் **இருந்ததிருக்கோல** முடையதாக நிரனிறையால் இப்பாட்டிற் கூறப்படும் விண்ணகர், தொண்டைநாட்டில் இல்லாததும் **நின்ற திருக்கோல** முடையதுமான திருவிண்ணகர் (உப்பிலியப்பன் கோயில்) ஆகாமையால், காஞ்சீபுரத்துள் அத்திருக்கோலத்தோடுள்ள பரமேச்சுர விண்ணகரமே ஆகும் என்றும், இவ்விண்ணகரம் 8-ம் நூற்ருண்டுத் தொடக்கத்தில் பல்லவமல்லனுக்கு முன்பு ஆண்ட பரமேச்சுரபல்லவனுல் தன்பெயரிட்டு நிருமிக்கப் பெற்ற தாகலின், அதனைப் பாடிய பொய்கையார் முதலியோர் அக்காலத்துக்குப் பின் வாழ்ந்தவராதல் வேண்டும் என்றும் கருதினர், அறிஞர் சிலர்.[1] விண்ணகரம் என்பது "விஷ்ணுக்ருகம்" என்ற வடமொழித் தொடரின் திரிபாகும். தொண்டைநாட்டில் பரமேச்சுர விண்ணகரம் ஒன்றே அத்தொடர் கொண்டுள்ளதா

---

1 Tamil studies, pp. 301—2.

யினும், சோழநாட்டில் அப்பெயரிணைந்த திருமால் திருப்பதிகள் அடியில் வருமாறு ஐந்துள்ளன:—

1. நந்திபுர விண்ணகரம் நாதன் கோயில்)
2. வைகுந்த விண்ணகரம்
3. அரிமேய விண்ணகரம்

} இருந்த திருக்கோலம்

4. காழிச் சீராம விண்ணகரம் (சீகாழி)
5. திருவிண்ணகர் (உப்பிலியப்பன் சந்நிதி)

} நின்ற திருக்கோலம்

இவ்வைந்தனுள் முதல்மூன்றும் இருந்த திருக்கோல முடையனவாதலின், இவற்றுள் ஒன்றையே ஆழ்வார் குறித்தனராகலாம். முற்கூறிய அறிஞர் கருதிய வாறு, தொண்டைநாட்டுத் தலங்களையே மேற்காட் டிய வெண்பாக் குறிப்பிடுவதாகச் சொல்வதற்கில்லை. அத்தலங்களுள் ஒன்ருன திருக்கோவலூர், தொண்டை நாட்டதன்றி மலாடு என்ற நடுநாட்டுக்கு உரியதாகும். "தெற்குப்பிணுகி" என்று கூறப்பட்ட எல்லைப்படி பெண்ணையாற்றின் வடபகுதியே தொண்டை நாடா தலுங்காண்க. இதனுல், அந்நாட்டைச் சார்ந்த தலங் களையே பொய்கையார் பாசுரம் குறிப்பிடுவது என்பது பொருந்தாதாம். இவ்வாறே, பூதத்தாழ்வார் தம் திருவந் தாதி 70-ம் பாசுரத்திலும், பேயாழ்வார் தம் திருவந் தாதி 62-ம் பாசுரத்திலும் தொண்டைநாட்டுத் தலங்க ளுடன், சோழபாண்டிநாட்டுத் திருப்பதிகளையும் சேர வைத்துப்பாடுதல் காணலாம். ஆகவே, மேலே குறித்த பொய்கையார் பாசுரத்திற் கண்ட விண்ணகர், இருந்த திருக்கோலமுள்ளனவாகத் தெரியும் சோணுட்டு

விண்ணகரம் மூன்றனுள் பழையதொன்றைப் பற்றிய தாகவே கொள்ளத்தகும்.[1]

இவற்றால், முதலாழ்வார் திருமழிசையாழ்வார் கட்குப் பிறர்கூறிய 8-ஆம் நூற்றாண்டு சிறிதும் ஏற்காததென்பதும், முதல் நந்திவர்மன் (கி. பி. 534), சிம்மவிஷ்ணு (கி. பி. 590) போன்ற பரம பாகவதர் களான அரசர்களாட்சியில் முதலாழ்வார்களும், மகேந் திரவர்மனான குணபரனதாட்சியில் திருமழிசையாரும் விளங்கியவர்கள் என்ற என்கருத்து எவ்வகையினும் பொருந்துவதாதலும் அறிந்துகொள்ளத்தக்கன.

இனி, ஆக்கவுங் கெடுக்கவும் பாடவல்ல ஆற்ற லுடையராய் முக்காலமுமுணர்ந்த முனிவர்களாகப் பொய்கையார், பூதத்தார், குடமூக்கிற் பகவர், காரைக்காற் பேயம்மையார், திருமூலர்—என்றிவர்களை

---

1. நந்திபுர விண்ணகரத்தை "நந்தி பணிசெய்த நகர்" என்று திருமங்கை மன்னன் பாடுவர் (பெரியதிரு. 5,10,7.) நந்தியென்பது அரசனொருவன் பெயரென்று பூர்வ வியாக் யானம் பொருள்கூறும். ஆகவே, இந்நந்தி பல்லவருள் ஒருவனாதல் வேண்டும். இரண்டாம் நந்திவர்மனான பல்லவ மல்லனை விடுவித்தல்வேண்டி அவன் சேனாபதி இந்நந்திபுரத் திற்குச் சென்று போர் நடத்தியசெய்தி உதயேந்திரசாஸ னத்தால் அறியக்கிடக்கின்றது. அதனால், அப்பல்லவன் உண்டாக்கிய ஊராக இத்தலத்தைச் சொல்வதற்கில்லை. முதல் நந்திவர்மன் பரமபாகவதன் என்று சாஸனங்களிற் கூறப்படுகின்றான். இவனால் தன் பெயரிட்டு நந்திபுர விண்ணகரம் நிருமிக்கப்பட்டிருத்தலும், தம் நாட்டில் திரு மாலடியனான அவன் கட்டியன அக்கோயிலை ஆழ்வார் பாடி யிருத்தலுங்கூடியனவேயாம். விண்ணகரம் என்று பொய் கையார் கூறியதலத்துக்குப் பரமபதம் என்று பழைய வியாக்யானம் பொருள் கூறுகின்றது.

யாப்பருங்கலவிருத்தியுடையார் கூறியதும், இவர்கள் யாவரும் பழைய திருமால் சிவனடியார்களாக அமைதலும் மேலே விளக்கப்பட்டன. இவர்களுள் **குடமூக்கிற் பகவர்** என்ற பெரியார் இயற்றிய நூல் **வாசுதேவனார் சிந்தம்** என்ற பெயர்பெற்றதென்றும், அந்நூலுள் மிக்குங்குறைந்தும் வரும் செய்யுள்களும் ஆரிடமாம் என்றும் அவ்விருத்திகாரர் குறிப்பிடுவர்.

குடமூக்கிற் பகவர் என்பது குடமூக்கில் என்ற தலத்துவாழ்ந்த முனிவராகிய திருமாலடியார் என்ற பொருள்பெறும். குடமூக்கில்-கும்பகோணம்; "பாம்பணை மேற் சேர்ந்தாய் குடமூக்கில் கோயிலாக் கொண்டு" என்பது இரண்டாந் திருவந்தாதி (97).

பொய்கையார் பூதத்தார்களோடும் ஒருசேரவைத்து அவ்விருத்திகாரர் குடமூக்கிற் பகவரைச் சிறப்பித்தலால், அவர்களோடொத்த பெருமையினர் அப்பெரியாரென்பது தெளிவாகத் தடையில்லை.

இனி, அப்பகவர் யாவர் என்று ஆராயுமிடத்து, அவர் திருமழிசைப்பிரான்போலும் என்று கருதும்படியிருத்தல் கவனிக்கத்தக்கது.

இவ்வாழ்வாரைப்பற்றிக் குருபரம்பரைகள் கூறும் வரலாறுகளிலிருந்து, இவர், தம் வாழ்நாளின் பிற்பகுதியில் திருக்குடந்தை சென்று தங்கி, அங்கே நெடுங்காலம் யோகத்திலெழுந்தருளியிருந்து பின் வீடுபெற்றவரென்பதும், அந்நகரில் இவர் இருந்தருளியநாளில் இயற்றிய திவ்யப்பிரபந்தங்களே திருச்சந்தவிருத்தமும் நான்முகன் திருவந்தாதியுமென்பதும் நன்கறியலாகும்.

ஆகவே, யோகியான திருமழிசையாழ்வாரும் பண்டைத் திருமாலடியாரான முனிவரென்று கூறப்

பட்ட குடமூக்கிற் பகவரும் ஒருவராதற்குரிய பொருத்த மிருத்தல் தெரியலாம்.

இனி இப்பகவர் செய்த நூல் **வாசுதேவனார் சிந்தம்** என்னும் பெயர்பெற்றதென்று அவ்விருத்தி கூறுகின்றது. இப்பெயர்க்கு 'வாசுதேவனாகிய திருமாலைப் பற்றிப் பாடப்பட்ட சிந்தநூல்' என்பது பொருளாகும்.

இந்நூற்பெயரை நோக்குமிடத்து, இது திருமழிசையார் அருளிய திருச்சந்தவிருத்தத்தினும் வேறாகாதென்றே கொள்ளும்படியுள்ளது.

(வாசுதேவனார்) 'சந்தம்' என்பதே 'சிந்தம்' என்று பிற்காலத்துத் திரிந்திருத்தல் வேண்டும். வளாகம், கலாய்த்தல் என்பன விளாகம்[1] கிலாய்த்தல்[2] எனமொழி முதல் அகரம் இகரமாகத் திரிதல் பண்டைக்கால முதலேயுள்ள வழக்காதலுங் காண்க.

அறிவுடையநம்பி என்பவரால் வஞ்சியடிகளிற் செய்யப்பெற்ற சிந்தநூலொன்றும் யாப்பருங்கலவிருத்திகாரரால் அவ்விடத்தே மேற்கோள் காட்டப்பட்டுளது.[3]

வாசுதேவனார் சந்தமும் அத்தகையதுபோலும் என்ற கருத்தால், பின்னோர் அதனையும் சிந்தம் என்று திரித்து வழங்கியிருத்தல் வேண்டும்.

வாசுதேவனார் சிந்தமும் அறிவுடைநம்பியது போலவே வஞ்சியடியில் அமைந்திருந்ததாயின், அந்

---

1. "பைம்பொழில் விளாகத்து" (தேவ. பக். 734, பாட். 6, சுவாமிநா. பதிப்பு.

2. "நெண்டிக் கொண்டேயுங் கிலாய்ப்பன்" (ஷை, 743, 8)

3. யாப். வி. 93, பக். 392.

நம்பிசெய்த நூலை மேற்கோள்காட்டிய யாப்பருங்கல விருத்தியுடையார், அவ்விடத்தே குடமூக்கிற் பகவர் செய்த நூலையும் குறிப்பிட்டெழுதியிருப்பரென்பது ஒருதலை. அங்ஙனம் அவர் எழுதாமையால், அப்பகவர் செய்த வாசுதேவனார்சிந்தமென்பது, திருமழிசைப் பிரான் அருளிய திருச்சந்தவிருத்தமாகவே கருதற்குப் பொருத்தம் பெரிதும் உண்டென்க.

குடமூக்கிற்பகவரது சிந்தத்துள், எழுத்துக்கள் மிக்கும் குறைந்தும் வந்த பாடல்கள் உள்ளன வென்றும், அவை ஆரிடமாமென்றும் அவ்விருத்தி யுடையார் எழுதியவாறே, திருச்சந்த விருத்தத்துள்—

**" ஆதி யான வான வாண ரண்ட கால நீயுரைத் [தி]"**
(பாட்டு-8, அடி-3)

**" நாச மாகி நாளு லப்ப நன்மைசேர் பனங்கனிக் [கு]"**
(80, 2)

**" மாறு செய்த வாள ரக்கன் நாளு லப்ப லன்றிலங் [கை]"**
(116, 1)

என்ற பாசுரவடிகளினீற்றில் எழுத்தொன்று மிகுந்தும், "பெறற்கரிய நின்ன பாத பத்தி யான பாசனம்" (100) என்ற அடியின் முதலில் எழுத்தோசை குறைந்தும் வந்துள்ளமை காணலாம். யாப்பருங்கலவிருத்திகாரர் ஆரிடச்செய்யுட்டொடராகக் குறிப்பிட்ட பொய்கையார் வாக்குள்ளும்—

**" சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல் [லு]"**

**" இருந்தான் றிருநாம மெண் [ணு]"**
(முதற்றிருவந்தாதி, 69, 51.)

என, ஈற்றெழுத்தொன்றே மிக்கு வந்திருத்தலும் ஈண்டு ஒப்பிடற்பாலது. இனி, திருச்சந்தவிருத்தத்தை ஆழ்வார் திருக்குடந்தையில் எழுந்தருளியிருந்தபோது இயற்றியவர் என்பதற்கேற்ப, அந்நகரிற் கோயில்கொண்ட திருமாலை இப்பெரியார் அந்நூலுட் பலபாடல்களாலுஞ் சிறப்பித்துப் பாடுதல் காண்க (56—61).

" ஆடவர்க ளெவ்வா றகல்வரணி வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்று னிருந்தான் கிடந்தா னிதுவன்றே
மன்றார் பொழிற்கச்சி மாண்பு.''

என்ற பாடல்[1] திருமழிசைப்பிரான் அடித்தொண்டரான கணிகண்ணர் என்பார் வாக்காகக் குருபரம்பரைகள் கூறுகின்றன. 'அவ்வாழ்வார் தன்னைப் பாடாராயின் தன் நகரை விட்டு அகலக்கடவர்' என்று கூறிய பல்லவனுக்கு விடையாக அக்கணிகண்ணர் இப்பாசுரம் பாடியவராதல் வேண்டுமென்பது 'ஆடவர்களெவ்வா றகல்வர்' என்று தொடங்கும் தொடரினின்று அறியத் தகும். இனி ''யதுகுலத்திலே பிறந்து கோபகுலத்திலே வளர்ந்தருளிய கண்ணனைப்போல, இவ்வாழ்வாரும் ருஷிகுலத்திலே பிறந்து தாழ்ந்த குலத்திலே வளர்ந்தருளினாராயிற்று''[2] என்று திருமழிசையாரது பிறப்புவளர்ப்புக்கள் கூறப்படுவதற்கேற்ப, இவ்வாழ்வார்—

1. யாப்பருங்கலவிருத்தி, 94; குருபரம்பரைகளில் இவ்வெண்பா சில பாடபேதங் கொண்டுள்ளது.

2. திருச்சந்தவிருத்தம், பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான அவதாரிகை.

"குலங்களாய வீரிரண்டி லொன்றிலும் பிறந்திலேன்
நலங்களாய நற்கலைகள் நாலிலு நவின்றிலேன்
புலங்களைந்தும் வென்றிலேன் பொறியிலேன் புனிதநின்
இலங்குபாத மன்றிமற்றொர் பற்றிலேனெம் மீசனே"
(திருச்சந். 90).

எனத் தம் வரலாறு கூறுதல் அறியத்தக்கது. இவர் வளர்ந்த குலத்தின் தாழ்வுபற்றியே, பெரும்புலியூரில் நடந்த யாகமொன்றில் அறியாது தம்மை யிகழ்ந்த அத்வர்யு தொடக்கமான சடங்கவிகள் முன்பு—

"அக்கரங்க ளக்கரங்க ளென்று மாவ தென்கொலோ
இக்குறும்மை நீக்கியென்னை யீசனுக்க வல்லையேல்
சக்கரங்கொள் கையனே சடங்கர்வா யடங்கிட
உட்கிடந்த வண்ணமே புறம்பொசிந்து காட்டிடே."

என்று பாடி, திருமால் தம் திருமேனியிடைத் தோன்றிக் காட்சி தரும்படி செய்வித்துத் தம் பிரபாவத்தை வெளிப்படுத்தினர் என்பது இவ்வாழ்வாரது சரித்திரமாம். இப்பெரியார் அருளிய திருச்சந்த விருத்தத்திற்குப் பழைய தமிழுரை யொன்று உண்டென்பது ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தால் தெரிய வருகின்றது.[1]

இதுவரை கூறிவந்தவற்றால் முதலாழ்வார் மூவரும் திருமழிசை யாழ்வாரும் 5ஆம் நூற்றாண்டின் பிற்

1. திருச்சந்தவிருத்தம், 181-ம் பாசுரத்தில் "உடைந்த வாலி தந்தனக் குதவவந் திராமனாய்" என்ற அடியுள் "(வாலிதந் தனக்கு) மவ்வுக்கு ந ஆதேசமாய் 'தம்பி' என்றத்தை 'தந்' என்று கடைக்குறைத்தலாய்க் கிடக்கிறது என்று ஒரு தமிழன்" எனவரும் வியாக்கியான பந்தி காண்க.

பகுதி முதல் 7ஆம் நூற்றுண்டுத் தொடக்கம்வரை வாழ்ந்த பேரடியார்கள் என்பதும், இவர்கள் வரலாறு களிற் சிலவும் இவர்களருளிய நூல்களும் பண்டை யுரையாசிரியர்களால் எடுத்தாளப்பெற்றவை என்பதும் ஒருபடியாகத் தெரியலாம். இந்நால்வரையும் துவாபர யுகத்தவர்களாகவும் ஏனைய ஆழ்வார்கள் கலிபிறந்த பின் அவதரித்தவர்களாகவும் குருபரம்பரைகள் கூறுவ தனுலும், இவர்கள் ஏனையோர்க்கு முற்பட்ட காலத்தின ரென்பது பெறப்படும். இதற்கேற்ப, இன்ஞேர் அருளிய அந்தாதிவெண்பாக்கள் செப்பலோசைத்திறத்தினும், தொடைநடைப் போக்கினும் சிறந்து திகழ்தல் காண லாம்.

**"யானே, இருந்தமிழ்நன் மாலை யிணையடிக்கே சொன்னேன்**
**பெருந்தமிழன் நல்லேன் பெரிது."**

என்று, பூதத்தாழ்வார் தம்மைக் கூறியுள்ளபடியும் அட்டபுயகரத்துத் திருமாலைப் பாடும்போது, திருமங்கை மன்னன்—

**"செந்தமிழ் பாடுவார்[1] தாம் வணங்குந்**
**தேவ ரிவர்கொல் தெரியமாட்டேன்"**

(பெரிய திரு. 2, 8, 2).

என்று அருளியபடியும், முதலாழ்வார்களைப் 'பெருந் தமிழர்' என்றும், அவர்கள் அருளிச்செயல்களைச் 'செந்தமிழ்' என்றுங் கூறுதல் தகும். நாலாயிர திவ்யப் பிரபந்தங்களுள் இசைத்தமிழ்ப்பகுதியிற் சேராத **இயற்பா** என்ற தொகுதியுள், இவ்வாழ்வார்கள் நால்வரும்

1. 'செந்தமிழ் பாடுவார்' என்பது முதலாழ்வார்களைக் கருதியதாகும் என்பது பெரியவாச்சான்பிள்ளை வியாக்கி யானம்.

அருளிய அந்தாதிகள் முற்பட அமைக்கப்பட்டுள்ளன. இவர்கள் அருளிச் செயல்களெல்லாம், தம் பெயருடன் பயன் கூறும் **முத்திரைக்கவிகளைக்** கொண்டு முடிவன வல்ல என்பதும், திருப்பாணாழ்வாரது 'அமலனாதி பிரான்' ஒழிய ஒழிந்த ஆழ்வாாகள் பிரபந்தங்களெல்லாம் அவைகொண்டு முடிவன என்பதும் அறியத் தக்கன.

முதற்றொகுதியினரான திருமாலடியார்களென்று கூறத்தக்க முதலாழ்வார் திருமழிசையார்களுக்குப் பின், நம்மாழ்வார் வரலாறு கூறுதற்குரியதாயினும, அடிப்படையான சரித்திரவுண்மைகள் சிலவற்றை அறிதற்கு, நாலாயிரதிவ்யப்பிரபந்த ஆசிரியர்களுள் முதல்வரான பெரியாழ்வாருடையதும் அவர் திருமகளாருடையது மான வைபவங்கள் சிறந்த சாதனமாயிருத்தலால், அப் பெரியார்களைப் பற்றிய செய்திகளை இனிக் கூறுவேன்.

---

4 ஆம் அதிகாரம்

## பெரியாழ்வார்

இவ்வாழ்வார் தென்பாண்டிநாட்டிலுள்ள ஸ்ரீ வில்லிபுத்தூரிலே, அந்தணவருணத்தில் வேயர்குலத்து[1] அவதரித்து, விஷ்ணுசித்தர் என்ற திருநாமம் பெற்று விளங்கியவர்.

---

1. 'வேயர்தங்கள் குலத்துதித்த விட்டுசித்தன்' (5, 4. 11) 'வேயர்புகழ் விட்டுசித்தன்' (1, 8, 11) என்ற இவ்வாழ்வார் திருவாக்குக்களால் இவர் குலம் 'வேயர்குலம்' என்பது

திருநந்தவனமுண்டாக்கித் திருமாலைகட்டுதல் முதலிய கைங்கரியங்களைச் செய்து கொண்டு தம் மூர்ப் பெருமானை இடையருது வழிபட்டு வந்தவர்.

ஒருகால், மதுரையில் ஸ்ரீவல்லபன் என்ற பாண்டியன் சமயவிசாரஞ்செய்வதிற் பெரு விருப்புடையனுய்ப் 'பரமார்த்த தத்துவம் இன்னதென்பதை நிரூபிக்கும் பெரியோர்க்கு உரியது' என்று தன் அரண்மனையிற் கட்டிய பொற்கிழியைத் திருமால் பேரருளால் இவ்வாழ்வார் சமயவாதியர் பலரோடு வாதஞ்செய்து பரத்துவ நிரூபணம் பண்ணி வெற்றியடைந்து பெற்றனரென்றும், அதுமுதல் பட்டர்பிரான் என்ற சிறப்புப் பெயர் இவர்க்கு வழங்கலாயிற்றென்றும், அப்பாண்டி

---

*விளங்கும். '**வேயன்** கோவலன் கவுணியன் சேந்தன்' **(S. I. I. V. 702)** என்ற சாஸனத்தொடராலும், இத்தகைய பார்ப்பனக்குடி பண்டிருந்தமை தெரியலாகும். வேயர்-மூங்கிலையுடையவர்.*

*திருவரங்கத்தமுதனரது குடியை 'மூங்கிற்குடி' என்று, அவரது இராமானுசநூற்றந்தாதித் தனியன் கூறுவதும், இவ் வேயர்குலத்தோடு ஒத்ததே. 'பிரமசரிய நிலையை நீங்கி இல்லறநிலையடையும் பிராமணன் மூங்கிற்கோலை ஏற்றுக் கொள்க' என்று தர்மசூத்திரங் கூறுவதால், அத்தகைய தண்டைத் தாங்கி வந்த அந்தணரில் ஒருசாரார்க்கு 'வேயர் குலம்' மூங்கிற்குடி' என்ற பெயர்கள் வழங்கியனவாக வேண்டுமென்பர்* **(The Holy Lives of the Alvars by A. Govindacharya Swami, p. 20).**

*"பிடித்துத் திரியும் வேய்த்தொழிலாளர் மிழலையுள்ளீர்" என்ற அப்பர்தேவாரத்தொடரும் (தேவா. சுவாமிநா. பதிப்பு, பக். 586, பாட்டு, 4). 'வெதிரேய்கரத்து...அதிரேய் மறையினிவ் வாறுசெல்வீர்' என்ற வாதவூரடிகள் திருக்கோவைத் தொடரும் (243) இங்கு ஒப்பிடத்தக்கன.*

யனும் இவர்க்கு அடியனுயினன் என்றும், தாம் வாத வெற்றியிற்பெற்ற கிழிப்பொருளைத் தம்மூர்த் திருமால் கைங்கரியங்களில் விநியோகித்து அப்பெருமானை முன் போல் இடையருது வழிபட்டுக்கொண்டிருந்தன ரென்றும், இவர் அவதாரகாலம் கலிபிறந்த 57 ஆம் ஆண்டென்றும் குருபரம்பரைகள் கூறுகின்றன.

**"பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்**
**றீண்டிய சங்க மெடுத்தூத—வேண்டிய**
**வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்**
**பாதங்கள் யாமுடைய பற்று''**

என்பது இவரது தனியன். மேற்கண்ட இவ்வாழ்வார் வரலாற்ருேடு இவர் திருவாக்குக்கள் பெரிதும் ஒத்துள் ளன. தம்மூர்த் திருமால் கோயிலுக்கு எல்லாவகைக் கைங்கரியங்களையும் புரிந்துகொண்டும், அக்கோயிலில் எல்லா மரியாதைகளையும் பெற்றும் பரமபாகவதராக வும் மகாஞானியாகவும் இவ்வாழ்வார் வாழ்ந்தவ ரென்பது—

**"நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமும் அத்தாணிச்**
**சேவகமும்**
**கையடைக் காயுங் கழுத்துக்குப் பூணொடு காதுக்குக்**
**குண்டலமும்**
**மெய்யிட நல்லதோர் சாந்தமுந் தந்தென்னை வெள்ளுயி**
**ராக்கவல்ல**
**பையுடை நாகப் பகைக்கொடி யானுக்குப் பல்லாண்டு**
**கூறுவனே.**

(திருப்பல். 8.)

"உடுத்துக் களைந்தநின் பீதக வாடை
யுடுத்துக் கலத்ததுண்டு
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன
சூடுமித் தொண்டர்களோம்"

(ஷை, 9 )

"தோட்ட மில்லவள் ஆத்தொழு ஓடை
துடைவையுங் கிணறும் இவையெல்லாம்
வாட்டமின்றியுன் பொன்னடிக் கீழே
வளைப்பகம் வகுத்துக்கொண் டிருந்தேன்"
"வன்மை யாவதுன் கோயிலில் வாழும்
வயிட்ட ணவனெனும் வன்மைகண் டாயே"
(பெரியாழ். திருமொழி, 5, 1, 3).

என்பன முதலிய இவ்வாழ்வார் பாசுரத்தொடர்களால் அறியப்படும். இப்பெரியார் காலத்தே இராசபுரோகித ராகவும் பரமபாகவதராகவும் விளங்கியவர், திருக்கோட்டியூர்த் தலைவரான **செல்வ நம்பி** என்ற சீரியோர் என்றும், இவ்வாழ்வார்காலத்து விளங்கிய திருமாலடி யனை அரசன் பாண்டியவமிசத்தவன் என்றும் ஆழ்வாரே விளங்கக்கூறுதல் அடியில் வருமாறு:—

"அல்வழக் கொன்றுமில்லா அணிகோட்டியர்கோன்
அபிமான துங்கன்
செல்வனைப் போலத் திருமாலே நானும்
உனக்குப் பழவடியேன்"

(திருப்பல். 11).

"நளிர்ந்த சீலன் நயாசலன் அபிமான
துங்கனை நாடொறும்
தெளிந்த செல்வனைச் சேவகங் கொண்ட
செங்கண்மால் திருக்கோட்டியூர்"

(பெரியாழ். திருமொழி. 4, 4, 8).

**" தென் கூடற்கோன், தென்னன் கொண்டாடுந்**
**தென்றிரு மாலிருஞ்சோலையே''**

(ஷ 4, 2, 7).

**" பருப்பதத்துக் கயல்பொறித்த பாண்டியர் குலபதிபோல்**
**திருப்பொலிந்த சேவடியென் சென்னியின்**
**மேற்பொறித்தாய்''**

(ஷ 5, 4, 7).

பெரியாழ்வார் அருளிச்செயல்களை நோக்குமிடத்து, திருமாலவதாரங்களுள்ளே சிறப்பாகக் கண்ணபிரானது தோற்றமுதல் நிகழ்ந்த பாலசரிதைகளை, அப்பெருமானை எடுத்து வளர்த்த யசோதைப் பிராட்டியாருடையவும் கோபியருடையவுமான பேச்சுக்களாற் கொண்டு மொழிந்து ஈடுபடும் அழகு வெளியாம். கண்ணனது குழவிப்பருவத்தில், கஞ்சன் முதலியோரால் நேர விருந்த கொடிய ஆபத்துக்களுக்குப் பெரிதுமஞ்சிப் பல்லாண்டுபாடி மங்களாசாஸனம் பண்ணியும், அப் பெருமானது ஸௌசீல்ய ஸௌலப்யாதி குணங்களைப் பருகிக்களித்தும் இவ்வாழ்வார் மனங்கவிந்து நிற்கும் அற்புத நிலைமை இங்கு நம்மால் எழுதக்கூடிய அளவின தன்று. இங்ஙனம் "சோராதகாதற் பெருஞ்சுழிப்பால் தொல்லை மாலையொன்றும், பாரா தவனைப்பல் லாண் டென்று காப்பிடும் பான்மைய'' ராகிய இவரது பெருமை பற்றியே—

**" மங்களா சாசனத்தின் மற்றுள்ள வாழ்வார்கள்**
**தங்களார் வத்தளவு தானன்றிப்—பொங்கும்**
**பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான்**
**பெரியாழ்வா ரென்னும் பெயர்''**

(உபதேச ரத்தினமாலை, 18).

என்றவாறு, பெரியாழ்வார் என்ற திருநாமம் இவர்க்கு வழங்கலாயிற்று என்பர். இங்ஙனம் கோபவிருத்தியை மேற்கொண்டு கண்ணனை அனுபவித்த இவர் அனுபவங்களையும், அப்பெருமானிடம் கொண்டிருந்த ஈடுபாடுகளையுமன்றி, திருமழிசையார் திருமங்கைமன்னன் முதலிய ஆழ்வார்கள் வாக்கிற்போல, தேவதாந்தரங்களைப் பற்றியேனும் தம் காலத்திருந்த பிற சமய நிலைகளைப்பற்றியேனும் யாதொரு குறிப்பும் இவர் திருவாக்குக்களினின்றும் அறியக் கூடவில்லை.

பாண்டியன் முன் சமயவாதஞ்செய்து வெற்றி பெற்றவராகக் கூறப்படும் இவ்வாழ்வார் தம் காலத்தில் வைஷ்ணவனாக விளங்கிய பாண்டிய னொருவனைச் சிறப்பிப்பது தவிர, வேறு உலக நிலைமை யொன்றையுங் குறிப்பிடாததற்கு, அவ்வரசனை அடிமையாக்கி அவனாற்பெற்ற பெரும் பொருளைத் திருமால் கைங்கரியங்களில் விநியோகித்து, உலகப் பற்று ஒன்றுமின்றிப் பிரபத்தி நிஷ்டையில் இப்பெரியார் முனைந்து நின்றதே காரணமாகவேண்டும்.

**" விழிக்குங் கண்ணிலேன் நின்கண்மற் றல்லால்**
**வேறொருவரோ டென்மனம் பற்றுது"**
**" நாட்டுமானிடத் தோடெனக்கரிது"**
**" நான், உண்ணு நாள்பசி யாவதொன் றில்லை**
**யோவா தேநமோ நாராய ணுவென்**
**றெண்ணு நாளு மிருக்கெசுச் சாம**
**வேத நாண்மலர் கொண்டுன பாத**
**நண்ணு நாளவை தத்துறு மாகில்**
**அன்றெனக்கவை பட்டினி நாளே"**
**" என்னையும் என்னுடைமையையுமுன் சக்கரப்பொறி**
**யொற்றிக்கொண்டு**
**நின்னருளே புரிந்திருந்தே னினியென் திருக்குறிப்பே"**

என்பன முதலாயுள்ள இப்பெரியாரது அழகிய பாசுரத் தொடர்களால், பிற சிந்தையின்றி எம்பெருமானையே உபாயோபேயமாகப் பற்றி நின்ற இவரது பரமபக்தியின் சிறப்பு வெளியாகும்.

இனி, இவ்வாழ்வார் வாழ்ந்த கால நிலையை நோக்குவோம். மேலே, ஏழாம் நூற்றாண்டு, வைதிக சமயத்தவரான அடியார்களுக்கும், அவைதிகர்களான சைந பௌத்தர்களுக்கும் கடுமையான வாதப்போர் நிகழ, அதனில் முன்னவர் வெற்றிபெற்றுச் சநாதனதர்மங்களை நிலை நாட்டிய காலவிசேடம் என்பது விளக்கப் பட்டது.

இதற்கடுத்த எட்டாம் நூற்றாண்டிலோ, அத்தகைய போர்கள் உக்கிரமாக அத்துணை நிகழ இடமில்லையென்றே சொல்லலாம். இந்நூற்றாண்டில் ஆதிக்கம் பெற்றிருந்த தமிழரசர்கள்—பல்லவரும் பாண்டியருமே ஆவர்.

இவர்கள் புறச்சமயங்களைத் தழுவாது, வைதிகக் கொள்கைகளில் ஆழ்ந்தபற்றுடையராயிருந்தனர் என்பது, இவர்களுடைய சாஸனங்களால் நன்கறியப் படுகின்றது. இவருள்ளே, பல்லவர் வைஷ்ணவமதத்தையும், பாண்டியர் சைவமதத்தையும் மிகுதியுந் தழுவியவர். "மன்னனெப்படி மன்னுயிரப்படி" என்றவாறு, அரசர்கள் எந்த மதத்தை மேற்கொண்டு பேரபிமானங் காட்டுகின்றனரோ அம்மதமே நாட்டில் ஆதிக்கம் பெற்றோங்குவதும், அவரபிமானம் பெறுதவை அத்துணையாகச் செழியாமல் தாழ்வதும் முற்காலத்தியல்புகளாகும். ஆகவே அரசரது ஆதரவுபெறுத நிலையில், சைந பௌத்தங்கள் தம் உக்கிர நிலை தணிந்து, முந்திய நூற்றாண்டுகளில் அடைந்திருந்த இணையற்ற தலை

மையை இந்த எட்டா நூற்றாண்டில் இழந்து விட்டன என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

ஆனால், வைதிகப் பற்றுடையரான அரசர்கள், அப்புறமதங்களை வேரறுக்கும் கடுஞ் செற்றங் கொண்டிருந்தவரல்லர். அதனால், அவ்வெட்டாம் நூற்றாண்டினும் அதன் பின்பும் அம்மதத்தவர்கள் வாதப்போர் புரிந்து தத்தங் கொள்கைகளைப் பரப்பும் முயற்சிக்கு யாதொரு தடையும் இருந்ததில்லை எனலாம்.

இந்நிலைமையோடு கூடிய 8-ம் நூற்றாண்டே, பெரியாழ்வார் வாழ்ந்த காலவிசேடமுமாகும். இவ்வாழ்வார் நடத்தியதாகக் கூறும் சமயவாதம், பெரும்பான்மையும் வைதிக மதத்தவர்க்குள் நிகழ்ந்ததாகக் கொள்ளற்குரியதே யன்றிப் புறச்சமயிகளுடன் அன்று.

தமிழகத்தில் தலைமை பெற்றோங்கிய பல்லவர்கள் திருமால்பத்திமையிற் சிறந்து நின்றது இந்நூற்றாண்டின் கண்ணே யாதலாலும், இவ்வாழ்வாரே கூறியவாறு, ''பத்தர்களும் பகவர்களும்'' பலராக இக்காலத்து விளங்கினமையாலும், ஏற்கனவே சைனரைவென்று நாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்த சைவர்க்கு, வைணவசமயிகளிடம் மனவெறுப்பு உண்டாயிருத்தலும், அதுபற்றிப் பரத்துவம் பற்றிய வாதம் அவ்விருவர்க்குள் நிகழ்ந்திருத்தலும் கூடியனவே.

இக்காலத்தில், தமிழ்நாட்டின் வடபகுதியை ஆண்ட பல்லவர் திருமாலடிமையிற் சிறந்திறந்தவராயினும், தென்பகுதியை ஆட்சிபுரிந்த பாண்டியர் பரம்பரையே சிவபத்தியில் தலை சிறந்தவர்கள். அதனால், அவ்வாதம் தென்னாட்டில் ஏற்படலாயிற்றென்றும், அதனில் பெரியாழ்வார் தம் நிரதிசயமான

ஞானவிசேடத்தாலும் நாவன்மையாலும் வெற்றிபெற்றுப் பாண்டியனது பொற்கிழியைப் பெற்றதோடு, அவனையுந் தம் அடியவனாக்கினர் என்றும் கருதப் பெரிதும் பொருத்தமுண்டு.

இனி, இவ்வாழ்வார்க்கு அடியவனான பாண்டியன் பெயர் **ஸ்ரீ வல்லபதேவன்** என்று குருபரம்பரைகள் கூறுகின்றன, ஆனால் ஆழ்வார் தம் திருமொழி 4-ம் பத்து 2-ம் பதிகத்துள், பாண்டியன் ஒருவனை அடியில் வரும் பாசுரத்தாற் சிறப்பித்தல் அறியத்தக்கது:

**"மன்னர் மறுக மைத்துனன் மார்க்கொரு தேரின்மேல்**
**முன்னங்குச் சென்று மோழை யெழுவித் தவன்மலை**
**கொன்னவில் கூர்வேற் கோ நெடுமாறன்[1] தென்**
**கூடற்கோன்**
**தென்னன் கொண்டாடுந் தென்றிரு மாலிருஞ் சோலையே."**

என்ற 7-ம் பாசுரத்தில், அப்பாண்டியனைக் **கோ நெடுமாறன்** என்று கூறுதல் காணலாம். 'கூடற் கோன், தென்னன்' என்பவற்றால், தாம் கூறப்புக்க அரசன் பாண்டியனே என்பதை ஆழ்வார் விளக்கிவிட்டமையால், பின்னும் அவர் நெடுமாறன் என்றது, அவனுக்குத் தங்காலத்துவழங்கிய பிரபலமான இயற்பெயரையே என்று கருதத் தடையில்லை. ஆயின், இங்

---

1. அச்சுப்பதிப்புக்களில் 'கோனேடுமாறன்' என்று றன்னகரமாக உள்ளதேனும், கோமாறன், கோச்சடையன், கோவரகுணன் என்று பாண்டியரும் பிறரும் விசேடிக்கப் படுமுறையே ஆழ்வாரும் பாடுதலால், 'கோநெடு மாறன்' எனத் தந்நகரமாகவே கொள்க. இறையனார் களவியலில் வரும் பாண்டிக்கோவைப் பாடல்களிலும் (49, 257 etc.) இவ்வாறே கொள்ளற்பாலது.

நெடுமாறன் என்று பெயர் பெற்ற பாண்டியன் யாவன் என்பது ஆராய்ச்சிக்குரியதாகும்.

வேள்விகுடி சின்னமனூர்ச் சாஸனங்களால் 7-ம் நூற்றுண்டு முதல் 10-ம் நூற்றுண்டுவரை ஆட்சிபுரிந்த பாண்டியர்களின் பெயர்கள் நமக்குத் தொடர்ச்சியாகத் தெரியவருகின்றன. அதனுட் கண்ட அரசர் வமிசாவளி[1] அடியில் வருமாறு:—

1. *கடுங்கோன்*
   |
2. *மாறவர்மன் அவனி சூளமாணி*
   |
3. *செழியன் சேந்தன்*
   |
4. *அரிகேசரி மாறவர்மன் (நெல்வேலி வென்ற நின்ற சீர் நெடுமாறன், திருஞான சம்பந்தர் காலத்தவன்.)*
   |
5. *கோச்சடையன்*
   |
6. *மாறவர்மன், இராஜசிம்மன் (பல்லவமல்லன் காலத்தவன்)*
   |
7. *பராந்தகன், நெடுஞ்சடையன், ஜடிலவர்மன்; பரமவைஷ்ணவன் (கி. பி. 770.)*
   |
8. *ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன்*
   |
9. *வரகுணன் (கி. பி. 862-ல் பட்ட மெய்தியவன்)* — 10. *பராந்தக வீரநாராயணன்*
   |
11. *இராஜசிம்மன் (சோழன் பராந்தகன் I. காலத்தவன்)*

---

1. (ஈண்டுக்காட்டிய வமிசாவளி, ஸ்ரீமான் Prof. K. S. நீலகண்ட சாஸ்திரிகள் எழுதி வெளியிட்டுள்ள

இவ்வரசர்களுள் மாறவர்மன் என்ற இயற்பெயருடையார்களை 2, 4, 6, 8-எண்களிற் காணலாம். இப்பெயரே இலக்கியசாஸனங்களில் முறையே மாறன், நெடுமாறன் என்றும் வழங்குவதாம்.[1]

இம்மறவர்மர் மூவருள்ளே 2-ஆம் எண்ணுக்குரியவன், ஏழாநூற்றுண்டின் தொடக்கத்தில் இருந்தவன். ஏனைய பாண்டியரையெல்லாம் பலபடியாகவும் சிறப்பித்துக் கூறிவரும் வேள்விகுடிச்சாஸனம்

---

'பாண்டிய ராஜ்யம்' (The Pandyan Kingdom) என்ற நூலிற் காணப்படும் முறையோடு ஒத்தமைந்தது. 7, 8 எண்களுக்கு இடையில் இரண்டு தலைமுறைகளைக் கூட்டிக் கூறப்படுவதுண்டேனும், சாஸ்திரிகள் கருத்தே ஏற்புடையது என்பது அவர்கள் கட்டுரையை நுணுகியாராய்வார்க்கு விளங்கக் கூடியது.)

1. **மாறன்** என்பது பாண்டியார்க்குரிய பொதுப் பெயரேயாயினும், 7, 8ஆம் நூற்றுண்டிலிருந்த அவ்வரசர் சிலர், இதனைத் தம் இயற்பெயராகக் கொண்டிருந்தவர் என்பது சாஸனங்களால் தெளிவாகின்றது. இது, சாஸனங்களில் மாறவர்மன் என்றும், நூல்களில் மாறன், நெடுமாறன் என்றும் வழங்கும் (இறை. களவி, 38, 106, 142, 262, 278). இப்பெயர்போலவே **சடையன்** என்பதும் அக்காலத்துப் பெருவழங்குடையதாம். தந்தை மாறனும் மகன் சடையனுமாயின் மகனை **மாறஞ்சடையன்** என்றும், தந்தை சடையனும் மகன் மாறனுமாயின் பின்னவனைச் **சடையமாறன்** என்றும்—தந்தை பெயரை இணைத்துக் கூறும் பண்டை வழக்குப்படி—அவ்விரு பெயர்களும் பல தலைமுறை மாறிமாறிப் பாண்டியருள் வழங்கப்பட்டுள்ளன. இராசகேசரி, பரகேசரி என்ற பெயர்கள் தந்தைக்கும் மகனுக்கும் மாறிமாறிப் பல தலைமுறை வழங்கப்படுவதைச் சோழவரசருள்ளுங் காண்க.

இம்மாறவர்மனது அரிய செய்தியாக ஒன்றையுங் குறிப்பிடாமற் பொதுப்படக் கூறிச்செல்கின்றது. இதனால், வெற்றிவேந்தனை தன்தந்தை கடுங் கோனுக்குப்பின் தான்பெற்ற நாட்டைச் சில்லாண்டுகள் ஆட்சி புரிந்து சென்றவனாகவே இவனைக் கருதல் தகும்.

அன்றியும், இவன் காலம், முதற்றொகுதியடியார் களுள் ஒருவரான திருமழிசைப்பிரானுக்கு உரிய தென்பது மேலே விளக்கப்பட்டது. இவற்றால், பெரியாழ் வாரால் அடிமைகொள்ளப்பெற்ற நெடுமாறன் இவனே என்று கருதற்குச் சிறப்பாக அமைந்த காரணம் ஒன்றுமேயில்லை.

இனி, 4-ம் எண்ணுக்குரிய மாறவர்மன் திருஞான சம்பந்தர் காலத்தவனாவன். இவனே அந்நாயனாரால் சைனமதத்தினின்றும் திருப்பப்பெற்றுப் பரமசைவ னானவன். "நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன்" என்று சிவனடியார்களுள் ஒருவனாகத் திருத்தொண்டத் தொகையிற் சுந்தரமூர்த்தி நாயனாராற் கூறப்பட்டவன் இவனே. இந்நெடுமாறன் நெல்வேலிவென்ற செய்தியை யும், சிவபத்தன் என்பதையும் தேவாரமும் சாஸனமுங் கூறியவாறே, இறையனார்களவியலுரையுட் கண்ட மேற்கோட் செய்யுட்களும்[1] ஆதரிக்கின்றன.

---

**1. அவ்வுரையுள், 106, 145-ம் கட்டளைக் கலித் துறைகள் நெடுமாறனது நெல்வேலிப்போரையும், 256, 279-ம் கலித்துறைகள் அவனது சிவபத்தியையும் விளக்குதல் காண்க. இக்களவியலுரையிலுள்ள மற்றக் கட்டளைக் கலித்துறைகள் யாவும், இந்நெடுமாறனைப் பற்றி யனவேயாம்.**

**சென்னை மியூஸியம் கையெழுத்துப் புத்தகசாலையி லுள்ளதும், இறையனாரகப்பொருளுக்கு விளக்கமாக உதார ணப்பாடல் பல அமைத்துக் காட்டப்பட்டதுமான**

சிவனடியார்களுள் ஒருவனான இந்நெடுமாறனையே பெரியாழ்வார் திருத்திப் பணிகொண்டவர் என்று கொள்வதில் தடைகள்பல நிகழக்கூடியதாதலின், அவ் வாழ்வார்காலத்தவன் இவனுமாகான் என்பது திண்ணம்.

இனி, இந்நெடுமாறன் பேரன், மேற்காட்டிய வமிசாவளியில் 6-ஆம் எண்ணுக்குரிய மாறவர்மனுவன். இவன் காலம் உத்தேசம் கி. பி. 740—767 ஆகும். இப்பாண்டியன், பல்லவ மல்லனோடும் (715-780), மற்றும் பலருடனும் போர்புரிந்து வெற்றிபெற்ற பெருவீரன் என்றும், கங்கராசன்மகள் பூசுந்தரியை மணந்தவனென்றும், ''பாண்டிக்கொடுமுடி சென்றெய்திப் பசுபதியது பதுமபாதம் பணிந்தேத்தி'' யவன் என்றும் வேள்விகுடிச் சாஸனம் புகழும்.

**''மான வெண்குடை மான்றேர் மாறன்''** (வேள்விகுடிச்சாஸனம்).

**''மற்றவற்குப் பௌத்ரனுயின மன்னர்பிரான்''**

இராச சிங்கனும்' (சின்னமனூர்ச்சாஸனம்) என்ற சாஸனத்தொடர்களால் இப்பாண்டியனுக்கு

---

நூலொன்று அருமையாக உள்ளது. அதனுட்கண்ட களவியலுரையுதாரணங்களான கலித்துறைகளின் தலைப்பில், **பாண்டிக்கோவை** என்ற குறிப்பையான் முதன்முதற் கண்டபோது, அவையாவும் அக்கோவையைச் சார்ந்தன என்று தெரிந்தேன்.

இலக்கண விளக்கப்பாட்டியல் 116-ம் சூத்திரவுரையுள் —''செய்வித்தோன் பெயரான் வந்தன; **பாண்டிக்கோவை** முதலியன'' என்று எழுதப்பட்டிருத்தலாலும் இத்தகைய நூலொன்று முன்பு வழக்கிலிருந்தமை தெளிவாகும்.

**மாறன்,**[1] **இராஜசிம்மன்** என்ற பெயர்கள் வழங்கின என்பது தெரியலாம்.

மாறன் என்ற பெயரையே, மாறவர்மன் என்றும் நெடுமாறன் என்றுங் கூறுவதுண்டு என்பது, இவன் பாட்டனும் சம்பந்தர்காலத்தவனுமாகிய 4-மெண்ணுக்குரிய பாண்டியனை அம்மூவகையாகவும் சாஸனமும் நூல்களும் கூறுவதினின்றும் பெறப்படும். அதனால் மாறவர்மனான இராஜசிம்மனும் நெடுமாறன் எனப்பட்டான் என்க.

இவ்விராஜசிம்மன் தன் முன்னோரைப்போலவே சைவசமயத்தவனாயினும், பெரியாழ்வாரால் திருத்திப் பணிகொள்ளப்பெற்றவன் இவனே என்று கருதற்குப் பெரிதும் பொருத்தம் உள்ளது. இப்பாண்டியன்மகன் பராந்தகன்நெடுஞ்சடையன் என்பவன்—உத்தேசம் கி. பி. 767-ல் பட்டமெய்தியவன்.

இவ்வரசனது ஆட்சித் தொடக்கத்தே, இவனிடம் உத்தரமந்திரியாக இருந்தவன் **மாறங்காரி** என்பனென்பதும், இந்நெடுஞ்சடையனது மூன்றும் ஆட்சி வருஷத்தில் (கி. பி. 770) அம்மந்திரி இறந்துவிட்டனன் என்பதும் சாஸனங்களினின்று நன்கறியக்கிடக்கின்றன. இதனால், நெடுஞ்சடையனது ஆட்சியில் மிகச்

---

1. இவனை 'மான்றேர் மாறன்' என்று சாஸனங் கூறுவதில் **மான் தேர்** என்பது விசேடணமாகக் கொள்ளற்குரியதேயன்றி, பலரும் கருதுவதுபோலத் தேர்மாறன் என்று பிரித்து அதனை இயற்பெயராகக் கொள்ளல் பொருத்தமன்று, பாண்டிக் கோவைப் பாடல்களில், மாறன் என்று இவன் பாட்டன் வழங்கப்பெற்றவாறே, பேரனும் வழங்கப்பட்டனனென்றேகொள்க.

சிலவருஷங்களே அவன் உயர்பதவியை வகித்தவன் என்பது தெரியலாம்.

அம் மகாசாமந்தன் தன்னரசனுக்குக் கங்கராசன் மகள் பூசுந்தரியை, வடவேந்தருடன் பெரும்போர் புரிந்து மணஞ்செய்து வைத்தவனென்று வேள்விகுடிச் சாஸனம் கூறுகின்றது. இக்கங்கசம்பந்தஞ்செய்து கொண்டவன் நெடுஞ்சடையன் தந்தையான மேற் கூறிய மாறவர்மனே என்பது—

**''கொங்கரவ நறுங்கண்ணிக் கங்கராசனொடு சம்பந்தஞ் செய்தும்''**

எனவரும் அச்சாஸனத்தொடரால் தெளிவாம். இங்ஙனம் மணஞ்செய்துகொண்ட தேவிவயிற்றிற் பிறந்த மகனாகவே நெடுஞ்சடையன் கூறப்படுவதும் அறியத் தக்கது. எனவே, மகனான நெடுஞ்சடையனது ஆட்சித் தொடக்கத்தில் உத்தரமந்திரியாயிருந்த மாறங்காரி, அம்மகன் பிறப்பதற்கு முன்பே தந்தையான நெடு மாறன்கீழ்ப் பல்லாண்டுகளாக அப்பதவியை வகித்து வந்தவன் என்று கொள்ளத் தடையில்லை. இம்மாறங்காரி 'ஸ்வர்க்காரோகணம் செய்தபின்னை அவனுக்கு அநுஜனாய் உத்தரமந்திரபதம் எய்தின''வன் மாறன் எயினன் என்ற பெயர் பெற்றவன்.

பாண்டியரது தலைமையமைச்சர்களாக விளங்கிய இச்சகோதரர் இருவரும் பரமவைஷ்ணவர்கள் என்பது, மதுரையை அடுத்த யானைமலை அடிவாரத்தில் இவர் களால் அழகாக நிருமித்துப் பிரதிஷ்டிக்கப் பெற்ற நரசிம்மப்பெருமாள்கோயிற் சாஸனங்களால் தெளிவா கின்றது. இங்ஙனம் பரம வைஷ்ணவனொருவனைத் தன் உத்தரமந்திரியாக உடையனாயிருந்திருப்பதால், பாண்டியன் மாறவர்மன் தன் சமயக் கோட்பாட்டில்

திருத்தம் பெறுவதற்கு இடமேற்பட்டிருக்கவுங் கூடியதன்றோ? அப்பாண்டியனது சமயவிசாரத்துக்கு இவ் வைஷ்ணவமந்திரியே காரணமாக அமைந்திருத்தல் வேண்டும்.

இம்மந்திரியின் ஊராகிய களக்குடி [1] பெரியாழ்வார் அவதரித்த ஸ்ரீ வில்லிபுத்தூர்க்கு நெடுந்தூரத்ததும் அன்று. அதனால், அப்பெரியாரது திருவடிசம்பந்தம் இம்மந்திரிக்கு இருந்தது போலும் என்று சங்கிக்க இடமுண்டு.

மற்றும், தந்தை மாறவர்மனது ஆட்சி முடிந்ததும் அவன் மகன் நெடுஞ்சடையன் தக்கபருவத்திற் பட்டம் பெற்றவன் என்பது, அவனது முதன் மூன்றுவருஷத்து ஆட்சிச் செயல்களாக வேள்விகுடிச் சாஸனங் கூறும் வரலாறுகளினின்றும் பெறப்படுகின்றது. இப்பாண்டியனது 17-வது ஆட்சியாண்டில் அமைந்த சீவரமங்கல சாஸனத்தில் [2] இவன்—

" பாரந்தகன்பரமவைஷ்ணவன் தானகி
நின்றிலங்கு மணிநீண்முடி நிலமன்னவன் நெடுஞ்சடையன் "

என்று புகழப்பட்டுள்ளான். அச்சாஸனத்தை எழுது வித்த ஆணத்தி (ஆஜ்ஞப்தி), முற்கூறிய உத்தரமந்திரி மாறங்காரியின் வழியினனாகிய தீரதரன்மூர்த்தி எயினன் [3] என்பவன்.

---

1. இதுவரை கருதப்பட்டபடி, இவ்வூர் களககாடு அன்று என்பதை நம்மாழ்வார் விஷயமாகக் கூறுமிடத்து விளக்குவேன்.

2. Madras Museum Plates of Parantntaka Nedunj-adaiyan (Indian Antiquary, Vol. xxii).

3. மாறங்காரியின் ஊராகிய களக்குடியும், அவனுக்குரிய வைத்திய குலமும், உத்தரமந்திரி பதவியும் இவனுக்கும்

தன் முன்னோரைப்போலவே இம்மந்திரியும் வைஷ்ணவன் என்பது, இவனெழுதிய அச்சாஸனப் போக்கால் தெளிவாம். இங்ஙனம் பாண்டியனொருவனும், அவன் தலைமை மந்திரிகளும் திருமாலடிமைத்திறத்திற் சிறந்தவராக விளங்கியது பாண்டியவமிசத்தில் மிகவும் அருமையேயாகும். இதுபற்றியே "பரம வைஷ்ணவன் தானாகி நின்றிலங்கும்" என்று, அச்சாஸனம் பாடிய கவியும் வியப்பவன்போலவே தோற்றுகின்றான்.

பரம்பரைச் சைவரான பாண்டியகுலத்தில், இத்தகைய நிலைமையொன்று இடைப் புகுந்ததெனின், அதற்கு ஏதோ ஒரு விசேடசம்பவம் காரணமாக வேண்டுமன்றோ? அந்தச் சம்பவம் பெரியாழ்வாரால் உண்டாக்கப் பெற்றதாகவே கருதத்தகும். இவ்வாழ்வாரால் தம் காலத்துத் திருமாலடியவனாகக் குறிக்கப் பட்டவன், நெடுமாறன் என்ற பெயரினன் என்பது மேலே விளக்கப்பட்டது.

பரமவைஷ்ணவனாகச் சீவரமங்கல சாஸனங் கூறும் பாண்டியனுக்கு நெடுஞ்சடையன் அல்லது சடையன் என்பது பெயரேயன்றி நெடுமாறன் என்பதன்று. இவனை மாறஞ் சடையன் என்றும் சாஸனங்கள் வழங்குவதுண்டு. தந்தை பெயரை இயற்பெயருடன் இணைத்துக் கூறும் பண்டை வழக்குப்படி, மாறனுக்கு மகன் சடையன் என்பது இதன் பொருளாம்.

ஆகவே, ஆழ்வாரால் திருமாலடியவனாகக் கூறப் பட்ட பாண்டியன், தந்தையாகிய மாறன் அல்லது

---

உரியனவாக ஷ்ை சாஸனங் கூறுதல் காண்க. இவனுக்கு வழங்கும் பெயரால், அம்மாறங்காரியின் சகோதரனான மாறனெயினனுக்கு மகனாக இவனைக்கொள்ள இடமுண்டு.

நெடுமாறனேயன்றி அவன் மகனாகிய நெடுஞ்சடையன் ஆகான் என்பது நன்கு பெறப்படும்,

படவே, ஆழ்வார் நடத்திய சமயவாதம் தந்தை-நெடுமாறன் காலத்து நிகழ்ச்சியாக வேண்டும் என்றும், அவனே நம் பெரியார்க்கு முதலில் அடியவனாயினன் என்றும், சைவனாயிருந்து பின் அடியனாயின அப்பாண்டியனைப்போலாது, அவன்மகன் ஆழ்வாரது சார்பால் முழு வைஷ்ணவனாகவே விளங்கினமையால் "பரம வைஷ்ணவன் தானாகி நின்றிலங்கும்...... நெடுஞ் சடையன்" என்று சிறப்பிக்கப்பெற்றனன் என்றும் நாம் கருதக்கூடியவாயுள்ளன.[1]

---

1. பராந்தகன் - நெடுஞ்சடையனது 3-ஆம் ஆட்சி வருஷத் தமைந்த வேள்வி குடிச்சாஸனத்தின் தொடக்கத்தில் சிவ வணக்கம் காணப்படுதலால் அவன் முதலில் சைவனாயிருந்து பின் வைஷ்ணவனானவன் என்பர் சிலர். ஆயின், பரமவைஷ்ணவனானபின் இவனது 17-ஆம் ஆட்சி யாண்டில் அமைந்த சீவரமங்கல சாஸனத்தில் விஷ்ணு வணக்கமேயன்றோ காணப்பட வேண்டும்? அவ்வாறன்றிச் சிவவணக்கமும் அதன் தொடக்கத்துக் கூறப்பட்டுள்ளமையால் அவர்கூற்றுப் பொருந்தாதாகும்.

சாஸனங்களில் பிரசஸ்தி எழுதும் கவியின் மனக்கொள்கைக் கேற்ப, திரிமூர்த்திகளில் ஒருவர்க்கோ பலர்க்கோ முதலில் வணக்கங்கூறப்படுதல் பழைய வழக்காகும். அதனைத் தாம்கொண்ட மதச்சார்புக்கேற்ப அரசர் கட்டுப்படுத்தியவரல்லர்.

நெடுஞ்சடையன்போலப் பரமவைஷ்ணவனான பல்லவ மல்லன் சாஸனங்களினும், பிரசஸ்தி எழுதிய கவியால் சிவவணக்கம் தொடங்கப்பட்டிருத்தலைக்காணலாம். ஆகவே, சாஸனத் தொடக்கமான தெய்வத்துதிகளைக் கொண்டு, அரசர் மதங்களை அளவிடல் தவறுமென்க.

தந்தை நெடுமாறனது ஆட்சியில்- அஃதாவது அவன்மகன் பட்டம்பெற்ற கி. பி. 767-க்கு முன்பு— பெரியாழ்வார் அவன்முன் பரத்துவநிருபணஞ்செய்து அவனை அடிமையாக்கியவராயின், அப்போது இளம் பருவத்தினனாயிருந்த அவன்மகன் நெடுஞ்சடையனும் அப்பெரியார் மகிமையை நேரில் அறிந்து அவர் திருவடி சம்பந்தம் பெற்றுப் பரமபாகவதனாகியிருத்தல் கூடிய தேயாம்.

சீவரமங்கலசாஸனத்துக் கண்ட இச்சடையன் பெருமைகளுள்ளே, இவன் 'மனுதர்சித மார்க்கத்தினால் **குருசரிதங்கொண்டாடி**' வருபவன் என்ற செய்தியும் ஒன்றாக உள்ளது. இங்ஙனம் அவனாற் கொண்டாடப் பெற்ற **ஞானகுரு**—"பாண்டியன் கொண்டாடப் பட்டர் பிரான் வந்தானென்று" என்று தனியன் கூறுமாறு, பெரியாழ்வாராகவே கொள்ளுதற்குப் பொருத்தம் பெரிதும் உண்டென்று சொல்லலாம்.[1]

இங்ஙனம் பரமவைஷ்ணவனான நெடுஞ்சடையனது செய்திகளிலே, அவன் கொங்க பூமியைத் தன் ஆட்சிக்கு உட்படுத்திய பின்—

**" பூஞ்சோலை யணிபுறவிற் காஞ்சிவாய்ப் பேரூர்புக்குத்**
**திருமாலுக் கமர்ந்துறையக் குன்றமன்னதோர் கோயி லாக்கி" னான்**

---

1. 'குருசரிதங் கொண்டாடி' என்பதற்குத் ' தன்முன்னோர் செயலை அநுசரித்து' என்று சிலர் பொருள் கூறுவர். 'கொண்டாடி' என்பது அவர் கருத்துக்கு அத்துணையாக இயையாமையும், 'பாண்டியன் கொண்டாட' என்ற பெரியாழ்வார்தனியனுக்குப் பெரிதும் இயைதலும் நோக்கிக் கொள்க. கடன்ஞால முழுதளித்தலும், கண்டக சோதனை தான் செய்தலும் போலவே, தன் ஞானகுருவைக் கொண்டாடுதலும் மனுதர்சிதமார்க்கமே யாம் என்க.

என்று வேள்விகுடிச் சாஸனம் கூறுகின்றது. காஞ்சி வாய்ப் பேரூர் என்பது, கொங்குநாட்டில் நொய்யலாறு என வழங்குங் காஞ்சிமா நதிக்கரையின் பக்கத்துள்ள பேரூர்[1] என்ற பிரபல சிவதலமாகும். இதனை 'மேலைச் சிதம்பரம்' என்றுங் கூறுவர். இவ்வாறு பிரசித்தமான சிவதலத்தில் திருமாலுக்குப் பெரியதோர் கோயிலமைத் தவன் இப்பாண்டியன் என்பதனால், அக்கடவுளிடம் இவன் வைத்திருந்த பத்தியின் பெருமை இத்தகைய தென்பது விளங்கும்.

**" கொங்குங் குடந்தையுங் கோட்டியூரும் பேரும்**
**எங்குந் திரிந்து விளையாடு மென்மகன்''**

(பெரியாழ், திருமொழி, 2, 6, 2.)

என்ற பெரியாழ்வார் திருவாக்கு இந்நெடுஞ்சடையன் கொங்கு நாட்டிற் புரிந்த இவ்வரிய திருப்பணியை ஞாபகப்படுத்துகின்றது. ஆழ்வார்கள் பாடல்பெற்ற திவ்யதேசமொன்றையும் உடையதன்று என்று கருதப் படும் கொங்குநாடு கண்ணன்விளையாடும் தலங்களி லொன்றாகப் பெரியாழ்வாரால் முற்பட எண்ணப்படு வதற்குக் காரணம் யாது? இதற்கு ஏற்ற விடை யாவது—தம் சிஷ்யனும் பரமபாகவதனுமான நெடுஞ் சடையனால் அந்நாட்டுப் பேரூரில் நிருமித்துப் பிரதிஷ்டிக்கப் பெற்ற மூர்த்தியைப்போன்ற கொங்கு நாட்டு மூர்த்திகளைத் திருவுள்ளத்துக்கொண்டே இப்பெரியார் அவ்வாறு பாடியிருத்தல் வேண்டும் என்பதேயாம்.

---

1. ''தண்பனி மலர்ப்படப்பை, குலவுமக் கொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர் குறுகினார்'' என்ற சேக்கிழார் வாக்குங் காண்க (பெரிய புராணம், ஏயர்கோன். 88.)

அக்கொங்குநாட்டிற் பாடல் பெற்ற திவ்யதேசங்களே இல்லையென்று கருதி— கொங்குங் குடந்தையும்' என்ற தொடர்க்கு, 'வாசனை மயமான குடந்தையும்' என்று பதப்பொருளும் 'கொங்குக் குடந்தையும்' என்றிருக்க வேண்டியது 'கொங்குங் குடந்தையும்' என்று மெலிந்தது" என்று விசேடமும் பண்டை வியாக்கியானங்களில் எழுதப்பட்டுள்ளன. ஆயினும், பெரியாழ்வார் காலத்து நிகழ்ச்சிகளை நோக்குமிடத்து, அத்தொடர்க்கு மேற்கூறிய கருத்துக்கொள்ளுதலே பொருத்தமாமென்க[1]

இனி, கோநெடுமாறனைப் பற்றி ஆழ்வார் பாடிய பாசுரம் மற்றொரு குறிப்பும் உடையதுபோலவே தோற்றுகின்றது.

**" மன்னர் மறுக மைத்துனன் மார்க்கொரு தேரின்மேல்**
**முன்னங்குச் சென்று மோழை யெழுவித் தவன்மலை**
**கொன்னவில் கூர்வேற் கோநெடுமாறன் தென்கூடற்கோன்**
**தென்னன்கொண் டாடுந் தென்திரு மாலிருஞ்சோலையே "**

என்ற அப்பாட்டில், 'தன் மைத்துனர்க்காகத் தேரேறிச் சென்று பகையரசரை வருத்திய அழகரது திருமலையைக் கொண்டாடுபவன் நெடுமாறன்' என்று ஆழ்வார் கூறுதல் அறியலாம். இங்ஙனம் முன்னிரண்டடிகளிற்

1. **வித்துவக்கோடு** என்ற த்லமும் கொங்குநாட்டதே; அது குலசேகரப் பெருமாளைப் பற்றிக் கூறுமிடத்து விளக்கப்படும். திருக்குடந்தை, திருக்கோட்டியூர், திருப்பேர் என்ற தலங்களின் பெயர்களைக் குறிப்பிட்டது போலவன்றிக் 'கொங்கும்' என்று தேசப் பெயரால் ஆழ்வார் குறிப்பிட்டது, தங்காலத்துத் திருமால்தலமாகத் தோன்றிய பேரூரோடு, வித்துவக் கோட்டையும் கருத்துட்கொண்டு போலும்.

கண்ட திருமால்சரிதம், அப்பாண்டியன் வணங்குதற் கேற்றதாயமைந்த அவனது வரலாறென்றையும் கருத்துட் கொண்டதுபோலவே தோற்றுகின்றது.

இவ்வாறு 'ஸாபிப்ராய விசேஷண விசேஷ்யங்கள்'' உடையனவாகவே ஆழ்வார்கள் பாடுவதை—அவர்கள் அருளிச்செயல்களாலும் அவற்றின் வியாக்யானங் களாலும் நாம் நெடுக அறிந்து கொள்ளலாம். ஈண்டுக் கூறப்பட்ட திருமால் சரிதமும் அத்தகையதாயின், 'தன் மைத்துனர்க்காகத் தேரேறிச் சென்று பகைவரைக் கலக்கிய திருமால் கோயில்கொண்ட மலை, அதுபோன்ற செயலை முன்புரிந்த நெடுமாறனால் கொண்டாடற்குரிய தாயிற்று' என்ற தொனிப்பொருள் இப்பாசுரத்தாற் பெறப்படத் தடையில்லை. மைத்துனர்க்காகப் போர் புரிந்த பெருமானை மைத்துனர்க்காகப் போர்புரிந்த அரசன் வழிபடல் தகும் என்பது கருத்து.

இங்ஙனம் நெடுமாறன் எந்த மைத்துனர்பொருட்டு எக்காலத்துப் போர்செய்தவன் என்பதைப்பற்றிச் சாஸனம் நேராக ஒன்றுங் கூறவில்லை. ஆயினும், இரண்டுவகையால் அத்தகைய செயலை அவன் நிகழ்த்தி யிருக்க இடமுண்டென்றே தோன்றுகின்றது.

முதலாவது—பல்லவமல்லனுடன் இந்நெடுமாறன் நடத்தியபோர், அப்பல்லவ குலத்தவனான சித்திரமாயன் என்பவனைப் பட்டத்தில் நிறுத்துவதற்கே என்பதும், இச்சித்திரமாயன் நெடுமாறனுக்கு அம்மான் முறை யினனாக வேண்டுமென்பதும் **கனம் தூப்ராயில் துரை** யவர்கள் கருத்தாகும்.[1]

1. 'பல்லவசரித்திரம்' — **செந்தமிழ்**, தொகுதி — 17, பக். 28.

பாண்டியனால் உதவப்பெற்ற இச்சித்திரமாயன், பல்லவமல்லன் சேனாபதியாற் போரிற் கொல்லப் பட்டான். ஆயினும், நெடுமாறன் அப்பல்லவனை, விடாமற் பலவிடங்களிலும் எதிர்த்தவனென்று கூறப் படுகின்றான்.[1]

இப்போர்கள், சித்தரமாயனுடைய மக்கள்பொருட்டு நிகழ்த்தப்பட்டனவாதல்வேண்டும் என்பர், முற்கூறிய துரையவர்கள். இக்கருத்துப் பொருத்தமுடையதாயயின், சித்திரமாயன் மக்கள் நெடுமாறனுக்கு மைத்துன முறையினர் ஆவர்.

அப்போது நெடுமாறன் அவர்கட்குச் செய்த உதவியை ஆழ்வார் திருவுளத்துக்கொண்டு அவ்வாறு பாடியிருத்தல் கூடியதே.

---

1. இப்போர்களிலே பல்லவமல்லன் வெற்றி பெற்றானென்று திருமங்கை மன்னனது பரமேச்சுர விண்ணகரம் பதிகமும், நெடுமாறன் வெற்றி பெற்றவனாக வேள்விகுடிச் சாஸனமும் கூறும். இதனால், அவ்விருவம் வெற்றி கோல் விகலை மாறி மாறிப் பெற்றவர்கள் என்பது பெறப்படுகின்றதுஅப்பல்லவனுடன் பொருத மாறவர்மனை "**உலகுடை மன்னவன்** தென்னவன்" என்று திருமங்கை மன்னன் அப்பதிகத்துச் சிறப்பித்ததற்கியைய,பெரியாழ்வார் அவனைக் **கோ நெடுமாறன்** என்று விசேடித்துப் பெயர் கூறுதல் ஒப்பிடத்தக்கது.**கோ** என்பது அரசர்க்கரசன் என்ற வழக்குங் காண்க. "சேரக் கண்டு மன்னர் குரைகடற் புக்கிலர்" என்றார் பின்னோரும். கூடல் வஞ்சி கோழி என்ற மூன்று தலைநகரங்கட்கு முரியனாக மாறவர்மனாகிய நெடுமாறனை வேள்விகுடிச் சாஸனங் கூறுதலால், அவன் உலகுடை மன்னவன், கோ என்ற விசேடணங்கட்கு உரியவனாதல் காண்க.

இரண்டாவது—மாறவர்மனான இந்நெடுமாறன் கங்கராசனுடைய மகளான பூசுந்தரியை மணம்புரிய விரும்பி அவளைப் பெற முயன்றபோது வடவரசர் பலர் திரண்டெதிர்த்தனர் என்றும், அவரையெல்லாம் மாறங் காரி என்ற தன் மகாசாமந்தனைத் தலைமையாகக் கொண்ட பெருஞ்சேனையால் அப்பாண்டியன் அழித் தோடச் செய்து அக்கன்னியாரத்னத்தை அடைந்து மணந்தனனென்றும் வேள்விகுடிச் சாஸனங் கூறு கின்றது. அவ்வாறு மணம்புரிவதற்கு அநுகூலராகக் கங்கராசன் மக்கள் நெடுமாறன் சார்பாக நின்றிருத் தலும், மைத்துன முறையினரான அவர்க்கு உதவியாக வடவரசரைப் போரில் அவன் புறங்கண்டிருத்தலும் கூடியனவன்றோ? ஆக, இவ்விருவகை நிகழ்ச்சிகளுள் ஒன்றை ஆழ்வார் பாசுரம் குறிப்பாற் புலப்படுத்துவது என்றே அதன் போக்கால் தோற்றுகின்றது.

இக்கூற்றுச் சிலர்க்கு அதிவாதம்போலத் தோற்று மாயினும் ஆழ்வார் பாசுரங்களில் ஆராய்ச்சி யுடையார்க் கெல்லாம், ஸாபிப்ராய விசேஷண விசேஷ்யங்களைக்கொண்டு யான் கண்ட கருத்து ஏற்புடையதாகும் என்பது திண்ணம்.

இங்ஙனம் தன் அடியவனான நெடுமாறனுக்குத் திருமால் பகையழித்து அருள்புரிந்துவந்த செய்தியே—

> **''குறுகாத மன்னரைக் கூடு கலக்கிவெங் கானிடைச்**
> **சிறுகா னெறியே போக்குவிக்குஞ் செல்வன் பொன்மலை''**
> (பெரியாழ். திருமொழி, 4, 2, 8).

என்று அடுத்துவரும் பாசுரத்தும் ஆழ்வாரால் எடுத்து மொழியப் பட்டதாகும். மேற்பாடலின் தொடர்பு கொண்டு இவ்வடிகளை நோக்குமிடத்து, 'குறுகாத

மன்னரை' என்ற தொடர்க்கு—'நெடுமாறனுக்குப் பகைவரான அரசரை' என்பதே பொருளென்றும், அப்பகையரசர் திருமாலால் நிலைகுலைக்கப்பட்ட செய்தியே[1] இவ் ஆழ்வாரார் கூறப்படுவதென்றும் புலப்படத் தடையில்லை.

இவ்வாறன்றிப் பூர்வ வியாக்யானத்தின்படி—தன் தலையைக் குறுகி வணங்காத மன்னர்க்குத் திருமால் பிரதிகூலனாக நின்றதையே அவ்வடிகள் கூறுவன எனின், தன் திருமலையை வணங்கும் நெடுமாறனுக்கு அருள்புரிந்த திருமால், அதனை வணங்காத அடியராகாத பகைவரை வருத்துபவனாயினான்' என்பது கருத்தாகக் கொள்க. இது நிற்க.

மேற்காட்டிய பாண்டிய வமிசாவளியில் 8-ஆம் எண்ணுக்குரிய **ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன்** என்பவனே பெரியாழ்வார் காலத்தவன் என்றும், **சிரீவல்லுவன் அவனிபசேகரன்** என்ற பெயருடையவனாகப் (புதுக்கோட்டைச் சீமைச்) சிற்றன்னவாசற் குடைவரைச் சாஸனங் கூறும் பாண்டியன் இம்மாறனே என்றும், ஸ்ரீகோபிநாதராயர் எழுதியுள்ளார்;[2] இங்ஙனம் அவர்

1. தன் அடியரான அரசர்க்கு அனுகூலனாகவும், அவர் பகைவர்க்குப் பிரதிகூலனாகவும் நின்று ஈசன் அருள்புரிபவனென்றவாறு—"மண்ணுலகங் காவல்பூண்ட, உரிமையாற் **பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை மறுக்கஞ் செய்யும்,** பெருமையார் புலியூர்ச் **சிற்றம்பலத்தெம் பெருமானை"** எனச் **சுந்தரமூர்த்தி நாயனாரும்,** (தேவா. பக். 17, பாட்டு 4, சுவாமிநா. பதிப்பு), **"கூற்றைவென் றாங்கைவர் கோக்களையும்வென்** றிருந்தழகால், வீற்றிருந்தான் பெருந்தேவியுந் **தானுமோர் மீனவன்பால், ஒற்றுவந் தாருயிருண்ட திறலொற்றைச் சேவகனே"** எனத் **திருவாதவூரடிகளும்** (திருவாசகம்) திருப்பாண்டிப் பதிகம், 10) கூறியவை ஒப்பிடற்குரியன.'

2. History of the Sri Vaishnavas. p. 23.

கருதியதற்கு ஸ்ரீவல்லபன் என்ற பெயரொற்றுமை ஒன்றைத்தவிர வேறு காரணம் இல்லை.

இராயரவர்கள் கூறும் பாண்டியன் பெரியவீரனே யாயினும் பரமவைஷ்ணவனுயிருந்தவன் என்று சொல்லத்தக்கவனல்லன். அன்றியும் இவன் கி. பி. 862-க்கு முன் வாழ்ந்தவன் என்பது இவன் மகன் வரகுணன் சாஸனத்தினின்றும் அறியக்கிடக்கின்றது. ஸ்ரீவைஷ்ணவாசாரியத் தலைவரான ஸ்ரீமந்-நாதமுனிகள் பிரசித்தராக விளங்கியது இவனது ஆட்சிக்காலமே ஆகும்.

பெரியாழ்வாரும் இவர் திருமகளாரும்—இராயரவர்கள் கருத்தின்படி—இக்காலத்தவரேயாளுல், இப்பேரடியார்களை அவ்வாசாரியத் தலைவர் நேரில் அறிந்திருக்கவும் அறிந்து அளவளாவியனவும் கேள்வியுற்றனவுமாகிய வரலாறுகள் அம்முனிகளாலும் அவருடைய சிஷ்யபரம்பரையினராலும் சரித்திர நூல்களிற் பிரபலமாகப் பயின்றிருக்கவும் கூடும்.

ஆனுல் இதற்கு மாருக, ஆழ்வார்கள் அவதரித்து நெடுங்காலத்துக்குப் பின்பே அந்நாதமுனிகள் திருவாய்மொழி முதலாய திவ்யபிரபந்தங்களைப் பெற்றதாகக் குருபரம்பரைகள் கூறுகின்றன. இதனுல், அம்முனிகளுக்கும் ஆழ்வார்கட்கும் இடையிட்ட காலம் பெரிதென்பது பெறப்படுதலால், அவ்வாசாரிய சிரேஷ்டர் விளங்கிய 9-ஆம் நூற்ருண்டின் இடையில் இருந்த பாண்டியனெருவனைப் பெரியாழ்வார் காலத்தவனுகக் கூறுவது' அசங்கதமாமென்க.

அன்றியும், சிற்றன்னவாசற் குடைவரைச் சாஸனங் கூறும் சிரீவல்லுவன் அவனிபசேகரன் என்ற

பாண்டியன், 8-ஆம் எண்ணுக்குரிய ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனே என்றெழுதிய ராயரவர்கள் கருத்தும் பொருத்தமன்று. அச்சாஸனத்துக் கண்ட **சிரீவல்லுவன்**[1] என்பது ஸ்ரீவல்லபன் என்ற வடபெயரின் திரிபேயாம. சோணாட்டுத் திருவிசலூரிற் கண்ட கல்வெட்டொன்றி னும் இத்திரிபுப் பெயர் கொண்ட பாண்டியனொருவன், முதலாம் இராசேந்திர சோழன் (1011—42) காலத்தவ னாகக் காணப்படுகின்றான்.[2] இச்சோழன் மகனான வீர ராசேந்திரன், ஸ்ரீவல்லபன் மகனை வென்றவன் என்று அவன மெய்க்கீர்த்தி[3] கூறுவதும் காண்க.

இவ்வாறு திரிந்து வழங்கும் பாண்டியன்பெய ரொற்றுமையை நோக்குமிடத்து, சிற்றன்ன வாசற் சாஸனத்துக் குறிக்கப்பட்டவன் அச்சோழன் காலத்துச் சிரீவல்லுவனின் வேறல்லன் என்ற. தோற்றுகின்றான்.

பெரியாழ்வார்வரலாற்றின்படி, ஸ்ரீவல்லபன் என்ற பெயர் 8-ம் நூற்றாண்டில் அவ்வாழ்வார்காலத்துப் பாண்டியருள் ஒருவற்கு வழங்கி வந்ததே என்பதனைச் சாஸனங்களும் குறிப்பிக்கின்றன. யான் பல வருஷங்கட்குமுன் **செந்தமிழ்ப்பத்திரிகையில்** எழுதிய கட்டுரைகளிலே, அவ்வாழ்வார் தம்காலத்துப் பாண்டியன் நெடுமாறன் என்ற பெயர்கொண்டவன் என்று குறிப்பிட்டுக் கூறுவதை முதன்முதல் வெளி யிட்டு, அவனே ஆழ்வாரால் அடிமை கொள்ளப்பெற்ற ஸ்ரீ வல்லபதேவனாதல் வேண்டுமென்று எழுதியுள்ளேன்.

---

1. Ep. Rep, 368. of 1914.
2. Ibid; 46 of 1907.
3. *தென்னனைச் சிரீவல்லவன்மகன் சிறுவன், மின்னலில் மணிமுடி வீரகேசரியை, மதவரை யொன்று லுதைப்பித்து"* *எனக்காண்க.*

அக்காலத்துப் பாண்டியவமிசத்தைப் பற்றிய செய்திகள் சாஸன வழியால் மிகுதியாகத்தெரிய இடமில்லை. பிற்பட்டு வெளிவந்த வேள்விகுடி., சின்னமனூர் முதலிய இடங்களில் அமைந்த சாஸனங் களால் அவ்வமிசத்தவர் வரலாறுகள்பல வெளிவந்தபின், பல அரியசெய்திகளும் வெளியாயின.

மேலேகாட்டிய பாண்டியவமிசாவளியில் 2, 4, 6, 8 எண்களில் உள்ள அரசர்கள் மாறவர்மன், மாறன் என்ற இயற்பெயர் கொண்டிருத்தலும், பாட்டனும் பேரனு மான முறையிலே அவை வழங்கியிருத்தலும் காணலாம். 8-ம் எண்ணில் நிற்கும் ஸ்ரீ மாறனுக்கு ஸ்ரீ வல்லபன் என்பதும் பெயராகக் கூறப்பட்டுள்ளது. மாறன் என்பது போலவே ஸ்ரீவல்லபன் என்பதும் பாட்டனிடமிருந்து பேரனுக்குவந்த பெயராகக் கொள்வது பொருத்தமேயாகும். ஆயின், பெரியாழ்வார் கூறிய நெடுமாறனாகிய மாறவர்மனுக்கு ஸ்ரீவல்லபப் பெயரும் உண்டென்று, அவன்பேரன் பெயர்வழக்கி னின்று நாம் கொள்ளக் கூடியதன்றோ?

இவ்வாறன்றி, 7 எண்ணிற்கண்ட பரமவைஷ்ண வனான நெடுஞ்சடையனுக்கே ஸ்ரீவல்லபப்பெயர் உரிய தாகவேண்டும் என்று ஸ்ரீமாங்கோபிநாதராயர் கருதினர்.[1] இக்கருத்தும் பொருத்தமுடையதேயாகும்.[2]

---

1. T. A. S. Vol. I, p. 189.

2. ஹரிவம்சம் என்ற ஜைனகிரந்தம் இயற்றிய ஜினஸேனர் என்பார். இந்திராயுதன் என்ற இரட்ட வேந்தன் வடநாட்டையும், ஸ்ரீவல்லபன் என்பான் தென் னாட்டையும் ஆண்டுவந்த காலத்தே சகாப்தம் 705 (கி. பி. 783)ல் தம் நூலை எழுதி முடித்ததாகக் கூறுகின்றார்.

வல்லபர் என்பது இரட்டரும் சளுக்கரும் கொண்ட தாயினும் அஃது அவர்களெல்லார்க்கும் வழங்கும் பொதுப்

இவற்றுள் உண்மை யாது என்பது இனிக் கிடைக்கும் சாஸன உதவியாற்றான் தெளிவுபட வேண்டும். நெஞ்சடையன் தந்தையும் ஆழ்வாராற் கூறப்பட்டவனுமான நெடுமாறனுக்கே ஸ்ரீவல்லபன் என்ற மறுபெயருமுண்டாயின், அதுவே பொருத்தம் என்பதில் ஐயமில்லை. அல்வாறன்றி, அவன் மகனுக்கே அஃது உரியதாயின், மாறனுக்குமகன் ஸ்ரீவல்லபன் என்ற பொருளில், **மாறன் ஸ்ரீவல்லபன்** என நெடுஞ் சடையனுக்கு வழங்கியிருக்கக்கூடிய ஒட்டியற்பெயர் பிற்காலத்திற் பொருள் அறியப்படாமையாலும், தந்தையும் மகனும் ஆழ்வார்க்கு அடியராயிருந்தமையாலும்—மாறனும் ஸ்ரீவல்லபனும் ஒருவன் போலும் என்று கருதப்பட்டு—நெடுமாறனுக்கு வழங்கியதாக வேண்டும் என்க.

பெரியாழ்வார் 85-திருநக்ஷத்திரம் வாழ்ந்தருளியவர் என்பது குருபரம்பரைகளால் அறியப்படுகின்றது. உத்தேசம் 690-ல் இவ்வாழ்வார் அவதரித்தவராயின், 775-வரை இவர் வாழ்ந்த காலமாகக் கூறத்தகும்.

767-ல் பட்டம் பெற்றவனாகத் தெரியும் நெடுஞ் சடையன் எத்தனையாண்டுகள் ஆட்சிபுரிந்தவனென்பது

---

பெயராதலின், ஸ்ரீ வல்லபன் என்று ஜினஸேனர் குறிப்பிட்டுக் கூறியது, அதனைத் தன் சிறப்பியற் பெயராகக் கொண்ட தென்னாட்டரசனாகவே கொள்ளற்கு உரியது. அங்ஙனம் பிரபலனாய் அவர் கூறுங்காலத்தில் விளங்கிய தென்னாட்டு வேந்தன் நெடுஞ்சடையனே யாதலின், ஸ்ரீவல்லபப் பெயர் அவனுக்கிருந்ததென்ற ராயரவர்கள் கருத்துப் பெரிதும் ஏற்புடைத்தாதல் காண்க.

(Dr. Shama Sastri's—*The Epoch of Kuna Pandya*—Report of the Third Oriental Conference, pp 223—7.)

தெளிய இடமில்லை. ஆயினும், அப்பாண்டியனது 17-ம் ஆட்சி வருஷத்தில் அமைந்த சீவரமங்கலசாஸனத்தால், 784-ல் அவன் சீவந்தனுயிருந்தவன் என்பது அறியப்படுகின்றது.

பெரியாழ்வார் 775-வரை எழுந்தருளியிருந்தவராயின், மேலே குறித்த பாண்டிய வமிசாவளியில் 5-ம் எண்ணுக்குரிய கோச்சடையன் (உத்தேசம் 690) காலமுதலாக, 7-ம் எண்ணுக்குரிய அவன் பேரன் நெடுஞ்சடையனது ஆட்சியிடைக் காலமான 775-வரை, மூவர் பாண்டியர்காலங்களில் இப்பெரியார் விளங்கியிருந்தவரென்றே முடிவு கூறலாம்.

---

5-ஆம் அதிகாரம்

## ஸ்ரீ கோதையார்.

---

பெரியாழ்வாராகிய ஸ்ரீவிஷ்ணுசித்தரின் திருமகளாரைப்பற்றி இனிக் கூறுவேன்.

பின்பழகியபெருமாள்ஜீயர் குருபரம்பரை முதலியவற்றிற்கண்ட அத்திருமகளாரின் வைபவச் சுருக்கம் அடியில்வருமாறு:

பெரியாழ்வாரால் திருமாலைக் கைங்கரியத்துக்கென்று வில்லிபுத்தூரில் அமைக்கப்பட்டு வந்த திருநந்தவனத்துள் துளஸீவனத்திடையே அழகிய பெண்மக

வொன்று அப்பெரியாராற் கண்டெடுக்கப் பெற்றது. அதனைத் தம் மகளாராகவே ஆழ்வார் கைக்கொண்டு **கோதை** என்ற திருநாமஞ்சூட்டிச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வர, அப்பெண்கொடி வளர்ந்து வந்தனள்.

இளமையிலே கலைகள் முழுதுந் தன்னடைவே நிரம்பப்பெற்று வளர்ந்த கோதையார், ஆழ்வார் திருமகளார் என்றதற்கேற்றபடி ஞான பரிபூர்ணராகவும், திருமால்பாற் காதல்மிகப்பெற்றவராகவும் விளங்கிய தோடு, அப்பெருங்காதலடியாகப் பெருமானையே தமக்குரிய நாயகனாக வரித்து 'அவனை விட்டகன் றுற்றகில்லா' நிலையுடையராயினர். இங்ஙனம் நிகழப் பெரியாழ்வார், தாம் வழிபடுந் திருமாலுக்கென்று நாளுந் தொடுத்துவைத்த திருமாலைகளை அவரில்லாக் காலத்தே அவரறியாமல் தங்குழலிற் சூடிக்கொண்டு 'என்னு டைய அழகு எம்பெருமான் ஏற்கக் கூடியதாகுமோ' என்று கண்ணாடியில் அழகுபார்த்து அகங்களித்து, தம திருத்தந்தையார் வருமுன்பே சூடிய திருமாலைகளைக் களைந்து முன்போற் சுருட்டி உரிய விடத்தில் வைத்து வர, ஆழ்வாரும் அஃதறியாதே அத்திருமாலைகளைப் பெருமானுக்கு ஸமர்ப்பித்துக் கொண்டு வந்தனர்.

ஒருநாள், ஆழ்வார் தாம் கட்டிய திருப்பள்ளித் தாமத்தில் நீண்ட மயிரொன்றிருத்தல் கண்டு அஞ்சி, அதுவந்த காரணத்தை உசாவியறிந்து தம் திருமகளா ரைக் கடிந்தவராய், அத்திருத்தாமம் பெருமானுக்கேற் காதது என்று ஸமர்ப்பிக்காமற் போயினர். போக, அன்றிரவு திருமால் அவர் கனவில்தோன்றி, வழக்கம் போல் மாலை சாத்தாத காரணத்தை உசாவ, ஆழ்வார் தம்மகளாது அறியாமைச் செயலைக் கூற, 'அத்தகைய சூடிக்கொடுத்த தூமலர்த்தாமமன்றிப் பிறிதெதுவும்

தமக்குப் பிரிய மற்றதாம்' என்று பெருமான் அருளிச் செய்யவும், பெருவியப்பும் உவப்பு மடைந்து, "பின்னை கொல் நிலமா மகள் கொல் திருமகள் கொல் பிறந்திட்டாள்" என்று தம் திருமகளார் பால் விசேடப் பிரதிபத்தி பண்ணி, அடுத்த நாள் முதலாகத் தம் திருமகள் சூடிய திருமாலைகளையே நாளும் சாத்திப் பெருமானை உவப்பித்து வரலாயினர். அதுமுதல் 'சூடிக்கொடுத்தாள்' என்ற திருநாமம் கோதையார்க்கு வழங்குவதாயிற்று.

பின்னர், உரிய பக்குவம் வந்ததும் தம் திருமகளார்க்குத் திருமணம்புரிய விரும்பித் தக்க வரன் தேடப் புகவும்—"திருவரங்கத்துப் பெருமானுன அழகிய மணவாளனையன்றி மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று மறுத்து நின்ற இவரது வைராக்கிய மிகுதியைக் கண்டு பெருங்கவலையுற்ற ஆழ்வார் கனவிலே திருவரங்கச் செல்வர் தோன்றி—தாம் நேரே கைப்பற்றிக் கொள்ளுமாறு தம் கோயிற்றிரு முற்றத்திற்கு அவர் தம் திருமகளை அழைத்து வரும்படி அவர்க்கு ஆஞ்ஞாபித்து மறைந்தருளினர். ஆழ்வாரும் பேருவகை பூத்து, அத்திருவாணைப்படியே கோதையாரைப் பரிவாரங்களுடன் மணக்கோலமாகத் திருவரங்கப் பெருநகர்க்கு அழைத்துக் கொண்டு சென்று அழகியமணவாளன் திருமுன்பு நிறுத்த, அவ்வெம்பெருமானும் வரவேற்று ஆழ்வார் திருமகளாரைப் பெரு விருப்புடன் அங்கீகரித்தருளித் தன்னுள் ஐக்கியமாக்கிக் கொண்டருளினன்.

இவ்வரிய நிகழ்ச்சிக்குப் பின் பெரியாழ்வார் தம்மூரேற எழுந்தருளித் தம் அருமைப் பெண் கொடியின் பெரும் பிரிவுக்கு ஆற்ருது வருந்தினராயினும் பெருமான் அவளைப் பேணிக் கொண்டருளியதற்கு

உவந்து, முன்போல் திருமால் கைங்கரியங்களைப் புரிந்து வந்தனர்—என்பதே.

இனி, **திவ்யசூரி சரிதம்** கூறும் இப்பெரியார் வைபவத்துள் அவர் திருமண வரலாறுகளாக உள்ளவை முழுதும் ஏனைய குருபரம்பரைகளிற் காணப்படாதனவும், அரியசெய்தி பல கொண்டனவுமாகும். அந்நூலின் 12-ம் அத்தியாயத் தொடக்கத்திற் கூறப்படுவன வருமாறு:—

"இப்படியிருக்கும்போது, விதவானன ஸ்ரீவிஷ்ணுசித்தர் தம் புத்திரியின் யௌவனதசையையும் அவளுக்கு எம்பெருமானிடத்துள்ள அநுராகத்தையும் நன்றாய் ஆலோசித்துப் பார்த்து, ஸர்வேசுவரனான பகவானுக்கே அவளைப் பாணிக்கிரகணம் பண்ணிக் கொடுக்கவேண்டும் என்று எண்ணிக் கொண்டு, **பெரியவரான ஸ்ரீ சடகோபரின் அநுமதியின்படி அவர்** திருமுன்பே ஸ்ரீ கோதையின் பாணிக்கிரகண மஹோத்ஸவத்தை நடத்த வேண்டும் என்ற திருவுள்ளமுடையராய், பாண்டிய தேசாதிபதியான **வல்லபதேவன்** என்னும் பெயருடைய தம் சிஷ்யனுடனும் புத்திரி கோதையுடனும் குருகை நகரத்தை யடைந்து, அவ்விடத்தில் ஜ்யேஷ்டராய் எழுந்தருளியிருக்கின்ற **வகுளாபரணரின் திருவடிகளில் சந்தோஷத்துடன் அம்மூவரும் தண்டன் ஸமர்ப்பித்தனர்.** உடனே வகுளாபரணரும் கருணைக் கடலாகிய தமது கண்களால் ஸ்ரீ கோதையைக் கடாக்ஷித்தனர்.

பின்பு வகுளாபரணர் தாம் திருவாய்மலர்ந்தருளிய திராவிடஸூக்திநிபந்தனத்தைக் கேட்பதில் ஆசையுள்ளவர்களாய் அங்குவந்து, உறங்காப்புளிக் கொம்புகளின் நடுவில் வீற்றிருக்கின்றவர்களான அர்ச்சாவதார எம்பெருமான்களையும் பிரமேந்திராதிதேவர் குழாத்தையும் கண்டனர். பின்பு அவ்வகுளாபரணரிடத்தில் வந்திருக்கும் **பொய்கையார், பூதத்தார், பேயார், பக்திசாரர், தொண்டரடிப் பொடிகள் குலசேகரர், மதுரகவிகள்** என்ற இவர்களிடஞ்சென்று,

அவர்கள் ஒருவர்க்கொருவர் செய்துகொள்ளும் வந்தன மகோத்ஸவத்தைக் கண்டு களித்தனர்.

வகுளாபரணரைக் கண்டதும் பொய்கைமுதலிய பக்தர்கள் பராங்குசருடைய பாதாரவிந்தங்களில் பக்தியுடன் வீழ்ந்து வணங்கி, அப்பராங்குசர் அருளிச் செய்த திவ்யப் பிரபந்தங்கள் நான்கையும் கேட்டபின், தாங்கள் செய்தருளிய பிரபந்தங்களையும் ஸ்ரீ பராங்குசாரிடம் விண்ணப்பஞ் செய்து கொண்டனர்.

"பின்பு, சடகோபர், பொய்கையார்முதலிய பக்தகணங்களுடன் ஸ்ரீகோதை திருவாய்மலர்ந்தருளிய ரஸபரிதமான இரண்டு பிரபந்தங்களையும் கேட்டுவிட்டு ஸ்ரீ கோதையின் யௌவன தசையையும் அவளது தீனதசையையும் அவள் எம்பெருமானிடத்தில் ஈடுபட்டிருப்பதையும் கண்டானந்தித்தனர்.

உடனே சடகோபர் சுயம்வரம் அமைத்து ஸ்ரீகோதையை அர்ச்சாவதார எம்பெருமான்களிற் சிறந்த வரனுக்கே விவாகஞ் செய்து கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் சுயம்வரங்கோடிக்கும் பொருட்டு வல்லப ராஜனையும் மதுரகவிகளையும் நியமித்தனர்." எனக் கண்டு கொள்க.

இங்ஙனம் நிகழ்ந்த சுயம்வரத்தில், கோதை திருவரங்கச்செல்வரான அழகியமணவாளனையே தன் நாயகனுகவரித்துத் திருமணம் புரிந்ததும், அம்மண வாளனுடன் கோதை மணக்கோலமாகத் திருவரங்கம் நோக்கிப் பரிவாரங்கள் சூழச் செல்லும் இடைவழியிலே, களவுத்தொழிலில் முனைந்துநின்ற திருமங்கை மன்னன் அவர்களை வழிமறித்துநின்று தம் வாள்வலியால் மந்திரோபதேசம் பெற்றதுமாகிய செய்திகள் மேற்படி திவ்யசூரிசரிதத்தில் காவியமுறைக்கேற்பப் பலபடப் புனைந்தும் விரிவாகவும் கூறப்பட்டுள்ளன. இவையே

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியைப் பற்றி முன்னூல்களிற் கண்ட சரித்திரச்சுருக்கமாகும்.

**கோதா** என்பது வாக்கை உதவுபவள் என்னும் பொருள்படுவதாம்.[1] "(பெரியாழ்வார்) தம் குழந்தை எம்பெருமான் விஷயத்தில் வாக்கைச் செலவிடப் போகிறாள் என்று நினைத்தே அதற்கிசைந்தபடி தம் பெண்ணுக்குப் பெயரிட்டனரோ என்று உலகம் நினைக்குமாறு நல்ல சுபமுகூர்த்தத்தில் **கோதா** என்று பெயரிட்டனர்" என்று திவ்யசூரிசரிதம் கூறுவதும் அறியத்தக்கது.

கோதைப்பிராட்டிக்கு ஆண்டாள், நாய்ச்சியார் என்ற திருநாமங்களும் பிரபலமாக வழங்கின. இப்பெரியாள் இயற்றியருளிய திவ்யப் பிரபந்தங்கள்—திருப்பாவையும் நாய்ச்சியார் திருமொழியுமாகும். இவை, பெரியாழ்வார் திருமொழியையடுத்து நாலாயிர திவ்யப் பிரபந்தத்துள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆண்டாளது இவ்வருளிச்செயல்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்யுமிடத்து மிகவும் அழகியசெய்திகள் சில வெளியாகின்றன. இப்பெரியாரது திருமொழியில் உள்ள நூற்று நாற்பத்து மூன்று பாசுரங்களிலும் திருமாலையே தமக்குரிய மணவாளனாக வரித்துக் கொண்டு அப்பெருமானிடங் காட்டும் இவரது பிரேமைப் பெருக்குத்ததும்பிநிற்பதைக் காணலாம்.

ஆண்பாலரான மற்றை ஆழ்வார்களும தம்மை நாயகியராகவும் திருமாலை நாயகனாகவுங்கொண்டு

---

1. கோதா என்பது சாமவேத சாகையொன்றன் ஆசிரியரான பெண்பாலார் ஒருவர்க்குப் பெயராயுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (**Sir Monier William's Sanskrit - English Dictionary, p. 368**)

பாடிப் போந்தனராயினும், அவர்கள் கொண்ட நாயக நாயகீபாவம் அநுகாரமேயாதலின் இயற்கையானதன்று என்றும், அதனால் அன்னோர் திருமாலிடஞ் செலுத்திய அன்பு மேட்டுமடைநீர்போன்றதென்றும், ஒன்றையும் அநுகரியாமல் பெண்பாலராய்ப் பிறந்து அழகியமணவாளனையே தம் நாயகனாக வரித்துக்கொண்டு அவனிடம் உள்ளுருகிச் செலுத்தும் இவரது இயற்கைக் காதற்பெருவெள்ளம் பள்ளமடைநீர்போன்றதென்றும் பெரியோர்கள் எழுதிய கருத்து ஈண்டு அறியத்தக்கது.

திருமாலை அடையவேண்டித் தைமாதந்தொடங்கிப் பங்குனிவரை காமதேவனைக்குறித்துத் தாம் நோற்கும் நோன்பைப் பற்றி விரிக்குமிடத்தே இப்பிராட்டியார்—

வானிடை வாழுமவ் வானவர்க் கென்று
மறையவர் வேள்வியில் வகுத்தவவி
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து
கடப்பது மோப்பதுஞ் செய்வதொப்ப
ஊனிடை யாழிசங் குத்தமர்க்கென்
றுன்னித் தெழுந்தவென் தடமுலைகள்
மானிடவர்க் கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே''

தொழுதுமுப் போதுமுன் னடிவணங்கித்
தூமலர் தூய்த்தொழு தேத்துகின்றேன்
பழுதின்றிப் பாற்கடல் வண்ணனுக்கே
பணிசெய்து வாழப் பெறுவிடில்நான்
அழுதழு தலமந் தம்மா வழங்க
ஆற்றவு மஃதுனக் குறைக்குங் கண்டாய்
உழுவதோ ரெருத்தினை நுகங்கொடு பாய்த்து
ஊட்டமின் றித்துரந் தாலொக்குமே''

என்று இத்தகைய பாசுரங்களால், அக்காமனை விளித்துத் தம் நிலைமைகளை அவன்பால் முறையிடும் அழகு அறிந்து மகிழ்தற்குரிய தாம். "யாண்டீ ராறதில் எழிற்காம னேன்பொடு" என்ற பன்னிருபாட்டியல் விதிப்படி (182), முற்காலத்தே கன்னியர் தம் பன்னிரண்டாம் வயதிற் காமனேன்பு நோற்றுவந்த செய்தி புலனாகும். அம்முறையே, ஆண்டாளும் மணஞ் செய்தற்குரிய தம் இளம்பருவத்தே இந்நோன்பைக் கைக்கொண்டு நடத்திப் போந்தனரென்று கருதல் பொருந்தும். இங்ஙனமே, சுரமஞ்சரி என்ற நங்கை சீவகனை விரும்பி—

**" தாமரைச் செங்கட் செவ்வாய்த் தமனியக் குழையினாயோர்**
**காமமிங் குடையேன் காளை சீவக னகலஞ் சேர்த்தின்**
**மாமணி மகர மம்பு வண்சிலைக் கரும்பு மான்றேர்**
**பூமலி மார்ப வீவல் ஊரொடும் பொலிய வென்றாள் "**

என்று கூறி மன்மதனை வேண்டியவாறே (சீவக. 2057),

**" சுவரிற் புராணநின் பேரெழுதிச்**
**சுறவநற் கொடிகளுந் துரங்கங்களும்**
**கவரிப் பிணாக்களுங் கருப்பு வில்லும்**
**காட்டித்தந்தேன் கண்டாய் காமதேவா**
**அவரைப் பிராயந் தொடங்கி யென்றும்**
**ஆதரித் தெழுந்தவென் தடமுலைகள்**
**துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்**
**தொழுதுவைத்தே னொல்லை விதிக்கிற்றியே."**

என்று ஆண்டாள் வேண்டுதல் ஒப்பிடத் தக்கது. இங்ஙனமே,

" பதுமா பதியெனும் பைந்தொடிக் கோமகள்
கன்னி யாயந் துன்னுபு சூழ
மதிற்புறங் கவைஇய புதுப்பூங் காவின்
மகர வெல்கொடி மகிழ்கணைக் காமற்கு
நகரங் கொண்ட நாளணி விழவினுள்
எழுநா டோறுங் கழுமிய காதலொடு
வழிபா டாற்றிய போதரு மின்றென "

(பெருங்கதை 3, 5, 27—33).

என்றபடி, பதுமாபதி என்னும் பெண்மணி உதயனனை அடைய விரும்பிக் காமனை நோற்றவரலாறும் முன்னூல்களால் அறியலாம். இம்முறையே, நம் கோதையார் தாம் நோற்ற நோன்பைக் கூறுமிடத்தும், "மதுராபதிக் கொற்றவன் வரிற் கூடிடு கூடலே" என்று கூடலிழைத்துக் குறியறியுமிடத்தும், மாயவன்றன்னை மணஞ்செயக் கண்ட தூயநற் கனவைத் தோழிக்கு உரைக்குமிடத்தும், மற்றும் அவன் பாலசரிதங்களில் ஈடுபட்ட விடத்தும் பாடிய பாசுரங்களும், எம்பெருமான் தமக்கு உரியகாலத்தே வந்தருளாமையால்—

"ஒளிவண்ணம் வளைசிந்தை யுறக்கத்தோ டிவையெல்லாம்
எளிமையா விட்டென்னை யீடழியப் போயினவால்
குளிரருவி வேங்கடத்தென் கோவிந்தன் குணம்பாடி
அளியத்த மேகங்காள் ஆவிகாத் திருப்பேனே"

"[1] கோங்கல ரும்பொழில் மாலிருஞ் சோலையிற் கொன்றைகண்மேல்
தூங்குபொன் மாலைக ளோடுட னாய்நின்று தூங்குகின்றேன்

---

1. இப்பாசுரத்தின் **முன்னிரண்டடிக்கும்**—"கொன்றை மாலை யாகையாலே அழகர்க்கு ஆகாது; அதுதான் திருமலையில் உள்ளதாகையாலே சைவர்கள் புகுந்து பறித்துக்

**பூங்கொள் திருமுகத்தின் மடுத்தூதிய சங்கொலியும்**
**சார்ங்கவில் நாணொலியுந் தலைப்பெய்வதெஞ்**
**ஞான்றுகொலோ."**

என்றிவ்வாறு தாம்படுகின்ற துன்பநிலைகளைக் கூறும் பாசுரங்களும், பெருமானிடத்தில் இவர் நேரே கொண்டிருந்த கரைபுரண்ட காதற் பெருக்கைக் காட்டக் கூடியன.

தம் திருமகளாரின் இத்தகைய மனநிலையை நோக்கியே பெரியாழ்வாரும—

---

கொள்ளார்கள்; ஆக இரண்டிடத்துக்கும் ஆகாதே கிடந்து நாலுமாடோலே, தம்மோட்டை ஸம்பந்தமே ஏதுவாகப் பந்துக்களுக்கும் ஆகாதே, தாமும் அங்கீகரிக்கப் பெறுதே, நடுவே நின்று தடுமாறு நின்றேன்" (ஈடு, 6, 7, 6 ஜீயரரும் பதம்) என்றும்,

**பின்னிரண்டடிக்கும்**—"இரண்டவதாரத்தில் இரண்டு பிராட்டிமார்க்கு உதவினது தனக்கொருத்திக்குமே வேண்டும்படி ஆய்த்து, இவள் (ஆண்டாள்) தசை.

சிசுபாலன் ஸ்வயம்வரார்த்தமாக (வந்து தன்னைக் கைப்பற்ற) ஒருப்பட்ட சமயத்திலே புறச்சோலையிலே (கண்ணனது) ஸ்ரீபாஞ்சஜந்யகோஷமானது வந்து செவிப்பட்டுத் தரிப்பித்தது ருக்மிணிப் பிராட்டியை.

இராவணன் மாயா சிரஸ்ஸைக் காட்டினபோது (இராமபிரானது) ஸ்ரீ சார்ங்கத்தின் ஜ்யாகோஷம் (நாணொலி) ஆனது வந்து செவிப்பட்டுத் தரிப்பித்தது ஸ்ரீ ஜனகராஜன் திருமகளை.

இரண்டவதாரங்களில் உள்ளவையும் சேர மடுத்தொலிக்கும்படி வேண்டும்படி ஆய்த்து இவள்விடாய்; அவர்கள் அளவல்லவாயிற்று இவளது ஆற்றாமை" (பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம்) என்றும் எழுதிய பெரியோர்களின் உரைநயங்கள் ஈண்டு அறிந்து மகிழத்தக்கன.

" நாடுமூரும் அறியவேபோய் நல்ல துழாயலங்கல்
சூடிநாரணன் போ.பிடமெல்லாஞ் சோதித்
துழிதருகின்றான்
கேடுவேண்டுகின் றார்பலருளர் கேசவ னோடிவளைப்
பாடிகாவ லிடுமினென்று பார்தடு மாறினதே."

" காறைபூணுங் கண்ணாடிகாணுந் தன்கையில் வளைகுலுக்கும்
கூறையுடுக்கு மயர்க்குந் தன்கொவ்வைச் செவ்வாய்
திருத்தும்
தேறித்தேறிநின் றாயிரம்பேர்த் தேவன் திறம்பிதற்றும்
மாறின் மாமணி வண்ணன்மேலிவள் மாலுறுகின்றாளே."

" கைத்தலத்துள்ள மாடழியக் கண்ணாலங்கள் செய்திவளை
வைத்துவைத்துக்கொண் டென்னவாணிபம் நம்மை
வடுப்படுத்தும்"

" பெருப்பெருத்த கண்ணாலங்கள் செய்து பேணிநம்
மில்லத்துள்ளே
இருத்துவா னெண்ணி நாமிருக்க இவளுமொன்
றெண்ணுகின்றாள்"
(பெரியாழ்வார் திருமொழி, 3, 7.)

என்பன போன்ற பாசுரங்களால் உயர்வும் உருக்கமும் பெறப் பாடுதல் காணலாம். ஆண்டாளும், அழகிய மணவாளனையன்றி வேறு "மானிடவர்க்கென்று பேச்சுப் படில் வாழகில்லா'த் தம் நிலைமையைக் கூறி வரும் போது—

"குமரனார், சொல்லும் பொய்யானால்
நானும் பிறந்தமை பொய்யன்றே"
(நாய்ச்சியார் திருமொழி, 10. 4.)

"திருவரங்கச் செல்வனார், பேசியிருப்பனகள்
பேர்க்கவும் பேராவே." (ஷை, 11, 8.)

" நல்லவென் தோழி! நாகணைமிசை நம்பரர்
செல்வர் பெரியர் சிறுமானிடவர்நாஞ் செய்வதென்
வில்லி புதுவைநகர் விட்டுசித்தர் தங்கள் தேவரை
வல்லபரிசு வருவிப்பரேல் அது காண்டுமே.''

(ஷை, 10, 10.)

" செம்மை யுடைய திருவரங்கர் தாம்பணித்த
மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்
தம்மை யுகப்பாரைத் தாமுகப்பா ரென்னுஞ்சொல்
தம்மிடையே பொய்யானுற் சாதிப்பா ராரினியே'' (11, 10.)

என்பனவற்றால், தம்மிடமும் தந்தையாரிடமும் திருவரங்கப்பெருஞ் செல்வர் தம்மைக் கைக்கொள்வதாக மெய்ம்மைப் பெருவார்த்தை கூறியிருப்பதையும், அவ்வாறு கூறியதையும் மறந்து இதுவரை தம்மைக் கொண்டருளாமையால் அப்பெருமான் திருவாக்கும் பொய்ப் படுவதையும், பெருந் தெய்வமாகிய அவர் சிறுமானிடராகிய தம்மைப் பொருட்படுத்தாமற் போயினும், தம் மெய்யடியாரும் மெய்ந்நாவருமாகிய தந்தை விஷ்ணு சித்தரை அவர் புறக்கணிக்க முடியாதாதலின், அவர் வாயிலாக அவ்வழகிய மணவாளனைத் தாம் அடைவது திண்ண மென்பதையும் கூறியிரங்குதல் அறியத் தக்கது. இதனுல், பெருமானைக் கட்டுப்படுத்தற்குத் தமது பரமபத்தியாகிய பாசத்தளை மட்டுமன்றித் தம் திருத்தந்தையாரின் புருஷகார பலமும் ஆண்டாளுககுப் பேருதவி புரிவதாயிற்று என்பது நன்கு தெரியலாம்.

ஆகவே. பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்மணியான இவர், எவ்வகையும் பெருமானுல் உவந்து அணிதற்குரிய பேரணிகலமாயினர் என்க. திருவரங்கப் பெருமானுர் தம் திருமுன்பு வரவழைத்து அத்திருமகளாரை விரும்பிக் கைக் கொண்டருளிய பின்பு. விஷ்ணு

சித்தர் தம் அருமைப் பெண்ணமுதின் பிரிவுவருத்த ஆற்றுமல்—

" நல்லதோர் தாமரைப்பொய்கை நாண்மலர்மேற் பனிசோர
அல்லியுந் தாது முதிர்ந்திட் டழகழிந்தா லொத்ததாலோ!
இல்லம் வெறியோடிற்றுலோ! என்மகளை எங்குங்காணேன்!
மல்லரை யட்டவன் பின்போய் மதுரைப்புறம் புக்காள்
கொல்லோ!

" ஒருமகள் தன்னையுடையேன் உலகம்நிறைந்த புகழால்
திருமகள் போலவளர்த்தேன் செங்கண்மால்தான்
கொண்டுபோனன்"

" வேடர் மறக்குலம்போல வேண்டிற்றுச் செய்தென்மகளைக்
கூடிய கூட்டமேயாகக் கொண்டுகுடி வாழுங்கொலோ
நாடும் நகருமறிய நல்லதோர் கண்ணாலஞ்செய்து
சாடிறப் பாய்ந்தபெருமான் தக்கவாகைப் பற்றுங்கொலோ"

" அண்டத் தமரர்பெருமா னாழியான் இன்றென்மகளைப்
பண்டப் பழிப்புக்கள் சொல்லிப் பரிசற ஆண்டிருங்
கொல்லோ"

(பெரியாழ்) திருமொழி, 3, 8.

என்றிவ்வாறு பலபடியாகவும் புலம்புகின்ற பாசுரங்கள் எல்லா வுள்ளங்களையும் ஒருங்கே உருக்கக் கூடியன.

ஆழ்வார் திருமகளார் தமமைக் கண்ணனுகந்த கோபியருள் ஒருவராகவே அநுகரித்துக் கொண்டு காதல் பெருக்கிப் போந்தவராதலின், அவரை அத் தகையராகவே கருதி ஆயர்குலத்துத் தாயர்கூற்றாக அவர் திருத்தமப்பனார் இங்ஙனம் பாடியது ஏற்புடைத் தாதல் காண்க. 'ப்ராஹ்மணோத்தமரான பெரியாழ் வாருந் திருமகளாரும் கோபஜன்மத்தை ஆஸ்தானம்

யண்ணினுர்கள்'' என்று பெரியோர்கள் எழுதிய ஸ்ரீவசன பூஷணரும் இங்கு அறியத்தக்கது.

இங்ஙனமாக எம்பெருமானுல் ஆண்டாள் அங்கீ கரிக்கப் பெற்ற பின்பு, வில்லிபுத்தூரேறச் சென்று முன்போலவே திருமால் கைங்கரியபரராய் நெடுங்காலம் வாழ்ந்து வந்த பெரியாழ்வார், தம் நிலைமையைக் குறித்து—

''தோட்டமில்லவள் ஆத்தொழு ஓடை
துடைவையுங் கிணறும் இவையெல்லாம்
வாட்ட மின்றியுன் பொன்னடிக் கீழே
வளைப்பகம் வகுத்துக்கொண் டிருந்தேன்''
(பெரியாழ், திருமொழி. 5, 1, 5).

என்று அருளிச் செய்யும் பாசுரத்திலே, தம் திரு மகளாரைப்பற்றி அவர் ஒன்றுங் குறிப்பிட்டனரில்லை. இதனுலும், ''ஒரு மகள் தன்னையுடையேன்...... செங்கண்மால்தான் கொண்டுபோனுன்'' என்றதனுலும், பெருமாள் ஆண்டாளை அங்கீகரித்துக்கொண்ட காலத்துக்கும் பின்பே, தம் திருமொழியை அப்பெரியார் பாடியவர் என்பது பெறப்படுகின்றது.

இவற்ருல், ஆண்டாள் வைபவங்களாகக் கூறப் படுவனவற்ருேடு, அவருடையனவும் அவர் திருத்தந்தை யாருடையனவுமாகிய பாசுரங்கள் எவ்வளவு தூரம் ஒற்றுமைப்பட்டுள்ளன என்பது நன்கறியலாகும்.

இனி, ஆண்டாள் அருளிய மற்ருெரு பிரபந்தமாகிய திருப்பாவைப் பாசுரங்கள் முப்பதும், கோகுலத்து ஆயர்குலமகளிர் மார்கழி நீராட்டத்தின் பொருட்டு வைகறைக்குமுன்பே எழுந்து தத்தம் தோழியர்

மணைகளின் வாயிற்கடைகளிலே நின்று துயிலெழும்படி அவர்களைப் பலபடியாகவும்வேண்டி அழைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன என்பது யாவரும் அறிவர்.

இம்மார்கழி நீராட்டம், கோகுலத்து ஆயர்குலத்து இளம்பெண்கள் கண்ணபிரானைத் தாங்கள் நாயகனாக அடையவும் நாடுசெழிக்கவும்வேண்டிப் **பாவை நோன்பு** நோற்ற காலத்து நடத்தியதாகும்.

**பாவை நோன்பு** என்பது கன்னிப் பெண்களால் மார்கழிமாதத்திற் றொடங்கப்பெற்று அம்மாதத்துப் பௌர்ணிமையோடு முடிக்கப்பெறும் ஒரு விரதமாம்.

நல்ல நாயகரை அடையவும் நாடு செழிக்கவும் காத்தியாயனீதேவியை நோக்கிக் கன்னியரால் இந் நோன்பு அம்மாதத்தே நடத்தப் பெறுவதென்பதும், சங்கநாளிலே சாந்திரமான முறைப்படி **தைந்நீராடல்** என்ற பெயர்பெற்று வழங்கிவந்ததென்பதும், மலையாள நாட்டாரால் **திருவாதிரைத் திருவிழா** என்றும், சைவரால் **ஆருத்திராதரிசனம்** என்றும் கொண்டாடப்படுந் திருநாள் இவ்விரதமுடிவு தினமே என்பதும் பிறவும் நான் **செந்தமிழ்ப்**பத்திரிகைமுதலியவற்றில், 'மார்கழி நோன்பாகிய தைந்நீராடல்' என்ற தலைப்பெயரின் கீழ் நன்கு விளக்கியுள்ளேன்.[1]

இவ்வாறு ஆய்ச்சியர் மார்கழிநோன்பு நோற்ற முறையை ஆண்டாள் தம் காலவழக்குக்களுடன் கொண்டு மொழிந்து பாடியவற்றுள், அடியில்வரும் 13-ஆம் பாசுரம் ஆராய்ச்சிக்கு உரியதாகின்றது:—

---

1. *ஹரிசமய திவாகரம் தொகுதி-4, பகுதி-12.*

"புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா வரக்கனைப்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைக ளெல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்றுப்
புள்ளுஞ் சிலம்பின்காண் போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே
பள்ளிக் கிடத்தியோ பாவாய்நீ நன்னாளால்
கள்ளந் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்"எனக்காண்க.

"உடனொத்த கன்னியரெல்லாம் மார்கழி நீராடுதற்குரிய களத்தை அடைந்து விட்டனர்; வெள்ளி எழுந்து வியாழனும் உறங்கியது; புட்களும் சத்திக்கலாயின; இங்ஙனமாகவும், இன்னும் இந்த நன்னாளில் பள்ளியிற் கிடக்கலாமோ? பெண்ணே! துயிலெழுந்து எம்முடன் வருக"—என்பது இதன் கருத்து. திருப்பாவை முதற் பாட்டில்—

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ"

என்ற ஆண்டாள் தொடங்குதலால், மார்கழி மாதத்தே மதிநிறைந்த நாளான பௌர்ணிமையன்று அதிகாலையில் அத்திருநாளின் நீராட்டம் நடைபெறுவ தென்பது பெறப்படும். சங்கப்புலவராகிய நல்லந் துவனாரும்—

[1]"ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாயிருந் திங்கள் மறுநிறை யாதிரை

* * *

அம்பா வாடலி னாய்தொடிக் கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்
பனிப்புலர் பாடி" (பரிபாடல், 11.)

1. ஞாயிறு தெருத கடைமாரியையுடைய மார்கழி மாதத்துத் திங்கள் மறுவொடு நிறைந்த திருவாதிரைநாளின்

என்று : இந் நோன்பு நிகழும் காலத்தைக் குறிப்பிடுதல் தெரியலாம். இம்மார்கழி நீராட்டின் பொருட்டுக் கோகுலத்து ஆயர்குலமகளிர் துயிலெழுந்து யமுனைத் துறைக்குச் சென்றதையும், அக்காலத்துக் கண்ண பிரான், அவர்கள் கரையில் வைத்த ஆடைகளையெல் லாம கவர்ந்து குருந்தமரத்தில் ஏற, அம்மகளிர் வந்து தத்தந் துகில்களைத் தருமாறு பெருமானைப் பிரார்த் தித்ததையும் கொண்டு கூறுமிடத்தே—

**" கோழி யழைப்பதன் முன்னங்**
**குடைந்துநீ ராடுவான் போந்தோம்**
**ஆழியஞ் செல்வ னெழுந்தான்...........**
**துகிலைப் பணித்தருளாயே''**

(நாய்ச். திருமொழி, 1).

என்றும், தாயே காமனோன்புக்காக நீராட்டம் நிகழ்த்தி யதைக் கூறுமிடத்தே—

**"வெள்ளை நுண் மணற்கொண்டு தெருவணிந்து**
**வெள்வரைப்பதன்முன்னந் துறைபடிந்து''** (ஷை, 1, 2).

என்றும் பாடியருளுதல் அறியத்தக்கது. இவற்றால்' கோழி, கூவுதற்கும் கிழக்கு வெளுப்பதற்கும் முன்பே நீராடித் தங்கள் நோன்புச் சடங்குகளை வைகறையில் முடித்து விடுவதே மகளிரது பழைய வழக்கென்பது நன்கு தெரியலாம். அஃதாவது—காலை 4-மணிக்கு முன் எழுந்து 5-மணிக்குள் அந்நீராட்டமும் நோன்பும் முடி வுறும் என்க.

---

**கண்**...அம்பா வாடலை (தைந் நீராடலை) உடைய கன்னியர் சடங்கறிந்த முதுபார்ப்பனிமார் நோற்கும் முறையை காட் டப் பனியையுடைய புலர்தற்கண் ஆடி" என்பது **பரிமேலழக ருரை.**

" கீழ்வானம் வெள்களென் றெருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண்'' (8)

" வந்தெங்குங் கோழி யழைத்தனகாண் மாதவிப்
பந்தர்மேற் பல்காற் குயிலினங்கள் கூவினகாண்'' (18)

" புள்ளுஞ் சிலம்பினகாண் புள்ளரை யன்கோயில்
வெள்ளை விளிசங்கின் பேரரவங் கேட்டிலையோ'' (6)

" வெள்ளத் தரவிற் றுயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள வெழுந்து அரீஇ என்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.'' (6)

என்பவற்றால், கீழ்வானம் வெளுப்பதும், கோழியழைப்பதும், பறவைகள் கூவுவதும், முனிவரும் யோகிகளுந் துயிலெழுந்து ஹரி முழக்கிடுவதும் ஆகிய விடிதற் குறிப்பு நிகழ்வதைச் சுட்டி, அவை நிகழ்வதற்கு முன்பே விரத நியமத்தை முடிக்கவேண்டி மகளிர் விரைதல் கூறப்படுதலின், 5-மணிக்குப் பின்பும் மகளிர் நீராட்டமும் நோன்பும நடந்தன ஆகா. அவ்வாறாயின், நித்தியமாகத் துயிலுணர்ந்து நீராடுதற்குரிய நேரமே நைமித்திகமாய்ச் சிறந்த இந்நோன்பின் நீராட்டத்துக்குங் கொள்ளவேண்டுதலின் அது பொருத்தமற்றதென்க.

இங்ஙனம் வைகறைக்கு முன்பே துயிலெழுந்து நீராடுவதைக் குறிப்பிடும் மேற்குறித்த 13-ம் திருப்பாவைப் பாசுரத்துள்—

" பிள்ளைக ளெல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்றுப்
புள்ளுஞ் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்',

என்று கூறுநின்றார், நம் கோதைப் பிராட்டியார். அதி காலையில் சுக்கிரோதயத்தைக் கண்டு நீராடுவதோ

பிரயாணமோ நிகழ்த்துதல் எக்காலத்தும் நடைபெற்று வந்த வழக்கேயாம்.

" வெள்ளியு மிருவிசும் பேர்தரும் புள்ளும்
உயர்சினைக் குடம்பைக் குரலேற் றினவே" (புறநா. 397).

" வெள்ளி தோன்றப் புள்ளுக்குர லியம்பப்
புலரி விடியற் பகடுபல வாழ்த்தி " (ஷை, 385).

" மதிநிலாக் கரப்ப வெள்ளி யேர்தர...
பொறிமயிர் வாரணம் பொழுதறிந் தியம்ப" (ஷை, 398).

" விளக்குறு வெள்ளி முளைத்துமுற் றோன்ற...
தெளித்தலைத் தெண்ணீர் குளித்தன ளாடி"
பெருங்கதை. (1, 53, 81).

" வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்" (பொருந. 72).

என்று இவ்வாறு பழங்காலத்தும் விடிவெள்ளியின் உதயங்கண்டு நன்மக்கள் வேண்டிய காரியம் நடத்தி வந்தனர் என்பது தெரியலாம்.

ஆனால், ஆண்டாளோ, அவ்வாறு 'வெள்ளி யெழுந்து' என்றதுடன் நில்லாது 'வியாழம் உறங் கிற்று' என்று, வேறு கிரகத்தின் நடை யொன்றையுஞ் சேர்த்துப்பாடுதல் காணலாம்.

மார்கழி மாதத்துப் பௌர்ணிமையில் விடிவதற்கு முன் சுக்கிரோதயம் நிகழ வேண்டுமென்ற நியதியே யில்லை. அம்மாதத்து வைகறைகளிலே வெள்ளி எழுவது, சிலவாண்டுகள் நேர்ந்தும் இடையிட்டும் உண் டாகக்கூடிய நிகழ்ச்சியேயன்றி ஒரு முறைக்கு உரிய தன்று: அவ்வாறிருக்க, அவ்வெள்ளி ஒருபுறம் உதய மாக மறுபுறம் வியாழம் அஸ்தமித்ததென்று கோதை யார் குறிப்பிட்டுக் கூறலாயின ரெனின், அஃது அவர்

காலத்து நிகழ்ந்த ஒரு விசேட சம்பவமே என்று கொள்ளத் தடையுண்டோ?

ஆகவே மார்கழித்திங்கள் மதி நிறைந்த நன்னாளின் நீராட்டத்துக்காக வைகறைக்கு முன்பே துயிலெழுந்து நக்ஷத்திர கிரகங்களின் சஞ்சாரங்களைக் கண்டு நாழிகை அறியப்போந்த நிலையில், வெள்ளியின் எழுச்சியும் வியாழனது வீழ்ச்சியும் ஒருங்கு நிகழ்ந்திருப்பதை நேரிற்பார்த்து இவ்வாறு பாடலாயினர், அந்நல்லிசைப் புலமை மெல்லியலடியார் என்பது நன்கு பெறப்படும்.

பாண்டியன்கொண்டாடிய பட்டர்பிரான் திருமகளார் என்று தம் பதிகங்களிற் கூறிக்கொள்வதற் கேற்ப இளமையிலே கலைகள் நிரம்பிய நாவின்கிழத்தி நம் கோதையார் என்பதும், உயர்வுநவிற்சியின்றி உள்ளதை உள்ளபடியேபாடும் உத்தமகவியென்பதும் அவர் திருவாக்குக்களால் தெளிய அறியப்பட்டவை. திருப்பாவைப் பாசுரத்திற்கண்ட வெள்ளி வியாழங்களின் உதயாஸ்தமனங்கள், வானநிலையை நேரிற் கண்டு அப்பெரியாராற் கூறப்பட்டதொரு விசேட நிகழ்ச்சியே என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

இனி 'வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று' என்பதில் **எழுந்து** என்பது, 'கோழிகூவிப்பொழுது புலர்ந்தது' என்பதிற்போல உடனிகழ்ச்சிப் பொருளில் திரிந்துவந்தசெயவெனெச்சம் என்பது தெரியலாம். கோழிகூவுதல் பொழுதுபுலர்தற்குக் காரணம் அன்று: அது, பொழுதுபுலர்தலால் ஆகிய காரியமும் அன்று.

மற்று, கோழிகூவுதலும் பொழுதுபுலர்தலும் ஒருசேர நிகழ்ந்தன என்பதே கருத்தாம். அதுபோல இத்தொடரும், வெள்ளியெழுதலும் வியாழ முறங்குதலும் உடனிகழ்ந்தன என்ற பொருளே பயக்கும் என்க.

அஃதாவது—கீழ்த்திசை யடிவானத்தே சுக்கிரன் மக்கள்கண்ணுக்குப் புலப்படும்படி உதயமானவளவில், மேற்றிசையடிவானத்துக் கண்ணுக்குப் புலப்பட்டிருந்த வியாழன் அஸ்தமிக்கலாயிற்று என்பதாம்.

வியாழனுறங்கிச் சில நாழிகைகள்கழித்து வெள்ளி எழினும், வியாழன் உறங்குவதற்குச் சில நாழிகைகளிருக்க வெள்ளி எழினும் அவை உடனிகழ்ச்சி ஆகா என்க.

அவ்வுதயாஸ்தமனங்கள் உடனிகழ்வனவாயின், கீழ்த்திசை மேற்றிசை அடிவானங்களில் இருக்கும் வெள்ளி வியாழங்களுக்கு இடைப்பட்ட தூரவளவு 180-பாகை (degree) ஆகும். சிறிது முன்னும்பின்னுமாக அவற்றின் உதயாஸ்தமனங்கள் நிகழ்ந்தனவாகக் கொண்டாலும் அந்தத் தூரவளவு 165-க்குக் கீழும் 185-க்கு மேலும் ஒருபோதும் போகா. போகுமாயின், சுக்கிரன் எழும்போது வியாழன் அஸ்தமித்துப் பல நாழிகைகள் சென்றதாகவேனும், சுக்கிரோதயத்தில்

---

1. **'மழைபெய்ய நெல்விளைந்தது' என்றாற் போலக் காரணப்பொருளிலேனும், 'நெல்விளைய மழைபெய்தது' என்றாற்போலக் காரியப் பொருளிலேனும், கோழிகூவப் பொழுது புலர்ந்தது' என்றாற்போல உடனிகழ்ச்சிப் பொருளிலேனுமன்றி, வேறுவகையில் செயவெனெச்சம் வாராதென்பதும், ஈண்டு 'வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று' என்பதனுள், எழுந்து என்ற வினையெச்சம் வினை முதல் வினையையன்றிப் பிறவினை கொண்டு முடிந்திருத்தல் வழுவாதலின், வெள்ளியெழ எனச்செயவெனெச்சமாக அதனைத் திரித்தலே முறையாமென்பதும், அம்முறையில் அதற்கு உடனிகழ்ச்சியன்றி வேறு பொருள் அமையாமையும் கண்டு கொள்க.**

வியாழன் அஸ்தமிக்கப் பல நாழிகைகள் செல்லக்கூடிய தாகவேனும் இருக்குமேயன்றி அவ்வுதயாஸ்தமனங்கள் ஒருசேரநிகழ்வன ஆகா. ஆதலின் 'வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று' என்று ஆண்டாள் பாடுவதற்கு இடமே இல்லையாம்.

இவ்வாறு ஒருவருங் கூறுதமுறையில், வெள்ளி வியாழங்களின் உதயாஸ்தமனங்களை ஒருசேரவைத்துக் கோதையார் கூறுதலால், அவை—பெரியாழ்வார்கால மாக மேலே நான் விரிவாக விளக்கிப் போந்த—எட்டாம் **நூற்றுண்டில்** எந்த எந்த வருஷங்களில் நிகழ்ந்துள்ளன என்று தெரிந்துகொள்வது இன்றியமையாதாகின்றது.

சௌரமானப்படி மார்கழிமாதத்தில் சூரியன் தனு ராசியில் தங்குவதாலும், சூரியனுள்ள இடத்திலிருந்து சுக்கிரன் 48-பாகைத் தூரத்துக்குமேற் செல்லுவதில்லை யாதலாலும் அம்மாதத்தில் சுக்கிரன்—துலாம், விருச்சிகம், தனுசு என்ற இராசிகளுக்குள் இருத்தல் வேண்டும்.

மேலும், சுக்கிரனுதயமும் வியாழனஸ்தமனமும் ஒரே காலத்தில் நேர்வதனுல், சுக்கிரன் தங்கும் இராசிக்கு ஏழாமிராசியாகிய மேஷ ரிஷப மிதுனங்க ளொன்றில் வியாழன் இருத்தலும் வேண்டும்.

இந்நிலைமைப்படி, மார்கழிப் பௌர்ணிமை யன்று காலை 5-மணிக்கு முன், 165 முதல் 185 பாகைக்குள் வெள்ளி வியாழங்கள் எதிர்தோன்றும்படி நேர்ந்த நிகழ்ச்சி, பெரியாழ்வாா விளங்கிய 8-ம் நூற்றுண்டிலும் அதற்கு முன்னும் பின்னும்—அஃதாவது 7-முதல் 9-ம் நூற்றுண்டு முடிய—எந்த எந்த வருஷத்தில் உண்டா

யிற்றுஎன்பதை அறியவிரும்பி வானசாஸ்திர அறிஞரான அன்பர்சிலரை[1]உசாவலானேன்.

அன்னோர் என்பொருட்டுப் பெரிதும் சிரமமெடுத்துக் கணித்துக் கண்டு தெரிவித்த காலகுறிப்புக்கள் அடியில் வருமாறு:—

**மார்கழிப் பௌர்ணிமையன்று வைகறையில்**
**வெள்ளியெழ வியாழமுறங்கிய காலம்.**

| நூற்றாண்டு. | கி.பி.ஆண்டு. | மாதந்தேதி. | வியா. வெள். தூரவளவு | மணி. |
|---|---|---|---|---|
| 7 | 600 | நவம்பர் மீ 27வ | 171° | 3-20 |
| ×8 | 731 | டிஸம்பர் மீ 18வ | 177° | 3-50 |
| 9 | 885 | நவம்பர் மீ 25வ | 180° | 5- 8 |
| | 886 | டிஸம்பர் மீ 14வ | 165° | 5-20 |

இக்காலக் குறிப்பிலிருந்து, மார்கழிப் பௌர்ணிமையில் வெள்ளி வியாழங்களின் உதயாஸ்தமனங்கள் 11, 12-வருஷங்கட்கு ஒருமுறை ஒருங்கு நேர்தல் கூடிய

---

1. இவ்வரிய செய்தியை, என் விருப்பத்தின்படி முதன் முதலில் ஆராய்ந்து கணித்துதவியவர், என் அத்தையின் பேரரும்; மஹாவித்வான் ஸ்ரீ. ரா. இராகவையங்கார் ஸ்வாமியின் தமையனார் குமாரரும், இராமநாதபுரம் பிளீடருள் ஒருவருமான **சிரஞ்ஜீவி ஸ்ரீ ஸௌம்ய நாராயணையகார் B. A.,** ஆவர். இவர்க்கும், இவர் கணித்த காலக்குறிப்புக்களை என் வேண்டுகோளின்படி நன்கு ஆராய்ச்சி செய்து, தம்மபிப்பிராயங்கள் அவற்றுடன் பெரும்பான்மை ஒத்து வருதலை, அன்புடன் எழுதியுதவிய ஸ்ரீமான், **K. G. சேஷையரவர்கள்** (Retired High Court Judge, Trivandram.) ஸ்ரீமாந். **K. G சங்கர ஐயரவர்கள், B. A., B. L.,** ஸ்ரீமாந்: **சோமசுந்தர தேசிகர் அவர்கள்** ஆகிய கல்விச்செல்வர்க்கும் யான் பெரிதும் நன்றியறிதற் கடப்பாடுடையேன்.

தாயினும், வக்கிர முதலிய கதிவேறுபாடுகளால் பின்னும் அதிக வருஷங்கள் தள்ளியும் நிகழக்கூடியன என்பது தெரியலாம்.

இனி, மேற்கூறியவாறு பெரியாழ்வார் காலமாகப் பெறப்பட்ட 8-ம் நூற்றாண்டில் 'வெள்ளி யெழுந்து வியாழமுறங்கிய' நிகழ்ச்சி ஒரே முறைதான் வந்துள்ளது. அஃதாவது—731-ஆம் ஸு டிசம்பர்மீ 18உ அதிகாலை 3-50 முதல் 4-வரையுள்ள மணி ஆகும். [வெள்ளி யெழுதற்கு 3-50-மணியும், வியாழமுறங்குதற்கு 4-மணியும் முறையே கொள்க.] 731-ம் ஆண்டுக்கு 131-வருஷங்கட்கு முன் 600-ஆம் ஆண்டினும், இதற்கு 154-வருஷங்கட்குப் பின்பு 885, 886-ஆம் ஆண்டுகளினும், அக்கிரகங்களின் உதயாஸ்தமனங்கள் ஒப்ப நிகழ்ந்திருக்கின்றன.

600-ஆம் ஆண்டை ஆழ்வார் திருமகளார் பாசுரத்துக்குரியதாகக் கொள்வதாயின், அது, முதற்றிருகுதியடியாருள் ஒருவரான திருமழிசைப் பிரான் விளங்கியதும், பெரியாழ்வார் செய்திக் கேற்றவாறு திருமாலடியார்களான பாண்டியரின் ஆட்சி நிகழாததுமான கால விசேடமாகும். அன்றியும் 600-ஆம் வருஷத்து மார்கழிப் பௌர்ணிமையன்று, வெள்ளி யெழுந்து வியாழமுறங்கிய நேரம் 3-மணி 20-நிமிஷமாதலால், நீராட்டத்துக்கு மகளிர் துயிலெழக் கூடிய சமயமாதற்கு அஃது அத்துணையாக ஏற்புடையதுமன்று.

இனி, 885, 886-ஆம் ஆண்டுகள் திருப்பாவைக்கு உரியனவாகக் கொள்வதாயின், அவை, ஆசாரியருள் தலைவரான ஸ்ரீமந்-நாதமுனிகளும் அவர் சிஷ்யர்களும் பிரபலம் பெற்றிருந்த காலவிசேடங்களாகும். அவற்றுள்

னொன்றை ஆழ்வார் திருமகளார்க்குக் கொள்வது சிறிதும் பொருத்தமுடையதன் றென்பது முன்னர்க் குறிக்கப்பட்டது. பின்னரும் அது விரிக்கப்படும். ஆகவே, அவ்விருவகைக் காலங்களிலும் நிகழ்ந்த அவ்வுதயாஸ்தமனங்களே ஆண்டாள் திருவாக்குக் குறிப்பதன் றென்பது திண்ணமென்க.

இனி, எஞ்சிநின்ற 731-ஆம் வருஷத்து மார்கழிப் பௌர்ணிமையன்று, வெள்ளி யெழுச்சியும் வியாழன் வீழ்ச்சியும் அடிவானநாளிற் காணக் கூடியவாறு அதிகாலையில் 3-50—4 மணிக்கு ஒப்ப நிகழ்ந்திருக்கின்றன. இந்நேரம் மார்கழி நீராட்டத்துக்காக மகளிர் துயிலெழுதற்குப் பெரிதும் ஏற்றதேயாகும்.

மலையாள நாட்டில் விசேடமாக நடைபெறும் மார்கழி நோன்பாகிய **திருவாதிரைத் திருவிழாவிலும்,** இளம் பெண்கள் வைகறையில் துயிலெழுந்து நான்கு மணிக்கே நீராடிவிடும் வழக்கம் இன்றும் உள்ளமை காணலாம் அம்முறையில், 'பஞ்ச பஞ்ச உஷத்காலம்' எனப்படும் ஸ்நான ஸமயத்துக்குச் சிறிது முன்னதாகவே துயிலுணர்ந்த ஆண்டாள், தம் கண்ணூரக் கண்ட வானநிலையையே இங்ஙனம் பாடலாயினர் எனல் பெரிதும் பொருந்துமென்க. எனவே, 731-**ஆம் வருஷத்து மார்கழிப் பௌர்ணிமையன்று அதிகாலையே,** சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் திருவாக்கினின்றும் அத்திருப்பாவை அவதரித்த சுபகாலமாகவேண்டும் என்று நாம் கொள்ளத் தடையில்லை. வெள்ளி வியாழங்களின் உதயாஸ்தமனங்கள் அம்மாதத்தில் ஒருசேர நிகழ்ந்து நெடுங்காலமான அருமையை அறிந்து போலும், எல்லாருங் கூறுமுறையில் 'வெள்ளி யெழுந்து' என்றதுடன் நில்லாது, வியாழ முறங்கிற்று' என்று சேரவைத்து **ஆண்டாள்** பாடுவாராயினர் என்க.

இங்ஙனம் முன்னும் பின்னும் ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டுகளாக நிகழ்ந்திராத கிரக நடையொன்றை ஆண்டாள் குறிப்பிட்டுக் கூறுவதும், அது, பெரியாழ்வார் திருவாக்காலும்சாஸன முதலிய கருவிகளாலும் அவரது காலமாகத் தெளியப்பட்ட **எட்டாநூற்றாண்டின் முற்பகுதியாக** அமைந்திருந்ததும் ஈண்டு அறிந்து மகிழத்தக்கன:

ஆண்டாளது அவதாரதினம்—நளஹூ ஆடிமீ சுக்கிலசதுர்த்தசியும் செவ்வாய்க்கிழமையுங் கூடின பூரநக்ஷத்திரம்—என்று குருபரம்பரைகள் சில கூறுகின்றன. இக்காலக்குறிப்பைக் கொண்டு—776-ஆம் ஹூ ஜூன்மீ 25வ அவ்வடியாரது அவதார காலம்—என்று ஸ்ரீமாந்-சுவாமிக்கண்ணுபிள்ளையவர்கள் தம் நூலுட் கணித்திருக்கின்றனர்.

ஆண்டாளுக்கும் மற்ற ஆழ்வார்கட்கும் இவ்வாறு குறிக்கப்பட்டுள்ள வருஷமாசங்களுடன் கூடிய பஞ்சாங்ககாலங்கள், பிற்பட்ட நூல்களிலன்றித் திவ்ய சூரிசரிதம், பின்பழகிய பெருமாள்சீயர் குருபரம்பரைகளிற் காணப்படவில்லை. அவற்றிற் குறிக்கப்பட்டவை—ஆழ்வார்கள் அவதரித்த மாதங்களும் நட்சத்திரங்களுமே ஆகும். சிவனடியார்கட்கும் இங்ஙனமே மாதநட்சத்திரங்களன்றி வேறு வழங்காமை ஒப்பிடத்தக்கது.

ஆகவே, முன்னூல்களிலே ஆண்டாளுக்குக் கூறப்பட்டுள்ள ஆடிமீ பூரநாளுடன், நள வருஷத்தைமட்டும் இங்கே கூட்டிநோக்குமிடத்து, 8-ஆம் நூற்றாண்டிலே—பிள்ளையவர்கள் கணித்த 776-ஆம் வருஷமேயன்றி, அதற்கு முன்—716-ம் வருஷத்து ஆடிப்பூரமும் அப்

பிராட்டியின் அவதார தினமாக கொள்ளக் கூடியதா கின்றது.

இங்ஙனம் கண்ட காலக் குறிப்புக்களை முழுதும் நம்பி ஆழ்வார்களின் அவதாரகாலங்களை நாம் ஒருதலையாகத் துணிதல் கூடாததேயாம். ஆயினும், திருப்பாவை கூறும் வெள்ளிவியாழங்களின் உதயாஸ்தமனங்கள் நிகழ்ந்த காலமாக மேலேபெறப்பட்ட 731-ஆம் ஆண்டைக்கொண்டு நோக்கும்போது, 716-ஆம் வருஷத்துத் திருவாடிப்பூரம், ஆண்டாள் அவதார தினமாவதற்கு மிகவும் ஏற்றதாதல் காணலாம்.

716-ல்அவதரித்த கோதைப்பிராட்டியார் 731-ல் தம் திருப்பாவையை அருளிச்செய்தவராயின், 15-ஆம் பிராயம் அப்போது அவர்க்கு நடைபெற்றது என்பது நன்கு பெறப்படும். அப்பிராட்டி தம் திருமொழியைப் பாடும்போது தக்க பருவத்தினராயிருந்தவர் என்பது—

**" அவரைப் பிராயந் தொடங்கி யென்றும்**
**ஆதரித் தெழுந்தவென் தடமுலைகள்**
**துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்**
**தொழுதுவைத்தே னொல்லை விதிக்கிற்றியே"**
**" ஊனுடை யாழிசங் குத்தமர்க்கென்**
**றுன்னித் தெழுந்தவென் தடமுலைகள்**
**மானிடவர்க் கென்று பேச்சுப்படில்**
**வாழகில்லேன் கண்டாய் மன்மதனே"**

என்று தாமே தெளிவாகக் கூறுதலால் வெளியாகத் தக்கது. இங்ஙனம் ஆண்டாளது திருவாக்காலும் அவரது ஞானமுதிர்வாலும், திருவரங்கச் செல்வரான அழகிய மணவாளன் அப்பிராட்டியை அங்கீகரித் தருளிய காலத்தே 15-திருநட்சத்திரத்துக்கு மேல் நடை

பெறவில்லையென்பது நாம் ஒருவாறு அறியக்கூடியதாகின்றது.

இனி, கருடவாகன பண்டிதரால் அருளிச்செய்யப் பட்ட **திவ்யசூரிசரிதத்தில்**, ஸ்ரீவிஷ்ணுசித்தர் ஆண்டாள் திருமணத்தைப்பற்றி ஆலோசனைபுரியவிரும்பித் தம் திருமகளாருடன் ஆழ்வார்திருநகரி சென்று ஸ்ரீசடகோபருடன் கலந்தனரென்றும், அப்போது குலசேகரப் பெருமாள், தொண்டரடிப் பொடிகள் முதலிய திருமாலடியார்களும் அங்கெழுந்தருளி அளவளாவினர் என்றும், திருமங்கை மன்னன் தம் குலத்தொழிலில் முனைந்து நின்றது அக்காலந்தான் என்றுங்கூறப்பட்ட செய்தி, தொடக்கத்தே எழுதப்பட்டுளது.

இத்திவ்ய சூரிசரிதமோ, பின்பழகியபெருமாள்சீயர் முதலிய பூர்வாசாரியர்களால் பிரமாணகிரந்தமாக எடுத்தாளப்பெற்ற பெருமையுடையதாம். இந்நூல் கூறும் வரலாறுகள்சில பின்வந்த குருபரம்பரைச் செய்திகளோடு மாறுபடுவனவாயினும், அவை ஆளவந்தார் இராமானுசர்நாள்களிற் பிரபலமாக வழங்கிவந்த செய்திகளாகவே கொள்ளத் தடையில்லை.

அதனால், பெரியாழ்வாரும் அவர் திருமகளாரும், நம்மாழ்வார் திருமங்கையார் முதலிய அடியார்கள் காலத்தவர் என்பதே பண்டையாசிரியர்கள் கொள்கை என்பது பெறப்படும். இதற்கு, ஏனையாழ்வார்களின் திருவாக்குக்களும் பிறசாதனங்களும் எத்துணையாக உதவுவன என்பதை அறியவிரும்பித் திருமங்கை மன்னன்விஷயத்தை முதலிற்கொண்டு ஆராய்வேன்.

---

# ஆறும் அதிகாரம்

## திருமங்கை மன்னன்.

இனி, ஆழ்வார்களுள் பிற்பட்டவராகச் சொல்லப் படும். திருமங்கை மன்னனைப்பற்றிப் பின்பழகிய பெருமாள்சீயர் குருபரம்பரை முதலியன கூறும் சரிதத்தின் சுருக்கம அடியில் வருமாறு:—

சோழமண்டலத்தே திருவாலிநாட்டைச் சார்ந்த திருக்குறையலூரிலே, அவ்வாலிநாட்டுக்குத் தலைவரான கள்வர்குலத்தில் இவ்வாழ்வார் அவதரித்தவர். கலியன் என்ற திருநாமத்துடன் வளர்ந்து அறிவு திருவாற்றல்கள் நிரம்பியவராய், தக்க பருவம்வந்ததும் தம் தந்தையுரிமைகளைப் பெற்றுத் தாமே ஆலிநாட்டின் தலைவராக, வும், சோழனரசன் கீழ்ச் சேனைத்தலைவருள் ஒருவராகவும் விளங்கினர்.

அப்போது, திருநாங்கூரில் வைத்திய சிரேஷ்டராயிருந்த பாகவத ரொருவரால் அருமையாக வளர்க்கப் பெற்று வந்த குமுதவல்லியார் என்ற பெண்மணியைத் திருமணம் புரிந்து தாமும் பரமபாகவதராகி அவளுடன் திருமாலடியார்களை ஆராதிப்பதில் தம் செல்வங்களை மட்டுமன்றி அரசிறையாகத் தம்மிடமிருந்த பெரும் பொருளையுஞ் செலவிடலாயினர்.

இச்செய்தி அறிந்ததும் அரசன் கலியனது சிற்றரசுரிமையைப் பற்றிக் கொண்டதோடு, இவரையும் சிறையிலிடுவித்தனன். இவர் அவ்வாறு சிறைப்பட்டிருந்தபோது திருமாலை நோக்கிப் பலவாறு வேண்ட, அப்பெருமான் இவர் கனவில் தோன்றிக் 'காஞ்சிபுரத்தேற வந்தால் உமக்கு வேண்டியதிரவியந் தருவோம்'

என்று நியமிக்க, அதற்குப் பெரிதும் உவந்து, தாம் இறுத்தற்குரிய பகுதிப் பொருளைக் கச்சியிற் செலுத்துவதாக அரசனுக்கறிவிக்க, 'காஞ்சிக்கு அழைத்துச் சென்று அப்பகுதிப் பொருளைப் பெற்றுக் கொண்டு இவரைச் சிறைவீடு செய்க' என்று அரசன் ஆணையிட்டுத் தன் காவலருடன் இவரை விடுவித்தனன்.

கலியரும், காவலருடன் கச்சிமாநகரடைந்து அங்கே திருமாலருளாற் கிடைத்த பெருநிதியைச் செலுத்திச் சிறையினின்று விடுதலை பெற்றனர்.

பின், இவர் திருமால் கைங்கரியம் புரிதற்குக் கையிலே வேறு பொருளில்லாமையால், அதன்பொருட்டுத் தமக்குற்ற நண்பர் சிலருடன் தம் குலத்தொழிலாகிய களவில் மூண்டு நிற்கலானார்.

ஒரு நாள், தம் பதியையடுத்த திருமணங் கொல்லையில், வழிப்பறிக்காக இவர் பதுங்கி நின்றபோது, புதுமணவாளக் கோலத்துடன் பிராமண இளைஞரொருவர் தம் மணவாட்டியும் பரிவாரங்களும் சூழப் பெருந் திரவியங்களுடன் அவ்வழியே வரவும், அவர்களைக் கண்டு மகிழ்ந்து தங் கூட்டத்தோடும் மேல் விழுந்து அவர்களிடமிருந்த பொருள்களை யெல்லாம் பற்றிக் கொண்டு மூட்டையாகக் கட்டி எடுத்துச் செல்லத் தொடங்கிய வளவில், அது தூக்கவாராமையால் 'மந்திரவாதம் பண்ணினை போலும்' என்று அம்மணவாளப் பிள்ளையை நெருக்கிக் கேட்க, 'ஆம், உமக்கும் அந்த மந்திரத்தை உபதேசிக்கிறேன், வாரும்' என்று கலியன் கழுத்தை அணைத்து, 'பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து' திருமந்திரத்தை உபதேசித்த வளவில், பரஞான பரபக்தி மேலீட்டால் தாம் செய்த தொழிலை வெறுத்து எம்பெருமானைப் பலபடியாகப்

பாடவும், எதிர் நின்ற கூட்டம் திடீரென்று மறைந்தது. திருமாலும் கருடாரூடராய் விண்ணுறநின்று கலியர்க்கு அற்புதக் காட்சி யளித்தனர்.

இவ்வாறு எம்பெருமான் தமக்குச் செய்த நிர்ஹேதுக பரமகிருபையை நினைந்து நினைந்துருகி ஆடிப்பாடி அகங்களித்துப் பெருமான் திருக்கோயில் கொண்ட திருப்பதிகட்கெல்லாம் நேரிற்சென்று மங்களாசாஸனம் பண்ணியும், புறச்சமயத்தவர் பள்ளிகளினின்றும் கொள்ளையிட்ட திரவியங்களைக் கொண்டு திருவரங்கப் பெருநகரின் சுற்றுத்திருமதி லெடுத்து முற்றுவித்தும் இவ்வாறு நெடுங்காலம் வாழ்ந்து, முடிவில் திருக்குறுங்குடியிலே தன்னடிச் சோதிக்கெழுந்தருளினர்—என்பதே.

இவ்வரலாறுகளையே திவ்யசூரி சரிதமும் கூறுவதாயினும், திருவரங்கச் செல்வர் கோதைப் பிராட்டியாரைத் திருக்குருகூரில் திருமணம் புரிந்து அப்பிராட்டியுடன் தம் திருவரங்கப் பெருநகர் நோக்கி மணக்கோலமாகப் பரிவாரங்களுடன் செல்லுமிடையில், களவுத் தொழிலில் முனைந்து நின்ற திருமங்கை மன்னன் பதுங்கி நின்ற தம் படர்களுடன் அவர்கள் மேல்விழுந்து வழிமறித்து, 'மாயோனை வாள்வலியால் மந்திரங் கொண்டு பேரருள் பெற்றனரென்ற செய்தி மட்டும் வேருகக் காணப்படுகின்றது.

சிவனடியாரான திருஞான சம்பந்தமூர்த்திகளைத் திருமங்கை மன்னன் நட்புமுறையிற் சந்தித்து அளவளாவிய செய்தியையும் ஏனைக் குருபரம்பரைகளின் மாருக திவ்யசூரிசரிதங் கூறும்.

இப்பெரியார் அருளிச்செய்த திவ்யப் பிரபந்தங்கள் :—பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திரு

நெடுந்தாண்டகம்; திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்பன.

திருமங்கையாரது பாசுரங்களை ஆராயுமிடத்தும் அவர் வரலாறுகளில் ஒரு சில தெரியவருகின்றன. தம் அருளிச் செயல்களில், சோழ மண்டலத்தே ஆலிநாட்டுக்கும்[1] திருமங்கை குறையல் என்ற நகரங்கட்கும் தலைவர்[2] என்றும், பெருஞ்சேனை யுடையவரென்றும்[3] யானைப் படைக்குத் தலைமையும் போரில் அதனை நடத்துந் திறமையும் உடையர்[4] என்றும், பெரிய குதிரைவீரரென்றும்[5], வாட்போரில் பகைவரின் உடல் துணிக்க வல்லவர்[6] என்றும் தம் சேனைப் பெருமையையும் வீரப்பெருமையையும் சிறப்பித்துப் பாராட்டுகின்றார்:

---

1. இந்நாட்டின் தலைமையூர், இக்காலத்துத் திருவாலி திருநகரி என வழங்குகின்றது.

2. கூரணிந்த வேல்வலவ னாலிநாடன் கொடிமாட மங்கையர்கோன் குறையலாளி" (பெரிய திருமொழி, 4, 4, 10).

3. "வாட்டிறற் றானை மங்கையர் தலைவன்" (10, 9, 10).

4. 'அமரிற் கடமா களியானைவலான்' (2, 4, 10); 'கடமாருங் கருங்களிறு வல்லான் வெல்போர்க் கலிகன்றி' (2, 5, 10).

5. 'ஒன்னலர் தங்களை வெல்லும் ஆடல்மாவலவன்' (5, 8, 10).

6. "மருவலர்தம் முடல் துணிய வாள்வீசும் பரகாலன்" (3, 9, 10).

தமது பெருஞ் செல்வநிலையையும்[1], பெரிய வள்ளன்மையையும், அதனுல் புலவர்போற்றுந் தம் புகழையும்[2], பொய்ம்மொழியொன் றில்லாத தம் மெய்ம்மைத் திறத்தையும்[3], கைம்மாறு கருதாது மாநிலத்தார்க்கு வழங்கும் மாரிபோன்ற தம் பேரருளையும்[4], தம் தமிழ்ப் பெரும் புலமையையும்[5], கவிபாடுந் திறத்தையும்[6] பதிகவிறுதிகளிற் பாடுகின்றார்.

மனைவி மக்கள் பலருடையராகவும்[7], வேட்டையாடுவதில் விருப்பமிக்கிருந்தவராகவும்[8], அரசர் முதலிய

---

1. 'வெந்திறற் களிறும் வேலைவாயமுதும் விண்ணொடு விண்ணவர்க்கரசும்-இந்திரற் கருளி யெமக்கு மீந்தருளும் எந்தை' (1, 4, 7)

2. 'கற்றார் பரவும் மங்கையர்கோன் காரார்புயற்கைக் கலிகன்றி' (5, 1, 10) 'பாரணிந்த தொல்புகழான்' (4, 4, 10)

3. 'மொய்ம்பொழியொன் றில்லாத மெய்ம்மையாளன்' (6, 6, 10.)

4. 'அருண்மாரி' (3, 4, 10; 4 2 10; 8, 6, 10) 'அலைநீருலகுக்கருளே புரியுங் காரார் புயற்கைக் கலிகன்றி' (3, 2, 10)

5. 'இருந்தமிழ் நூற் புலவன்' (1, 7, 10)

6. 'பாடேன் தொண்டர் தம்மைக் கவிதைப் பனுவல் கொண்டு' (7, 2, 2.)

7. 'காவித்தடங்கண் மடவார்கேள்வன்' (6, 10, 10.) 'கொங்கு மலர்க் குழலியர்வேள்' (3, 14, 10) 'பிறிந்தேன் பெற்ற மக்கள்' (6, 2, 4)

8. 'சினத்தொழில் புரிந்து திரிந்து நாயினத்தொடுந் திளைத்திட்டோடியு முழன்று முயிர்களே கொன்றேன்' (1, 6, 6.)

பிறர்க்குப் பெரிதும் உழைத்துத் தம்வாழ்நாளின் ஒரு பகுதியைக் கழித்தவராகவும்[1], பரம்பரையே திருமாற் கடியரானவர் குலத்தில் உதித்தவராகவும்[2], தாய் தந்தையர் காலஞ்சென்றபின் தாம் அவ்வடிமைத் திறத்தில் முனைந்து நின்றவராகவும்[3], அதனுல் தெள்ளியராய்த் திருமாலருளேச் சிக்கெனப் பெற்றவ ராகவும்[4], தங்குடும்பத்தை முற்றத் துறந்து[5], திருப் பதிகடோறும் சென்றுபாடித் திருமாலடியாரென்று தேசமறியத் திரிந்தவராகவும்[6] தம்வாழ்க்கை வரலாறு களைக் குறிப்பிக்கின்ருர்.

கலியன் கலிகன்றி பரகாலன் என்பன இவர்க்குத் திருநாமங்கள் என்பது இவர் திருவாக்கினின்றே தெரியலாம். இவரைக் கள்வர்மரபினர் என்றும், சபரர்

---

1. 'பெரியேனுயினபின் பிறர்க்கேயுழைத் தேழை யானேன்' (1, 9, 7.)

2. 'எந்தை தந்தை தம்மானென்றென் றெமரே ழேழளவும், வந்து நின்ற தொண்டர்' (4, 9, 9) 'எந்தாதை யப்பா லெழுவர் பழவடிமை வந்தார் (7, 2, 6)

3. 'எம்மானு மெம்மனேயு மென்னைப்பெற் றொழிந்த தற்பின்—அம்மானு மம்மனேயு மடியேனுக் காகிநின்ற... சுடரே' (7, 2, 3)

4. 'கண்டவா திரிதந்தேனேலும்.. சிக்கெனத் திருவருள் பெற்றேன்' 1, 1, 5)

5. 'பிறிந்தேன் பெற்ற மக்கள் பெண்டிரென்றிவர் பின்னுதவா தறிந்தேன்' (6, 2, 4.)

6. 'தேசமறிய உமக்கேயாளாய்த் திரிகின்ருேமுக்கு' (4 9, 4.)

குலத்தவரென்றும், நீலனென்ற திருநாமமுடைய ரென்றும் நூல்கள் கூறும்[1].

இவ்வாறு திருமங்கை மன்னன் வரலாறுகளாக வழங்குவனவற்றுடன் அவர் திருவாக்குக்கள் சில அம்சங்களில் ஒற்றுமைபெறுதல் காணலாம்.

இனி, இப்பெரியார் வாழ்ந்த காலநிலையை நோக்குவோம். திருமங்கையார் காலம்பற்றி மூன்று வியாசங்கள்[2] பலவாண்டுகட்கு முன்பே என்னால் எழுதப்பட்டுள்ளன. தம் பெரியதிருமொழியில் திருநறையூர்ப் பதிகத்தே, சோழன் கரிகாலன்வழியில் வந்த கோச்செங்கணனது போர் வெற்றிகளையும் அவனது திருமாலடிமைத் திறத்தையும் பாடுதலாலும், வேறு சில பதிகங்களில் பல்லவவேந்தரது அறிவுதிருவாற்றல் களையும் அவரது திருமால்பத்திமையையும் பல் லிடத்தும் சிறப்பித்தலாலும், கடைச்சங்கத்துக்குப் பின்னர்த் தென்னாட்டிற் பல்லவராதிக்கம் தலைசிறந்து நின்றகாலத்தில் திருமங்கை மன்னன் எழுந்தருளி யிருந்தவர் என்று சொல்லலாம்.

இவ்வாறாயின், பல்லவர்பெருமை முழுதும் குலைந்ததும் ஆசாரியத்தலைவரான நாதமுனிகள் வாழ்ந்ததுமான 9-ஆம் நூற்றாண்டிறுதிக்கு முன்புள்ள காலவிசேடமே இவ்வாழ்வார்க்கு உரியதென்பது பெறப் படும். படவே, அவ்விடைப்பட்ட காலத்துள்

1. 'ஸமஜாயத தத்ர சாபரப்ரமுக: க:சந நீலநாமக.' (திவ்ய சூரி சரிதம்) 'தண்டமிழ் செய்த நீலன்றனக் கினியானை (இராமாநுச நூற். 17)

2. **செந்தமிழ்**, தொ-3, பக் 483; தொ-4, பக்-61; தொ-21, பக்-5, 6

ஆழ்வார்க்குச் சிறந்தது யாது? என்பதும் நாம் இறுக்க வேண்டிய கேள்வியாகின்றது.

முன்னதிகாரத்தில் பெரியாழ்வார், ஆண்டாள் முதலிய அடியார்கள்காலத்தே திருமங்கைமன்னனும் வாழ்ந்தவர் என்று திவ்வசூரிசரிதங் கூறுதலைக் குறிப்பிட்டேன். அதனால், அவ்வடியார்க்கு உரியதாகக் கண்ட 8-ஆம் நூற்றாண்டு இவ்வாழ்வார்க்கும் ஏற்புடைய தென்பது தெரியலாம்.

இனி, திருமங்கைமன்னனும் திருஞானசம்பந்தரும் ஒருவர்க்கொருவர் அளவளாவியவர் என்று, ஆழ்வார் வரலாறு கூறும் எல்லா நூல்களும் எடுத்துரைக் கின்றன. இதனால், அவ்வைதிக சமயத்தடியார் இரு வரும் ஒருகாலத்தவர் என்பது முன்னோர்க்கெல்லாம் ஒப்பமுடிந்ததென்பது நன்குவிளங்கும். இவ்வாறு ஒப்ப வமைந்த வழக்கை யாரும் அவ்வளவு எளியதாகத் தள்ளிவிடல் இயலாதன்றோ? தள்ளுதல் இயலுமாயின், எதுதான் கொள்ளுதற்கு உரியதாகும்? ஆதலால், திரு ஞானசம்பந்தர் காலம் திருமங்கை மன்னனுக்கும் உரிய தென்று வைஷ்ணவசரித்திர வழக்கின்படி நாம் கொண்டு ஆராய்வது இன்றியமையாததாம்.

சம்பந்தர்வாழ்ந்தகாலம் 7-ஆம் நூற்றாண்டு என்பது முடிந்த கொள்கை. எனவே, மேற் கூறியவாறு பெரி யாழ்வாரும் அவர் திருமகளாரும் வாழ்ந்த 8-ஆம் நூற் றாண்டின் முற்பகுதியும், ஞானசம்பந்தர் வாழ்ந்த 7-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியுமே திருமங்கைமன்னனுக்கு ஏற்புடைய காலமாகக் கொள்ளக்கூடியதாகின்றது.

இதன் உண்மையை, இவ்வாழ்வார் திருவாக்குக்களை யும் பிறசாதனங்களையுங்கொண்டு இனி ஆராய்வேன்.

இவ்வாராய்ச்சிக்குப் பல்லவவமிசாவளியின் ஒரு பகுதியை நாம் முதலில் தெரிந்துகொள்வது உதவியாகும். அது வருமாறு:—

**பல்லவ வமிசம்.**

1. சிம்மவிஷ்ணு
|
2. மஹேந்திரவர்மன்
|
3. நரசிம்மவர்மன்
|
4. மகேந்திரவர்மன்
|
5. பரமேசுவரவர்மன்
|
6. இராஜசிம்மன்
|
7. பரமேசுவரவர்மன்
|
8 நந்திவன்மன் (பல்லவமல்லன் 717—779)
|
9. தந்திவர்மன்

திருமங்கைமன்னன் அருளிய பெரியதிருமொழியில், பரமேச்சுரவிண்ணகரப்பதிகமும் ஒன்று. பரமேச்சுர விண்ணகரம் என்பது காஞ்சீபுரத்துள்ள வைகுண்டப் பெருமாள்கோயில் என்ற தலமாகும்.

அக்கோயிலைப்பற்றிய பதிகத்தில், இவ்வாழ்வாராற் பல்லவனொருவன் செய்திகள் பலபடியாகப் புகழ்ந்து கூறப்படுகின்றன. அச்செயல்களை நோக்குமிடத்து, அவையாவும் மேற்குறித்த வமிசாவளியின் 8-ஆம்

எண்ணிற்கண்ட பல்லவமல்லனை, நந்திவன்மனுடையன என்பது, அவன் சாஸனங்கூறும் வரலாறுகளோடு பெரிதும் ஒத்துள்ளமையால் தெளியப்படுகின்றது.

உதயசந்திரன் என்ற சேனாபதி, தன்னரசனான நந்திவர்மனுடன் எதிர்த்த தலைவர்களை—மண்ணைக்குடி, நிம்பவனம், சூதவனம், சங்கரக்கிராமம், நெல்வேலி, காளிதுர்க்கம் என்ற களங்களில்நடந்த போர்களிலே வென்றதாக உதயேந்திரசாஸனம் கூறுகின்றது.

அச்சாஸனத்தின் எழுத்தமைதியால், அது பத்தாம் நூற்றாண்டினதான பராந்தகசோழன் காலத்ததாயினும், அதனுட் குறிக்கப்பட்ட பழஞ்செய்திகளினின்று, முற்பட்ட சாஸனமே அச்சோழனாட்சியில் நடந்த திருப்பணியிற் பெயர்த்துவரையப்பட்டதென்று கருதப்படுகின்றது.[1]

அவ்வுதயேந்திரசாஸனங் கூறும் போர்க்களங்களுள்ளே—மண்ணைக்குடி, நெல்வேலி, காளிதுர்க்கம் என்பன ஆழ்வாரது பரமேச்சுரவிண்ணகரப் பதிகத்தும்[2] குறிப்பிக்கப்படுகின்றன. இவற்றுடன் அச்சாஸனங்கூறும் மற்றப்போர்களையும் சேர்த்து

---

1. s. i. i. ii, p. 362.

2. 'நிரந்தவர் **மண்ணையிற்** புண்ணுகர்வேல் நெடுவாயிலுகச் செருவில் முனநாட்-பரந்தவன் பல்லவர்கோன்'' (பெரிய திருமொழி, 2, 9, 3). ''விடைத்திறல் வில்லவன் **நெல்வெலியில்** வெருவச்செருவேல் வலங்கைப் பிடித்த—படைத்திறற் பல்லவன்கோன்'' (ஷை, 2, 9, 8). ''தேம்பொழிற் **குன்றெயில்** தென்னவனைத் திசைப்பச் செருமேல் **வியந்தன்று** சென்ற பாம்புடைப் பல்லவர்கோன்'' (ஷை, 2, 9, 5).

நோக்குமிடத்து, அவையாவும் பாண்டிநாட்டின்[1] எல்லைப்புறத்தில் நந்திவர்மன் சேனாபதியால் பாண்டியனுடன் நடத்தப்பட்டனவாகவே தெளிவாகின்றன.

இங்ஙனம் பல்லவசேனைகளுடன் அவ்வெல்லைப் புறத்தில் எதிர்த்து நின்ற பாண்டியன், பெரியாழ்வார் காலத்தவனாக மேலே நான் விளக்கிப்போந்தவனும், தமிழ்நாட்டின் பெரும்பாகத்தை ஆட்சிபுரிந்து வந்த பேரரசனுமாகிய மாறவர்மனே என்பது வேள்விகுடிச் சாஸனத்தால் தெளியப்பட்டது; திருமங்கைமன்னனும், பல்லவமல்லனாகிய நந்திவர்மனுக்குப் பெரும்பகைவனாக இருந்தவன், பாண்டியனென்றே பல பாடல்களிலுங் கூறுதல ஒப்பிடற்குரியது.

---

1. இப்போர்க் களங்களுள்ளே—**மண்ணைக்குடி** என்பது தஞ்சாவூர் ஜில்லா அறந்தாங்கித் தாலுகாவைச் சார்ந்த **மண்ணக்குடி** என்ற ஊர் ஆகும், இதனை—திருவிசலூருக்கும் கும்பகோணப்பக்கத்துள்ள இடவைக்கும் சமீபமான மண்ணி என்று புரொபஸர் - **தூப்ராயில் துரை** தம் பல்லவ சரித்திரத்தில் எழுதியது பொருத்தமானதன்று (செந்தமிழ், தொ. 17, பக். 37). மண்ணைக்குடியை ஆழ்வார் மண்ணை என்று திரித்தது, தமிழ்முறையே. சூதவனம், நிம்பவனம், சங்கரக் கிராமம் என்று சாஸனங்கூறும் ஊர்கள், ஷை ஜில்லா பட்டுக்கோட்டைத்தாலுகாவில் உள்ளன. இவற்றுள்—**சூதவனம்** திருவுசாத்தானம் எனத்தேவாரத்தும், கோவிலூர் என வழக்கிலும் வழங்கும் சிவதலமாகும்.

**நிம்பவனம்** என்பது வேப்பங்காடு என்றுள்ள ஊரின் வடமொழிப் பெயர்ப்பாகும். புதுக்கோட்டைச் சீமைத் திருவரங்குளச்சாஸனமொன்றில் இந்நிம்பவனம் கூறப்படுதல் கொண்டு, அஃது அப்பக்கத்தது என்பது தெரியலாம். **சங்கரக்கிராமம்** என்பது அப்பிரதேசத்துள்ள சங்கரனார் குடிக்காடு என்ற ஊராதல் வேண்டும். குடிக்காடு

மேலும், பரமேச்சுரவிண்ணகரம் என்பதற்குப் பரமேச்சுரனால் கட்டிப் பிரதிஷ்டிக்கப்பெற்ற விஷ்ணுக் கிரகம் அல்லது திருமால் கோயில் என்பது பொருளாம். நந்திபுர விண்ணகரம், மகேந்திர விஷ்ணுக்ருகம், அதியேந்திரவிஷ்ணுக்ருகம், குலோத்துங்க சோழ விண்ணகர் என்று, பிரதிஷ்டித்த அரசர்பெயர்களால்

---

—கிராமம்; 'ஐவர்க்கு மைந்து குடிக்காடு நல்குதியோ கூறு'' (பெருந்தே, பாரதம். வாசுதேவன் தூது, 173) எனக் காண்க].

இனி, நெல்வேலி என்பது இப்பக்கத்துள்ள நெம்மெலி என்ற ஊராம். இவ்வூர்ப்போர், சபரர் தலைவனான உதயணனுடன் நடத்தியதென்று சாஸனமும், 'விடைத்திறல் வில்லவ னெல்மெலியில் வெருவ' நடத்தப்பட்டதென்று பரமேச்சுர விண்ணகரப் பதிகமுங் கூறுகின்றன.

இங்கு **வில்லவன்** என்று ஆழ்வாரால் குறிக்கப்பட்டவன் சேரன் அல்லன். ஷெ பதிகத்தின் முதற்பாட்டில்—வ(ப?)ல்லவன் (சளுக்கன்), வில்லவன் (சேரன்) முதலியோர் பல்லவனுக்கு அடங்கியவராக அவ்வாழ்வார் கூறிவிட்டமையால், அவ்வில்லவனையே இரண்டாமுறையும் அவர் எடுத்துரைக்க நியாயமில்லை. அதனால், தனக்கடங்காத பாண்டியனது சேனைத் தலைவருள் அவ்வில்லவனும் ஒருவனாதல் வேண்டும். ஆகவே, (வில்லாளனான) வேடர் தலைவன் என்றேவில்லவன்—என்று ஆழ்வார் கூறியதற்கும்—சாஸனக் கருத்துக்கிணங்கப் பொருள் கொள்ளத் தக்கது.

இனி, ''தேம்பொழிற் குன்றெயில் தென்னவனை'' என்று ஆழ்வார் பாடுதற்கேற்ப— ''பகவதியாற் காக்கப்படும் காளிதுர்க்கத்தை அழித்துப் பாண்டிய சேனையை மண்ணைக் குடியிற் தோற்கச் செய்தவன்'' என்று உதயேந்திர சாஸனம் கூறும். இதனினின்று இத்துர்க்கம் பாண்டியனுக்குப் பேரரணாகவிருந்ததென்பது புலப்படத் தடையில்லை.

திருமால் கோயில்கள் பெயர்பற்றிருந்தலுங் காண்க. "நந்திபணி செய்த நகர்நந்திபுர விண்ணகரம்"[1] என்று திருமங்கைமன்னன் பாடுதலும் அறியத்தக்கது.

பரமேச்சுரன் என்பது, முற்கூறிய வம்சாவளியில், நந்திவன்மனுக்கு முன்பும் இராஜசிம்மனுக்குப் பின்பும் ஆட்சி புரிந்த பல்லவவேந்தன் பெயராயிருத்தல் கொண்டு, இவ்விண்ணகரம் அவ்வரசனாற் கட்டிப் பிரதிஷ்டிக்கப்பட்டதென்று கருதலாயினர், சரித்திர வறிஞர் பலரும். இது பொருத்தமன்று, ஆழ்வார் தம்பதிகத்தில் 'பல்லவன் பணிந்த பரமேச்சுரவிண்ணகரம்' என்று முடித்துப் பாடிய இடங்களிலெல்லாம் அங்ஙனம் பணிந்த பல்லவனது செயல்களையே கூறுகின்றார். அச்செயல்கள்யாவும் முன்னவனான பரமேச்சுர பல்லவனுக்குரியன ஆகாது, மேலே விரித்துக் கூறியபடி, அவன்பின் பட்டமெய்திய நந்திவன்மனுடையனவாகவே உள்ளன.

தன்பெயரால் விண்ணகரம் கட்டிய பரமேச்சுரன் என்பவன் நந்திவர்மனுக்கு முன்னராண்டவனாயின், அப்பல்லவ னியற்றிய கோயிலைச் சிறப்பிக்கப்புகுந்த ஆழ்வார், அவன் புகழ்களைக் கூறாமல் அவனுக்குப்பின் பட்டமெய்தியவனைப் பெரிதும்புகழ நியாயமில்லை. அன்றியும், பரமேச்சுரவிண்ணகரமாகிய வைகுண்டப் பெருமாள்கோயிற் பிராகாரத்தில் அமைந்த சிற்பவுருவங்கள் யாவும், அப்பரமேச்சுரபல்லவன் சம்பந்தமின்றி, வேறு பல்லவனைப் பற்றியனவாகவேயுள்ளன.

நந்திக்குமுன்பாண்ட பரமேச்சுரன் கட்டியதே அவ்விண்ணகரமானால், அவன் வரலாற்றை விளக்கும் உருவங்களன்றோ அக்கோயிலுள் அமைந்திருத்தல்

1. பெரிய திருமொழி. 5, 10, 7.

வேண்டும்? அவ்வாறில்லாமையால், பரமேச்சுரன் என்பவன், பலபோர்களில் வெற்றிபெற்றவனாகத் திருமங்கையார் பாடிய நந்திவன்மனின் வேறல்லன் என்பது தெரியலாம். ஆயின், பரமேச்சுரன் என்ற பெயர் வழக்குப் பல்லவமல்லனான அந்நந்திக்கு உண்டோ எனின், கூறுவேன்.

அப்பரமேச்சுர விண்ணகரத்தின் தென்புறத்து உட்பிராகாரத்து அமைந்த சிற்பவுருவங்கள் நந்திவன்மன் ஆட்சிபெற்றது முதலிய வரலாறுகளைப்பற்றியன என்பது, அவ்வுருவங்கள் சிலவற்றின்கீழே பழமையாக வரையப்பட்ட எழுத்துக்களால் அறியப்படுகின்றது.[1]

பல்லவவமிசாவளியின் 6-ம் எண்ணுக்குரிய இராஜசிம்மன் மகனான பரமேச்சுரபல்லவன் சந்ததியின்றியே காலமாயினபின், ஆட்சியடையத்தக்கவர் கிடையாமையால் நாடு குழப்பமடைந்து நின்ற நிலையில், பல்லவ குலத்தவரான இரணியவர்ம மகாராஜா என்பவரை மந்திரிகளும் நகரத்தலைவர்களும் அணுகி உசாவ, அவர் தம் மக்களை அழைத்து அரசியலை யேற்கும்படி கேட்கவும், அவருள் மூவர் மறுத்தனராக, நான்காமவனும் பன்னீராட்டைச் சிறுவனுமான **பல்லவமல்லன் என்ற பரமேசுவரவர்மன்** தான் அதனை ஏற்றுநடத்த உடம்பட்டதும், மந்திரிகளும் நகரத்தலைவர்களும் பெரிதும் மகிழ்ந்து அரச மரியாதைகளுடன் காஞ்சிமாநகரில் அவனை எதிர்கொண்டழைத்து—ஸமுத்ரகோஷம் என்ற கடுமுகவாத்யமும், கட்வாங்கத்வஜமும், விருஷபலாஞ்சனையும் அளித்து, **நந்திவர்மன் என்று அபிஷேகநாமஞ்சூட்டித்** தங்கள் அரசனாகக் கொண்ட வரலாறுகள் அச்சிற்பவுருவங்களின் கீழே வரையப்பட்டுள்ளன.

1. S. I. I. IV. p. 11.

இவற்றால், சிறுவனாய்ப் பட்டமெய்திய பல்லவ மல்லனான நந்திவன்மனுக்கு, அவன் பெற்றோரிட்டு வழங்கிய **பிள்ளைத்திருநாமம், பரமேசுவரன்** என்பது தெரியலாம். ஆகவே, தான் சிங்காதனமேறியதும் தன் முன்னோர் வழிபட்டு வந்த திருமாலுக்குத் தன் பிள்ளைத் திருநாமத்தால பரமேச்சுவர விண்ணகரம் என்ற பெயருடன் நந்திவன்மன கச்சியில் ஆலயமொன்று கட்டிப் பிரதிட்டித்தான் என்பதும, அதனை நன்கறிந்தே திருமங்கையார் அவன் வரலாறுகளை அவ்விண்ணகரப் பதிகத்தில் விரியக்கூறி — 'பல்லவன் பணிந்த பரமேச்சுர விண்ணகர மதுவே' என்று பாட்டிறுதி தோறும்வரப் பாடலாயினர் என்பதும் மிகத்தெளிவாதல் காண்க.

'பல்லவர்கோன் பணிந்த' என்பதற்குப்—பல்லவ வேந்தன் திருப்பணி செய்து வணங்கிய—என்பது பொருளாம்: 'நந்திபணி செய்த நகர் நந்திபுர விண்ணகரம்' என்று இவ்வாழ்வாழ்வாரே கூறியவாறு இதனைக் கொள்க.

இவற்றால், பல்லவமல்லனான நந்திவன்மனே பரமேச்சுர விண்ணகத்தைக் கட்டிப் பிரதிஷ்டித்தவனும் ஆழ்வாரால் அவ்விண்ணகரப் பதிகத்திற் புகழ்ந்து பாடப்பட்டவனும் ஆவன் என்பது மலையிலக்காதல் காணலாம்.

ஆயின், திருமங்கைமன்னனாற் சிறப்பித்துப் பாடப் பெற்ற கோச்செங்கணனைப்போல இந்நந்திவர்மனும் அவர்காலத்துக்கு முற்பட்டவனா, அன்றிச் சம காலத்தவனா—என்ற கேள்வி அடுத்து நிகழக்கூடியதாகும். இதற்கு இவ்வாழ்வார் கூறும் மற்றோர் அரிய செய்தி தக்க விடை தந்து நிற்றலைக் கூறுவேன்.

இப்பெரியார், அப்பரமேச்சுர விண்ணகரப் பதிகத்துக்கு முன் பாடிய அட்டபுயகரப் பதிகத்தின் முடிவில்—

**"மன்னவன் தொண்டையர்கோன் வணங்கும்**
**நீண்முடிமாலை** வயிர மேகன்
**தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி**
**அட்டபுயகரத்து"** (பெ. தி. 2, 8, 10.)

என்று பாடுகின்றார். 'வயிரமேகன் என்ற பெருவேந்தனது கீர்த்தியும் பிரதாபமும் சூழ்ந்துள்ள கச்சிமாநகரைச் சார்ந்த அட்டபுயகரம்' என்பது ஆழ்வார் அருளிய இத்தொடரின் கருத்தாதல் காணலாம்.

இவ்வயிரமேகன் யாவன் என்பது அறியப்படின் திருமங்கை மன்னன் காலமும் செவ்விதின் விளங்கக் கூடும் என்ற ஆராய்ச்சி எனக்குள் முதன்முதல் நிகழலாயிற்று. இதன் காரணம், மேற்காட்டிய தொடரின் அமைப்பிலிருந்து அதனுட் கண்ட வயிரமேகன் ஆழ்வார்க்குச் சமகாலத்தவன் எனபதன்றி முற்பட்டவனாகக் கொள்ளத் தக்கவன் அல்லன் என்பது பெறப்படுதலேயாம்.

வயிரமேகன் இறந்ததற்குச் சில தலைமுறைக்குப் பின்பு ஆழ்வார் விளங்கியவராயின், அவ்வரசன் கீர்த்தி மட்டுமன்றி அவன் வலிமையும் கச்சியைச் சூழ்ந்திருந்தது என்று, பெரிதும் பிற்பட்டவர் பாடும்படி ஒருகாலும் நேர்ந்திராதென்பது திண்ணம். தங்காலத்து விளங்கியுள்ள அரசனை விட்டொழித்தும், எத்தனையோ மாறுபாடடைதற்குரிய காலத்தை இடையிட்டும், தமக்கு முன்னிருந்த அரசன் வலிமையானது சூழ்ந்திருந்ததாகக் கச்சிப்பதியை ஆழ்வார் சிறப்பித்தாரெனல் சிறிதும் பொருந்துவதன்று.

அன்றியும் "வயிரமேகன் **தன்வலி தன்**புகழ் சூழ்ந்த கச்சி" என்று—வேறொருவர் வலியும் புகழும் கச்சிக் குரியன அல்ல—என்பதுபட வற்புறுத்திக் கூறுவ தாலும், அவ்வயிரமேகனது கீர்த்திப் பிரதாபங்களை ஆழ்வார் நேரிலறிந்தவர் என்பது உறுதிப்படுகின்றது.

இவ்வாருக அப்பாசுரத் தொடரின் இயற்கை யமைப்பைச் சிந்திப்போர் எவர்க்கும் வயிரமேகன் என்பான் திருமங்கை மன்னன் காலத்துக்குச் சிறிதேனும் முற்பட்டவன் என்று கருத இடமே இராதென்னலாம்.

இங்ஙனம், ஆழ்வார்க்குச் சமகாலத்தவனுகத் தெரியும் இவ்வயிரமேகன் இன்னுன், இன்னகாலத்தவன் என்பவற்றை முதன் முதலாகக் கண்டு யான் கொண்ட கருத்துக்களைத் 'திருமங்கையாழ்வார காலவாராய்ச்சி' என்ற தலைப்பெயரின்கீழ் 27-ஆண்டுகட்கு முன்பு **செந்தமிழ்ப்** பத்திரிகையில் வெளியிட்டேன். அக்கட்டுரை யின் சுருக்கம் அடியில் வருமாறு:—

மேற்குறித்த திருமங்கையார் பாசுரத்தொடர்ககு—"தொண்டையர் கோனுன வயிரமேகன் வணங்கும் (திரு)மாலை; (அவன்) வலிபுகழ்கள் சூழ்ந்த கச்சியிலுள்ள அட்டபுயகரத்து ஆதியை" என்று கொண்டு கூட்டி முன்னேர் பொருள் கூறுவர்.

இவ்வாறு 'தொண்டையர்கோன் வணங்கும் மாலை' என்றும், 'வயிர மேகன் தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி' என்றும

இருபிரிவாக்கிப் பொருள் கொள்ளுமிடத்து 'ஆசிரி யன் பேரூர் கிழான் வந்தான், செயிற்றியன் உண்டான்'

என்புழிப்போல[1], தொண்டையர் கோனும் வயிர மேகனும் இரு வேறுனவர் என்ற கருத்து எளிதிற் பெறக்கூடியதாகவும், ஒருவன் என்பது வலிதிற் கொள்ளக் கூடியதாகவும் அமைகின்றன.

திருமங்கை மன்னனது வாக்கின் போக்கை நோக்குவோர்க்கு ஆற்றெழுக்கான பொருளமைதி பெறப் பாடுவதே அப் பெரியாரியல்பு என்பது விளங்கத் தடையில்லை. அம்முறையில் 'மன்னவன் தொண்டையர் கோன் வணங்கும்' என்ற தொடர் வயிரமேகனுக்கு விசேடணமென்பதும், 'தொண்டையர் கோனுல் வணங் கப்படும் வயிரமேகனது பெருமை சூழ்ந்த கச்சிநகரைச் சார்ந்த அட்டபுயகரம்' என்பதே மேற்கூறிய அடி கட்கு நேராகச் செல்லும் பொருள் என்பதும், வயிர மேகன் என்பவன் வேற்றரச னென்பதும், அவன் கச்சிப் பல்லவனை வணங்கச் செய்து தன்பெருமையை அக்கச் சியிற் பரப்பினவனென்பதும் பெறப்படும்.

இவ்வாறு பாசுரப் போக்காற் பல்லவனை வணக்கிய வனுகத் தெரியவரும் வேற்று வேந்தன் யாவன் என்று ஆராய்ச்சி செய்த விடத்து, இராஷ்டிரகூடருள்ளே பெருவலிபடைத்த **தந்திதுர்க்கன்** என்ற வேந்தன் (கி. பி. 753—4) பல்லவனது தலைநகரமான காஞ்சியின் மேற் படையெடுத்து வந்து அவனை வென்றவன் என்றும், அவனுக்கு **வயிரமேகன் என்ற சிறப்புப்பெயர் வழங்கி வந்த தென்றும்** சாஸனங்களாலும்[2] சரித்திரங்களாலும் தெரிய வந்தது. அதனுல் 'தொண்டயர் கோன் வணங்கும்...... வயிரமேகன் தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி' என்று

---

1. தொல்காப்பியம், சொல். 42, சேனாவரையம்.
2. Kadaba Plates—*Ep. Ind. Vol. IV, p.* 334.

ஆழ்வார் கூறியவரலாறு அவ்விரட்ட வேந்தனதே யாதல் வேண்டும் என்று கருதலானேன்.

இவ்வயிரமேகன் காலத்துப் பல்லவ வேந்தன் மேலே கூறிய நந்திவர்மன் (715—80) ஆவன். தந்தி துர்க்கனுன வயிரமேகன் நந்திவர்மனை வென்றபின் அவனுடன் சமாதானம் பெற்றுத் தன்மகள் ரேவா என் பவளை அவனுக்கே மணம் புரிவித்துச் சென்றனனென் றும், அப்பல்லவனுக்கு அத்தேவிவயிற்றுப் பிறந்த மகனே தந்திவர்மன் என்றும் சரித்திரவறிஞர் கருது கின்றனர். இக்கருத்து உண்மையாகுமாயின், இரட் டனுன வயிரமேகன் மாமன் முறைபற்றியும் அந்நந்தி வர்மனுல் கௌரவிக்கப் பட்டவனுவன் என்க.

எனவே, தம் காலத்தில் இரட்டபல்லவர்க்குள் நிகழ்ந்த விசேட சம்பவங்களை நேரிலறிந்தே திருமங் கையார் வயிரமேகனைப்பற்றிக் கூறலாயினர் என்பதும், அவ்வேந்தன் கச்சிமாநகரிற் படையெடுத்த கி. பி. 754-ல் அவ்வாழ்வார் தம் அட்டபுயகரப்பதிகத்தை அருளிச் செய்தவராதல் வேண்டும் என்பதும் பெறப் படக்கூடியன. இவையே ஆதியிற் கண்ட என் கருத் துக்கள்.

இங்ஙனம் முதன் முதலாக யான் கண்டு வெளி யிட்ட கருத்தைச் சரித்திரவறிஞரிற் சிலர் முழுதுந் தழுவிக்கொண்டனர்.[1] ஆனுல் மற்றொருசாரார் ஒரு சில ஆட்சேபங்களை நிகழ்த்தி என் கொள்கையை ஏற்க வில்லை[2]. அன்னேர்வாதங்களுள் தலைமையானது பல்லவ

1. ராவ்பகதூர். டாக்டர் S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார். M. A. அவர்கள் முதலியோர்.

2. தஞ்சை ராவ்பஹதூர் கே. எஸ். ஸ்ரீநிவாச பிள்ளையவர்கள், திருவனந்தபுரம்; ஸ்ரீமாந். கே. ஜீ. சேஷ ஐயரவர்கள் (Retired High court Judge) முதலியோர்.

மல்லனை நந்தியைப் பெருவீரனென்றும் திருமாலடிய னென்றும் பரமேச்சுர விண்ணகரப் பதிகத்திற் புகழ்ந்து பாடிப் போந்த திருமங்கை மன்னன், அட்டபுயகரப் பதிகத்தில் அவனை வேற்றுவேந்த னொருவனுக்கு அடங் கிப் பணிந்தவனாக இழிவுபடப் பாடார் என்பதேயாம். இதற்கு அப்போது யான் எழுதிய விடை அடியில் வருமாறு:—

"அட்டபுயகரப்பதிகத்தைத் திருமங்கை மன்னன் பாட நேர்ந்தபோது—பரமேச்சுர விண்ணகரப் பதிகத்தைப் போல, பல்லவனைச் சிறப்பிக்கச் சங்கற்பித்துக் கொண்டு அவர் பாடினவரல்லர். அவ்வட்டபுயகரம் கச்சிப்பேரூரைச் சார்ந்தது என்பதைக் குறிக்க வந்தவர், அப்போதிருந்த கச்சியினிலைமை ஒன்றையும் "வயிரமேகன் தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி" என்று பதிக முடிவில் வெளியிட்டருளினர். திருத்தேவனார்தொகைத் திருமாலைப் பாடநேர்ந்தபோது, இவ்வாழ்வாரே—

''மாவருந்திண் படைமன்னை
வென்றிகொள்வார் மன்னு நாங்கைத்
தேவருஞ்சென் றிறைஞ்சுபொழிற்
றிருத்தேவ னார்தொகையே ''

(பெ. தி. 44. 2.)

என்று தாம் பாடப்புக்க தலத்துக்கன்றி, அத்தலத்தைத் தன்னுட் கொண்ட திருநாங்கூருக்கு, தாம் நேரிற்கண்ட வீரர் செயலொன்றை விசேடணமாக்கிக் கூறியதும் ஈண்டு ஒப்பிட்டறியத்தக்கது. பழைய அடியாரெல்லாம் ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் தலயாத்திரை செய்து பதிகங்கள் பாடி வந்தவரென்பதும், அவ்வப்போது கண்ட விசேடச் செய்தி களும் அவர்கள் வாக்கில் தன்னடைவே அமைவதுண் டென்பதும் நாம் நன்கறிந்தவை. அம்முறையே, திருமங்கை மன்னன் கச்சிப்பதி சென்று அட்டபுயகரத்துப் பெருமானைப்

பாட நேர்ந்தபோது 'மருவலர் தம் முடல்துணிய வாள்வீசும் பரகாலராகிய' தம்மையும் வியப்புறச்செய்த வீரச்செய்தி யொன்று நிகழ்ந்ததைக் கச்சிக்கு விசேடணமாக்கி அவர் கூறினர் எனின், அது கவியின் இயற்கைச் சிறப்பைக் காட்டுமேயன்றிப் பிறிது குறிக்குமோ?

தம் காலத்தே பெருவேந்தனும் வீரனுமிருந்த பல்லவனையும் வெற்றி கொண்ட அரசனொருவனது அரிய பெரிய செயலை வீரசிகாமணியாகிய ஆழ்வார் நேரில் அறிந் திருந்தும், அதனை மறைத்துச் செல்வதற்கு, வீரத்தால் அப்பல்லவனுக்கு ஆழ்வார் பட்டிருந்த கடமையென்னே? வென்ற வேந்தன் எத்தகையவனாயினும், வீரத்தால் அவனடைந்த புகழைச் சூரரும் பண்டிதருமாயுள்ள இவ் வாழ்வார் புகழாமல் வேறு யார் புகழ்வதற்கு உரியவர்?

திருநறையூர்த் திருமாலை வழிபட்டுத் திருப்பணி செய்த கோச்செங்கணனைப் பரமபாகவதனாகப் புகழ்ந்து வருந் திருமங்கை மன்னன், அவன் சிவபிரானுக்கு 70-மாடக் கோயில் கட்டிப் பெருமை பெற்றதை—

"இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோ **ளீசற்**
**கெழின்மாட மெழுபதுசெய்** துலக மாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே"

என்று சிறப்பித்துப் போந்தனர்; இங்ஙனஞ் சிறப்பித்தது, திருமாலடியவனாக அவ்வரசனைப் பெரிதும் புகழ்ந்துவருஞ் சந்தர்ப்பத்துக்குப் பொருந்தாது போற் றோன்றினும்[1], அவன் நிகழ்த்திய பெருஞ்செயலொன்றை மறையாது எடுத்துக்கூறுவதில் இவ்வாழ்வார்க்குள்ள விருப்ப மிகுதியை அவ்வடிகள் குறிப்பிடுவனவன்றோ?

---

1. இங்ஙனஞ் சிறப்பித்துப் போந்ததற்கு, ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளை வேறுகருத்து நயம்பெறக் கூறியருளுவர்.

*பல்லவமல்லனது வீரச்சிறப்பையும் திருமாலடிமைத் திறத்தையும் ஆழ்வார் புகழநேர்ந்த காலமும் சந்தர்ப்பமும் முற்றும் வேருக வேண்டுமென்பதும், இரட்டவரசனை வயிரமேகனை அவர் தற்செயலாகப் புகழ்ந்தது, அவனது வீரம்பற்றியேயன்றித் திருமாலடிமைத் திறம்பற்றி யன்றென்பதும் நாம் நன்ருக அறிந்துகொள்ளத்தக்கன[1]''*

இவ்வாறு நான் கூறிய சமாதானம் அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்படின், ஆற்ருெழுக்கான பொருளமைதி யுடன் ஆழ்வார் வாக்கியல்புக்கு ஏற்புடையதாகவும் சாஸனவாதரவு பெறுவதாகவும் உள்ள என்கருத்து முடிபாகத் தடையில்லை.

இவ்வாறன்றி, வயிரமேகன் என்பான் ஆழ்வாராற் புகழப்படும் பல்லவருள் ஒருவன் என்றே கருதப்படு மாயின், அவன் பல்லவமல்லன் என்ற நந்திவர்ம னேனும் (715—780), அவன் மகன் தந்திவர்மனேனும் (780—830) ஆதல் வேண்டும். என்னெனின், பிற்கூறிய தந்திவர்மனது 9-ம் ஆட்சி வருஷத்தில் அமைந்த உத்தர மேலூர்ச் சாஸனத்திற்ருன் வயிரமேகப் பெயர் முதன் முதலாகக் காணப்படுகின்றது.

அவ்வூரில் உள்ள ஒரு நீர்நிலை **வயிரமேக தடாகம்**[2] என்ற பெயர் பெற்றுள்ளது. கோயில்குள முதலியவை அவற்றைச் செய்வித்த அரசரின் பெயர் பெறுவது முற்கால வழக்கு. பல்லவர் பெயராலும் இத்தகைய நீர்நிலைகள் பெயர் வாய்ந்துள்ளன.[3]

---

1. செந்தமிழ், தொ - 22, பக். 6.
2. S. I. I. Vol. VI, No. 358, p. 167.
3. பல்லவர், தங்காலத்தே நாடு வளம்பெற ஏரிகளும் கால்களும் உண்டாக்கி அவற்றுக்குத் தம் பெயரிட்டு வழங்கி வந்தவர் என்பது—செங்கற்பட்டு ஜில்லா மகேந்திரவாடியில்

அதனால், உத்தரமேலூர்ச் சாஸனத்துக் கண்ட தடாகப் பெயரிலிருந்து அச்சாஸன காலத்தவனான தந்திவர்மனுக்கேனும், அவன் தந்தை நந்திவர்மனுக்கேனும் வயிரமேகப்பெயர் வழங்கிவந்ததென்று நாம் கருதலாம்.

தந்திவர்மனாயின், தன் பாட்டனும் இரட்ட வேந்தனும் வயிரமேகன் என்ற பெயருடையவனுமான தந்திதுர்க்கனிடமிருந்து அப்பெயர் அவன் பெற்றவனாதல் வேண்டும்.[1]

இவ்வாறன்றி அவன் தந்தை நந்திவர்மனாயின் 754-ல் தன்னை வென்று சமாதானமாகித் தன்மகளையும் மணம் புரிவித்துச் சென்றவனான அவ்விரட்ட வேந்தன் பெயரை, மேலே நான் கூறியபடி, தன் கௌரவ நாமமாக அவன் தரித்தவனாதல் வேண்டும். இவற்றுள் எது நேர்மையுடையது என்பது ஆராய்ந்து தெளியத் தக்கது.

திருமங்கை மன்னன் பரமேச்சுர விண்ணகரப் பதிகத்திற்கூறும் போர்கள் பலவும் பல்லவ மல்லன் என்ற நந்திவர்மன் காலத்து நிகழ்ச்சிகள் என்பது மேலே விளக்கப்பட்டது.

---

**மகேந்திர தடாகம்** என்று தன் பெயரால் மகேந்திரவர்மன் வெட்டிய ஏரியாலும், அவனே தன் சிறப்புப்பெயரையிட்டுப் **பெரும்பிடுகு வாய்க்கால்** என்று பாலாற்றிலிருந்து அமைத்த நீர்க்காலாலும், இவ்வாறே **பரமேசுவர தடாகம், சித்திரமேக தடாகம், திரையனேரி** என்று அவ்வப்பல்லவர் தத்தம் பெயரால் அமைத்த நீர்நிலைகளாலும் நன்கு விளங்கும். (Historical Sketches of Ancient India, pp. 367—68)

1. இவ்வாறே கருதி அறிஞர் சிலர் எழுதி வெளிவிட்டுள்ளார். (The Quarterly Journal of the Mythic Society, Vol. xiii, No 3, pp. 699—701.)

அந்நந்திவர்மன் மகனுன தந்திவர்மன்காலத்தும் திருமங்கையாழ்வார் வாழ்ந்திருந்தவராயின், அவன் காலத்துச் செய்திகளையும் அவர் கூருமற் போகார். அவ்வாறு ஒன்றுங்கூருது தந்தையான நந்தியின் செய்திகளையே ஆழ்வார் விரித்துரைத்தலால், அப்பெரியார் காலத்தில் பிரபலனுயிருந்த பல்லவவேந்தன் அந்நந்திவர்மன் என்றே சொல்லலாம்.

இது பற்றியே, "பார்மன்னு பல்லவர்கோன் பணிந்த பரமேச்சுர விண்ணகரம்" என்று, தம் காலத்தில் அப்பல்லவவேந்தன் அரசியலில் நிலை பெற்று விளங்கிநின்ற செய்தியை **இருமுறை** நிகழ்காலத்தாற் கூறுதல் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறே, இப்பல்லவனுக்குப் பகைவனு யிருந்த பாண்டியனை "**உலகுடை** மன்னவன் தென்னவனை" என்பர் ஆழ்வார். இப்பாண்டியன் பெருவலி பெற்றிருந்த மாறவர்மன் என்ற நெடுமாறன் என்பது, பெரியாழ்வாரைப் பற்றிய அதிகாரத்தில் விளக்கப்பட்டது. இந்நெடுமாறனும் தம் காலத்தவனே என்பதை '**உலகுடை** மன்னவன்' என்பதனுல் ஆழ்வார் குறிப்பித்தல் காண்க.

இவற்ருல், ஆழ்வார்காலத்துப் பல்லவர் பெருந்தகையாயிருந்தவன், அவராற் பரமேச்சுர விண்ணகரப் பதிகத்துப் புகழப்பட்ட நந்திவர்மன் என்றே தோற்றுகிருன்.

இந்நந்தியின் மகன் தந்திவர்மன் 780-ல் பட்டம் பெற்றவன், 780-க்குப் பின்பு திருமங்கையார் வாழ்ந்தவரெனின், அது, அவர் சம்பந்தமாக வழங்கும் செய்திகள் சிலவற்றுடன் முரணத் தடையில்லை. திருமங்கை மன்னன் சம்பந்தமூர்த்திகள் காலத்தவர் என்று திவ்ய

சூரிசரிதமுதலிய எல்லாச் சரித்திர நூல்களும் ஒருமுக மாகக் கூறுகின்றன. இதனை எவரும் மறுக்க வியலாது. அதனால் சம்பந்தர் காலமாகத் தெளியப்பட்ட 7-ம் நூற்றுண்டின் பிற்பாதியிலிருந்து வயிரமேகன் என்று பெயர்பெற்ற அரசன் காலம் வரை இவ்வாழ்வார் வாழ்ந்தவர் எனல்வேண்டும்.

அவ்வயிர மேகன் தந்திவர்மனுகுமிடத்து, 780-ல் பட்டம் பெற்ற அவன் காலத்துக்கும் சம்பந்தமூர்த்திகள் காலத்துக்கும் ஒன்றேகால் நூற்றுண்டு இடைப்படுதலால் ஆழ்வார்க்கும் 125-ஆண்டு வயதாகக் கொள்ள நேரும். இத்துணை நீண்டவயது மக்கட்குக் கூறப்படுவதைச் சரித்திரவறிஞர் ஆக்ஷேபிக்கத் தடையில்லை. அதனுல் 'வேதநூற் பிராயநூறு' என்றபடி, உலக வியல்புக்கு ஒப்பவைத்து நோக்குமிடத்து, தந்திவர்மனே ஆழ்வாரால் வயிரமேகன் என்று கூறப்பட்டவன் என்பது பொருந்தாதாகின்றது.

இவனையன்றி, இவன் தந்தை நந்திவர்மனுகவேனும் அந்நந்தியை வெற்றிகொண்ட இரட்ட வேந்தனுகவேனும் கொள்ளுமிடத்து, சம்பந்தர் காலத்திலிருந்து ஒரு நூற்றுண்டுக்கு உள்ளாகவே திருமங்கையார் வாழ்ந்திருந்தவர் என்பது அமையத் தடையில்லை.

ஒரு சிலர், பரமேச்சுரவிண்ணகரப் பதிகத்தில் ஆழ்வார், தாம் சிறப்பிக்கும் பல்லவமல்லன் செய்திகளைக் கூறுமிடத்து—**பண்டு, பண்டொருகால், முனநாள், அன்று** என்ற சொற்களைப் பெய்து பாடுதலால், அவ்வரசனுக்கு நெடுங்காலத்துக்குப் பின்பு இவர் வாழ்ந்தவராதல்வேண்டும் என்று கருதுவர்.

அவர் கருதுமாறு, காலங் கடந்த பழஞ்செய்தியைத்தான் அச்சொற்கள் குறிப்பிடவேண்டும் என்ற

நியதியில்லை. அவையாவும் 'கடந்த காலம்' என்ற பொருள் கொண்டு, ஒருவன் வாழ்நாளுட் சென்ற காலத்தையும், தலைமுறை சென்ற காலத்தையும் பொதுவாகவே காட்டக் கூடியன. "பண்டு மின்றும் மேலுமாய்" என்ற திருமழிசைப்பிரான் வாக்கில் (திருச்சந்த. 22), அச்சொல் இறந்தகாலம் என்ற பொருளில் வழங்குதல் காண்க.

ஒருவன் வாழ்நாளுள்ளே சிலபல ஆண்டுகள் கழிந்ததை மட்டுமன்றி, சில மாதங்கள் நாள்கட்கு முன் நிகழ்ந்தவற்றைக் குறிப்பதற்கும் அச்சொற்கள் முன்னோரால் நூல்களில் மிகுதியாக வழங்கப்பட்டுள்ளன[1]. அதனால், அச்சொல்வழக்கைக் கொண்டு ஒரு முடிவு கட்டுதல் பொருந்தாதென்க.

---

1. பண்டு முதலியவை, **சிலபல ஆண்டுகட்கு முன்னிகழ்ச்சி** குறித்தலை —'பண்டும் பண்டும் பாடுநருவப்ப... பெண்டிருந் தம்பதங் கொடுக்கும்' (புறம். 151), 'பண்டும் பண்டுங் கலங்கவிழ் மாக்களை யுண்டேம்' (மணிமே. 8, 18), 'பண்டறி கிளையொடு பதியுங் காணாள்' (ஷை 8, 15), 'பண்டுகாமரானவாறும்...ஒக்கவுரைத்திருமி' (பெரிய திருமொழி, 1, 3, 5), 'பண்டிவனுய னங்காய்' (ஷை. 3, 7, 2), 'வல்லேயுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்' (திருப்பாவை. 15), 'பண்டே எரிமுன் னுன்னைப் பாவீ தேவீயாகக் கொண்டே னல்லேன்' (கம்பரா, நகர்நீங். 48), (விருந்தினர்) 'இருவகையர், பண்டறிவுண்மையிற் குறித்து வந்தாரும், அஃதின்மையிற் குறியாது வந்தாருமென' (குறள், 43, பரி.) என்பவற்றுலும், **சில பல மாதங்கள் நாள்கட்கு முன்னிகழ்ச்சி குறித்தலை** —'பண்டறியேன் கூற்றென்பதனை' (குறள், 1083), 'நாணொடு நல்லாண்மை பண்டுடையேன்' (ஷை. 1133,) 'பண்டும் பலபல வீங்கிருள் காண்டும்' (திருவிருத்தம், 49) 'பண்டிப்புனத்து...கண்டிக்களிற்றையறிவன்' (யாப். வி. பக்.

இன்னும், அவர், வயிரமேகன் என்பது பல்லவர்க்குப் பொதுவாக வழங்கிய குடிப்பெயர் என்று பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானத்தால் அறியப் படுதலின் அப்பெயர் வழக்கைக் கொண்டு ஆழ்வார் காலவரையறை செய்தல் கூடாதென்பர்.

இவ்வயிரமேகப்பெயர் பல்லவர்க்குள் முதன்முதல் வழங்கத் தொடங்கியது, இராஷ்டிரகூடனான தந்தி துர்க்கன் சம்பந்தம் அப்பல்லவர்க்கு உண்டான பின்பே யாதல் வேண்டும் என்பது மேலே கூறப்பட்டது. அப் பெயரைப் பல்லவவரசர் சிலர் பெற்றிருந்தனர் என்பதற் குச் சாஸனக்குறிப்பு உள்ளதாயினும், அது பல்லவரது குடிப்பொதுப் பெயராக வழங்கியதென்பதற்கு ஆதாரம் ஒன்றுமே இன்று.

சிலர் கருதியதுபோல, அவ்வாறு பொதுப்பெயராக வயிரமேகப் பெயர் வழங்குவதென்று பெரியவாச்சான் பிள்ளை எழுதினவரும் அல்லர். 'மன்னன்...வயிரமேகன்' என்ற தொடர்க்கு அப்பெரியார் எழுதிய வியாக்கியான பந்தியாக அச்சுப்பிரதியில் உள்ளதாவது:—

"ராஜா-தொண்டைமான் சக்கரவர்த்தி; வயிரமேகன் என்று அவற்கு[க்குடி]ப் பெயர்" என்பதே.

---

102) 'பண்டையில சிறப்பால்' (குறள், 1152, பரி.) 'முனனுந தொழத் தோன்றி' (யாப். வி. பக். 402), 'வந்தணங்கா மன்னர் தேய முன்னாள்' (இறை, களவியல், 156. உதா.) 'முன்னாள் முறைமையின்... அல்லிடைப் பெயர்ந்தனர்' (சிலப். 13, 135-6), (முன்னொருகா லென்மகனைக் கண்டே னென் கண்குளிர' (சீவக. (1807), 'பகடுந்திவந்தார் அன்றவிய ...வேல்கொண்ட கோன்' (இறை, களவியல், 158. உதா.) 'அன்று நீ செல்லக் கிடவென்றாய்' (பொய்யா மொழியார் பாட்டு—தமிழ்நா. சரிதை, 76) என்பவற்றாலும் தெளிக.

இவற்றுள் **அவற்கு[க்குடி]ப் பெயர்** என்பதிலுள்ள குடி என்பது பிற்காலத்தவரால் இடைச்செருகப்பட்ட சொல் லாகும். இச்செய்தி, அவ் வாக்கியத்தை விளக்கவந்த முன்னோரான அரும்பதவுரைகாரர்—"**அவற்குப் பெயர் — சக்கரவர்த்திக்குப் பெயர்**" என்று குடியைவிலக்கிப் பொருளெழுதிச் செல்வதனாலும், "**குண்டலி தாக்ஷரம் க்வாசித்கம்,**[1] **அரும்பதத்துக்குப் பாடமில்லை**" என்று, பதிப் பாளரே கீழ்க்குறிப்பில் 'குடி' என்பது இடைச்செருகல் என்பதைத் தெளிவாக்கியிருத்தலாலும் விளக்கமாகும்.

ஆகவே, வயிரமேகன் என்பது பல்லவக்குடியின் பொதுப்பெயரன்றிப் பல்லவ சக்கரவர்த்தியொருவன் பெயர் என்பதே பெரியவாச்சான்பிள்ளையின் திருவுள்ளம் என்பது நன்குவெளியாதல் காண்க.

மற்றுஞ்சிலர், வயிரமேகனென்ற பெயர் வேறு பல்லவர் சிலர்க்கும் வழங்கியிருத்தல் சாஸனங்களால்[2] அறியப்படுகின்றதென்றும், அவருள் ஒருவனையே ஆழ்வார் கூறினராதல் வேண்டும் என்றும் கருதுவர். அச்சாஸனங்களின் எழுத்தமைதியால், அவை தந்தி வர்மன் காலத்துக்குப் பிற்பட்டவையே என்பது சாஸன வாராய்ச்சி வல்லார் தெளிய அறிந்ததாம்.

இத்தந்திவர்மன் மகனான தெள்ளா றெறிந்த நந்தி வர்மன் ஆழ்வாராற் பாடப்படுதற்கேற்ற திருமாலடி மைத்திறம் உள்ளனவல்லன். இத்தெள்ளாற்றுநந்தியின் மகனும், பேரனும், ஆசாரியத் தலைவரான ஸ்ரீமந் - நாத முனிகள் விளங்கிய காலத்தில் வாழ்ந்திருந்தவர்கள்.

---

1. வளைவுகளுக்கு உட்பட்ட எழுத்துக்கள் வழக்கருமை யானவை என்பது இதன் பொருள்.

2. Ep. Rep. Nos. 150 and 152 of 1916.

அவ்வாசாரியர்காலத்துப் பல்லவருளொருவனைத் திருமங்கைமன்னன் பாடினரென்றல் சிறிதும் பொருந்தாதென்பதைப்பற்றி, முன்னும் கூறப்பட்டது; பின்னும் விளக்கப்படும.

மற்றும், இவ்வாழ்வார் காலம்பற்றி நிகழ்ந்த தடைக்கு யான் எழுதிய விடைகள், "திருமங்கையாழ்வாரும் தந்திதுர்க்கனும்"[1] என்ற கட்டுரையால் அறியத்தக்கன.

ஆகவே, தந்திவர்மன் அவன் மகன் நந்திவர்மன் இவர்கள்பின்வந்த பல்லவருள் வயிரமேகப்பெயர் தரித்திருந்தவர் எவராயினும், அவர்காலத்தில் ஆழ்வார் ஒருபோதும் இருந்தவராகார் என்பதே உறுதியென்க.

இவற்றால், திருமங்கையார் காலத்தவனாகத் தெளியப்பட்ட வயிரமேகன்—தந்திவர்மன்தந்தை நந்திவர்மன், அல்லது அவன் தாய்ப்பாட்டனும் இரட்டவேந்தனுமான தந்திதுர்க்கன் என்ற இருவரில் ஒருவன் என்பதே முடிவாதல் காணலாம்.

நந்திவர்மனாயின், தன்னை வென்ற இரட்டவேந்தனது வயிரமேகப்பெயரைத் தன் கௌரவ நாமமாக அவன் தரித்தவனாதல்வேண்டும் என்று மேலேகூறினேன். இங்ஙனம் தரித்தான் என்பதும், நந்திவர்மன் வீரப் பெருமைக்கு இழுக்கென்று கருதப்படுமாயின், மகாமேகன், சித்திரமேகன், ஸ்ரீமேகன் என்று அவன் முன்னோர் கொண்டிருந்த பெயர்கள்போல,[2] வயிரமேகன் என்பது, அந்நந்திவர்மன் பிறரிடமிருந்தன்றித் தானே

1. செந்தமிழ், தொகுதி,22 பகுதி-1.

2. மகாமேகன் என்பது மகேந்திர வர்மனுக்கும், சித்திரமேகன், ஸ்ரீமேகன் என்பன இராஜஸிம்மனுக்கும் சாஸனங்களிற் பயில்வன.

பெற்ற சிறப்பியற்பெயர் என்று கொள்ளல் வேண்டும். எவ்வகையினும் வயிரமேகப்பெயர் நந்திவர்மனுக்குரிய தென்பதும் பொருத்தமேயாம்.

இதற்கு வேறுசில சான்றுகளும் உள்ளன. **முதலாவது**—அட்டபுயகரப் பதிகத்தின் இறுதிப்பாட்டில் "வயிரமேகன் தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி" என்று கூறிய ஆழ்வார், அடுத்துப் பாடிய பதிகத்தின் ஆரம்ப முதலாக முடிவுவரை, தன் பிள்ளைத் திருநாமமிட்டு நந்திவர்மன் பிரதிஷ்டித்த பரமேச்சுரவிண்ணகரத்தை அவன் போர்ப் புகழ்களோடு தொடுத்துப் பாடுகின்றார்.

வேறிடையீடில்லாமல் அமைந்துள்ள இத்தொடர் பினின்று, வயிரமேகனும் நந்திவர்மனும் ஒருவன் என்பதும் ஆழ்வார்திருவுள்ளமென்று கொள்ளக் கூடிய தாகும்.

வயிரமேகன் வலிபுகழ்கள் சூழ்ந்துள்ளனதாகக் கச்சிப்பதியைப் பாடிய ஆழ்வார், அப்பதிக்கு அரசனை அவன் வெற்றித்திறங்களை விரித்தற்கே, பரமேச்சுர விண்ணகரப்பதிகத்தை அடுத்துவைத்துப் பாடினர் எனல் மிகப்பொருத்தமாதல் கண்டு கொள்ளலாம்.

**இரண்டாவது—(தொண்டையர்கோன்) வணங்குநீண் முடிமாலை வயிரமேகன்** என்று ஆழ்வார் அருளிய தொடர், நந்திவர்மனது சாஸனத்தில் அவன் புகழ்ச்சியாக அமைந்த வடமொழிவாக்கியத்தின் மொழிபெயர்ப்பாக அமைந்துள்ளதாகும். அஃதாவது—

**ப்ரணதாவநீபதி மகுடமாலிகாலீட சரணாரவிந்த[1] :**

என்பது. 'வணங்கும் மன்னரது முடிமாலைகளால் தழுவப்பெற்ற பாததாமரைகளை யுடையவன்' என்பது

---

1. S. I. I. Vol. II, p. 366.

இதன் பொருள். இவ்வாக்கியக்கருத்தையே ஆழ்வார் அருளியதொடர் உட்கொண்டிருத்தல் ஒப்பிட்டறியத் தகும்.

'வணங்கு நீண்முடிமாலை' என்பதற்கு—'தன்னை வணங்குகின்ற (மன்னரது) முடிகளாகிய மாலையை உடைய' என்பது பொருள். தண்டனிட்டு வணங்கு வோரின் முடியாகிய மாலையைத் தாங்கிநிற்பேோனது உறுப்பு, அவனது அடியே—என்பது தானே பெறப் படுதலின், 'முடியடிமாலைவயிரமேகன்' என்றது, பாட் டமைதி நோக்கிச் சொற்சுருங்க 'முடிமாலை வயிரமேகன்' என்று ஆழ்வார் கூறலாயினர் என்க. இவ்வாறன்றி 'வணங்குவோரின் முடியாகிய மாலையைத் தன் தோளி லேனும் தலையிலேனும் அணிந்தவன்' என்று அத்தொடர்க்குக் கருத்துக்கூறல் முற்றும் பொருந் தாமை காணலாம்.

ஆகவே, நந்திவர்மனது புகழ்ச்சியாகத் தங் காலத்து வழங்கிய வடமொழித்தொடரின் கருத் தமையவே, ஆழ்வார் தம் பாடற்றொடரை அமைத்தனர் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

**மூன்றாவது**—வயிரமேகவாய்க்கால் என்ற ஓடை யொன்று நந்திவன்மமங்கலம் என்ற ஊரில் உள்ள தென்பதும்,[1] வயிரமேகபுரம் என்ற ஊரில் நந்தீசுவரம் என்ற ஆலயமுள்ளமையும்[2] சாஸனத்தால் தெரியவரு கின்றன. இவ்வூர்களும் வாய்க்காலும் அரசனொருவன் பெயர்பெற்றன என்றும், அதனால் நந்திவன்மனும் வயிர மேகனும் ஒருவனே யென்றும் கருதற்கு இடமுண்மை தெரியலாகும் இம்மூன்று ஏதுக்களாலும் வயிரமேகன்

1. An. Rep: Nos. 458 and 466 of 1908.
2. Ibid. Nos. 253-258 of 1913.

என்பான் நந்திவர்மன் என்பதற்கும் பொருத்தமுண்மை காண்க.

இரட்டவேந்தனிடமிருந்து இவ்வயிரமேகப் பெயரை நந்திவன்மன் பெற்றவனுயின், அவ்விரட்டன் கச்சிப்பதியைக் கைப்பற்றிய 754-க்குப் பின்பும் ஆழ்வார் வாழ்ந்தவர் என்றும், அப்பெயர் நந்திக்கு இயல்பிலமைந் திருந்ததாயின்—அவ்வமைதிக்குக் காலவரையறை கூற இயலாமையின் — பொதுவாக நந்திவன்மனுட்சியில் அப்பெரியார் விளங்கினவர் என்றும் உணர்ந்துகொள்க. ஆக, இதுவரை செய்துபோந்த ஆராய்ச்சியால், திருமங்கைமன்னன், பல்லவமல்லனுன நந்திவன்மன் காலத்தில் விளங்கிய பெரியார் என்பது எல்லா வகையாலும் தெளிவாயிற்று.

நந்திவன்மன் 715-ல்பட்டம்பெற்றதற்குப் பின், தன் பிள்ளைத் திருநாமத்தாற் பரமேச்சுரவிண்ணகரங் கட்டிப் பிரதிஷ்டித்ததற்கும், திருமங்கைமன்னன் அவ்விண்ணகரப்பதிகத்தில் விரிவாகப் பாடியவாறு போர்கள் பலவற்றை அவன் நடத்தியதற்கும் சிலபலவாண்டுகள் சென்றிருத்தல்வேண்டும் என்றே நாம் கருதலாம்.

தனக்குப் பல முறை பெருவெற்றிகளைத் தந்து, தன் அரசியலை நிறுவியுதவிய உதயசந்திரன் என்ற சேனுபதிக்கு—அவன் வேண்டுகோட்படியும் அவன் செய்த பேருதவிக்குப் பிரதியாகவும்—தன் 21-ஆம் ஆட்சி வருஷத்தில் குமாரமங்கலம் விளத்தூர் என்ற கிராமத்தைச் சதுர்வேதிகளான பிராமணர்நூற்றெண்மர்க்கு அச்சேனுபதியே தன் பெயரால் தானஞ்செய்யும்படி நந்திவர்மன் கட்டளையிட்டான். என்று உதயேந்திரசாஸனம் கூறுகின்றது.[1]

1. S. I. I. Vol. II, p. 372.

இதனால் 736-க்குச் சிறிது முன்பாகத்தான், ஆழ்வாராற் பரமேச்சுரவிண்ணகரப்பதிகத்திற் கூறப் பட்டனவும் உதயசந்திரன் உதவியனவுமான வெற்றி களை நந்திவன்மன்பெற்றவன் என்று கொள்ளப்படும்: படவே, அவ்விண்ணகரப்பதிகம் 736-க்குப் பின்பே பாடப்பட்டதென்பது பெறப்படுகின்றது. பண்டு, முனநாள் என்று இத்தகைய சொற்களால் அவ்வெற்றித் திறங்களை ஆழ்வார் விசேடித்தலால், குறைந்தது 8 ஆண்டுகள் அப்பெரியார் பாடுதற்கு முன் அப்போர்கள் நடந்தனவென்று கொள்ளின், 744-ல் அப்பதிகம் இயற்றப்பெற்றதாக வேண்டும்.

இனி, அவ்விண்ணகரப்பதிகத்துக்கு முன்பாட்டில்— அஃதாவது அட்டபுயகரப்பதிகத் திறுதியில்—கூறப் பட்ட வயிரமேகன் என்பான் முற்கூறிப் போந்தபடி இரட்ட வேந்தனை தந்திதுர்க்கனையினும், அவன் பெயரைத் தன் கௌரவ நாமமாகத்தரித்த நந்திவர்மனை யினும், அவ்விரட்டனால் கச்சி கைப்பற்றப்பட்ட 754-க்குப் பின்பே, அவ்வட்டபுயகரப்பதிகம், பாடப் பட்டதாக வேண்டும்.

ஆகவே, உத்தேசம் 744-க்கும் 754-க்கும்உட்பட்ட நந்திவன்மனது ஆட்சியிடைக் காலத்தில் திருமங்கை மன்னன் விளங்கியிருந்தவர் என்பது பெறப்படத் தடையில்லை.

'பார் மன்னு பல்லவர்கோன்'
'வயிரமேகன் தன்வலி தன்புகழ் சூழ்ந்தகச்சி'

என்ற ஆழ்வார் திருவாக்குக்கள் இக்கொள்கையை உறுதிப்படுத்தல் மேலே விளக்கப்பட்டது. நந்திவன் மனது அவ்விடைக்காலம் திருமங்கையாரது வாழ் நாளின் பிற்பகுதியாகக் கொள்ளற்குரியது. முற்பகுதிக்

காலமோ, 7-ஆம் நூற்றுண்டாகும். இதற்குக் காரணம், அந்நூற்றுண்டினரும், சிவனடியாருமான சம்பந்த மூர்த்திகளை இவ்வாழ்வார்காலத்திருந்தவராக வைஷ்ணவ சரித்திர நூல்கள் யாவும் ஒருமுகமாகக் கூறுதலேயாம்.

அவற்றுள் திவ்யசூரிசரிதம்:—திருமங்கைமன்னன் புத்தரை வாதில்வென்று தம் திருநகரிக்கு எழுந்தருள் வதைச் சிவனடியாரான ஞானசம்பந்தமூர்த்திகள் அறிந்து தம்மூரான சீகாழியில் அவரை எதிர்கொள்ள, அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் மரியாதைகள் செய்து கொண்டனரென்றும், தம்மூர்க்குள் ஆழ்வாரை வருமாறு விரும்பிய சம்பந்தர்க்கு, 'திருமால் திருப்பதியல்லாதவிடத்துத் தாம் செல்வதில்லை' என்று ஆழ்வார் கூற, சீகாழியில் முன்பு இராமபிரான் சந்நிதியொன்றிருந்து அவைதிகர்களாற் பின்பு பாழாக்கப்பட்டதென்றும், அதனுட் கோயில்கொண்டிருந்த திருவுருவம் அடியாரொருவரால் தம் மாளிகையில் ஏகாந்தமாக ஆராதிக்கப்பெற்று வருகின்றது என்றும் சம்பந்த மூர்த்திகள் தெரிவிக்க, ஆழ்வார் அவருடன் அவ்வடியாரது மாளிகை சென்று அப்பிரானைத் தரிசித்துப் பதிகமொன்று அருளிச்செய்தனரென்றும், அதுகேட்ட ஞானசம்பந்தர் மகிழ்வுற்று, அத்திருமாலை முன்போலவே கோயிலிற் பிரதிஷ்டிக்கும்படி தம்மடியார்க்கு ஆணையிட அவ்வாறே காழிச் சீராமவிண்ணகரம் புதிய பிரதிஷ்டை பெற்றுச் சிறப்புற்றதென்றும் திவ்யசூரிசரிதம் கூறுகின்றது.[1]

சம்பந்தர்க்கும் ஆழ்வார்க்கும் வாதம்நடந்ததாகப் பிற குருபரம்பரைகள் கூறும் செய்தியினும், இச்சரிதக்

1. திவ்யசூரி சரிதம் - - தமிழ் மொழிபெயர்ப்பு (பக். 140—41).

கூறு மிக அடுத்த ஊர்களில் வாழ்ந்து விளங்கிய அவ்வடியார்கட்குப் பெரிதும் பொருத்தமுடையதன்றோ?

**சம்பந்தர் காலம்**

இனிச் சம்பந்தமூர்த்திகளின் காலத்தைப்பற்றி அறிஞர் பலரும் அறுதியிட்டிருக்கின்றனர். அம்முடிவை நாமும் இங்குச் சுருங்கச் சோதித்துக் கொள்வோம், சிறப்பாக மூன்று சரித்திரகாலங்களைக் கொண்டு அச்சிவனடியார்வாழ்நாளை நாம் தெரிந்துகொள்ளக் கூடும் ;

அவையாவன :—

1. சம்பந்தரால் சைனசமயத்தினின்றுசைவசமயத்துக்குத் திருப்பப்பட்டபாண்டியன் காலம்.

2. சம்பந்தர்க்குச் சமகாலத்தவரான சிறுத்தொண்டரால் வாதாபித்தொன்னகரம் துகளாக்கப்பட்ட காலம்.

3. சம்பந்தர் காலத்தவரான அப்பரால் சைனத்தினின்று சைவத்துக்குத் திருப்பப்பட்ட பல்லவன் காலம். இவற்றுள் :—

**முதலாவது** :—சம்பந்தமூர்த்தியால் திருத்தி அடிமை கொள்ளப்பட்ட பாண்டியன், 'நெல்வேலிவென்ற நின்ற சீர் நெடுமாறன்' என்று பெரியபுராண முதலியவை கூறுகின்றன. இந்நூல் 54-ம் பக்கத்திற் குறிக்கப்பட்ட பாண்டியவமிசாவளியில் 4-ம் எண்ணுக்குரிய அரசன் இவனே என்பது சரித்திரவறிஞர் துணிபாகும் ; இதனை, அவ்விடத்து விளக்கியுள்ளேன்.

இந்நெடுமாறன் ஆட்சி தொடங்கிய காலத்தைத் தெளிவாகத் தெரிய இடமில்லை. ஆயினும், மேற்கூறிய

வமிசாவளியில் 7-ஆம் எண்ணுக்குரியவனும், 767-ல் பட்டம் பெற்றவனுமாகிய பராந்தகன்-நெடுஞ்சடையனுடைய கொட்பாட்டனே இப்பாண்டியன் என்பது தெரியவருதலால், இவன் ஆட்சி தொடங்கிய காலத்தை நாம் அளவிடக்கூடியதேயாம்.

தலைமுறை யொன்றுக்கு முப்பதாண்டுகொண்டு அரசர் வமிசத்தைப் பொதுவாகக் கணக்கிடுவதில் உண்மையறிய இடமுண்டு. நீண்ட தலைமுறைகட்கு இம்முப்பதாண்டளவு அதிகம் என்று சொல்லக் கூடுமேனும் குறைந்த தலைமுறைகட்கு இதனைக் கொள்வது பொருந்தும்.[1] இம்முறையில் நோக்குமிடத்து 767-ல் பட்டம்பெற்ற நெடுஞ்சடையனுக்கு மூன்றாந் தலைமுறையினனான அவன் கொட்பாட்டன் பட்டம் பெற்றது 677 ஆகும். இஃது உத்தேசகாலமேயாதலின் சிறிது முன்பின்னாக அமைதல் கூடியதே. அதனில் 10, 15 வருஷம் கூடக் குறைய நேருமேயன்றி நீண்டகாலங் கடவாது.[2]

அரசனொருவன் 50, 60-வருஷம் ஆண்டவனாயின், அவன் மகன் பேரன் இவரது ஆட்சிக் காலவளவிற் சுருக்கமேற்படுவது இயல்பாம். அதனால், 670 அல்லது 680-ல் பட்டம் பெற்றவனாகவே நெல்வேலி வென்ற நெடுமாறனை நாம் கொள்ளத் தடையில்லை. எனவே,

---

1. பதிற்றுப்பத்தில் சேரர் எண்மர்க்குக் கூறப்பட்ட ஆட்சிக்காலங்களை அளவிடினும் இம்முப்பதாண்டளவே பெறப்படுதல் இங்கு அறியத்தக்கது.

2. பல்லவ மன்னனுக்கும் அவன் பேரனுக்கும் இடைப்பட்ட காலம் நீண்டுளதென்று கூறக்கூடுமேனும், அந்நீட்சி மிகவும் அரியதொன்றாதலின், அத்தகையதைப் பொதுவாகக் கொள்ளுதல் கூடாதென்க.

அந்நெடுமாறனைச் சைனத்தினின்று திருத்திப் பணி கொண்ட சம்பந்தரும் அக்காலத்தவரே என்பது பெறப் படுதல் கண்டுகொள்க.

இரண்டாவது:—சம்பந்தர் காலத்தவராய் அவராற் புகழப்பட்ட சிறுத்தொண்ட நாயனாரை—தம்நாட்டு வேந்தனது யானைப் படைத் தலைவராயிருந்தவர் என்றும், 'மன்னவற்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித் தொன்னகரந் துகளாக்கி' வந்தவர் என்றும் பெரியபுராணம் கூறும்.

சளுக்கிய ராஜதானியாகிய வாதாபியை அழித்து வெற்றி கொண்டவர் பல்லவரேயாதலின், சிறுத் தொண்டர் அப்பல்லவரது படைத்தலைவருள் ஒருவராய்ச் சென்றவர் என்பது பெறப்படுகின்றது.

## வாதாபி போர்-1

சரித்திரத்தை ஆராயுமிடத்து, வாதாபிநகரம் இரு முறை பல்லவரால் தாக்கியழிக்கப்பட்டுளது. உத்தேசம் 640—670-வரை ஆண்டவனும் மேற்குறித்த பல்லவ வமிசாவளியில் 3-ம் எண்ணுக்குரியவனுமான நரசிம்ம வர்மன், சளுக்கிய ராஜ்யத்தின்மேற் படையெடுத்துச் சென்று அதன் அரசனை இரண்டாம் புலகேசியுடன் பொருது அவனையும் அவனகரமான வாதாபியையும் அழித்தான் என்பது சரித்திரப் பிரசித்தம். இதுபற்றியே 'வாதாபி கொண்ட நரசிம்மவர்மன்' என்று இவன் சிறப்பிக்கப்படுவன். இவ்வாதாபி வெற்றி உத்தேசம் 640—653-க்குள் நிகழ்ந்திருத்தல் வேண்டும்.[1] இதுவே முதலாம் வாதாபியழிவாகும்.

---

1. புலகேசியின் மகன் 655-ல் பட்டம் பெற்றிருத்த லாலும், 642-ல் சீனயாத்ரிகரான யுவான்சுவான் புலகேசி யின் பெருமையைப்பற்றிக் கூறுதலாலும் இக்காலம்

## வாதாபி போர்-2

இனி, இரண்டாமுறை நடந்த வாதாபியழிவு, அந்நரசிம்மவர்மன் பேரன் பரமேச்சுரவர்மன் காலத்து நிகழ்ச்சியாம். மேற்கூறிய புலகேசியின் மகன் முதல் விக்கிரமாதித்தன், தன் தந்தையும் தலைநகரமும் பல்லவரால் அழிக்கப்பட்ட அவமானம் பொருது, பல்லவ ராஜ்யத்தின்மேற் படையெடுத்து 674-ல் உறையூரிற் பாடியிறங்கியபோது பரமேச்சுரவர்மன் பெரும்படையுடன் அவனை யெதிர்த்துப் போர் புரிந்து விரைவில் முறியடித்தோட்டியதோடு, சளுக்கிய ராஜ்யத்தின் மேற்றானே படையெடுத்துச் சென்று அதனை நிலைகலக்கி, அதன் தலைநகரையும் அழித்தனன் என்று கூரம், கைலாசநாதர் கோயில் முதலிய இடங் களிற் கண்ட சாஸனங்கள் கூறுகின்றன.

இவற்றுள் கைலாசநாதர் கோயிற் சாஸனத்தில் பரமேச்சுரவர்மன், 'ரணரஸிகனது நகரத்தைப் பாழாக்கின உக்கிரதண்டன்' என்று சிறப்பிக்கப்படு கின்றான். ரணரஸிகன் என்பது முதல் விக்கிரமாதித்த னுக்கு ஒரு பெயர் என்பது தெளிவாதலின், அவன் நகரம் வாதாபி என்பதில் ஐயமில்லை. இவற்றால் 674-ஐ அடுத்து இரண்டா முறையும் வாதாபி பல்லவரால் அழிபட்டதென்பது நன்கு விளங்கும்[1] இதனை வலியுறுத்த மற்றொரு சான்றும் உண்டு.

---

*கொள்ளப்படும். நரசிம்மவர்மன் வாதாபியில் நட்ட ஜயஸ்தம்பக்கல்லில், அவனது 13-ம் ஆடசியாண்டு குறிப் பிக்கப்படுதலால், 652-ல் இவ்வாதாபி வெற்றி நிகழ்ந்திருக்க வேண்டும்.*

1. *சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைச் சரித்திராசிரிய ரான டாக்டர்* **N. வேங்கடரமணய்யா M. A** *அவர்கள்,*

கோனாட்டுக் கொடும்பாளூர் என்ற ஊர், பழங்கால முதலே வேளிர் குலத்தாரது தலைநகராக இருந்த தென்பது, அவ்வூர்ச் சாசனங்களாலும், பெரிய புராணத்துள் இடங்கழிநாயனார் சரிதப்பகுதியாலும் தெரியலாம். கொடும்பை என்று சிலப்பதிகாரம் குறித் திருப்பதும் இவ்வூரேயாம்.

இந்நகரிலிருந்து ஆண்டு வந்த வேளிரின் வமிசாவளி அங்குள்ள மூவர்கோயிற் சாஸனத்தால் அறியப் பட்டுளது. அவ்வேளிருள் **பரதுர்க்கமர்த்தனன் என்பான் வாதாபி வென்றவன்** என்று சிறப்பிக்கப்படுகின்றான். இவனுடைய கொட்பேரன், விக்கிரமகேசரி என்பவன்; இவன் நந்திவன்மனுன பல்லவமல்லன் மகனும், 880ல் பட்டம் பெற்றவனுமான தந்திவர்மன் காலத்திருந்தவன் என்பது சாஸன வாயிலாகத் தெளிவாயறியப்படு கின்றது[1]

எனவே, 780 ல் வாழ்ந்த அவ்விக்கிரமகேசரியின் கொட்பாட்டன்—மேற்குறித்த 30-ஆண்டுத் தலைமுறைக் கணக்குப்படி—690-ல் வாழ்ந்தவன் என்பது பெறப்

---

பரமேசுரவர்மனால் வாதாபி அழிபட்ட செய்திபற்றி எழுதிய கட்டுரையில்—இரண்டாமுறை அந்நகரம் பல்லவரால் தக்கப்பட்டதன் உண்மையைப் பல காரணங்களால் நிரூபித்திருத்தல் அறியத்தக்கது. (Madras Christain College Magazine, October, 1827 )

1 தந்திவர்மனது 16-ம் ஆட்சி வருஷத்தில் மலையடிப் பட்டிச் சாஸனம் செய்வித்த விடேல்விடுகு முத்தரையன் என்பான், கொடும்பாளூர்த் தலைவனான விக்ரமகேசரியின் சமகாலத்தவனெனப்படுதல் அறியத்தகும். (Some Inscriptions of Muttaraiyars Journal of S. I Assosiation, July, 1911 )

படும். படவே, 690-க்கு 14-ஆண்டுகட்கு முன் பரமேச்சுரவர்மன் காலத்து நிகழ்ந்த வாதாபி வெற்றியையே, இக்கொட்பாட்டனுன பரதுர்க்க மர்த்தனன் அப்பல்லவன் சேனாதிபதியருள் ஒருவனைச் சென்று பெற்றவன் என்பது நன்கறியலாம்.[1]

நரசிம்மவர்மன் காலத்துக்கும் (உத்-640—670), தந்திவர்மன் காலத்துக்கும் (780—830) இடையே 140-ஆம் வருஷம் உள்ளமையால், தந்திவர்மன் காலத்தவனை விக்கிரமகேசரியின் கொட்பாட்டன் பெற்ற வாதாபி வெற்றி, நரசிம்மவர்மன் காலத்து நடைபெற்றது அன்றென்றும், அவன்பேரன் பரமேச்சுவர்மன் காலத்து நிகழ்ச்சி என்றும் கொள்ளலே இயைபுடையதாம்.

ஆகவே, பரமேச்சுரவர்மன் 'ரணரஸிகன் நகரை அழித்தவன் என்று சாஸனங் கூறுவதினின்று, 7-ம நூற்றாண்டின் பிற்பகுதியில், இரண்டாமுறையும் வாதாபிநகரந் தாக்கியழிக்கப்பட்டது என்பது தெளிவாகின்றது.[2]

---

1. (இராசாங்கத்துச் சாஸன பரிசோதகருள் ஒருவரான நண்பர் **ஸ்ரீ. ஏ. ரங்கஸ்வாமி ஸரஸ்வதி. பி. ஏ,** அவர்கள், கொடும்பாளூர் வேளிரைப்பற்றி எழுதிய கட்டுரையொன்றில்—இரண்டா முறையும் வாதாபிநகரம் பல்லவரால் அழிபட்டதுண்டென்றும், அது, பரமேச்சுரவர்மன் காலத்து நிகழ்ச்சி என்றும் ஆராய்ந்து கூறியிருத்தல் அறிஞர் அறியத்தக்கது. (The Vijaiyanagaram College Magazine)

2. 'பரமேச்சுரவர்மன் அழித்த 'ரணரஸிகபுரம்' என்பது வாதாபியாயின், தன் பாட்டனைப்போலத் தானும் வாதாபிகொண்டவன் என்ற சிறப்புப் பெயரை அப் பரமேச்சுரன் தரித்துக்கொள்ளத் தவறான்: ஆதலின்

இங்ஙனம் தெளியப்பட்ட இருவேறு வாதாபிப் படையெடுப்புக்களில், திருஞானசம்பந்தர் காலத்தவரான சிறுத்தொண்ட நாயனார் அடைந்த வெற்றி, அச்சம்பந்தர் காலத்து நெல்வேலிவென்ற நெடுமாறன் பாண்டிநாடாண்டுவந்தகாலத்து (உத்-680—710) நடந்ததாயிருக்க வேண்டுமேயன்றி, அவனுக்கு முற்பட்ட தொன்றாகாது. அந்நெடுமாறனும், விக்கிரமாதித்தனை வென்ற பரமேச்சுவர்மனும் சமகாலத்தவர்கள் என்பது அறியத்தக்கது.

பிறரெல்லாம் கருதியவாறு, சிறுத்தொண்டர் அடைந்த வாதாபிவெற்றி நரசிம்மவர்மன் காலத்ததாயின்—அவர்கள் கருத்துக்கேற்ப நெல்வேலிவென்ற நெடுமாறன் 640-ல் பட்டம் பெற்றவனாகவே கொள்ளினும்— அவனுக்கும் அவன் கொட்பேரன் நெடுஞ்சடையனுக்கும் 130—வருஷகாலம் இடையிடுகின்றது. இத்துணை நீண்டகாலத்தை மூன்று பரம்பரைக்குக் கொள்வது— முன் கொடும்பாளூர்த் தலைவர்களான விக்கிரமகேசரிக்கும் அவன் கொட்பாட்டனுக்கும் போலவே — அளவுகடந்து ஏற்புடைத்தாகாமை காணலாம்.

---

அவ்விக்கிரமாதித்தன் நகரம் உறையூராதல் 'வேண்டும்'-என்று கருதினர், புரொபஸர்-தூப்ராயில் துரையவர்கள். இக்கருத்துச் சிறிதும் ஏற்புடைத்தன்று. 'வாதாபி கொண்டவன்' என்ற பெரும்பெயரைத் தன்பாட்டன் ஏற்கனவே பெற்றிருந்தமைபற்றியே, அவன் பேரன், தன் முன்னோன் பெற்ற அப்பெரும்பேரைத் தனக்கும் உரியதாக்கி, அவன் கீர்த்திக்குத் தடைபுரிய விரும்பினனில்லை என்றே கொள்ளற்பாலது. அதனால் சில நாட்களளவில் விக்கிரமாதித்தன் தங்க நேர்ந்த அச்சோனாட்டூரை, அவனது நகரமாகக் கூறுதல் சிறிதும் அமையாதென்க.

கொடும்பாளூர்ச்சாஸனத்தால் இரண்டாம் வாதாபியழிவு தெளிவாயும் ஏற்றதாயுமுள்ளபோது, அதனையே சிறுத்தொண்டர்காலத்து நிகழ்ச்சியாகக் கொள்ளத் தடை யாது? என்க.

**மூன்ருவது:** — திருநாவுக்கரசுநாயனுரால் சைன மதத்தினின்று திருத்திக் கொள்ளப்பெற்ற பல்லவன், மகேந்திரவர்மன் என்பது. சரித்திரவறிஞர் முடிபாம், இவனுக்குக்கு ணபரன் என்ற மறுபெயருமுண்டு. இவன் சைனத்தினின்று சைவத்துக்குத் திரும்பிய செய்தியை திருச்சிராப்பள்ளிக் குகைக்கல் வெட்டொன்று குறிப்பிடுகின்றது[1]. அன்றியும், இவன் சைவசமயஞ் சார்ந்ததும் திருவதிகையிலிருந்த சைனப்பள்ளியை இடித்துத் தன் பெயரால் குணப(த?)ரேச்சுரம் என்ற சிவாலயங் கட்டினன் என்று பெரிய புராணம் கூறும். இப்பல்லவன் உத்தேசம் 600—640-வரை ஆட்சிபுரிந்தவன்.

அப்பர், சம்பந்தரைச் சந்தித்தபோது வயது முதிர்ந்தவராயிருந்தார் என்றும், 81-ம் வயதில் அந்நாயனுர் சிவபத மடைந்தனர் என்றும் சொல்லப்படுகின்றன. 7-ம் நூற்ருண்டுத் தொடக்கத்தில் அப்பெரியார் அவதரித்தவராகக் கொண்டால், 600 முதல் 681-வரை அவர் வாழ்நாளாகும்.

இளைஞரான சம்பந்தரை அவர் சந்தித்து அளவளாவிய செய்திகட்கெல்லாம், ஈண்டுக் குறித்த அவ்விருவர் காலநிலையும் ஏற்றதாக அமைதல் கண்டுகொள்க. இவற்ருல், சம்பந்த மூர்த்திகள், 7-ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் விளங்கியவர் என்பது தெளிவாகும்.

---

1. S. I I. Vol. I, p. 29.

இச்சிவனடியார்க்கு 16-வயது கூறப்படுவதால், 670 முதல் 686-வரை இவர்வாழ்நாளாகக் கொள்வது, மேற்கூறிய சரித்திர நிகழ்ச்சிகட்கெல்லாம் பெரிதும் ஏற்புடையதாகும்.[1]

இதனை விளக்குமிடத்து விரியுமாதலால், உய்த்தறிந்துகொள்க.

இனி, சம்பந்தர் காலத்தவராகத் திவ்யசரித முதலியவை கூறும் திருமங்கையாழ்வாரும் 7-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் விளங்கி யிருந்தவர் என்பது சொல்லாதே அமையும். முன்னரே யான் விளக்கிப் போந்தபடி, நந்திவன்மனது ஆட்சியிடையில் (744—754)வாழ்ந்திருந்த இவ்வாழ்வார் சம்பந்தர்க்குச் சமகாலத்தவர் எனவே, அஃது அவர் வாழ்நாளின் முற்பகுதியாகக் கொள்ளத்தக்கது.

சம்பந்தர்க்குரியதாக மேற் கூறிய காலம் திருமங்கையார்க்கும் ஏற்றது என்பதன் உண்மையை அவ்வாழ்வார் கூறும் மற்றோர் அரிய செய்தியும் உறுதிப்படுத்துவதாம். அதனை இனிக் கூறுவேன்.

''வயிரமேகன் தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி'' என்று, தங்காலத்து வேந்தனொருவனை அவனது வீரம் பற்றித் திருமங்கை மன்னன் புகழ்ந்து கூறியவாறே, வேறு வீரர்களையும் தந்திருப்பதிகங்களில்—

''ஒண்டிறல் தென்னனோட வடவர சோட்டங்கண்ட
**திண்டிற லாளர் நாங்கூர்''**
(பெரியதிருமொழி, 4, 5, 6).

---

1. சம்பந்தமூர்த்திகள் 655-ல் சிவஸாயுஜ்யம் பெற்றவராதல் வேண்டும் என்பதற்குப் பல காரணங் கூறுவர், தஞ்சை: ராவ்பஹதூர்: ஸ்ரீமாந் **கே. எஸ், ஸ்ரீநிவாஸபிள்ளை**

"'மாவருந்திண் படைமன்னை வென்றிகொள்வார்
மன்னும் நாங்கை" (ஷை. 4, 1, 2).

"மண்ணித் தென்கரைமேல் திண்டிறலார்
பயில் நாங்கை" (ஷை, 4, 1, 5).

"துண்ணென மாற்றூர்தம்மைத் தொலைத்தவர்
நாங்கை" (ஷை 4, 6, 2,).

"நண்ணூர்முனை வென்றி கொள்வார்
மன்னும் நாங்கூர்" (ஷை, 4. 7, 1).

என்று இவர் பாடுதல் அறியத்தக்கதாம். இவற்றுள் நாங்கூரில் உள்ள வீரர், ஆற்றல்மிக்க பாண்டியனோடு வடவேந்தனொருவனைப் போரிற் புறங்காட்டி யோடச் செய்த அருஞ்செயல் பலபட வியந்து பாராட்டப்படுதல் தெரியலாம். பாண்டியனையும் வடவரசனையும் அன்னோர் வென்றவர் எனவே, அவ்விருவராலும் எதிர்க்கப்பட்ட பேரரசன் பக்கத்து நின்றவர் அவ்வீரர்கள் என்பதும், 'வென்றி கொள்வார் **மன்னும்** நாங்கை, 'திண்டிறலார் **பயில்** நாங்கை' என இறந்தகாலத்தாலல்லாது நிகழ் காலத்தாற் கூறுதலின், அன்னோரை ஆழ்வார் நேரில் நன்கறிந்தவர் என்பதும் தெளிவாகப் பெறப்படுகின்றன,

அவ்வீரர்கள் தங்காலத்தவர் அல்லராயின், 'நடமாடும்' என்ற பொருளில் வழங்கும் **பயில்** என்ற சொல்லால் ஆழ்வார் கூறுரர் என்க.

அவ்வீரர்களுடைய நாங்கூர் சோணாட்டில் திருமங்கை மன்னனுடைய திருநகரிக்கு அணித்தாயிருத்மல், அங்ஙனம் இவர் அறிந்து வியத்தற்கு ஏற்றதாகின்றது.

மேற் கூறியபடி, ஆழ்வார் வாழ்ந்த 7, 8–ஆம் நூற்றுண்டுகளில், சோணுட்டில் ஆதிக்கம் பெற்றிருந்த பேரரசர் பல்லவர்கீழ் ஒடுங்கிப் பேருக்கு அரசராய் இருந் தவர்களே. அதனுல் அப்பல்லவரின் படையாளர்களே பாண்டிய வடவரசர்களைப் புறங்கண்ட நாங்கூர் வீரர்கள் என்பது நன்கு பெறப்படத் தடையில்லை.

இங்ஙனம் வெல்லப்பட்ட பாண்டியனும் வட வேந்தனும் யாவர்? இவர்க்குப் பகைவனுய் எதிர்த்த பல்லவன் யாவன்? என்பவை இப்போது ஆராய்ந்தறிய வேண்டுவனவாகும்.

திருமங்கைமன்னனது பிற்பகுதிக் காலமான எட்டா நூற்றுண்டில் வடவரசரது தென்னுட்டுப் படை யெடுப்பு இருமுறை நிகழ்ந்துள்ளன. முதலாவது— பல்லவமல்லனை நந்திவன்மனது இளமைக் காலத்தில் 741-க்கு அணித்தாகச் சாளுக்கியவேந்தனை **இரண்டாம் விக்கிரமாதித்தன்** (731-746) படையெடுத்து வந்து அப் பல்லவனை வென்று காஞ்சியைக் கைப்பற்றியதாகும்[1], இரண்டாவது — 754-ல் இரட்டனை **தந்தி துர்க்கன்** கச்சிமா நகரிற்பிரவேசித்து அதனைத் தன்வசப்படுத் தியதாகும்[2].

இவ்விரண்டு படையெடுப்புக்களை ஒழிய, பல்லவ பாண்டியர்களின் ஆதிக்கம் பெருகிச் சிறந்த அந்நூற் ருண்டிலே வேறுவடவேந்தர் தென்னுட்டுட் பிரவேசித் தனர் என்பதற்கு ஓர் ஆதரவும் இல்லை. இவ்விரண்டு படையெடுப்புக்களினும் சளுக்கியனும் இரட்டனும் பல்லவமல்லனை வென்றவர்கள் என்பது சாஸனங்களால்

1. Ep. Ind. Vol. ix, 29. p. 205.
2. Kadaba Plates—Ep. Ind. Vol. iv, p 334.

தெளியப்பட்டது. ஆதலின் அன்னோரை நாங்கைவீரர் வென்றவராக ஆழ்வார் கூற இடமே இல்லையெனலாம்.

இனி, 9-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் கி. பி. 804-க்கு அணித்தாக இராஷ்டிரகூட வேந்தனான **மூன்றாங் கோவிந்தன்** படையெடுத்து வந்து, பல்லவ மல்லன் மகன் தந்திவர்மனை வென்று கச்சியைக் கைப் பற்றினான் என்றும், அதனால் அத்தந்தியின் ஆட்சியே நிலைகுலையத் தென்னாட்டிற் பல்லவாதிக்கம் குறைய லாயிற்றென்றும் சாஸனம்[1] தெரிவிக்கின்றது.

இதனால், வெற்றியாளனான அவ்விரட்ட வேந்தனை யும் 'வடவரசு' என்று ஆழ்வார் கூற இடமில்லையாம்.

ஆகவே 8-ம் நூற்றாண்டிடையினும், 9-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தும் நிகழ்ந்த வடவர் படை யெடுப்புக்களைப் பற்றியதன்று மேற்குறித்த ஆழ்வார் வாக்கென்பது தெளிவாகும்.

இனி, திருமங்கையாரின் முற்பகுதிக் காலமான 7-ம் நூற்றாண்டிலே வடவேந்தர் படையெடுப்புக்கள் மும்முறை நிகழ்ந்துள்ளன. அவற்றுள் :

**முதலாவது** : சளுக்கிய வேந்தனான இரண்டாம் புலகேசி, மகேந்திரவர்மன் என்ற பல்லவன் காலத்து நடத்திய போரெழுச்சி.

**இரண்டாவது**: மேற்கூறிய புலகேசி, மகேந்திர பல்லவன் மகன் நரசிம்மவர்மன் காலத்து நடத்திய போரெழுச்சி.

**மூன்றாவது**: மேற்படி புலகேசியின் மகன் முதல் விக்கிரமாதித்தனது தென்னாட்டுப் போரெழுச்சி. இவற்றுள்:

---

1. Ind. Ant. Vol. iv, p. 155—127.

**1. முதற் படையெடுப்பு:** பல்லவனான மகேந்திர வர்மன் ஆட்சித்தொடக்கத்தில் 710-க்கு அணித்தாக, இரண்டாம் புலகேசி பல்லவராஜ்யத்தின்மேற் படையெடுத்துக் காஞ்சியைத் தாக்கினன் என்றும், இவன் பெருவலிக் காற்றாது, மகேந்திரன் தென்னாட்டில் ஓடி ஒளிக்கும்படியாயிற்றென்றும் கூறப்படுகின்றன. அதனால், 'வயவர சோட்டங் கண்ட' என்ற ஆழ்வார் கூற்றுக்கு இப்படையெடுப்பு ஏற்புடையதன்று என்பது தெரியலாம்.

**2. இரண்டாம் படையெடுப்பு:** அப்புலகேசியே நெடுங் காலத்துக்குப் பின்பு, முற்கூறிய மகேந்திரவர்மன் மகன் நரசிம்மவர்மன் காலத்தில் இரண்டாமுறை படையெடுத்து வந்தனன் என்றும்; இவனைத் தொண்டை நாட்டில் மணிமங்கல முதலிய போர்க்களங்களில் அந்நரசிம்மவர்மன் போராடித் தோற்றோடச் செய்ததோடு, அவன் தலைநகரான வாதாபிவரை தானே படைகொண்டு சென்று அந்நகரை அழித்தனன் என்றும், இப்போரில் புலகேசியும் இறந்து போயினன் என்றும் சொல்லப்படுகின்றன.

இப்போரை ஆழ்வார் குறிப்பிட்டவராகக் கருதல் கூடியதேயாயினும் இதுவும் ஏற்றதன்று. திருமங்கையார், பல்லவமல்லனான நந்திவன்மனது ஆட்சியின் இடைக்காலம் வரை (744-754) வாழ்ந்திருந்தவரென்பதை மேலே விளக்கிக் காட்டினேன். 640—653-க்குள் நடந்த மேற்குறித்த நரசிம்மவர்மன் வெற்றியைப் பற்றியதே ஆழ்வார் கூற்றெனின், அவ்வெற்றியை நேரில் அறிந்து பாடியபோது—நம் பெரியார்க்குக் குறைந்தது 15, 20 வயது கொண்டாலும்—625—630 ம்

ஆண்டுக்குள் அவரது அவதாரத்* காலம் ஆகின்றது. ஆகவே, 120—5 வயதுவரை அவ்வாழ்வார் வாழ்ந்தவர் எனல் வேண்டும்.

இந்நீண்ட ஆயுளளவு, இயற்கைக்கு மாறுன தென்று இக்காலச் சரித்திர நூலோர் கருதத் தடையில்லை. 'வேதநூற் பிராயம் நூறு மனிதர்தாம் புகுவரேனும்' என்று, திருமங்கை மன்னனுக்கு உடன் காலத்தவரான தொண்டரடிப்பொடிகள் பாடுதலால், ஆழ்வார்கள் நாளினும் நூற்றுக்கு மேற்பட்ட ஆயுளளவு, இயற்கைக்கு மாறுனதாகவே எண்ணப் பட்டிருந்தமை தெரியலாம். அதனுல்:—

**'மாவரும் திண்படை மன்னை வென்றிகொள்வார் மன்னும் நாங்கை'**

**' நண்ணூர்முனை வென்றிகொள்வார் மன்னும் நாங்கை'**

**' திண்டிறலார் பயில்நாங்கை'**

என்று, வடவேந்தனை வென்ற வீரரை நேரில் அறிந்து ஆழ்வார் புகழ்தற்கு ஏலாதபடி நரசிம்மவர்மனது வெற்றி காலங்கடந்திருத்தலின், அவன் காலத்து நிகழ்ந்த வடவேந்தன் படையெடுப்பைப் பற்றியதன்று அப்பெரியார் கூற்று என்பது தெள்ளிது. அன்றியும்—

**'தென்னனோ ட(வ்)வடவர கோட்டங் கண்டவர்**
**'துண்ணென மாற்றார் தம்மைத் தொலைத்தவர்'**

என்று, நாங்கை வீரர்களைத் திருமங்கையார் புகழ்தலினின்று, அவ்வீரர்கள் வென்ற போர்க்களம் சோழ நாட்டில் அமைந்ததென்றே கொள்ளற்குரியது.

பாண்டியனைத் துணைக்கொண்டு படையெடுத்து வந்த வடவேந்தனைத் துண்ணெனத் தொலைத்தவர் நாங்கைவீரர் எனவே, அப்பாண்டியனுதவி தனக்கு

எளிதிற் கிடைத்ததற்கேற்ற இடத்தைப் பற்றிக் கொண்டு அவ்வடவேந்தன் பல்லவனுட்சிக்குட்பட்ட சோணுட்டுட் புகுந்தவன் என்பதும், அங்ஙனம் புக்கவனை விரைந்தோடப் புறங்கண்டவர் அவ்வீரர் என்பதும் தொனித்தல் காணலாம்.

அங்ஙனம் பாண்டியனுதவுதற்கேற்ற இடம் அவன் நாட்டையடுத்த சோணுட்டுப் பகுதியாதலே பெரிதும் ஏற்புடையதென்க. நரசிம்மவர்மன் இரண்டா முறை வந்த புலகேசியுடன் நடத்திய போர்க்களங்களோ, தொண்டைநாட்டில் காஞ்சி நகரமும் மணிமங்கல முதலிய ஊர்களும் ஆகும். அவை, படையெடுத்து வந்த அவ்வடவேந்தனுக்குப் பாண்டியன் உதவற்கேற்ற இடம் ஆகாமையும், தொண்டை நாடுவரை சென்று பாண்டியன் வடவனுக்கு உதவி புரியும்படி நாங்கைவீரர் இடையிற் பொறுத்திரார் ஆதலின் அப்பாண்டியன் ஆங்குச்சேறல் கூடாமையும் கண்டுகொள்க.

இவற்ருல், ஆழ்வார் கூற்று 7-ம் நூற்ருண்டின் இடையில் நிகழ்ந்த புலிகேசியின் இரண்டாம் படையெடுப்பைப் பற்றியதும் அன்றென்பது தெரியலாகும்.

3. மூன்ரும் படையெடுப்பு :—மேற்கூறிய இரண்டாம் புலகேசியின் மகனுன விக்கிரமாதித்தன் என்பான், அந்நரசிம்மவர்மன் பேரன் பரமேசுவரவர்மன் காலத்தே தன்னகர்க்கும் தந்தைக்கும் பல்லவரிழைத்த அவமானம் பொருது, பல்லவனுதிக்கத்தைத் தொலைக்கவேண்டித் தக்ஷிணத்தை நோக்கிப் பலலக்ஷம் படையுடன்வந்து சோழதேசத்துட் பிரவேசித்துக் காவிரித்தென்கரையிலுள்ள உரகபுரத்தில் பாடியிறங்கினன் என்றும், இங்ஙனம் பிரவேசித்தவனை 674-ல் பரமேசுவரவர்வன் எதிரேற்றுப்

பெருவளநல்லூரிற் பெரும்போர் புரிந்து பகைச் சேனைகளை முறியடித்து அவ்வேந்தனைத் தனியனாய் ஓடித் தப்பும்படி புறங்கண்டனன் என்றும்—கத்வால், கூரம் முதலிய சாஸனங்கள்விரியக்கூறுகின்றன

இவ்விக்கிரமாதித்தன் வந்துதங்கியஉரகபுரம் என்பது உறையூரே என்றும்[1], அவ்வூர்க்கு வடமேற்கு 10-மையில் உள்ள பெருவளநல்லூரே பல்லவன் அச்சளுக்கனை முறியடித் தோட்டிய போர்க்களம் என்றும் கண்டு வெளியிட்ட டாக்டர் -தூப்ராயில் துரையின் கருத்து முழுதும் பொருந்துவதாகும்.

பாண்டி நாட்டின் எல்லையை அடுத்து நிகழ்ந்த இப்போர்ச் செய்தியே ஆழ்வார் கூற்றுக்குப் பெரிதும் அமைவுடையது. அதனை நன்கு விளக்குவேன்.

விக்கிரமாதித்தன் சோழ மண்டலத்துட் படை யெடுத்து வந்த போது பாண்டி நாட்டை ஆண்டு

---

1. சோழராஜதானிகளுள் உரகபுரமும் ஒன்றென்பது "**உரகபுரியாள் தலைவா தாலேலோ**" என்று கூத்தர்பாடிய குலோத்துங்கன்பிள்ளைத் தமிழ்த் தொடரொன்றால் தெரிய வருகின்றது. இவ்வுரகபுரி உறையூரேயாம். மேற்குறித்த தொடர், தஞ்சைச் சரஸ்வதிமாலில், ஷை பிள்ளைத்தமிழின் சிதைந்த சுவடியொன்றில் தாம் கண்டறிந்ததென்று ஸேது ஸம்ஸ்தானம் **மஹாவித்வான் ஸ்ரீ உப வே. ரா. இராக வையங்கார் ஸ்வாமி** அன்புடன் தெரிவித்தார்கள். இது **தூப்ராயில்** துரையவர்கள் முடிபை உறுதிப்படுத்துதல் **காண்க.** 5ஆம் நூற்றாண்டினரான புத்ததத்தர் என்ற பௌத்தப்பெரியார் சோணாட்டுள்ள இவ்வுரகபுரியினர் என்பது அவர் இயற்றிய அபிதம்மாவதாரம் என்ற பிராகிருத நூலால் அறியப்படுகின்றது. (**History of the Tamils by Prof. P. T. Srinivasa Iyengar, p. 529.**)

வந்தவன், சம்பந்தமூர்த்திகள் காலத்தவனான நெல்வேலி வென்ற நெடுமாறனாதல் வேண்டும். அவ்வடவேந்தனைப் பரமேசுவரவர்மன் பெருவளநல்லூரில் முறியடித் தோட்டிய காலமான 674-ம் ஆண்டு, இந்நெடுமாற னுக்கும் உரியதென்பது மேலே விளக்கப்பட்டது.

இப்பாண்டியன் சேரனுடன் பலபோர்கள் புரிந்து அவரது கொங்கு நாட்டின் பெரும் பகுதியைக் கைப் பற்றியவன் என்பது களவியலுரை வேள்விகுடிச்சாஸன முதலியவற்றால் தெளிவாகின்றது.

பெருவீரனான இந்நெடு மாறனது ஆட்சிக்காலத் தில், விக்கிரமாதித்தன் தன் குலப் பகைவரது ஆதிக் கத்தைத் தொலைக்க வேண்டிச் சோணாட்டுள் பிரவேசித் ததும் தங்கிய பாடி உறையூராயின், பாண்டியனா திக்கம் ஓங்கிநின்ற கொங்குநாட்டின் வழியாகவே அவன் ஆங்குப் புகுந்தவனாதல் வேண்டும்.

படை யெடுக்கும் வேந்தர் தென்னாட்டுட் புகுதற் குக் கொங்கு வழியே சௌகரிய மானதும் பழைமை யானதும் ஆகும். அதனால் அவ்விக்கிரமாதித்தன் பிர வேசமும் அப்பாண்டியன் அனுமதி பெற்றோ அன்றி அவனைப் போரில் வென்றோ நிகழ்ந்திருக்க வேண்டும் என்பது திண்ணம். சாஸனங்களில் பாண்டியனுடன் பகைமை கொண்டு வந்தவன் அவ்வட வேந்தன் என்ப தற்கு ஒரு குறிப்புமில்லை.

அவனது படையெடுப்பைக் குறிப்பிடும் கத்வால் சாஸனப் போக்கை நோக்கு மிடத்து, சோணாட்டுப் பிர வேசத்துக்குத் தடையாது மின்றி சௌக்கரிய மான நிலையில் அவன் புகுந்து உறையூர்த் தென் கரையில் தங்கிய செய்தி வெளியாவதால்[1] அந்நிலைமை பாண்டி

1. Ep. In Vol X p. 100.

யனட்பை அவன் பெற்றிருந்தவன் என்பதே குறிப்பிக்கின்றது.

மேற்படி கத்வால் சாஸனத்தில், அவ்விக்கிரமாதித்தன் காஞ்சியைக் கைப் பற்றிய செய்தியும் கூறப் படுவதால், அங்ஙனங் கைப்பற்றியபின் தொண்டை நாடு கடந்து சோழ மண்டலத்துள் அவன் பிரவேசித்தவனுகக் கொள்ளக் கூடாதோ எனின், புதிதாகப் படையெடுத்து வந்து சோழ மண்டலத்துள் அவ்வட வரசன் முதலிற் புகுந்த நிலையையே அது குறிப்பிடுவ தால், காஞ்சியை அவன் கைப்பற்றினவன் என்று அது விசேடித்துக் கூறியது, அவன் முன்பு நிகழ்த்திய செயலாக வேனும், அல்லது வெறும்புகழ்ச்சியாக வேனும்[1] கொள்ளத் தக்கது. இவ்வாறன்றேல் காஞ்சியில் விக்கிரமாதித்தனுக்குத் தோல்வியுற்ற பரமேச்சுரவர்மன், தன்னை வென்ற அவ்வேந்தன் திரும்பிச் சென்று உரகபுரத்தில் தங்கிய சிறிது காலத்துள், "பல லக்ஷம் படையுடைய" அவனை முறியடித் தோட்டினன் என்பது பொருந்தாமை காண்க.

இவற்ருல், கொங்கு வழியாக வந்த விக்கிர மாதித்தனுக்கு பாண்டியனது பகைமைநேர இடமில்லை யென்பது விளங்கும். அன்றியும், பாண்டியர் பல்லவர்க்கு எதிர்க் கட்சியிற் சேரவே அதிக நியாய முண்டு. சோழரது ஆட்சியைத் தொலைத்துச் சோணுட்டில் தங்கள் ஆதிக்கத்தைப் பல்லவர்கள் சிம்மவிஷ்ணுகால முதலே (உத். 590) தாபித்து வந்ததோடு, பாண்டி நாட்டின் எல்லைப் புறங்களினும் பிரவேசித்து அந்நாட்டரசர்க்கு இடுக்கண் விளைத்து வரலாயினர்.

---

1. டாக்டர், ஹுல்ஷ் துரையவர்களும் இவ்வாறே கருதினர். (S I. I. Vol. II.

அதனால், பல்லவ பாண்டிய வரசர்க்குள் தீராப் பெரும் பகை பலதலை முறையளவாக[1] உண்டாகியது.

ஆகவே, படையெடுத்து வந்த அவ்வட வேந்தனை எதிர்த் தோட்டப் பல்லவனுடன் பாண்டியன் சேர்ந்து கொண்டான் என்பதினும், பேராற்றல் பெற்றிருந்த பல்லவனை யொடிக்கி அவன் கவர்ந்துள்ள சோணாட்டை உரியவர் பொருட்டுப் பெற, அப்பாண்டியன் அப்பல்லவன் குலப்பகைவனைத் துணைக் கொண்டான் என்பதே ஏற்றதாகும். இக்கருத்தை ஆதரிக்க மற்றொரு பிரமாணமுமுண்டு.

விக்கிரமாதித்தன் தந்தை புலகேசி பல்லவனான மகேந்திரவர்மனை வென்ற செய்தி கூறும் ஐஹோல் சாஸனத்தில் — "பல்லவ சேனையாகிய பனிக்கு எரிகதிரோனாய்,சோழ பாண்டிய கேரளர் மூவர்க்கும் நன்மை மிகும்படி செய்தான்" என்று அப்புலகேசி புகழப் படுகின்றான்.[2] இதனால், தமிழரசர்க்கு இடுக்கண்விளைத்து வந்த பல்லவாதிக்கத்தைத் தொலைத்துப் பழைய நிலையில் அவர்களை நிலைநாட்டுவதும், அவனது தென்னாட்டுப் படையெடுப்பின் நோக்க மாயிருந்தது என்பது தெரியலாம். இதனால், தமிழரசர் பல்லவர்க்கு

1. (இம்மாறவர்மன் கொட்பேரன் பராந்தகன்—நெடுஞ்சடையன் பல்லவ சேரர்களுடன் பலபோர்கள் புரியநேர்ந்ததும் இப்பழம்பகைமை பற்றியேயாம். "பல்லவனுங் கேரளனு, மாங்கவற்குப் பாங்காகி அணுக வந்து விட்டிருப்ப...இருவரையு மிருபாலு மிடரெய்தப் படைவிடுத்து" என்று நெடுஞ்சடையனைப் பற்றிச் சீவரமங்கல சாஸனங் கூறுதல் காண்க. (Indian Antiquary, Vol. XXII—"Madras "Museum Plates")

2. Ep. Ind. VI, p. 1.

விரோதிகளே என்பது பெறப்படும். அம்முறையே, முன்பு தங்கட்கு உதவிய புலகேசியின் மகன் விக்கிர மாதித்தன் படையெடுப்பிலும் தமிழரசருள்அக்காலத் துச் சிறந்தவனான பாண்டியன், அவ்வட வேந்தனுக்கே உதவியாயிருந்திருக்கவேண்டும் என்று கருதத் தடை யில்லை[1].

இச்செய்தியையே—

**'ஓண்டிறல் தென்னனோ டவ்வடவர**
**சோட்டங்கண்ட திண்டிறலாளர்'**

என்று திருமங்கை மன்னன் பாடுதல் குறிப்பிடத் தக்கது. 'பெருவலி படைத்திருந்த பாண்டியனோடு வடவரசனைப் போரில் ஓட்டங் கண்டவர் நாங்கை வீரர்' என்பது இதன்பொருள். 'ஒண்டிறல் தென்னன்' என்றார், பெருவலி படைத்தவன் பாண்டியன் என்பது தோன்ற 'தென்னனோடு அவ்வடவரசு 'என்பதனால், அப் பாண்டியன், படையெடுத்து வந்த வடவேந்தன் சார்பானவன் என்பது விளங்கும். 'அவ்வடவரசு' என்ற உலகறி சுட்டால், அவ்வாறு வந்தவேந்தன் மிகப் பிரசித்தன் என்பது பெறப்படும்.

'தென்னனோடு', என்று கண்ணழியாமல் 'தென்னன் ஓட, வடவரசு ஓட்டம் கண்ட' என்று பிரித்தும் பொருள் கொள்ளலாம். இங்கும், துணைவந்த பாண்டியனை

1. (விக்கிரமாதித்தனைப் பெருவேந்தனாகச் சிறப்பிக்கப் புகுந்த நிலையில் அவன் சேர சோழ பாண்டியர் முதலிய அரசர்களை வென்றவன் என்று சாஸனங்கள் புகழ்கின்றன. இதற்கு அவ்வேந்தரெல்லாம் இவனுக்கு அடங்கியவர் என்பதே கருத்தாகக் கொளக.)

முதலிற் பிறகிடச் செய்து, பின் வடவரசனையும் ஓட்டி' யவர் அவ்வீரர் என்பதே கருத்தென்க.[1]

"மாவருந் திண்படைமன்னை வென்றி கொள்வார்' 'துண்ணென மாற்றார் தம்மைத் தொலைத்தவர்' என்று ஆழ்வார் அவ்வீரர்களைப் பாடுவதினின்று, தக்கதுணை யொடு வந்த அவ்வேந்தன் பெருமையும், அவன் அதி விரைவில் தோற்றோடிய சிறுமையும் நன்கு புலனாகும்.

'விக்கிரமாதித்தனை ஒருகந்தைத் துணியை மட்டும் கட்டி மூடிக்கொண்டு போரினிடையே ஓடச்செய்தான்[2] என்று, பரமேசுவரவர்மனைக் கூரம்சாஸனம் விரிவாகப் புகழ்வதும் இங்கு ஒப்பிட்டறியத் தக்கது[3].

1. மேற்கூறிப்போந்த சரித்திரச் செய்திகள், பிற் காலத்து அறிய இடமில்லாமற் போனமையால், ஆழ்வாரது இப்பாசுரத் தொடாக்கு வேறு பொருள் பூர்வவியாக்யானங் களிற் கூறப்பட்டுள்ளது.

2. S. I. I. Vol. I. p. 153.

3. விக்கிரமாதித்தனுக்கு விரோதமாக மூவரசர் ஒன்று கூடியிருந்தனர் என்றும், அவரை "திரைராஜ்யபல்லவர், என்றும் சாஸனங்கள் கூறுகின்றன. (E. 1. IX, 100; E. C. VIII, E. pp.. 175-6) அம்மூவராவார், பல்லவனொரு வனுடன் பாண்டியனும் சிங்களவேந்தனுமாவர் என்பதும். இம்மூவருமே விககிரமாதித்தனைப் பெருவளநல்லூர்ப் போரில் எதிர்த்தவர்கள் என்பதும் டாக்டர் தூப்ராயில் துரை கருத்து. மூவரசர் ஒன்றுகூடித் தன் தந்தை புலகேசி ஆண்ட நாட்டைக் கவர்ந்தனராக அதனை அவன்மகன் விக்கிரமாதித்தன் பட்டமடைந்ததும் போராடி மீட்டுப் பெற்றான் என்று அச்சாஸனங் கூறுகின்றதேயன்றி, தென் னாட்டிற் படையுடன் வந்த அவ்வேந்தனை எதிர்க்கவேண்டி அம்மூவருந் திரண்டுகூடினர் என்றேனும், அம்மூவர் இன்னார் என்றேனும் அது கூறவில்லை. 'திரைராஜ்யபல்லவர்'

இவ்வாறு பரமேச்சுரவர்மன் காலத்தில் வடவேந்தனான விக்கிரமாதித்தன் படையெடுத்துவந்து பெருந்தோல்வியுற்றதும், பாண்டியன் அவன் சார்பாயிருந்து உதவியதும் பழைய சாஸன வழியால் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பெறப்படுதலின், அப்படையெடுப்பே ஆழ்வார் திருவாக்குக்குப் பெரிதும் அமைவுடையதாகின்றது.

அவ்வடவேந்தனைப் பெருவளநல்லூரில் முறியடித்தோட்டிய பின், பரமேச்சுரவர்மன், சளுக்கிய ராஜ்யத்தின்மேற் படைகொண்டு சென்று அவன் தலைநகரை—தன் பாட்டனைப் போலவே—அழித்தனன் என்றும், சிறுத்தொண்டர் ''மன்னவற்குத் தண்டுபோய் வாதாபித் தொன்னகரந் துகளாக்கி''யதாகச் சொல்லப்படுவது, இப்பரமேச்சுரன் காலத்து நிகழ்ச்சியேயென்றும், அதனால், இப்பல்லவன் காலமே—சிறுத்தொண்டர்க்கும், அவரை நேரிற் சந்தித்த சம்பந்தமூர்த்திகட்கும், அம்மூர்த்திகளால் சைனமதத்தினின்று மீளப்பெற்ற நெல்வேலி வென்ற நெடுமாறனுக்கும் உரியது என்றும் மேலே விரிய விளக்கியுள்ளேன்.

எனவே, அச்சம்பந்தர் காலத்தவராகக் கூறப்படும் திருமங்கை மன்னனால்—

---

என்று சாஸனங் கூறுவதற்கு—பல்லவமரபினராய் வெவ்வேறு நாடாண்ட மூவரென்றும், அவராவார்—காஞ்சிப்பல்லவர் நுளம்பபல்லவர், பலக்கடப்பல்லவர் என்பார் என்றும் நிரூபித்து, **டாக்டர் N. வேங்கடராமணய்யா** அவர்கள் எழுதியுள்ள கட்டுரை அறியத்தக்கது (The Madras Christian College Magazine, January, 1929.) இவற்றால் பாண்டியன், விக்கிரமாதித்தனுக்கு எதிர்க்கட்சியில் இருந்தவன் என்று துரையவர்கள் கருதியதற்குப் பிரமாணமில்லையென்க.

'ஒண்டிறல் தென்னனோட(வ்) வடவர சோட்டங்கண்ட
திண்டிற லாளர்'
'மாவருந் திண்படை மன்னை வென்றி கொள்வார்'
'துண்ணென மாற்றார் தம்மைத் தொலைத்தவர்'

எனப் புகழப்பட்டவர், அப்பரமேச்சுரனுக்குப் பெருவள நல்லூர் வெற்றியைத் தந்துதவிய பெருவீரர்களே என்று கருதல் சிறிதும் தவறான ஊகமாகாமை காணலாம்.

முன்பு யான் கூறிப் போந்தவற்றினின்று, 8-ம் நூற்றாண்டினும் 9-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தும் படையெடுத்து வந்த வடவேந்தரெல்லாம் பல்லவர்களை வென்று போந்தவரென்பது தெளிய அறியப்பட்டது. எனவே, 7-ம் நூற்றாண்டில் நிகழ்ந்த வடவர் படையெடுப்புக்களில், 674-ல் சோணாட்டுப் பிரவேசித்த விக்கிரமாதித்தன் படையெடுப்பே ஆழ்வார் திருவாக்குக்கு இலக்காவதாம். அங்ஙனம் இலக்காகிய படையெடுப்பின் காலம், சம்பந்தர்க்கும் ஏற்றதா யிருத்தல் அறியத்தக்கது.

இவற்றால், ஞான சம்பந்தரை ஆழ்வார் காலத்தவ ராகக்கூறும் திவ்யசூரிய சரித முதலிய நூல்களின் கருத்துப் பெரிதும் பொருந்துதல் கண்டுகொள்க.

இனி நந்திவன்மனது ஆட்சியிடைக் காலமான 744—754-ல் விளங்கியவரென்று மேலே கூறிப்போந்த திருமங்கை மன்னனை, உத்தேசம் 660-ல் அவதரித்தவ ராகக் கொள்ளின், 84—94 வயது இவர் வாழ்ந்தவர் என்பது பெறப்படும். தாம் பாடிய வதரி திருநறையூர்ப் பதிகங்களில், தாம் மூப்பால் முதிர்ந்து வரும் நிலைமையை இவர் குறிப்பிடுதலால், நெடுங்காலம் இந்

நிலவுலகை அலங்கரித்திருந்தவர் இப்பெரியார் என்பது அறியப்படும். வடவரசோட்டங்கண்டவர்களும், தம்மூர்ப் பக்கத்தவருமான நாங்கை வீரர்களைத் திருமங்கையார் நேரில் அறிந்தவர் என்பது அவர் திருவாக்குக்களால் தெளிய அறியப்பட்டது.

அவ்வடவரசனது படையெடுப்புக் காலத்தே ஆழ்வார் 14-16-வயது இளைஞராகவும், உத்தேசம் 670-ல் அவதரித்த சம்பந்தமூர்த்திகளை இவர் சந்தித்தகாலத்தே 25-வயதினராகவும் கொள்வோமாயின் யாவும் ஒருவாறு பொருந்தத் தடையில்லை. நாங்கை வீரர்கள் பல்வேறு காலங்களில் இவரால் வெவ்வேறு பதிகங்களிற் பாடப் பட்டவரென்பதும் அறியத்தக்கது.

ஏழாம் நூற்றுண்டில் சைன பௌத்தர்கள் தென்னுட்டில் மேலோங்கியிருந்தவர் என்பதும், அப்பரும் சம்பந்தரும் வாதாடி அவரது ஆதிக்கத்தைத் தொலைத்தவர்கள் என்பதும் சரித்திரப் பிரசித்த மானவை.

திருமங்கை மன்னனும் சோழன் முன்னிலையில் புத்தர் முதலிய புறச்சமயத்தவரை வாதில் வென்றனர் என்று திவ்யசூரி சரிதங்கூறுவதோடு (பக்-138—140), அப்பர் சம்பந்தர் பாடல்களிற்போலத் தங்காலத்தே சைனபௌத்தர்கள் வைதிக சமயத்தவரை இகழ்ந்தும் இடுக்கண்விளைத்தும் வந்தவர்கள் என்பதனை—

> **''பிச்சச் சிறுபீலிச் சமண்குண்டர் முதலாயோர்**
> **விச்சைக் கிறையென்னும் மவ்விறையைப் பணியாதே''**
> (பெ. தி. 2. 6, 5).

> **''தருக்கினுற் சமண்செய்து சோறுதண் டயிரினுற்**
> **றிரளை மிடற்றிடை நெருக்குவார்''** (ஷை, 2. 1, 7.)

"தெருவிற்றிரி சிறுநோன்பியர் செஞ்சொற்றெடு கஞ்சி
மருவிப்பிரிந் தவர்வாய்மொழி மதியாதுவந் தடைவீர்"
(ஷை, 7, 9, 2.)

"வெள்ளியார் பிண்டியார் போதியா ரென்றிவ ரோதுகின்ற
கள்ளநூல் தன்னையுங் கருமமன் றென்றுயக் கருதினையேல்"
(ஷை, 9, 7, 9.)

"வந்திக்கு மற்றவர்க்கு மாசுடம்பில் வல்லமணர்
தமக்கு மல்லேன்" (ஷை, 7, 4, 5.)

என்று இவ்வாழ்வாரும்,

"புலையற மாகிநின்ற புத்தொடு சமணமெல்லாங்
கலையறக் கற்றமாந்தர் காண்பரோ கேட்பரோதான்"

"வெறுப்பொடு சமண மிண்டர் விதியில் சாக்கியர்கள்
நின்பாற்
பொறுப்பரி யனகள்பேசிப் போவதே நோயதாகில்"
(திருமாலை. 8, 7.)

என்று திருமங்கைமன்னனுக்குச் சமகாலத்தவரான தொண்டரடிப் பொடிகளும் அருளிச்செய்தல் காண்க. பழங்காலத்தில் சைனர்கள் மிகுதியுந் தங்கி வாழ்ந்த மலைகள் எட்டாகும். அவற்றை—

" பரங்குன் றொருவகம் பப்பாரம் பள்ளி
அருங்குன்றம் பேராந்தை யானை—இருங்குன்றம்
என்றெட்டு வெற்பு மெடுத்தியம்ப வல்லார்க்குச்
சென்றெட்டு மோபிறவித் தீங்கு"

என்னும் பழைய வெண்பாவான்[1] அறிக. "வண்பெருஞ் சிறப்பின் மாதவம் புரிந்தாங், கெண்பெருங் குன்றத்

1. திருவாலவாயுடையார் புராணம், குறிப்புரை, பக். 288 (முதற்பதிப்பு.)

திருந்த முனிவரர்" என்பர். இவற்றுள் **இருங்குன்று** என்பது திருமாலிருஞ்சோலை என்ற அழகர் மலையாகும். "இருங்குன்றத் தடியுறை யியைகென" என்பது பரிபாடல் (15, 16). திருமங்கை மன்னன் காலத்திலும் சைன பௌத்தர்கள் அழகர் திருமலையில் வசித்து வந்தனர் என்பதும், அம்மலையில் அநாதியாகவே திருக்கோயில் கொண்டருளிய திருமாலைப்பற்றி அன்னோர் வாய்க்கு வந்தன பேசிப் போந்தனரென்பதும்—

"புத்தியில் **சமணர் புத்த**ரென் றிவர்கள்
**ஒத்தன பேசவு** முகந்திட்
டெந்தைபெம் மானு ரிமையவர் தலைவர்
எண்ணிமுன் னிடங்கொண்ட கோயில்"
(பெ. தி 9, 8, 9)

என்று இப்பெரியார் திருமாலிருஞ்சோலைப் பதிகத்துக் கூறுதலால் தெரிகின்றது. அழகர் திருமலையில் சைனரும் பௌத்தரும் ஆழ்வார்கட்கு முன்பே வசித்து வந்தவர்கள் என்பது அம்மலைக் குகைகளில் அமைந்துள்ள "ப்ராஹ்மி" சாஸனங்களாலும், பிற சைனசாஸனங்களாலும் நன்கு விளங்குவன[1].

## முத்தரையர்

பல்லவரது தென்னாட்டு ஆதிக்கத்துக்குச் சிறந்த காரணபூதராய் நின்று உதவியவர், **முத்தரையர்** என்ற வகுப்பினராவர்.

பல்லவமல்லனது இளமைக் காலத்தில் அவனாட்சியை நிலைநிறுத்தியவர்களுள்ளே பெரும்பிடுகு

1. அழகர்மலையில் சாஸனங்களுடன் உள்ள இக்குகைகள் 'பஞ்சபாண்டவர் படுகை' என்று வழங்குகின்றன. (Ep. Rep. Nos. 70—79, of 1910, n 80)

**முத்தரையன்** என்பான் ஒருவன்[1]. இவனைக் **கள்வர கள்வன்** என்று சாஸனம் விசேடித்துக் கூறுகின்றது.

இம்முத்தரையர் கள்வர் குலத்தவராகவும், பெரு வீரர்களாகவும், புலவர் புகழ்ச்சிக்கு உரியராகவும்[2] பழங் காலத்தே விளங்கினவர்.

பல்லவர்க்குப் பெருந்துணையாக நின்ற இன்னோர், பாண்டிய சோழர்களுடன் பல போர்கள் புரிந்து சோணாட்டை அவர் குடைக்கீழ் நிறுவியதோடு, அவர்க் குப் பிரதிநிதிகளாய்த் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு அந்நாட்டைத் தாமே ஆட்சிபுரிந்தும் வந்தனர். இக்காலங்களிற் சோழர்கள் பேருக்கரச ராய்ப் பல்லவர்கீழ் ஒடுங்கிப்போயினர்.

திருமங்கை மன்னன் ஆலிநாட்டதிபரான கள்வர் குலத்தவர் என்ற வரலாறு வழங்குதலும், பல்ல வாதிக்கம் சோணாட்டிற் பல்கி நின்ற காலத்தே தாமும் விளங்கி அப்பல்லவர் பெருமைகளையே பலபடப் பாராட் டுதலும் மேலெல்லாம் நன்கறியப்பட்டன.

இங்ஙனம் கள்வர் குலத்துதித்த சோணாட்டுத் தலை வராய்ப் பல்லவாபிமானம் மிக்குடைய நம் பெரியாரை மேற்கூறிய முத்தரைய மரபினருள் ஒருவராகவே நாமும்

---

1. Ep. Ind. XV, No. 5, p 49 ff.

2. நாலடியாரில் **பெருமுத்தரையர்** (200, 286) என்று சிறப்பிக்கப் பெற்றிருத்தலாலும், செந்தலைச் சாஸனத்தில்—பாச்சில்வேள் நம்பன், குலாலன் காஞ்சன், கோட்டாற்று இளம்பெருமானார், ஆசாரியர் அநிருத்தர் என்ற புலவர் களாற் பாடப்பெற்றிருத்தலாலும் (செந்தமிழ். தொ-6, பக். 10—15) **தமிழ்முத்தரையர்கோவை** (யாப்பருங்கலவிருத்தி பக், 486) என இவர்சம்பந்தமாக வழங்கும் நூலாலும் **இன்னோரது 'புலவர்பாடும் புகழுடைமை நன்குவிளங்கும்.**

கருதல் கூடியதன்றே? 'கள்வனேனானேன் படிறு செய்திருப்பேன்' என்ற இப்பெரியார் கூற்றுள், 'தம் குலத்தைக் குறிப்பிட்டுக் கொண்டனர் இவர்' என்று கொள்ளற்கும் இடமுண்மை காணலாம்.

இக்கள்வராகிய[1] முத்தரையர் குலத்தவராய்த் தம் அரசனுக்குப் பேருதவிபுரிந்த சிறப்புப்பற்றியே—

**"ஆலிநாட னருண்மாரி யரட்டமுக்கி யடையார்சீயம்"**

**"வாட்டிறற் றானை மங்கையர் தலைவன்"**

**"அமரிற் கடமா களியானை வலான்"**

**"ஒன்னலர் தங்களை வெல்லும் ஆடன்மாவலவன்"**

**"மருவலர்த முடல்துணிய வாள்வீசும் பரகாலன்"**

என்றிவைபோலும் வீரப்பெருமையால் தம்மை ஆழ்வார் சிறப்பிப் பாராயினர் என்றுணர்க. பல்லவர்களுள் பரம வைஷ்ணவர்களான நந்திவர்மன் தந்திவர்மன் காலங்களில் விளங்கிய முத்தரையர்கள் தம்மரசரைப் போலவே திருமால் சமயத்தவர்களாக இருந்திருத்தல் கூடியதென்பதும் இங்கு அறியத்தக்கது.[2]

களவுத் தொழிலில் இழிவான முறைகளையெல்லாம் திருமங்கை மன்னன் கையாண்டொழுகியவர் என்ற

---

1. கள்வர் குலத்தவர்க்குச் **செம்பிய முத்தரையர்** என்ற பட்டப் பெயரும் சோணாட்டில் இன்றும் வழங்குதல் அறியத் **தக்கது.** (திருவாளர். மு. வேங்கடசாமிநாட்டார் அவர்கள் எழுதிய **கள்ளர் சரித்திரம்**—பக் 23, 24.)

2. கள்வர் மரபினருள் திருமால் சமயத்தவராகப் பலர் சோணாட்டில் இன்றும் உள்ளனர்.

சரித்திரம் நெடுங்காலமாகப் பிரபலம் பெற்றுள்ளது. அவை பெரும்பாலவும் இவரது குலப்பெயர் பற்றியும்,[1]

"கள்வனே னானேன் படிறுசெய் திருப்பேன்
கண்டவா திரிதந்தே னேலுந்
தெள்ளியே னானேன் செல்கதிக் கமைந்தேன்
சிக்கெனத் திருவருள் பெற்றேன்" (பெ. தி. 1, 1, 5)

"கோடிய மனத்தாற் சினத்தொழில் புரிந்து
திரிந்துநா யினத்தொடுந் திரிந்திட்
டோடியு முழன்று முயிர்களே கொன்றே
னுணர்விலே னதலால்" (ஷை, 1, 6, 6)

என்பன போன்ற இவரது திருவாக்குக்களிலிருந்தும் பிற்காலத் துண்டான கதைகளாகவே தோற்றுகின்றன. அக்கதைகள் யாவும் உண்மையானவையாயின், இந்திர திருவினராகவும், சத்தியவானுகவும், அருள்மாரியாகவும் தாதாவாகவும், பண்டிதராகவும், பரமவைஷ்ணவரா கவும் தம்மைப்பற்றி இவர் நெடுகக் கூறிவருவனவற் ருேடும் பெரிதும் முரணத்தடையில்லை.

'கள்வனே னானேன்' என்பது முதலிய இவ்வாழ்வார் பாசுரங்கள், தாம்பிறந்த வீரக்குடிகேற்றபடி, போர்களிற் பிறர்பொருளைக் கொள்ளையிட்டும் வேட்டை முதலியவற்

1. இவ்வாழ்வார் அவதரித்தது 'சபரகுலம்' என்று **திவ்யசூரிசரிதம்** முதலியவை கூறும். வேட்டை முதலிய வற்றில் விருப்பமிக்கிருந்தமைபற்றிக் கள்வர் குலத்தை வட மொழியாளர் அவ்வாறு பெயர்த்துக்கொண்டனர் போலும். வேங்கடமலைக்குத் தலைவனும், வள்ளலுமான **புல்லி** என்பானைக் **கள்வர்கோமான்** என்று சங்கநூல்கள் (அகநானூறு. 61) கூறுவதினின்று, இக்கள்வர்குடியின் பழமைபெருமைகள் தெரியலாம்.

றிற் கொடுமையிழைத்தும்போந்த தம் முன்செயல்களை வெறுத்துரைத்தன வேயன்றித் தாம் மேற்கொண்டிருந்த களவுமுறைகளைக் குறித்தனவென்று ஒருதலையாகச் சொல்லத்தக்கன ஆகா. அந்தணர் குலத்தவரான தொண்டரடிப் பொடிகளும் "சூதனாய்க் **கள்வனாகித்** தூர்த்தரோ டிசைந்த காலம்" என்று 'ஆத்மாபஹாரம் செய்து போந்த தம்மைக் **கள்வன்** என்று கூறிக் கொள்ளுதல் காணலாம்.

இளமையில் தம் அரசன் கட்டளை கடந்ததனால் ஆழ்வார் கடுந்துன்பத்துக்கு உள்ளாகியவர் என்ற சரித்திரமுள்ளது. ஒருகால் அக்காலத்தே ஆறலைகள்வர் அராசகர்களுடன் சேர்ந்து இவர் சில அதிக்கிரமங்களைச் செய்திருத்தல் கூடியதே. ஆனால் பருவம நிரம்பிய நிலையிலும் அவற்றையே செய்து தாம் கவர்ந்த கொள்ளைப்பொருளால் திருமால்கைங்கரியம் புரிந்துவந்தவர் இப்பெரியார் என்று வழங்கும் கதைகள் பெரும்பாலவும் கற்பிதங்களே என்பதில் ஐயமில்லை.

**"தெரியேன் பாலகனாய்ப் பலதீமைகள் செய்து மிட்டேன்**
**பெரியே னாயினபின் பிறர்க்கேயுழைத் தேழையானேன்"**

என்று, தம் வாழ்நாளின் முன்பின் பகுதிகளில் நிகழ்ந்த செயல்களை இவ்வாழ்வாரே கூறுதல் அறியத்தக்கது. இதனால் தம் முன்னோர் போலவே பேரரசரின் கீழ் அரசியல் நிர்வாகத்தில் தம் ஆயுளின் ஒருபகுதியைக் கழித்தவர் இப்பெரியார் என்பதே மிகவும் பொருத்தமென்க.

இனித் திருமங்கைமன்னன் தமக்கு முன்னும் தங் காலத்தும் விளங்கிய திருமாலடியரான அரசரையும் பிறரையும் பற்றிக் குறிப்பிடுதல் அறியத்தக்கது. தம்

திருநறையூர்ப்பதிகத்தில் கோச்செங்கணான் என்ற சோழன், அவ்வூர்த் திருமாலிடம் பரமபத்தி பூண்டிருந்தவன் என்பதைப் பெரிதுஞ் சிறப்பிக்கின்றார். இச் சோழன் ஐந்தா நூற்றாண்டையடுத்து விளங்கியவன் என்பது மேலே கூறப்பட்டது[1].

கழுமலம், திருப்போர்ப்புறம் [2] என்ற களங்களிலே சேரன் கணைக்காலிரும்பொறையோடு இச்செங்கணான் போர்புரிந்து அச்சேரனைச் சிறைபிடித்தவன் என்பதும், பொய்கையார் என்ற தெய்வப்புலவர் இவனது போர் வெற்றியைப் புகழ்ந்து பாடி அச்சேரனைச் சிறை மீட்டனரென்பதும் புறநானூறு களவழி நாற்பது முதலிய சங்க நூல்களால் நன்கறிந்தவை.

முற்பிறவியிலே இவன் சிலந்தியாயிருந்து திருவானைக்காச் சிவபிரானை வழிபட்ட சிறப்பால் பேரரசனாகப் பிறந்து அப்பிரானுக்குப் பல மாடக் கோயில்கள் எடுத்துப் பெருமைபெற்றவனென்பதும், அதனால் நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவராக நன்கு மதிக்கப்பட்டவன் என்பதும் தேவார முதலிய சைவத் திருமுறைகளால் தெரியலாம். இவன் பிறந்தநாள் இரேவதி என்பர் முத்தொள்ளாயிரமுடையார். [3]

---

1. இந்நூல், பக். 62, கீழ்க்குறிப்பு.

2. 'திருப்பேர்ப்புறம்' என்பது நேர்பாடம் போலும். திருப்பேர் என்பது 'அப்பக்குடத்தான்' என வழங்கும் சோணாட்டுத் திருமால் திருப்பதியாம்.

3. "அந்தண ராவொடு பொன்பெற்றார் நாவலர். மந்தரம் போன் மாண்ட களிறூர்ந்தார்—எந்தை, இலங்கிலை வேற் கிள்ளி யிரேவதிநா ளென்னோ, சிலம்பிதன் கூடிழந்த வாறு" (தொல். பொருளதி. 91, நச். உரை) என்பதனால் அறிக.

சோழன் கரிகாலனுக்குப் பின் ஆட்சி புரிந்தவன் இச்செங்கணான் என்பதும், **நல்லடிக்கோன்** [1] என்ற நன் மகன் இவனுக்குப் பிறந்து விளங்கினன் என்பதும் சாஸனங்களால் அறியப்படுகின்றன. இவன் பிறப்பு முதலிய பிறவரலாறுகளைப் பெரியபுராணம், திருவானைக் காப்புராணம் முதலிய பின்னூல்களிற் கண்டுகொள்க.

இங்ஙனம் காணப்பட்ட வரலாறுகளின் வேறான செய்திகள் சில இச்செங்கணானைப் பற்றித் திருமங்கை மன்னன் கூறுதல் ஈண்டு அறியத்தக்கது :—

" வெங்கண்மா களிறுந்தி வெண்ணி யேற்ற
விறன்மன்னர் திறலழிய வெம்மா வுய்த்த
செங்கணான் கோச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே "
(பெ. தி. 6, 6, 4)

" பாராள ரவரிவரென்றழு ந்தை யேற்ற
படைமன்ன ருடல்துணியப் பரிமா வுய்த்த
தேராளன் கோச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே "
(ஷை 4, 6, 4)

எனத் திருநறையூர்ப் பதிகத்துள் ஆழ்வார் கூறுவன வற்றால், வெண்ணி [2] அழுந்தை [3] என்ற போர்க்களங்

1. Ambil Plates of Sundara - Chola—Ep. Ind. Vol. XV, Verse, 13, p. 70.
2. இது கோயில்வெண்ணி, கோயிலுண்ணி என வழங்கும் சோணாட்டூர்.
3. அழுந்தை-திருவழுந்தூர் தேரழுந்தூர் என்பது இப்போதை வழக்கு.

களிலே இச்சோழன் அடைந்த வெற்றித்திறம் இற்றென விளங்கும். **விளந்தை வேள்** என்ற சிற்றரசனொருவன், செங்கணனுக்குப் பெரும் பகைவனாயிருந்தனன் என்றும், அவனைப் போரொன்றிலே தன் வேலைச் செலுத்தி உயிர்தொலைத்துப் பின் முத்தமிழ்நாட்டுக்குத் தனியரசன் தானேயாய் உலகமாண்டனன் இச்சோழன் என்றும்—

> **மின்னுடு வேலேந்து விளந்தை வேளை [1]**
> **விண்ணேறத் தனிவேலுய்த் துலக மாண்ட**
> **தென்னாடன் குடகொங்கன் சோழன் சேர்ந்த**
> **திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே "**
>
> (பெ. தி. 6, 6, 6)

என்ற தொடர்களால் ஆழ்வார் தெரிவித்தல் அறியத் தக்கது. விளந்தை என்பது திருச்சிராப்பள்ளி ஜில்லா உடையார் பாளயத்தை யடுத்துக்கோட்டை முதலிய பழைய சின்னங்களுடன் இன்றும் உள்ளதோர் ஊராம். மேற்குறித்த போர்களிலே செங்கணன் வெற்றிபெறுதல் வேண்டித் திருநறையூர்த் திருமால் அவற்குத் தெய்வ வாளொன்று உதவினர் என்பர் முன்னோர். [2]

இச்சோழன் முற்பிறவியிற் சிலந்தியாய்ப் பிறந்து திருவானைக்காவிலுள்ள சிவலிங்கத்துக்குத் தன்

---

1. 'விளைந்தவேளை' என்று இப்போது வழங்கும் பாடம். அது 'விளந்தைவேளை' என்று திருத்திக் கொள்ளற்குரியது.

2. பெரிய திருமொழி, 6, 6, 3-ம் பாசுர வியாக்யானம்.)

3. "சிலந்தியு மானைக்காவிற் றிருநிழற் பந்தர்செய்து, உலந்தவணிறந்த போதே கோச்செங்க ணனுமாகக், கலந்த நீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள், குலந்தனிற் பிறப்பித் திட்டார் குறுக்கை வீரட்டனாரே" (தேவா. குறுக்கை, அப். 4.)

நூலாலிழைத்து வந்த மேல்விதானத்திருப்பணியை அழித்துவந்த யானை நுழையாவண்ணம் சிவபிரானுக்கு மாடக்கோயில் பல கட்டி வழிபட்டவன் என்பது தேவார முதலியவற்றால் அறியப்படும், இங்ஙனம் இவன்கட்டிய சிவாலயங்கள் எழுபது என்று திருமங்கைமன்னன் தொகைப்படுத்துக் கூறுதல் அறியத்தக்கது. இதனை—

" இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோ ளீசற்
கணிமாட மெழுபதுசெய் துலக மாண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே "

(பெ. தி. 6, 6, 8)

என்பதனால் அறிக. இவ்வாறு செங்கணான் செய்த சிவன்கோயில்களாகத் தேவாரத்தால் அறியப்படுவன திருவானைக்கா, அம்பர், நன்னிலம், வைகன்மாடக் கோயில் என்பனவாம்.[1] சோழமண்டலத்தின் கூறுகளாக அமைந்த ஒவ்வொரு நாட்டுக்கும் ஓரொரு சிவாலயம் இச்செங்கணானாற் கட்டப்பட்டதென்பர் சேக்கிழார்.[2]

இங்ஙனம் சிவதொண்டினைச் சிறப்பப்புரிந்த இச் சோழன் முடிவில் திருநறையூர்த் திருமாலுக்கடியனாய்ச் சிறப்புற்றான் என்று திருமங்கை மன்னன் பாசுரப்

---

1. "அம்பர்மாநகர்க், குரிசில் செங்கணவன் கோயில் சேர்வரே" (தேவா. அம்பர். சம். 1), "கோச்செங்கணான் செய்கோயில் நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில் (ஷை நன்னில. சுந். II), "வைகன் மேற்றிசைச் செம்பியன் கோச்செங்கணான் செய்கோயிலே" (ஷை, வைகன்மாட, சம். 4)—எனக்காண்க.

2. "செங்கணான், அந்தமில்சீர்ச்சோணாட்டி லகனாடு தொறுமணியார், சந்திர சேகரனமருந் தானங்கள் பலசமைத்தான்" (பெரியபு. கோச்செங்கட். 14).

போக்குக்கு ஏற்பக் கருத்து உரைப்பர் முன்னோர்[3] இவற்றால் 'இச்செங்கணான் வரலாறுகள் ஆழ்வார்கள் காலத்தே பிரசித்தமாக வழங்கி வந்ததென்பது தெரியலாகும்.

இனி, அரசர்க்கரசனும் பரமபாகவதனுமான தொண்டை வேந்தனொருவனுடன் திருமால் ஏழு நாழிகையளவும் எழுந்தருளியிருந்து, திருமந்திரப் பொருளை அவற்கு உபதேசித்தருளினர் என்பதனை—

" துளங்கு நீண்முடி யரசர்தங் குரிசில்
தொண்டை மன்னவன் திண்டிற லொருவற்
குளங்கொ ளன்பினோ டின்னருள் சுரந்தங்
கோடு நாழிகை யேழுட னிருப்ப
வளங்கொள் மந்திர மற்றவற் கருளிச்
செய்த வாறடி யேனறிந் துலக
மளந்த பொன்னடி யேயடைந் துய்ந்தேன்
அணிபொழிற்றிரு வரங்கத் தம்மானே"

(பெ. தி. 5, 8, 9,)

என்ற பாசுரத்தால் இவ்வாழ்வார் கூறுகின்றார். இப் பாட்டிற் கண்ட தொண்டை மன்னவன், பல்லவ வேந்தனாவன்[4]. இவன, பரமபாகவதனான சிம்ம விஷ்ணு வேனும் (உத்: 580), தங்காலத்து விளங்கிய நந்தி வர்மனேனும் ஆதல் வேண்டும். இவ்வேந்தனேயன்றி

3. ஸ்ரீ பெரியவச்சான்பிள்ளை முதலியோர் வியாக்கியானங்காண்க.

4. பல்லவர்கள்—'தொண்டையர்கோன்' 'தொண்டை வேந்தன்' என்று கூறப்படுதல், நந்திக் கலம்பகத்தாலும் நன்கறியப்படும்.

வேறு பல்லவனொருவனும் தில்லைச் சித்திரகூடத்துத்[1] திருமாற்குப் பல திருப்பணிகளுஞ் செய்து பணிந்த செய்தியை—

"பைம்பொன்னு முத்து மணியுங் கொணர்ந்து
 படைமன் னவன்பல் லவர்கோன் பணிந்த
செம்பொன்மணி மாடங்கள் சூழ்கின்ற தில்லைத்
திருச்சித் திரகூடஞ் சென்றுசேர் மின்களே" (3, 2, 3)

என்று கூறுவர், இவ்வாழ்வார்.

'படைமன்னவன் பணிந்த' என்பதனால் அவ்வரசன் வெற்றியுடன் வந்தவன் என்பதும், அவன் சமர்ப்பித்த அரும்பொருள்களில் முத்துங் கூறப்படுதலால் முத்துக்

1. சித்திரகூடம்-சிற்றமபலத்தின் பக்கத்துள்ள திருமால் கோயில். "சித்திரகூடந் தெற்றியம்பலம்" என்பர் **திவாகர நிகண்டுடையார்.** தெற்றியம்பலம்-மேடையிடமா யமைந்த கோயில் [தெற்றி - திண்ணை; அம்பலம்-கோயில்] **திருத்தெற்றியம்பலம்** எனத் திருமாற்கு வேறோர் கோயிலும் சோணாட்டுள்ளமை காண்க.

தில்லைக்கோயிலுள் தரையின் கீழிடமாகச் சிவபிரானுக்கும் மேட்டிடமாகத் திருமாலுக்கும் முறையே சிற்றம்பலம் தெற்றியம்பலங்கள் பழைமையாகவே உள்ளன என்பதும், அவ்விரண்டும் அந்தணர் அரசர் முதலியோரால் ஒப்பப் போற்றப்பட்டன என்பதும் தேவார திவ்ய பிரபந்தங்களால் நன்கறியப்படும்.

"வரங்கிடந் தான்தில்லை யம்பல முன்றிலம் மாயவனே" (திருக்கோவை. 86) என்று வாதவூரடிகள் புனைந்து கூறியதும், பேராசிரியர் 'இன்னும் வரங்கிடக்கின்றானாதலின்' என்று அவ்வடிக்கெழுதிய குறிப்புரையும் அச்சித்திர கூடமாகிய தெற்றியம்பலத்தின் பழைமைக்கு வேறு சான்றாதலுங் காண்க.

குரியனுன பாண்டியனை அவன் போரில் தோற்பித்தவன் என்பதும் தொனிக்கின்றன.

இத்தென்னாட்டு வெற்றி பெற்றவன் திருமாலடியனுன பல்லவ மல்லனுதல் வேண்டும்; 'பல்லவன் மல்லையர்கோன் பணிந்த பரமேச்சுர விண்ணகரம்' என்று இவனையே பொதுப்படப் பல்லவன் என்று மேலைத் திருப்பதிகத்துக்கும் இவ்வாழ்வார் சிறப்பித்திருத்தல் ஒப்பிடத் தக்கது.

சித்திரகூடத்துத் திருமால் தில்லைவாழந்தணர்களால் நாளும் விதிப்படி ஆராதிக்கப்பெற்றுப் போற்றப்படுபவர் என்பது—

"மூவா யிரநான் மறையாளர் நாளும்
முறையால் வணங்க வணங்காய சோதி
தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்திர கூடஞ்சென்றுசேர் மின்களே"

(3, 2, 8)

என்ற இப்பெரியார் திருவாக்கால் விளங்கும். தில்லை மூவாயிரவர் இவ்வாறு திருமாலடியராய் வழிபடுந் திறத்தை—

"தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
அந்தணர்க ளொருமூவா யிரவ ரேத்த
அணிமணியா சனத்திருந்த வம்மான் றனே." (10,2)

என்று குலசேகரப்பெருமாளுங் கூறியருளுதல் காண்க. இதனுல், சிவனடியார்களால் முற்படச் சிறப்பிக்கப் பெற்ற "தில்லைவாழ்ந்தணர்"[1]. பண்டைக்காலத்தே

1. தேவாரம், திருத்தொண்டத்தொகை, 1.

'அரனதிகம் உலகளந்த அரியதிகம்' என்ற பிளவுபட்ட கொள்கையினராகாது 'திருமாலுக்கடிமைசெய்' என்ற முதுமொழியின்படி ஒழுகிய பெரியோர் என்பது நன்கு பெறப்படும். இனி, திருமங்கைமன்னன், தம் திருவல்லிக்கேணித் திருப்பதிகத்தில்,

**"மன்னுதண் பொழிலும் வாலியு மதிலும்**
**மாடமா ளிகையுமண் டபமும்**

தென்னன் தொண்டையர்கோன் **செய்தநன் மயிலைத்**

**திருவல்லிக் கேணிநின் றானே"**

என்று அருளிச் செய்கின்றார். இதனுள், திருவல்லிக் கேணிக்குப் பல திருப்பணிகளுஞ் செய்து அத்தலத்தைச் சிறப்பித்த தொண்டையர் கோனை பல்லவவேந்தனைப் பற்றிக் கூறுதல் காணலாம். அவ்வூர் ஸ்ரீபார்த்தஸாரதி கோயிற் கர்ப்பக்கிருகத்திற் கண்டறியப்பட்ட சிலா சாஸனமொன்று, 780-ல் பட்டம்பெற்ற தந்திவர்மனது 12-ம் ஆட்சி வருஷத்து அமைந்ததாக உள்ளது[1]. இச் சாஸனப் போக்கினின்று, திருவல்லிக்கேணிக் கோயில், தந்திவர்மன் ஆட்சிக்கு முன்பே எல்லாத் திருப்பணிகளும் நிரம்பியிருந்ததாகவே தோற்றக் கூடியது.

அதனால், மேற்பாசுரம் கூறுமாறு,வாவி, மதில், மாடமாளிகை, மண்டபம் முதலியன புதியவாக நிருமித்துத் திருவல்லிக்கேணியைச், சிறப்பித்த பல்லவன், அத்தந்தியின் தந்தையும் பரமபாகவதனுமான பல்லவ மல்லனாகக் கருத இடமுண்டு.

---

1, Ep. Rep. 323-4 of 1903.

இவரன்றித் தம்நாளிற் பிரபலராயிருந்த தமிழரசரெல்லாம் திருமால்பத்திமையிற் சிறந்திருந்தவர் என்பதைத் திருமங்கைமன்னன்,

> **'பரனே! பஞ்சவன் பூழியன் [1] சோழன் பார்மன்னர் மன்னர்**
> **தாம்பணிந் தேத்தும் வரனே''**
> (பெரிய திருமொழி, 7, 7, 4)·

என்பதனுல் குறிப்பிடுகின்றுர். இவ்வாறு அவ்வேந்தர்கள் திருமாலடியாராக விளங்கியகாலம், இப்பெரியாரின் முற்பகுதிக்காலமான 7-ம் நூற்றுண்டாதற்கு ஏற்புடையதன்று.

மகேந்திரவர்மன் காலமுதலாக (600) இராஜசிம்மன் காலம் (690)முடிய இருந்த பல்லவர்கள், விஷ்ணுசமய விரோதிகள் அல்லராயினும், திருமாலடியார் என்று சிறப்பிக்கத்தக்கவர் ஆகார். அவ்வேழா நூற்றுண்டின் பிற்பகுதியிலிருந்த பாண்டியனே சம்பந்தர்காலத்தவனுன நெல்வேலி வென்ற நெடுமாறன் ஆவன். இவன் பரமசைவன்[2] என்று தெரியவருதலால், இவனை—

1. பௌழியன்' என்பது இப்போதைப் பாடம். பூமி நாட்டுக்குத் தலைவனுனமைபற்றிப் பூழியன் என்று சேரர்க்கு ஒரு பெயர் பழைமையாகவே வழங்குதலாலும், பௌழியன் என்று அவர்க்கு நூல்வழக்கின்மையாலும்' பூழியன், என்றே ஈண்டுப்பாடங்கொள்ளப்பட்டது.

2. சுந்தரமூர்த்தி நாயனுர், அறுபத்த மூவருள் ஒருவராகத் திருத்தொண்டத் தொகையிற் பாடியவாறே—''நறையாற்றகத்து வென்றுன் முடிமேல்—நின்றுன் மணிகண்டம்போல்'' (256), ''விழிஞத்து வென்ற—வல்லியல் தோண்மன்னன் சென்னி நிலாவினன் வார்சடையான்''(279) என இந்நெடுமாறனைச் சிவபத்தனுகவே **பாண்டிக்கோவைப்** பாடல்கள் கூறுதலுங்காண்க. (இறையனுர் களவியலுரை.)

**பஞ்சவன்...பணிந்தேத்தும் வரனே''**
**''கோநெடுமாறன்... கொண்டாடுந் தென்றிருமாலிருஞ்**
**சோலையே''**

என்று திருமங்கையாரும் அவர் காலத்தவரான பெரியாழ்வாரும் சிறப்பிக்க நேர்ந்திராது என்றே சொல்லலாம்.

ஆகவே, பரமவைஷ்ணவர்களாகப் பல்லவரும் பாண்டியரும் விளங்கிய எட்டாம் நூற்றாண்டே,மேற் குறித்த திருவாக்குக்கள் உண்டான காலமாகவேண்டும்.

திருமங்கையார் காலத்துப் பாண்டியன், பெரியாழ்வார்க்கு அடியவனாக மேலேகூறிப்போந்த இராஜசிம்மனாகிய நெடுமாறன் அல்லது மாறவர்மன் ஆவன். அக் காலத்துச் சேரவேந்தன் இன்னான் என்பது, குலசேகரப் பெருமானைப்பற்றிக் கூறுமிடத்து நன்கு விளங்கும்.

சோழவரசர் இக்காலத்தே பல்லவர்கீழ்ச் சிற்றரசராயிருந்தவரே; ஆதலால் தம் தலைமையரசர் கொண்டிருந்த சமயத்தையே அவரும் தழுவியவராயிருத்தல் கூடியதாம்.

8-ம் நூற்றாண்டில் தலைமை வகித்த பல்லவமல்லனது திருமால்பத்திச்சிறப்போ, ஏற்கவே நன்கு அறியப்பட்டது. மேற்குறித்த பாசுரத் தொடரில், 'பார்மன்னர் மன்னர்'[1] என்று திருமங்கைமன்னன் கூறுவது தங்காலத்துப் பல்லவவேந்தனை யென்றே சொல்லலாம்.

**''உலகிற் பலராய்ப் பலவேந்தர் வணங்குகழற் பல்லவன்''**
**''துளங்கு நீண்முடி யரசர்தங்குரிசில் தொண்டை**
**மன்னவன் ''**

---

1. 'பார்மன்னர் என்பது இப்போதைப் பாடமாயினும், ஒருமையாகக் கொள்ளுதலே ஈண்டுப் பொருந்தும்.

என்று இப்பல்லவரையே பேரரசர்களாக இப்பெரியார் வேறிடங்களிற் பாடுதலுங் காண்க. இங்ஙனம் பெருவேந்தரன்றி அவர்க்கடங்கியிருந்த சிற்றரசரும் ஆழ்வார்காலத்தில் திருமாலடியராவிருந்தவரென்றே தெரிகின்றனர்.

### மலையமான்கள்

தம் திருநெடுந்தாண்டகத்து 7-ஆம் பாசுரத்தில்—

" **விந்தமேய, கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட**
**கடிபொழில்சூழ் நெடுமறுகிற் கமலவேலிப்**
**பொற்புடைய** மலையரையன் பணியநின்ற
பூங்கோவ லூர்**தொழுதும் போது நெஞ்சே** "

எனத் திருக்கோவலூர்த் திருமாலிடம் அந்நகரத் தலைவனுகிய **மலையமான்** கொண்டிருந்த பத்திமையை இவ்வாழ்வார் சிறப்பித்துக் கூறுதல் காண்க.

இப்பாசுரத்துள் 'மலையரையன்' என்பது மலையமான்களைக்[1] குறிக்கும் சாதியொருமை என்று ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை பொருளெழுதியிருத்தல் அறியத்தக்கது. திருமுடிக்காரி முதலாய பழைய மலையமான்களுக்குத் திருக்கோவலூர் தலைமைநகரமாக விளங்கிய செய்தி சங்க நூல்களால் அறிஞர் நன்கறிந்ததே. 7, 8-ம் நூற்றுண்டுகளில் இம்மலையமான்கள் பல்லவர் கீழ்ச் சிற்றரசராயிருந்தவர்.

### வைணவ பக்தர்கள்

இவ்வாறு பல்லவர்க்குக் கீழ்ப்பட்டவர்களும் படாதகளுமான தமிழரச ரெல்லாம், தங்காலமொன்றில்

---

1. 'மலையமானவர்க்கு' என்று அச்சுப்பதிப்பிதல் வருகக் காணப்படுவது, 'மலையமான்களுக்கு' என்று திருத்திக் கொள்ளுதற் குரியது.

விஷ்ணுபக்தி மிக்கவராயிருந்தனர் என்ற செய்தியைத் திருமங்கை மன்னன் குறிப்பிடுதல் அறியக்தக்கது.

மேற்கூறியபடி, திருமங்கைமன்னனுற் புகழப்பட்ட அரசர்கள் திருமால்பத்திமை மிக்கிருந்தவர் என்று விளங்குதலினின்று, பிற்காலத்தவர் கொண்ட மதவைராக்கிய நிலைமையையேனும், சமய விரோதக் கருத்தையேனும் அவர்கட்குங் கொண்டு நோக்குதல் தகுதியன்று.

## வெறுப்பற்ற நிலையினர்

பழைய அரசர் பெரும்பாலாரும் வைதிகசமயங்களுள் எதனைத் தழுவியவராயினும் அதுபற்றிப் பிற்காலத்து வேந்தர் சிலர் போலப் பிற வைதிகசமயக் கடவுளரிடத்து வெறுப்புக் கொள்ளாது, அவர்க்குக் கோயிலெடுத்தும் வழிபட்டும் போந்தவர்களே. கோச்செங்கணுன், மகேந்திரவர்மன் முதலியோர் இத்தகையோராதல் காண்க. வைதிகரிடம் மட்டுமன்று: அவைதிகரான சைனபௌத்தர்கள்பாலும் அம்முறையையே பண்டை வேந்தர் கொண்டொழுகியவராவர்.

சிவபாதசேகரன் எனப்பட்ட முதல் ராஜராஜசோழன் நாகைப்பௌத்த விஹாரத்தை அபிமானித்து ஆதரித்ததும், அவன் சகோதரி குந்தவை சைனப்பள்ளிகட்டிப்[1] போற்றியதும் இதற்குச் சான்றுகளாம். ஆகவே, சைவச் சார்புடைய வேந்தர் திருமால்கோயில் முதலியன நிருமித்துவணங்கலும், வைணவச்சார்புடைய வேந்தர்

---

1. குந்தவையால் பிரதிஷ்ஷடிக்கப்பட்டது, வட ஆர்க்காடு ஜில்லாவில் திருமலை (வைகைமலை) யிலுள்ள ஜினலயமாகும். (Insc. of the Madras Presidency. NA 383)

சிவாலய முதலியனகட்டி வழிபடலும் முற்காலத்தே சிறிதும் புதுமையானவை அல்ல.

ஆயினும், அத்தகையோருட் சிலர் இன்ன கடவுளைத் தம் வழி படுதெய்வமாகக் கொண்டு விசேட பத்தி புரிந்துவந்தவர் என்பதனை நன்கறிய இடமுண்டு.

அஃதாவது—பல்லவருள்ளே சிம்மவிஷ்ணு, நந்திவர்மன், தந்திவன்மன்: நிருபதுங்கன் போன்றவரைப் பரமபாகவதர்களென்றும், முதலாம் மகேந்திர வன்மன், இரண்டாம் நரசிம்மவன்மன், மூன்றும் நந்திவன்மன்[1] போன்றவரைப் பாமசைவர்களென்றும், பாண்டியருள் பராந்தகன் - நெடுஞ்சடையனைப் பரம வைஷ்ணவன் என்றும், முதலாம் இராஜராஜ சோழனைப் பரமசைவனென்றும் சாஸனங்கள்[2] சிறப்பாகக்கூறுவன

---

2. பல்லவமல்லனைப் பற்றிய தண்டாந்தோட்டச் சாஸனத்தை (S I I ii, No. 99) தெள்ளாற்றில் வென்றவனும், பல்லவமல்லன் பேரனுமான மூன்றும் நந்திவன்மனது என்று மாறிக்கருதி, அந்நந்தியை வைஷ்ணவனென்றும் திருமங்கையார் அவனையே பாடியவர் என்றும் சிலர் எழுதியிருப்பது தவறென்க, வேளூர்ப் பாளயசாஸனத்தாலும் (S. S. I. I, ii. p,. 509). 'சிவனை முழுது மறவாத சிந்தையான்...நந்தி' என்ற நந்திக்கலம்பகத் தொடராலும் (104),பிறவற்றாலும் அவன் பரமசைவன் என்பது தெளியப் படும்.

3. 'பக்தியாராதிதவிஷ்ணு:' (விஷ்ணுவைப் பத்தியோடும் ஆராதிப்பவன்) என்று ஸிம்மவிஷ்ணுவும் (S. I. I. Vol. ii. p. 366, lines, 12, 13) 'அச்சுதனைத் தன் ஹ்ருதயஸந்நிஹிதமாக உடையவன்' 'முகுந்தனைத் தவிர வேறொருவரையும் வணங்கியறியாத முடியுடையவன்' என்று இரண்டாம் நந்திவன்மனான பல்லவமல்லனும் (S. I. I. II, p 507) 'முராரியால் திருடபக்தியுடையவன்' என்று நந்திவன்மனும் (S. I. I.II

கொண்டு அன்னோர் தழுவியிருந்த சமயம் இன்ன வென்று கொள்ளத் தடையில்லை.

இதனால், பெரியாழ்வார் திருமங்கையார் காலத்துப் பாண்டியன் பல்லவன் போன்ற அரசர்கள் திருமால்பத்திமை சிறப்பக் கொண்டிருந்தவராயினும், ஏனைய வைதிக சமயக் கடவுளரை வழிபட்டும் திருப்பணி செய்தும் போந்தவர் என்றே அறிந்து கொள்க.

## மகளிர் இகழ்தல்

இனி, திருமங்கை மன்னன் தம் பெரிய திருமொழி யின் முதற்பத்து மூன்றாந்திருப்பதிக முழுதினும்— தமக்கு மூப்பு வருவதுணர்ந்து, அதுமுதிர்ந்து மகளிர் இகழும்படி நேர்வதற்குமுன்பே, வடநாட்டுள்ள வதரி என்ற திருப்பதியை வணங்க விரும்புவதாகத் திருவுளங் கொண்டு, தம் நெஞ்சை நோக்கி[1], ஒருவரையுணர்த்துந் தன்மைப்பன்மையில் 'வதரி வணங்குதுமே' என்ற தொடர் பாடலிறுதி தோறும்வரப் பாடுகின்றார். அவற்றுள் ஏழாம் பாசுரம் ஈண்டு ஆராய்ச்சிக்கு உரிய தாம். அது வருமாறு:—

---

p. 515) 'முகுந்தன் பாதங்களை எப்போதும் சிரசில் தரிப்பவன்' என்று **நிருபதுங்கவர்மனும்** (S. ii. II, p. 507) சாஸனங்களிற் சிறப்பிக்கப்படுதல் காண்க. முதல் மகேந்திர **வர்மன்**, இரண்டாம் நரசிம்மவர்மனாகிய இராஜசிங்கன் இவர்களைச் **சிவபக்தர்களாகச்** சாஸனங்கள் கூறுதல் மேலே பலவிடங்களினுங் குறிக்கப்பட்டது.

1. தம் திருவுள்ளத்தை **விளித்து** ஆழ்வார் கூறியதாக ஸ்ரீ பெரியவாச்சான் **பிள்ளை கருத்தருளிச்** செய்தலுங் காண்க.

**"பப்ப வப்பர் மூத்த வாறு பாழ்ப்பது சீத்திரனை
ஒப்ப ஐக்கள் போதவுந்த வுந்தமர் காண்மின் என்று
செப்பு நேர்மென் கொங்கை நல்லார் தாஞ்சிரி யாமுன்னம்
வைப்பும் நங்கள் வாழ்வு மாஞன் வதரி வணங்குதுமே"**

என்பதாம். 'பப்பவப்பர் கொண்ட கிழத்தனம் இகழத் தக்கது; சீத்திரள்போலக் கோழைகள் சிந்தும்படி நிற்கும் உங்கள் பந்துவின் நிலையைப் பாருங்கள்' என்று மகளிர் நகையாடுவதற்கு முன்பே நாம் வதரியை வணங்குவோம்" என்பது இப்பாடற் கருத்து.

இதன் முதலிரண்டடிகள் "தாம் இனி அடையப் புகும் மூப்பைக் கண்டு மகளிர் இகழுங்கூற்று இது"—என்று அப்பெண்டுகள் வாய்மொழியாகக் கொண்டு மொழிந்ததே என்பது எளிதிற் புலப்படும். பப்பவப்பர் என்ற அப்பெண்டுகள் கூற்றுத் தம்மை யன்றிப் பிறரை நோக்கியதாயின், 'அப்பிறர் மூத்த படியைக் கண்டு மகளிர் சிரிக்குமுன்பே நெஞ்சே! நாம் வதரி வணங்குவோம்' என்று ஆழ்வார் கூறுவாராயினர் என்ற கருத்து, அத்துணை ஏற்புடைத்தாகாமை காண்க.

இதனால், **பப்பவப்பர்** என்று நாட்டார் தம்மை அழைத்து வந்தனரென்பதும், அதுபற்றியே அப் பெயரை மகளிர் கூற்றில் வைத்து ஆழ்வார் தம்மைக் குறித்துக் கொள்ளலாயினர் என்பதும் பெறப்படு கின்றன.

## பப்பவப்பர் யார்?

இப் பப்பவப்பர் என்ற தொடர், பப்பராகிய அப்பர் என்று விரியும். அப்பர் என்பது தந்தையை மட்டு மன்றித் தெய்வங்களையும் பெரியோர்களையுங் குறிக்க

முற்காலத்தே பெருக வழங்கி வந்ததென்பது நூல்களாலும் சாஸனங்களாலும் நன்கறியப்படுகின்றது. அப்பர் என்பதற்கேற்றபடி வடமொழிச் சாஸனங்களில் வழங்குஞ்சொல்—பட்டாரகர், ஸ்வாமி என்பன. இதனால் அப்பர், பட்டாரகர், ஸ்வாமி என்ற மூன்றும் 'பப்ப' என்பதனுடன் இணைந்து ஒரு பொருளே பயப்பவை என்பது உணரலாம்.[1]

## வடமொழியிலிருந்து

எனவே, திருமங்கை மன்னன் தமக்கு வழங்குவதாகக் குறிப்பிடும் 'பப்பவப்பர்' என்பது, பப்ப பட்டாரகர் அல்லது பப்ப ஸ்வாமி[2] என்ற வடதொடரின் தமிழ்ப் பெயர்ப்பே என்பது விளங்கத் தடையில்லை.[3]

---

1. *காட்கரையப்பன்* (திருவாய்மொழி), திருக்காட்கரை பட்டாரகர் (T. A. S. iii. 161) எனத் திருமாலுக்கும், அஞ்சையப்பன் (தேவாரம்), திருநந்திக்கரை பட்டாரகர் (T. A. S. iii, 206) எனச் சிவபிரானுக்கும், அப்பர், அப்ப மூர்த்தி, ஸ்ரீ முகுந்தோத்தம பட்டாரகர் (T. A. S, iii 44) என வைதிக சமயப் பெரியோர்க்கும், தர்மபூஷண பட்டாரகர் (S. I. I. i, Vol. I. p 159) எனச் சைவ முனிவர்க்கும் அப்பர், பட்டாரகர் என்ற இரண்டும் ஒரே பொருளுடையனவாக நூல்களினும் சாஸனங்களினும் வழங்குதல் அறியத்தக்கது. இவற்றுள் பட்டாரகர் என்பது படாரர், பழாரர் என்று திரிந்தும் வழங்கும் (T. A. S. ii, 139). 'சிவப்பட்டார்' (நான்மு. 6) என்ற திருமழிசையார் வாக்கிற் கண்ட 'பட்டார்' என்பது இப்பட்டாரகரின் திரிபோஎன்று கருதுவாருமுண்டு. (History of Sri Vaishnavas, p. 16)

2. 'மஹாராஜா பப்பஸ்வாமி' என்று ஒரு சாஸனம் கூறும் (Ind. Ant. XV, p. 274.)

3. பப்ப என்பது அசதியாடிக் கூறிய குறிப்புமொழி (க்ஷேபோக்தி) என்றும், அப்பர் என்பதற்குக் கிழவன் என்றும்

## அரசர்கள் பட்டப் பெயராக

பல்லவர்களுள்ளே பரமபாகவதர்களான அரசர் சிலர் **பப்ப பட்டாரக பாதபக்த**[1] என்றிவ்வாறு விசேடிக்கப் படுகின்றனர். 'பப்ப பட்டாரகருடைய பாதங்களில் பக்தியுடைய' (இன்னர்) என்பது இத்தொடரின் பொருள். இதனினின்றும், அரசர்க்கு ஞானசாரியராய் விளங்கிய பெரியோர் சிலர்க்கு இப்பெயர் முன்பு வழங்கி வந்ததென்பது தெரியலாம்.[2]

ஒருசாரார், பப்ப பட்டாரகர் என்பது அரசரது முன்னோரைக் குறிக்க வழங்கிய பெயராகவே கருதுவர். ராஜருஷிகளாகவும் அடியார்களாகவும் விளங்கிய அரச முன்னோர் சிலர்க்கு அப்பெயர் வழங்கியிருப்பது உண்மையே. அதுபற்றி, அவ்வழக்கு அவர்கட்கே உரியதென்பது பொருத்தமன்று.

தெள்ளாறெறிந்த மூன்றும் நந்திவர்மனால் சிறப்பிக்கப் பெற்ற சிவபத்தரும், வேதசாஸ்திர பாரங்கதருமான யஞ்ஞபட்டர் என்ற பிராமண ஆசாரியர்க்கும் இப் 'பப்ப பட்டாரகர்' என்ற சிறப்புப் பெயர் வழங்கிய செய்தி சாஸனத்தால் தெரிய வருகின்றது.[3] இதனால் அரசர்க்கு ஞான குருவாக

---

முன்னோர் பொருள் கூறினரேனும், ஆழ்வார் காலத்து வழக்காக நமக்குத் தெரியவரும் சாஸனப்பொருள் தள்ளத் தக்கதன்றென்க.

1. Ind. Ant. Vol. XV, p. 274.

2. 'தைவதமாகாநின்ற பப்ப பட்டாரகரும்' என்று முதற் பரமேசுவரவர்மன் சாஸனத்து வருதலுங் காண்க. (S. I. I. Vol. i, p. 157)

3. மூன்றும் நந்திவர்ம பல்லவனது வேலூர்பாளயச் சாஸனங்களைப் பதிப்பித்த ராவ்ஸாஹிப்: ஸ்ரீ H. கிருஷ்ண

விளங்கிய பெரியோர்க்குப் பொதுவாகவே அப்பெயர் வழக்கு உண்டு என்பது பெறப்படும்.

யான் கண்ட இக்கருத்து அறிஞர்க்கெல்லாம் ஒப்ப முடியுமாயின்—திருமங்கை மன்னன் தமக்குப் 'பப்ப வப்பர்' என்ற பெயர்வழக்கு உண்டென்று குறிப்பிடுவதி னின்று—அரசர் வணங்கற்குரிய ஆசாரியபதத்தை, மேற்குறித்த யஞ்ஞபட்டரைப் போல, இப்பெரியாரும் வகித்து வந்தவர் என்றே சொல்லலாம். இதற்கேற்ப, இவ்வாழ்வார் காலத்தவனும், திருமாலடிமையிற் சிறந்து நின்றவனுமாகிய பல்லவமல்லனை,

**"பப்பபட்டாரக பாதாநுத்யா**
**வர்த்தமாந மஹிம்நா"**

என்று அவன் சாஸனமொன்று கூறுகின்றது[1] 'பப்ப பட்டாரகரது பாதங்களை இடைவிடாது தியானித்தலால் வளரும் மகிமையுடையவன்' என்பது இவ்வடதொ -ரின் பொருளாம்.

---

**சாஸ்திரி அவர்கள், என்** கருத்துக்கிணங்க, பப்பபட்டாரக **வழக்கைப்பற்றி** எழுதியுள்ள கீழ்க்குறிப்பு அடியில் வருமாறு:—"This surname (Bappa Bhattaraka) occurs in early Sanskrit charters of the Pallavas and has been translated "Lord father". Perhaps the term was one of high respect applied to spiritual preceptors, and it is not unlikely that Yajnabhatta stood in this relation to king Nandivarman III The spiritual preceptor of Nandivarman Pallavamalla is also called Bappa Bhattaraka in the Kasakudi plates. s. i. i. vol. ii. p. 506 f. n.)

1. S. I. I. Vol. ii, p. 350, line, 78—Kasakudi Plates of Nandivarman II.

இவ்வாறு அப்பல்லவனது மகிமை மிகுதற்கு அவன் ஞானகுரு சிறந்த காரணமாகச் சொல்லப் படுதலின், அக்குருவை அவ்வேந்தன் காலத்தவராகக் கருத இடமுண்டு. இங்ஙனம் பரமபாகவதனுன பல்லவனது ஞானசாரியராய் விளங்குதற்கு உரிமை யுடைய பெரியார், திருமங்கை மன்னனினும் சிறந்திருந் தவர் அக்காலத்து வேறியாவர்? அதனுல், பப்ப வப்ப ராகிய இவ்வாழ்வார் தங்காலத்து அரசர்க்கு ஞான குருவாக விளங்கியவர்போலும் என்ற ஐயம் நிகழ் கின்றது.

இதனுண்மை எவ்வாருயினும், ராஜருஷிகள் பலரை 'பப்பபட்டாரக மஹாராஜா' என்று சாஸனங்கள் மிகுதியும் வழங்குகின்றமையின்.[1] அரசராய்த் துறவு பூண்ட நம் பெரியாரும் அத்தகையாருள் ஒருவராகக் கருதப்பெற்று அவர் காலத்தில் பிரபலராயிருந்தவர் என்பது, அவர் வாய்மொழி கொண்டே அறியத் தடை யில்லை. ஆலிநாடரும் மங்கை வேந்தருமாகிய இவ் வாழ்வார் இந்திரனுக்கு அமைந்தது போன்ற அரசியற் பெருஞ்செல்வத்தில் இறைவன் தம்மையும் வைத்துள்ள நிலைமையை—

> "வெந்திறற் களிறும் வேலைவா யமுதும்
> விண்ணொடு விண்ணவர்க் கரசும்
> இந்திரற் கருளி யெமக்குமீந் தருளும்
> எந்தையெம் மடிகளெம் பெருமான்"

என்று பாராட்டிக் கூறியுள்ளார்; ஆதலின், இப் பெரியாரை 'ராஜருஷி' என்னச் சிறிதும் தடையில்லை என்க.

---

1. Ind. Ant Vol. xv, p. 274.

## அரியும் சிவனும் ஓரிடத்தில்

இனி, திருமங்கை மன்னன் மாமல்லபுரம், மாவலி புரம் என்று வழங்கப்பெறும் திருக்கடன்மல்லைத் தலசயனத்தைப்பற்றிய தம் இரண்டாந்திருப்பதிகத் தில்—

" **பிணங்களிடு காடதனுள் நடமாடு** பிஞ்ஞகனோ
டிணங்குதிருச் சக்கரத்தெம் பெருமானார்க் கிடம்
**விசும்பிற்**
**கணங்களியங் கும்மல்லைக்** கடன்மல்லைத் தலசயனம்
**வணங்குமனத் தாரவரை வணங்கென்றன் மடநெஞ்சே**"

என்ற பாசுரத்தே, கடன்மல்லையில் திருமால் சிவபிரா னுடன் சேரக் கோயில் கொண்டுள்ளதைச் சிறப்பித்தல் காணலாம். மாமல்லபுரத்துக் கடற்கரைத் திருமால் கோயிலின் உள்ளிடமாக "க்ஷத்ரியசிகா மணிப் பல்ல வேசுவரம், இராஜசிம்ம பல்லவேசுவரம்" எனப் பெயரிய சிவாலயங்களிரண்டு அமைந்திருந்த செய்தி, அக் கோயிற்பக்கங்களைச் சோதித்தபோது கண்ட பழைய சோழ சாஸனங்களினின்று தெரியவருகின்றன.

## போற்றும் பெயர்கள்

இராஜசிம்மன் என்பவன் (உத். 690—710) பல்லவ வமிசாவளியில் 6-ஆம் எண்ணுக்குரியவனும், இரண்டா முறைவாதாபி வென்றவனாக முற்கூறிய பரமேச்சுர வர்மன் மகனுமாவன். இவனுக்கு (இரண்டாம்) நரசிம்ம வர்மன், க்ஷத்ரியசிகாமணி என்ற வேறு பெயர்களும் உள்ளன. சுந்தரமூர்த்தி நாயனாரால் 'காடவர்கோன்

கோன் கழற்சிங்கன்' என்று திருத்தொண்டத்தொகை யிற் கூறப்பட்ட பல்லவன் இவனே[1].

---

1. இப்பல்லவனொருவனே சமாதானத்துடன் ஆண்டவனுகவும், பரமசிவ பக்தனுகவும் விளங்கியவன். காஞ்சீபுரத்தில் அரிய சிற்பத்தொழில் உடைய கைலாசநாதர் கோயில் எனப்படும் இராஜசிம்மேச்சுரமும் பனமலைச் சிவாலயமும் மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயில்களும் இவ்வேந்தனுல் கட்டிப் பிரதிஷ்டிக்கப் பெற்றவை. சிவதொண்டு புரிவதினும் சிவனடியார்கட்கு வேண்டியனவுதவி அவர்களை ஆதரிப்பதினும் தன்காலத்தைச் செலவிட்டவன் இவன் என்பர். (தூப்ராயில்—பல்லவ சரித்திரம்).

இவனைச் 'சிவசூடாமணி', 'ஸ்ரீ சங்கரபக்த:', 'சைவ ஸித்தாந்த மார்க்கே க்ஷதஸகலமலः' (சைவ சித்தாந்த மார்க்கத்தால் எல்லாப் பாவங்களையும் போக்கியவன்) என்று சாஸனங்கள் s. i. i. i, 12—13) சிறப்பிக்கின்றன.

இவனையே "கடல் சூழ்ந்த **உலகெலாங் காக்கின்ற பெருமான்** - காடவர்கோன் கழற் **சிங்கன்**" என்று சுந்தரமூர்த்திநாயனுர் தம் திருத்தொண்டத் தொகையிற் பாடியதோடு, 'காக்கின்ற' என்பதனுல் இவன் தங்காலத்தவனே என்பதையுங் குறிப்பிட்டனர்.

'கழற்சிங்கன்' என்பதில் கழலென்பது அடைசொல்லேயன்றி இயற்பெயருடன் இணைந்ததன்று. 'பல்லவர் கோச்சிங்கர்' (செருத். 4) 'மாதேவி தனதுசெய்ய கையினைத் தடிந்த சிங்கர்' (கழற். 13) எனச்சேக்கிழாரும், 'காடவர்தங் குலமுவந்த கழலார் **சிங்கர்**' எனத் திருத்தொண்டர் புராணசாரமுடையாரும் இக்கழல் விசேடணபதமே என்பதை விளக்கி நிற்றல் காண்க.

பல்லவருட்சிலர் சிங்கன் என்றே பெயர் பெற்றிருந்தனர் என்பது, "நலமிகு கச்சியார் கோவாயினுனும்—சிலைமிகு

தோட் சிங்கனவனென்பவே'' என்ற பழம்பாடலாலும் (யாப். வி. 87.) அறியபபடும்.

நரசிம்மன் என்பது இராஜசிம்மனுக்கு வேறு பெயர். நரசிங்கன் என்பது சிங்கனெனவும் வழங்குதலை, ''சிங்கப் பிரான்'' (திருவாய்.) 'சிங்கப்பெருமாள்' என்பவற்ருல் உணர்க. சேரமான் பெருமாளுயனுரும், சுந்தரமூர்த்தி களும் கயிலை சென்ற காலத்தைக் குறிப்பதற்கு வழங்கிய அப்தமே கொல்லமாண்டு என்பதும், அதனுல் அச்சிவனடியா ரிருவரும் கி. பி. 825-வரை வாழ்ந்தவராவர் என்பதும் ஒருசாரார் கொள்கை.

அன்னேர் கருத்துப் பொருத்தமானதன்று. 'கொல்லம் தோன்றி' இன்ன ஆண்டு—என்றே மலையாளநாட்டுச் சாஸனங்கள் பலவற்றிற் காணப்படுவதால் (T. A. S. V, 44.) கொல்லநகரம் உண்டானதைக் குறிக்க அவ்வப்தம் வழங்கியதேயன்றிப் பிறிதன்று. அந்நகரம் இன்னுரால் உண்டாக்கப்பட்டது என்பதுபற்றிக் காலஞ்சென்ற ஸ்ரீமாந். கோபிநாதராயர் அவர்கள் நன்கு விளக்கியிருத்தல் அறியத் தக்கது (Ibid. Vol. ii pp 73: 76—77).

வேறு சிலா ''பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை மறுக்கஞ் செய்யும் புலியூர்ச் சிற்றம்பலத் தெம்பெருமானை'' என்று சுந்தரமூர்த்திகள் பாடுதலினின்று அவர் காலத்தே பல்லவர் வலிமை குன்றியிருந்த நிலைமை வெளியாவதாகக் கொண்டு அந்நிலைமை இரட்டை வேந்தனுன மூன்ருங் கோவிந்தனது படையெடுப்பால் 803-ல் தந்திவர்மனது ஆட்சியில் உண்டானமையின், அப்பல்லவன் காலத்தவரே அந்நாயனுர்—என்று கருதுவர்.

''பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரைச் சிவபிரான் கலங்கச் செய்கின்ருர்' என்பதனுல், பல்லவரை வலிகுன்றிய வராகக் கருதல் என்னே?

'அடங்காத பிறவேந்தரும் அடங்கித் திறை செலுத்தும்படி ஈசன் தன்னடியனுன அரசற்கு அருள் செய் கின்ருன்' என்று தற்காலத்துப் பல்லவன் அடிமைத் திறத்தால் அடைந்துவரும் பெருமையை அந்நாயனுர்

சிறப்பிக்கின்றார்—என்ற கருத்துக் கொள்ளற்கு இழுக்கென்னை?

பெரியாழ்வாரும் "குறுகாத மன்னரைக் கூடு கலக்கி வெங்கானிடைச், சிறுகானெறியே போக்குஞ் செல்வன்" என்று இவ்வாறே பாடுதலை மேலே விளக்கியுள்ளேன். (பக். 92) இக்கருத்தே சுந்தரமூர்த்திகட்கும் உரியதன்றாயின், 'கடல் சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்' என்று, 'தங்காலத்துப் பல்லவன் உலகமெலாம் ஆளும் பேரரசன்' என்று, அவன் பெருமை விளங்கப் பாடார் என்பது திண்ணம், இந்நாயனாரை அபிமானித்து வளர்த்தவர் திருமுனைப்பாடி நாட்டின் தலைவரான நரசிங்கமுனையரையர் என்று பெரியபுராணங்கூறும். 7-8 ஆம் நூற்றாண்டுகளி லிருந்த அந்நாட்டினரசர் பல்லவர்க்குக் கீழ்ப்பட்டிருந்தவர் களே. பேரரசர் கொள்ளும் பெயர்களையே அவர்கீழ்ச் சிற்றரசர் தமக்குரிய கௌரவ நாமமாகத் தரித்துவந்தவர் என்பதற்கு எண்ணிறந்த சாஸனப் பிரமாணங்கள் உள்ளன. அம்முறையில், சுந்தரமூர்த்திகளை அபிமானித்த முனையரை யரும், தம் தலைமையரசன் பெயரையே தரித்தவராதல் வேண்டும் என்று, நரசிங்கர் என்ற அவர் நாமத்தினின்றே கருதல் பொருந்தும் 7-ம் நூற்றாண்டில் நரசிங்கவர்மன் என்ற பெயர் கொண்டிருந்த பல்லவரிருவருள், முதலாமவன் ஞானசம்பந்தர்க்கும் முற்பட்டவனாதலாலும், 8-9-ம் நூற்றாண்டுகளில் அப்பெயர் பூண்ட பல்லவர் வேறில்லாமை யாலும், நரசிங்கமுனையரையர் காலத்துத் தலைமைவேந்தன் இரண்டாம நரசிம்மவன்மனான இராஜசிங்கனேயாதல் வேண்டும் என்க. எனவே, இவனே—காடவர்கோன் கழற் சிங்கன்' என்று சுந்தரமூர்த்திகளால் பாடப்பட்டவன் என்பது மிகப்பொருத்தமாதல் காண்க. இவற்றினின்று, சுந்தரமூர்த்திகள் சம்பந்தர்க்கு 20—25 ஆண்டுகளே பிற்பட் டிருந்தவர் என்பது தெரியலாம். 'நாவின்மிசை யரையனொடு தமிழ்ஞான சம்பந்தன், யாவர் சிவனடியார்களுக் கடியானடித் தொண்டன்' (தேவா. கேதாரம், சுந் 10) எனச் சுந்தரமூர்த்திகள் அவ்வடியார்கட்குத் தாம் அடுத்திருந்த நிலைமையைக் குறிப்பிடுதலும் காண்க.

மாமல்லபுரத்தே கடற்கரையில் இருந்தனவாக மேற்குறித்த சிவாலய மிரண்டும்—இராஜசிம்மன், க்ஷத்ரியசிகமணி என்ற—இவன் பெயர்கள் கொண்டிருத்தலின் இவனே அவ்வாலயங்களை நிருமித்தவனுவன் என்று, சாஸனவறிஞர் கருதலாயினர்[1], இக் கருத்து ஏற்புடையதென்னத் தடையில்லை.

இவ்வாறு 7-ஆம் நூற்ருண்டிறுதியிற் பல்லவன் பிரதிஷ்டித்த சிவமூர்த்தத்தோடு திருமால் ஆங்குக் கோயில் கொண்டுள்ளதனையே—"பிஞ்ஞகனோ டிணங்கு திருச் சக்கரத்தெம் பெருமானுர்க் கிடம்" என்று திருமங்கைமன்னன் பாடுதல் அறியத்தக்கது.

இத்திருமால்கோயில், ஆங்குச் சிவாலயங்களெடுத்த இராஜசிம்மன் காலத்துக்கும் முன்பே உள்ளதாகும்.

**சிறந்த கற்பனை**

அப்பல்லவனது ஆஸ்தானத்து விளங்கியவரென்று தெரியவரும் மகாகவியான **தண்டியாசிரியர்** தாம் இயற்றிய **அவந்திசுந்தரிகதையின்** தொடக்கத்தே, மாமல்லபுரத்துக் கடற்கரைக்கோயிலிற் பள்ளி கொண்டருளிய திருமால் மூர்த்தத்தின் மணிக்கட்டொன்று பின்னமுற்றதைச் செப்பனிட்ட சிற்பியின் விருப்பப்படி அவனுடன் ஆங்குச்சென்று தரிசித்தபோது, அப் பெருமானது திருவடிகளைக் கடலலைகள் மோதியலம்பும்படி மூர்த்தமிருந்த நிலைமையைச் சிறப்பிப்பதோடு, அவ்வாறு மோதிய அலையொன்ருல் அப்போதலர்ந்த செந்தாமரையொன்று அப்பெருமான் திருவடிகளில் வீழ்த்தப்பட்டதென்றும், அம்மலர்

1. Ep. Rep. No. 961 of 1913, pp 88—9.

வீழ்ந்ததும் அஃது ஒரு வித்யாதர உருவமாகமாறிப் பரமனை வணங்கி விண்ணுலகை நோக்கிப் படர்ந்ததைத் தம் கண்ணாரக்கண்டு களித்ததாகவும் கூறுகின்றார்.[1]

இவ்வாறு அலைமோதும்படி திருமால் சந்நிதி அமைந்திருந்த பண்டைநிலைமை அத்தண்டி அவந்தி சுந்தரிகதை பாடிய பின்பு மாறிவிட்டது.

அதன் காரணம்—அப்புலவர்காலத்துப் பல்லவனும், முற்கூறியபடி பரம சைவனுமான இரண்டாம் நரசிம்மவன்மன் என்ற இராஜசிம்மனால் அத்திருமால் சந்நிதிக்கு முன்புறமாகச் சிவலாயமொன்று கட்டிப் பிரதிஷ்டிக்கப்பட்டதே ஆகும். அதனால் அக்காலமுதற் கடலலைகள் சிவாலயத்தில் மோதுவதன்றி அவ்வாலயத்தின் பின்புறத்துள்ள திருமால் மூர்த்தத்தைத் தொடுவதற்கு இடமில்லையாயிற்று

ஆகவே, அச்சிவாலயங் கட்டப்பட்டதற்குமுன் பள்ளிகொண்டருளிய பெருமாளின் திருவடிகள் அலை மோதும்படி இருந்த நிலையையே மகாகவியான தண்டி பாடலாயினர் என்பது தெளிவாதல் காணலாம்.

அத்திருமால் மூர்த்தத்தின் மணிக்கட்டொன்று பின்னமுற்றதைச் சிற்பியொருவன் நன்கு செப்பனிட்டான் என்பதனாலும், அம்மூர்த்தம் பல்லவராற் பிரதிஷ்டிக்கப் பட்டது என்ற குறிப்புத் தண்டியின் வாக்கில் இன்மையாலும் மாமல்லபுரத்துக் கடற்கரைத் திருமால் மிகப் புராதனமூர்த்தியே என்று கொள்ளத் தடையில்லை என்க.

---

1. 'பாரவி தண்டிகளின் காலம்' என்ற தலைப்பின் கீழ் ஸ்ரீ. ஏ. ரங்கசுவாமி ஸரஸ்வதி அவர்கள். பீ ஏ., எழுதிய அரிய வியாசங் காண்க. Quarterly Journal of the Mythic Society, Vol. xiii, pp, 674—79).

மாமல்லபுரம் என்ற கடன்மல்லே, ஆழ்வார்கள் காலத்துக்கு முன்பே பெருந்துறைமுகப் பட்டினமாய்ப் பிரபலம் பெற்றிருந்ததாம். தொண்டைமான் இளந் திரையனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனுர் சிறப் பித்துப் பாடிய பெரும்பாணுற்றுப்படையுள், பெரும் பாணனைத் திரையனிடம் ஆற்றுப்படுப்போன்— "தொண்டைமானுடு வழிப்போக்கரை வருத்தும் கொடியோரை உடையதன்று; அதனுல் விரும்பியவாறு எங்கும் இனிது தங்கி நீ செல்லக்கூடும்" என்று தொடங்கி, அந்நாட்டின் பல பகுதிகளையுங் கூறிவிட்டுப் பின்—

" நீர்ப்பெயற் றெல்லே போகிப் பாற்கேழ்
வாலுளைப் புரவியொடு வடவளந் தரூஉம்
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை
மாட மோங்கிய மணன்மலி மறுகிற்
* * *
பரதர் மலிந்த பல்வேறு தெருவின்
* *
பட்டின மருங்கி னசையின் முட்டில்
* * *
கொழுநிணத் தடியொடு கூர்நறுப் பெறுகுவிர்
வான மூன்றிய மதலே போல
ஏணி சாத்திய வேற்றருஞ் சென்னி
விண்பொர நிவகத வேயா மாடத்
திரவின் மாட்டிய விலங்குசுடர் ஞெகிழி
உரவுநீ ரழுவத் தோடுகலங் கரையும்
துறைபிறக் கொழியப் போகி "

(பெரும்பாண். 319—51)

என்று கடற்கரைப்பட்டினம் ஒன்றைப்பற்றி வருணித் துக்கூறுஞ் செய்தியைக் காணலாம்.

**நீர்ப் பெயற்று**

மேற்காட்டிய அடிகளில்—“நீர்ப்பெயற்று” என்ற ஊரினெல்லையுள் மேல்புலத்துக் குதிரைகள் வடபுலத்துப் பண்டங்கள் இவற்றைக் கொணரும் மரக்கலங்கள் சூழ்ந்த துறைகளைக் கொண்டதும், மிகவுயர்ந்த பண்டசாலைகளுடன் செல்வர்களான பரதர் வாழும் மாடத்தெருக்களை உடையதுமான பட்டின மருங்குள்ள சிறப்பும், அங்கே தேவருலகுக்கு ஒரு முட்டுக்கோல் போன்றதும், தன்னிடஞ்சார்த்திய ஏணியால் ஏறற்கரிய தலையினையுடையதுமாகிய வேயா மாடத்தில் துறையறியாது செல்லும் மரக் கலங்களை அழைக்கும் கலங்கரை விளக்கம் உள்ள சிறப்பும் மிகவழகாகக் கூறப்படுதல் காணலாம்.

ஆகவே, முசிறி புகார் கொற்கை என்ற, சேர சோழ பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள் போலவே தொண்டைநாட்டுக்குச் சிறந்ததாய்ச் சங்கநாளில் விளங்கிய பட்டினம் இந் நீர்ப்பெயற்று என்பது பெறப்படும்.

இத்துறைமுகம் யாதெனின், அது கடன்மல்லையே யன்றிப் பிறிதில்லை என்க.

இந்நீர்ப் பெயற்றுக்குப்பின் உத்தேசத்தலமான கச்சிப்பதியையே பெரும்பாணாற்றுப்படை முடிவாகக் கூறுதலின், இந்நகரினின்று அக்கச்சி நகரைச் சார்தல் எளிதென்பதே பாடியவர் கருத்தாதலுங் காண்க.

கச்சியைத் தலைநகரமாகக் கொண்ட பல்லவர்கள் கப்பற்படையுடன் சென்று ஈழத்தைக் கைப்பற்றியதும் பிறவும் இத்துறைமுகவழியாகவே என்பர் சரித்திர

வறிஞர். பல்லவர்காலத்து மட்டுமன்றிச் சோழராட்சியி லும் இத்துறைமுகநகர் பெருமைபெற்றிருந்ததேயாகும்.[1]

பெரும்பாணாற்றுப்படை கூறுமாறு கலங்கரை விளக்கத்துடன் (Light-House) "எல்லாக் கப்பல்களுக்கும் ஒரு தரையெல்லை ஸ்தானமாக" இன்றும் இப்பட்டினம் உள்ளமை அறியத் தக்கது. இனி,

" **நீர்ப்பெயற் றெல்லைபோகிப்...பட்டின மருங்கி னசையின்**"

என்பதற்கு—'நீர்ப்பெயற்றின் எல்லைக்குச் சென்று பட்டினமருங்கை அடையின்' என்பது பொருளாம்.

நீர்ப்பெயற்று என்பது பட்டினத்தின் வேறுபட்ட ஊராயின் அப்பட்டினப் பெயர் இன்னதென்பதைப் பாடியோர் குறியாமற்போகார். சிறுபாணாற்றுப் படையினும்,

" **மணிநீர் வைப்பின்** மதிலொடு பெயரிய
**பணிநீர் மடுவிற் பட்டினம் படரின்** " (152—3)

என, எயிற்பட்டினம் என்ற கடற்கரையூரை அதன் பரியாயத்தால் 'மதிலொடு பெயரிய...பட்டினம்' என்று நல்லூர்நத்தத்தனார் குறிப்பிடுதலும் ஈண்டு ஒப்பிடத்தக்க தாம். ஆகவே, நீர்ப்பெயற்று என்பது கடற்கரையூரைக் குறிப்பதென்பதும், புகாரின் ஒரு பகுதியான பட்டினப் பாக்கம்போல அந்நீர்பெயற்றின் கடற்கரைப்பகுதி தனியே திரைவளம் பெற்றிருந்த தென்பதும் பெறப் படக்கூடியன.

---

1. "நீடு நெய்தலுங் குறிஞ்சியும் புணர்நிலம் பலவால், ஆடு நீர் கொடி மாட**மாமல்லையே** யனைய" (பெரியபு. திருக் குறிப்புத். 41) எனத் தொண்டைநாட்டுக் கடற்கரையூர் களுள்ளே மாமல்லபுரம் சிறப்புற்றிருந்த செய்தியைச் **சேக்கிழார்** கூறுதல் காண்க.

'நீர்ப்பெயற்று' என்பதற்கு—'நீரின்வளம் பெய்தலை யுடையது' என்று வலிந்து பொருள் கொள்ளலாம். கடன்மல்லை என்ற பெயரும் இப்பொருட்டே; "கலங்க ளியங்கு மல்லைக் கடன்மல்லை" என்றார் திருமங்கை மன்னனும். இனி, நீர்ப்பெயர்த்து என்ற சிறந்தபாடமும் மகாமகோபாத்தியாய - ஐயரவர்களாற் கீழ்க்குறிப்பிற் காட்டப்பட்டுள்ளது; 'நீரின் பெயரை உடையது' என்பது இதன்பொருள். ஈண்டு நீர் - கடல் (பிங் கலந்தை); இதனை.

" நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும் "
(பட்டினப் பாலை, 185)

நீரொலித் தன்ன நிறைவேற் றானையோடு "
(மதுரைக்காஞ்சி, 369)

என்பவற்றாலும் அறிக. 'நீரின் பெயருடையது' எனவே, கடன் மல்லை என்பது குறிப்பிக்கப்பட்டபடியாம். ஊர் முதலியவற்றை அவற்றின் பரியாயப் பெயர்களாற் குறிப்பிடுவது பண்டையோர் கொண்ட முறையாகும். இச்செய்தி:

1. **வஞ்சிமாநகரை:**— " பொற்கொடிப் பெயர்ப்படூ உம் பொன்னகர்' (மணிமே. 26-92; 28-101) என்றும்,

2. **காவிரிப்பூம்பட்டினத்தை:**—'கவேரகன்னிப் பெய ரொடு விளங்கிய மூதூர்' (ஷை. 95-52) என்றும்,

3. **எயிற்பட்டினத்தை:**— 'மதிலொடு பெயரிய பட்டினம்' (சிறுபாண். 152-3) என்றும்,

4. **கிரவுஞ்சகிரியை:**—'குருகுபெயர்க் குன்றம்' (சிலப், 24. ('சரவண') என்றும்,

5. **வீட்டின் உத்தரத்தை:**—'நாளொடு பெயரிய விழு மரம்' (நெடுநல். 22) என்றும்,

**6. இராசான்னம் என்ற நெல்லை[1]**:—'பறவைப் பெயர்ப் படு வத்தம்' (பெரும்பாண். 305) என்றும்—

இவ்வாறே முன்னோர் பலரும் வழங்குமாற்றால் அறியப் படும். இவற்றுள், நீர்ப்பெயர்த்தென்று கூறிய ஆசிரியரே இராசான்னத்தின் பரியாயத்தைக் கூறி யுள்ளமுறை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

இராசான்னம் என்பதனுள், அன்னம் என்பதனை மட்டும் பறவை என்பதனாற் குறிப்பிட்டுப் போந்த அப்புலவர் இராசபதத்துக்குப் பரியாயங் கூறாமையால், ஒரு தொடர்ப்பெயரை அதன் ஏகதேசம் பற்றி வேறு வகையாற் குறிப்பிடுவதும் அவர்க்கியல்பு என்பது நன்குபுலப்படத் தடையில்லை. அம்முறையே கடல்மல்லை என்பதனுள் கடல் என்பதற்கு மட்டும் பரியாயச்சொல் கொண்டு, 'நீர்ப் பெயர்த்து' என்பதனால் அக்கடற்கரை யூரை உருத்திரங்கண்ணனார் குறிப்பிட்டனர் என்று கொள்வதே ஏற்கும் என்க.

இவ்வூரின் கடற்கரையல்லாத பகுதி—புகாரின் மருங்கூர்ப்பட்டினம் போல —அந்தணர் போன்ற உயர் குடிமக்கள் வாழ்ந்து வந்த இடம் என்பது—

**"இரைதேர் மணிச்சிரல்......**
**கேள்வி யந்தண ரருங்கட னிறுத்த**
**வேள்வித் தூணத் தசைஇ யவனர்**
**ஓதிம விளக்கி னுயர்மிசைக் கொண்ட**
**வைகுறு மீனிற் பையத் தோன்றும்**
**நீர்ப் பெயர்த்து"** (பெரும்பாண். 313—19)

என்று அவ்வூர் சிறப்பிக்கப்படுதலால் தெளியப்படும்

1. இவ்வகை நெல் சோணாடு முதலிய பிரதேசங்களில் வழங்குகின்றது. உயர்ந்த சாதிச் செந்நெல்லாகிய இதனை 'ராஜநாலு' என்பர் ஆந்திரர்.

இனி, மாமல்லபுரத்தைக் **கடன்மல்லைத் தலசயனம்** என்று திருமங்கைமன்னன் இரண்டு திருப்பதிகங் களாற் பாடுகின்ருர். ஆனால் அவ்வூர்க் கடற்கரைக் கோயிலிற் கண்டெடுக்கப்பட்டனவும் முதல் இராஜ ராஜசோழன் காலத்தனவுமான சாஸனங்களில்—

"நகர மாமல்லபுரத்து **ஜலசயனதேவர்** தெற்கில் திருநந்தவனத்தே இருக்க"

"இந்நகரத்து **ஜலசயனத்து** க்ஷத்ரிய சிகாமணிப் பல்லவீசுவரத்துத் தேவரும் பள்ளிகொண்டருளிய தேவரும் உடைய பட்டாரத்து"

**(S. I. I. Vol. i , pp. 64, 67.)**

எனவரும் தொடர்களினின்று, 900-வருஷங்கட்கு முன்பு அக்கடற்கரைக் கோயில் 'ஜலசயனம்' என்றே வழங்கப் பெற்றிருந்த செய்தி தெரியலாம். மேற்காட்டிய இரண்டாந் தொடருள் 'பள்ளிகொண்டருளிய தேவரும்' என்றது, ஆங்குக் கிடந்ததிருக்கோலம் உடையரான திருமால் மூர்த்தத்தையாம். நீர்ப்பக்கமாகத் திருமால் சயனங் கொண்டமையின் **ஜலசயனம்** என்று அக்கடற் கரைக் கோயிற்கு முன்னோர் பெயர்வழங்கியிருந்தனர் என்றும், அக்கோயிலின் முன் புறமாகவும் சார்பாகவும் 7-ஆம் நூற்றுண்டிறுதியில் இரண்டாம் நரசிம்ம வன்மனால் புதியவாய்க் கட்டப்பட்ட சிவாலயங்களும் ஜலசயனத்தைச் சார்ந்தனவாகவே பிற்பட்ட சோழர் காலத்தும் வழக்குப் பெற்றிருந்தன என்றும் கொள்ளத்தகும்.

இனி, கடற்கரையல்லாத நகரத்தே, கிடந்ததிருக் கோலம்உ டையரான திருமாலின்கோயில் வேறென்றும் மாமல்லபுரத்து உள்ளது. இதுவும் அக்கடற்கரைக் கோயில்போலவே பழைமையான தென்பது, மேற்

குறித்த இராஜராஜன்மகன் இராஜேந்திர சோழன் என்று கூறப்படும் பரகேசரி வர்மன் காலத்துச் சாஸனம் அக் கோயிலிற் காணப்படுதலினின்று தெளிவாகின்றது.[1] "தலசயனப்புறமான தையூர்"[2] என்றுள்ள சாஸனத் தொடரால் அக்கோயிலடியாக மாமல்லபுரம் 'தலசயனம்' என்றே முன்பு அழைக்கப்பட்டமை தெரியலாம்.

தரையிடமாகத் திருமால் சயனம் உண்மை பற்றியும், சலசயனத்தின் வேறுபிரித்துக் காட்டல் வேண்டியும் அக்கோயில் தலசயனம் எனப்பட்ட தாதல் வேண்டும். ஆகவே, **தலசயனம் சலசயனம்**[3] என்ற கோயில்கள் திருமாற்குப் பழைமையாகவே மாமல்ல புரத்திற் சிறப்புற்றிருந்தன என்பது பெறப்படுகிறது.

**மாறுபாடு**

இவற்றினின்று, திருமங்கைமன்னன் கடன் மல்லையைப் பற்றிப் பாடிய பதிகங்களிரண்டனுள் **முன்பதிகம் — தலசயனத்தைப்பற்றியது** என்றும், கடற்கரைக்

1. The Inscriptions of Madras Presidency, Cg: No 81 B
2. S i. i. Vol. iii p. 356
3. சோணாட்டுச் சிறுபுலியூரைச் **சலசயனத்** தலமாகத் **திருமங்கை மன்னன் பாடுதலும், பாண்டி நாட்டுத் திருப்பத்தூர்க் கோயிலைச் 'சலசயனம்' என்று** பழைய பாண்டிய சாஸனம் (Ep. Rep. 131, of 1908) கூறுதலும் ஈண்டு அறியத்தக்கன. திருமாலின் சயனங்கள்:—சலசயனம், தலசயனம், புஜங்கசயனம், உத்யோக சயனம், வீரசயனம், போகசயனம், தர்ப்பசயனம், பத்ரசயனம், மாணிக்க சயனம், உத்தானசயனம் எனப் பலவகையாகத் தெரி கின்றன. "மலர்ச்சயனம் சலசயனந் தோற்சயன மாதி, பழிப்பில் பதினைந் தாகுஞ் சயனம்" எனத் **திவாகரர் (திவா.** 18, 67) பதினைந்து சயனங் கூறுவர்.

கோயிலைப்பற்றிய பாசுரமுள்ள **பின்பதிகம்—சலசயனத்தைப் பற்றியது** என்றும், பிற்காலத்தில் இரண்டு பதிகங்களுமே தலசயனத்திருமாலைப் பற்றியனவாகக் கருதப்பட்டுப் பாடமாறலாயிற்று என்றும் நாம் ஊகிக்க இடம் ஏற்படுகின்றது.

இனி, ஊரினகத்துள்ள கோயிலடியாகத் **தலசயனம்** என்ற பெயர் அவ்வூர்க்கே வழங்கியது போலக் கடற்கரைக்கோயிலடியாகச் **சலசயனம்** என்ற பெயர் அக்கடன்மல்லைக்கு முன்பு வழங்கியிருத்தலுங் கூடியதேயாகும். அவ்வாருயின், 'நீர்ப்பெயர்த்து' என்று உருத்திரங் கண்ணனுர் குறித்தது அச்சலசயனம் என்ற பெயரைக் கருத்துட் கொண்டதாகவும் கொள்ளலாம்.[1] எங்ஙனமாயினும், சங்கநூலுட் கண்ட 'நீர்ப்பெயர்த்து' என்பது, கடன்மல்லையின் பழம்பெயரென்பதில் தடையில்லை என்க.[2]

இவற்றுல், கடன்மல்லை சங்ககாலத்து விளங்கிய பழைய பட்டினமே என்பதும், அப்பட்டினத்துள்ள தலசயனம் சலசயனம் என்ற திருமால் கோயில்கள் இரண்டனையும் திருமங்கை மன்னன் பாடியவராவர் என்பதும், 7-ம் நூற்ருண்டிறுதியிற் பட்டமெய்திய

---

1. இப்பகுதியை நான் படித்துக்காட்டியபோது, மஹாவித்வான்: **ஸ்ரீ ரா. இராகவையங்கார் ஸ்வாமி** 'நீர்ப்பாயற்றலை என்பது பழம்பாடமாயின், அது ஜலசயனம் என்பதற்கு முழுப்பரியாயமாக அமைந்து சிறப்புறும்— என்றுகூறிய கருத்து ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

2. திருநீர்மலை போன்ற ஊர்கள் கடற்கரைக்கு நெடுந்தூரத்துள்ளமையால், நீர்ப்பெயர்த்தெல்லையில் பட்டினமுள்ளதாகக் கூறும் புலவர் கூற்றுக்கு, அவை ஏற்புடையவாகாமை கண்டுகொள்க.

வனும், சுந்தரமூர்த்திகளாற் புகழப்பட்டவனுமான இராஜசிம்மபல்லவனாற் புதிதாக எடுக்கப்பட்ட சிவாலய மொன்றைத் தம்பதிகத்துட் குறிப்பிடுதலின், நம் பெரியார் அவ்விருவர் காலச்செய்திகளையும் நன்கறிந்த வராதல் வேண்டுமென்பதும் விளங்கத் தடையில்லை.

## புத்தர் சிலை திருடியவர்

திருமங்கைமன்னன் நாகபட்டினத்துப் பௌத்தப் பள்ளியொன்றில் இருந்த பொற்படிமத்தை உளவறிந்து களவிற்கைப்பற்றி அது கொண்டு திருவரங்கத் திருமதில் கட்டினார் என்று குருபரம்பரைகள் கூறுகின்றன.

11-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கடார (Burma) வேந்தனான ஸ்ரீமாறவிஜயோத்துங்கவர்மனால் நாகபட்டினத்தில் 'சூடாமணி பத்மவிஹாரம்' என்ற பௌத்தப்பள்ளி ஒன்று கட்டப்பட்டதென்றும், அதற்கு முதலிராஜராஜசோழனால் கி. பி. 1008-ம் வருஷம் ஆனைமங்கலம் என்ற கிராமமொன்று தானமளிக்கப் பட்டதென்றும் சாஸனத்தால் அறியப்படுகின்றன.[1] இச்செய்திகளைக் கொண்டு, அவ்விஹாரத்திருந்த பௌத்தவிக்கிரமே திருமங்கையார் கைப்பற்றியதாக வேண்டும் எனவும், எனவே அவ்வடியார் காலம் 11-ம் நூற்றாண்டுக்கும் பிற்பட்டதாக வேண்டும் எனவும் கருதுவாரும் உளர்.

இப் பௌத்தப்பள்ளியைப் பற்றி நமக்கு முதன் முதல் தெரிவிப்பது, அவ்விராஜராஜசோழன் மகன் முதலிராஜேந்திரன் காலத்தில் உண்டான சாஸனமே,

---

1. The Large Leiden Grant – Tamil and Sanscrit Inscriptions. No. 30, pp, 204—24.

அதனால், 1013-முதல் 1045-வரை ஆண்ட அவ்விராஜேந்திரன் காலத்தில், ஷெ விஹாரம் நன்னிலையில் இருந்த தென்பது விளங்கும். ஸ்ரீமந்-நாதமுனிகளுக்குத் திருப் பேரனாரான ஸ்ரீஆளவந்தார் வைஷ்ணவாசாரியத் தலைமை வகித்து விளங்கியது இக்காலமேயாம்.

ஆகவே, முற்கூறிய கொள்கைப்படி கொண்டால், திருமங்கைமன்னன் அவ்வாளவந்தார்க்கும் பின்பிருந்தவர் என்றே கொள்ளநேரும். ஆயின், இதனிலும் அசங்கதமான கொள்கை பிறிதில்லை என்க.

திருமங்கைமன்னன் களவுத் தொழிலில் பேர் போனவர் என்றும், அத்தொழிற்றிறமை காட்டிப் பௌத்தப்படிமத்தைக் கவர்ந்தவரென்றும் கூறப்படும் கதைகளினுண்மையே ஆராய்ச்சிக்கு உரியதாக உள்ளது.

## பழமையான பௌத்த பள்ளிகள்

ஆழ்வார—"அலைநீ ருலகுக் கருளே புரியும்' காரார் புயற்கைக் கலிகன்றி" என்றும் பிறவாறும் தம்மைப் பற்றிக் கூறியவற்றுடன் அக்கதைகள் மாறுபடுதலை மேலே விளக்கினேன். அவற்றை மெய்யாகவே கொள்ளினும், அப்படிமம் இருந்த நாகபட்டினத்துப் பௌத்தப் பள்ளி 8-ம் நூற்றாண்டுக்கும் முற்பட்டதொன்று என்று கருதத்தக்கதேயன்றி, 11-ம் நூற்றாண்டினதாகக் கொள்ளச் சிறிதும் இடமில்லை என்பது திண்ணம்.

அக்கரை நாட்டுப் பௌத்தவேந்தனொருவன் தமிழ் நாட்டில் விஹாரமொன்று கட்டுதற்கு நாகப்பட்டினத்தைக் குறிப்பிட்டதனால், அது பௌத்தர்கட்குச் சிறந்த தலம் என்பது பெறப்படும். அவ்வாறே நாகபட்டினத்தைப் பற்றிய பழைய வழக்கும் உண்டு. அதனால், வேறு பௌத்தப்பள்ளிகளும் அவ்வூரில் முன்பே இருந்திருத்தல்

வேண்டும் என்றும், அவை யாவும் சிதைவுற்ற பிற்காலத்தே கடாரவேந்தனால் தன் பெயரிட்டுப் புதிய விஹாரமொன்று ஆங்குக் கட்டி முடிக்கப்பட்ட தென்றும் கொள்வதே நன்கு பொருந்துவதென உணர்க.

இனி, திருமங்கைமன்னன் பாடியருளிய தொடர்கள் சில அவர் காலத்தனவாகிய சாஸனவாக்கியங்களோடு பெரிதும் ஒற்றுமைப்பட்டிருத்தற்குச் சில உதாரணங் கள் காட்டுவேன். அவை வருமாறு:—

பல்லவமல்லன் "சமுத்திரகோஷம்" என்னும் பெயருடைய கடுமுகவாத்யத்தைத் தனக்குச் சிறப்பாயு டையனாயிருந்தவன் என்றும், அதனைச் சளுக்கியனான இரண்டாம் விக்கிரமாதித்தன் (731—746) அப்பல்ல வனுடன் நடத்திய போரிற் கைப்பற்றினான் என்றும கேந்தூர்ச் சாஸனங் கூறுகின்றது.[1] இவ்வாத்தியத்தைக் குறிக்கும் அச்சாஸன வாக்கியமாவது—

**"கடுமுகவாதித்ர ஸமுத்திரகோஷாபிதான"**

என்பது. இத்தொடர், திருமங்கைமன்னன் அப்பல்லவனை விசேடிக்குமிடத்து—

**"கடல்போன் முழங்குங் குரற்கடுவாய்ப் பறையுடைப்**
**பல்லவர்கோன்"** (பெ. தி. 2, 10, 9)

என்று பாடுதலுடன் ஒப்பிடற்குரியது. கடுமுக வாதித்ரம்—கடுவாய்ப்பறை. கடன்முழக்கம் போன்ற ஒலியுடைமையால் 'ஸமுத்திரகோஷம்' எனப் பெயர் பெற்ற கடுவாய்ப்பறை பல்லவமல்லனுக்கே உரிய தென்பார் 'கடல்போன் முழங்குங் குரற்கடுவாய்ப்

1. Ep.Ind.Vo.IX, No 29. P. C. 205. *S* I. I. III, 146.

பறையுடைப் பல்லவர் கோன்' என அதன் பெயர்ப் பொருள் விளங்கக் கூறலாயினர் நம்பெரியார் என உணர்க.[1] இனி, பல்லவமல்லனை அவன் சாஸனம்—

"ப்ரணதாவநிபதி மகுடமாலிகாலீட சரணாரவிந்த:"

என்று விசேடிக்கின்றது. "வணங்கும் மன்னரது முடிமாலைகளால் தழுவப்பெற்ற பாததாமரைகளை உடையவன்"என்பது இதன் பொருளாம். இச்சாஸன வாக்கியத்துடன்.

"மன்னன் தொண்டையர்கோன் வணங்கு நீண்முடிமாலை
வயிரமேகன்" (பெ. தி. 2, 8, 13)

என்ற திருமங்கை மன்னன் வாக்கு ஒத்ததாதல் மேலே விளக்கப்பட்டது.

இனி, 'இருக்கெசுச் சாம வேத நாண்மலர்'[2] என்ற பெரியாழ்வார் அருளிச் செயலின்படி அப்பெயர்களுடன் விளங்கிய வேதம் மூன்றனுள் முதலிரண்டும் முறையே பவுழியம், தைத்திரியம் எனவும் ஆழ்வார்கள் காலத்து வழக்குப் பெற்றிருந்தன என்பது—

"சந்தோகன் பவுழியனைந் தழலோம்பு
தைத்திரியன் சாமவேதி" (பெ. தி. 5, 5, 9)

சந்தோகா பௌழியா தைத்திரியா சாமவேதியனே"
(ஷை, 7, 7, 2)

என்ற திருமங்கை மன்னன் திருவாக்குக்களால் அறியப் படும். இவை பண்டைவழக்கே என்பது, திவாகர நிகண்டுடையார்—

1. கடுவாய்ப்பறை, பலலவமல்லன் பேரன் மூன்றும் நந்திக்கும் உரியதாக நந்திக்கலம்பகம் கூறும் (5, 6.)

2. திவ். பெரியாழ்.திருமொழி, 5, 1, 6.

"இருக்கு முதல்வேதம் பௌடிக மெனப்படும்."

"இரண்டாம் வேதந் தைத்திரிய மென்ப"

(ஒலிபற்றிய. தொ. 75, 6)

என்று கூறுதலால் அறியலாகும். பிங்கலநிகண்டினும் இவ்வாறே அவற்றின் பெயர் கூறப்பட்டுள்ளன. 8,9-ஆம் நூற்றுண்டுச் சாஸனங்களும் பவிழிய சூத்திரம்[1], பவிழிய சரணம், தைத்ரியசரணம்[2] என அவ்வேதங்களை வழங்குதல் அறியத்தக்கது. திருமங்கை மன்னன் கூறியவற்றுள் சந்தோகன் என்பது சாந்தோக்கிய சாமமறிந்தவன் என்னும் பொருளது; சாந்தோக்கிய சாமம்[3] தலவகார சாரம்[4] என்ப. பவுழியம் என்பது இருக்குவேதத்தினை; பல இருக்குக்களை யுடைமையின் **பஹ்வ்ருசம்** என்று அவ்வேதம் பெயர் பெறும் என்பர். அதுவே தமிழில் பவிழியம், பௌழியம், பௌடியம், பௌடிகம் எனவும் திரிந்துவழங்கலாயிற்று.

தைத்திரியம் என்பது கிஷ்ணயசுர் வேத சாகைகளுள் ஒன்ரும். இப்பகுதி தென்னுட்டிற் பயிற்சி மிகுதியுடைமையின், இதுவே எசுர்வேதமாக அக் காலத்துக் கருதப்பட்டதாக வேண்டும். இவ்வாறு இருக்கு எசுக்களுக்கு ஆழ்வார் கூறும் பெயர்கள் பண்டை நூல்வழக்கோடும் சாஸனவழக்கோடும் பெரிதும் ஏற்புடையவாமாறு கண்டுகொள்க.[5]

---

1. S. I. I. vol ii, p. 328; vol. iii, p. 370.
2. T. A. S. vol. i, p. 9.
3. Ep. Rep. No. ii, 1906.
4. Ibid 76. of 1914.
5. தொல்காப்பியப் பாயிரவுரையுள் நச்சினர்க்கினியர் (நான்மறையாவன) "தைத்திரியமும் பௌடிகமும் தலவகாரமும் சாமவேதமுமாம்; இனி இருக்கும் யசுவும் சாமமும்

பல்லவமல்லனது சிறப்புப் பெயர்களுள்ளே "கலிபலமர்த்தந:" என்பதும் ஒன்றாக உதயேந்திர சாஸனங் கூறுகின்றது.[1] அப்பல்லவன் ஆட்சியிடையில் விளங்கியவர் திருமங்கைமன்னன் என்பதையும் தங்காலத்தே அரசாட்சியில் நிலைபெற்றிருந்தவன் அவ்வேந்தனே என்பதைப் 'பார்மன்னு பல்லவர்கோன்' என்று பரமேச்சுரவிண்ணகரப் பதிகத்தில் இவர் குறிப்பிட்டிருத்தலையும் மேலே விளக்கியுள்ளேன். இங்ஙனம் தங்காலத்து விளங்கிய பேரரசன் பெற்றிருந்த பெயரினையே சிற்றரசரான இவ்வாழ்வார் "கலிகன்றி" எனத் தம் கௌரவநாமமாகத் தரித்தனரோ என்று கருதவும் இடமுண்டு.

கலிகன்றி என்பது, கலியின் வலிமையை ஒடுக்குபவர்—என்ற பொருளுடையதாய்க் 'கலிபல மர்த்தந:, என்ற அப்பல்லவமல்லன் சிறப்பியற் பெயருடன் ஒத்ததாதல் காண்க.

இவ்வாறே வழுதிவளநாடரான சடகோபர்க்கு வழங்கிய மாறன், பராங்குசன் என்ற நாமங்கள், அக்

---

அதர்வணமும் என்பாருமுளர்; அது பொருந்தாது; இவர் (தொல்காப்பியர்) நூல்செய்த பின்னர் வேதவியாதர் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்குகூறாக இவற்றைச் செய்தாராதலின்" என்றெழுதினர். கலித்தொகைக் கடவுள் வாழ்த்துப் பாட்டுரையினும் இவ்வாறே இவர் கூறுதல் காண்க. இங்ஙனம் இவர் எழுதிச் செல்லுதற்கு யாதொரு பிரமாணமும் கிடைத்திலது என்பர் வடநூலார். தலவகாரம் என்று இவர் கூறியது, சாமவேதசாகைகளுள் ஒன்றாம்; தலவகார சாமம், (Ep. Rep No. ii, 1097) தலவகாரசரணம் (T. A. S. vol. i, p. 9) என்ற சாஸனவழக்கும் காண்க.

1. S. I. I. vol. ii, p. 367, line, 29.

காலத்தரசன் பெயர்களேயதால் ஒப்பிடத்தக்கது. இதனை அவ்வாழ்வாரைப் பற்றிக் கூறுமிடத்து விளக்குவேன்.

திவ்யசூரிசரிதத்தில் திருமாலடியவளான குமுத வல்லி என்ற கன்னியை அடையும் பொருட்டுப் "பரகாலர் தாம் கொண்டிருந்த சைவத்தன்மையை நீங்கி ஒப்பற்ற வைஷ்ணவத் தன்மையை அடைந்து" பின் அக்கன்னியை மணம் புரிந்து கொண்டனர் என்று கூறப்பட்டுள்ளது. இஃது ஏனைய நூல்களிற் காணப் படாத புதுச்செய்தியேயாம். ஆயின், இதற்கு ஒரு குறிப்பும் அவர் திருவாக்கிற் காணப்படவில்லை.

" எந்தை தந்தை தம்மா னென்றென் றெமரேழ் ஏழளவும்,
வந்து நின்ற தொண்டர்' (பெ. தி. 4.9.9)

" எந்தாதை தாதை யப்பா லெழுவர்
பழவடிமை வந்தார் " (ஷை7, 2, 6)

" எம்மானு மெம்மனையு மென்னைப்பெற் றொருந்ததற்பின்
அம்மானு மம்மனையு மடியேனுக் காகிநின்ற...சுடரே "
(ஷை7, 2, 9, 8)

என்று பரம்பரையாகத் திருமாலுக்கடிமையுற்ற தம் குலச் சிறப்பையும், கருவிலே அமைந்த தம் வைஷ்ணவத் திருவினையும் ஆழ்வார் தெளிவாகக் கூறுதலால், திவ்ய சூரிசரிதக்கூற்றின் உண்மை நம்மனோரால் அறிதற்கரி தாம் என்க. இவ்வாழ்வார் தம் சிறியதிருமடலில்—

" வாரார் வனமுலை வாசவ தத்தையென்
றியாரானுஞ் சொல்லப் படுவா ளவளுந்தன்
பேராய மெல்லா மொழியப் பெருந்தெருவே
தாரார் தடந்தோட் டளைக்காலன் பின்போனாள் "

என்ற கண்ணிகளால் வாசவதத்தையின் வரலாறு கூறுவர். இப்பெண்மணி வச்சநாட்டரசனுன உதயன னுற் காதலிக்கப்பட்டு மணம் புரியப்பெற்ற பெருந்தேவி யாவள். உதயனன் என்பான், அருச்சுனன் புதல்வனுன அபிமன்னியுதொடங்கி இருபத்தைந்தாந் தலை முறை யிற்பிறந்த பெருந்தகையரசன். வாசவதத்தை, சிறைப் பட்டிருந்த அவ்வுதயனனைக் காதலித்து உபாயத்தால் அவனைச் சிறைவிடுத்து உடன்சென்று அவனை மணந்து வாழ்ந்த சரிதவிரிவை, குணாட்டியரது பிருகத்கதையின் வழிவந்த வடநூல்கள் பலவற்றுலும், பெருங்கதை முதலிய தமிழ் நூல்களாலும் நன்கறியலாகும்.

## மடலூர்தல்

இனி, திருமங்கைமன்னது திருமடல்களைப்பற்றி ஒன்று கூறுதற்குண்டு. 'மடலூர்தல்' என்பது, தான் காதலித்தபெண்ணை அடையப் பெருதவிடத்து ஆடவர் நிகழ்த்தும் பிராயோபவேசம் அல்லது தற்கொலைமுறை களுள் ஒன்ரும். இது, பழைய தமிழ்மக்கள் கையாண்ட வழக்கு என்பதை யான் "தொல்காப்பியப் பொருளதி காரவாராய்ச்சி" யுள் (பக். 31—33) நன்கு விளக்கி யுள்ளேன்.

இங்ஙனம் மடலூர்தலென்பது, ஆடவர்மட்டுஞ் செய்தற்குரியதேயன்றிப் பெண்டிர் எந்நிலையிலுஞ் செய்யத்தக்கதன்று என்று தொல்காப்பியர் விதிப்பர். ஆயின், திருமங்கை மன்னன் தாமருளிய மடல்களிலே பெண்ணொருத்தி திருமாலைக் காமுற்று மடலூர்வதாகப் பாடினராதலால் அதற்குப் போக்கென்னை யெனின்— அப்பெண் மடலேறியதாகக் கூருது 'ஏறுவேன்' என்ற துணையேயாதலின் அமையும் என்பர் முன்னோர்.

பன்னிருபாட்டியலுடையார்—மகளிர் மடலேறார் என்றும், ஆணுற் கடவுளரைத் தலைவராகவைத்துப் பாடுமிடத்து அவர் மடலேறுவதாகக் கூறப்படும் என்றும் மடற்கிலக்கணம் வகுப்பர் (241—26 சூத்திரங்கள்). இதனாற் பெண்ணொருத்தி மடலேறுவதாக ஆழ்வார் பாடியது, அப்பாட்டியல் முறைக்குப் பெரிதும் பொருந்துவதென்னலாம். மகளிர்க்கு மடலேறும் வழக்கில்லை என்பதைத் 'திருமங்கைமன்னனே பெரிய திருமடலில்—

........................காமத்தின்
மன்னும் வழிமுறையே நிற்றுநாம் மானேக்கின்
அன்ன நடையா ரலரேச வாடவர்மேல்
மன்னு மடலூரா ரென்பதோர் வாசகமும்
தென்னுரையிற் கேட்டறிவ துண்டதனை யாந்தெளியோம்
மன்னும் வடநெறியே வேண்டினோம் ''

எனப் பெண்ணின் கூற்றில் வைத்துப பாடுதலும் ஈண்டு நோக்கத்தக்கது. இனித் திருமங்கைமன்னன் தம் திருப்பதிகங்களின் முடிவுகளிலே—

' இருங்கட லுலக மாண்டுவெண் குடைக்கீழ்
இமையவ ராகுவர் தாமே'

' வங்க மாகடல் வையங்கா வலராகி
வானுல காள்வாரே '

' முடிகொண்டு முடிமனர்தம்
முதல்வர்முத லாவரே '

' தேர்மன்னரா யொலிமா கடல்சூழ்
செழுநீருல காண்டு திகழ்வர்களே. '

என்று இவ்வாறே 26-இடங்கட்குமேல் பதிகங்கற்பார் பெறும் பயன் கூறிச் செல்வர். இங்ஙனம் **பலசுருதி**

கூறுமுறை பிற ஆழ்வார்களிடம் அருகியே காணப் படும். திருமங்கையார் மட்டும் அரசர் செல்வத்தை அடுத்தடுத்து இவ்வகை எடுத்துமொழிவது—தங்காலத் துப் பேரரசரான பல்லவர் அடைந்திருந்த பெருநிலை, அன்னோர் திருமாலைப் பூசித்துப்பெற்ற பேறே என்ப தைப் பிறர்க்கு அறிவுறுத்தி, 'அத்தகைய பெரும்பதவி தம்பதிகம் பாடுவாரும் அடைக' என்று திருவுள்ளங் கொண்டென்றே சொல்லலாம்.

திருமாற் கடிமை செய்வார் அவனமிசமான திரு வுடைமன்னராகத் தடையில்லை என்பது இவர் உள்ளக் கருத்தென்க.[1]

முன்பு யான் குறித்துப் போந்தபடி, 'பப்ப பட்டா ரகர்' என்று இவ்வாழ்வாரைத் தங்காலத்து வேந்தரும், அவ்வேந்தரது ஸ்ரீவைஷ்ணவத்திருவை இவ்வாழ்வாரும் பாராட்டிச் சிறப்பிப்பது அவர்கள் கால நிலைமைக்குப் பெரிதும் ஏற்புடைத்தாதல் அறியத்தக்கது.

## பல பெயர் மன்னர்

இனித் திருமங்கை மன்னனுக்குப் பரகாலன், கலியன், கலிகன்றி, அரட்டமுக்கி என்பன திருநாமங்கள் என்பது அவர் பாசுரங்களினின்று தெரியலாகும். பரகாலன் பன்பதற்கு 'பகையரசர்க்கு யமன் போன் றவன்' என்பது பொருள். கலியன் என்பது தானைத் தலைவன், படைவீரன் என்ற பொருளுடையது.

**''மானவர் வீரர்...ஆனகலியர், தானைத் தறுகணாளர் பெயரே''**

---

1. 'திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்' என்பது திருவாய்மொழி.

என்பது திவாகரம்.[1] அருண்மாரியாகிய நம் கலியனைப் போலவே, முதற்பராந்தக சோழனது சேனாதிபதி யொருவன் அருணிதிகலியன்[2] என்ற பெயர்பெற்றிருத்தல் இங்கு ஒப்பிடத்தக்கது. இதனாலும் திருமங்கை மன்னன் பேரரசற்கு மகாசாமந்தராக இருந்தவரென்பது தெள்ளிதாம்.

இனிக் கலிகன்றி என்பதன் பொருள் மேலே விளக்கப்பட்டது. 'கலித்வம்ஸ:' 'கலிவைரி' என்பன இதன் வடமொழிப் பெயர்ப்பாக நூல்கள் கூறும். அரட்டமுக்கி என்பதற்குக் குறும்பரசர்களை ஒடுக்குபவன் என்பது பொருளாம். [அரட்டு—குறும்பு.]

**'அரட்டடக்கிதன் னூரடைமினே[3]'**

என திருநாவுக்கரசரும் இதனையொத்த தொடரை வழங்குதல் காண்க. 'அரட்டமுக்கிதாசன்'[4] எனப் பின்னோர் பெயர் பூண்டிருத்தல், அக்காலத்திருந்த ஆழ்வாரது இப்பெயர் வழக்கின் மிகுதியைக் குறிப்பிக்கின்றது.

* பெரியாழ்வாரின் அருமைத் திருமகளாரான ஸ்ரீ கோதைப் பிராட்டியாரை அழகிய மணவாளன் திருமணம்புரிந்து தம் பெரும் பரிவாரங்களுடன் திருவரங்கம் நோக்கிச் செல்லும் இடைவழியில், மங்கை காவலர் அவர்களை வழிமறித்து வாள்வலியால் அப் பெருமானிடமிருந்து திருமந்திரோபதேசம் பெற்றனர்

1. மக்கட் பெயர்த்தொகுதி—சூத். 108.

2. Inscriptions of the Madras Presideney, Tj No. 1850.

3. தேவாரம், திருவாரூர்த் திருக்குறுந்தொகை, அப்.5.

4. S.I.I. Vol. iii, pp. 80,84.

என்ற வரலாறு திவ்ய சூரிசரிதத்துக் கூறப்படுதலின்[1], பெரியாழ்வாரும் அவர் திருமகளாரும் விளங்கிய காலத்தில் இவ்வாழ்வாரும் வாழ்ந்தவர் என்பது தெளிவாம். பின்பெழுந்த குருபரம்பரை முதலிய சரித்திர நூல்கள், இப்பெரியார் எல்லா ஆழ்வார்கட்கும் பிற்பட்டவர் என்று கூறுகின்றன. ஏனையடியார்களாற் பாடப்பெறாத திவ்யதேசங்கள் பல இவரால் மங்களாசாஸனஞ் செய்யப் பெற்றிருத்தலே இவர் பிற்பட்டிருந்தவர் என்பதற்குச் சான்றென்று கூறுவாருமுண்டு.

ஆழ்வார்களிற் பலரை ஒரு காலத்தவராகவே திவ்ய சூரிசரிதம் தெளிவாகக் கூறுதலின் அவர்களிற் பெரும்பாலோர் பரமபதம் பெற்ற பின்பும் வாழ்ந்தருளியவர் திருமங்கைமன்னன் என்றே, மேற்குறித்த சரித்திர வேறுபாடுகளை நாம் இணைத்துக் கொள்ளத்தகும். அஃதாவது—முன்னர்க் கூறிப் போந்தவாறு, 7-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அவதரித்து, 8-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் திருநாடலங்கரித்தவர் இவ்வாழ்வார் என்பதாம்.

திருமங்கையாரது திருவாக்குமுழுதும், 'செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய' அமுத கவிகளாகவே திகழ்தல் காணலாம். "செந்திறத்த தமிழோசை" யின்பமும் ஆற்றொழுக்கான போக்குமுடையவாய் மிளிர்வன, இவர் பாசுரங்கள் 'இருந்தமிழ் நூற்புலவன்'[2] என்றுதம்மைக் கூறிக்கொண்டவாறே, கல்விக் கடலனையவர் இப்பெரியார் என்னத் தடையில்லை. இச் சிறப்புப் பற்றியே—'கலைப்

1. திவ்யசூரி சரிதம், பக். 121—124
2. பெரிய திருமொழி, 1, 7, 10.

பெருமாள்' 'நாவீறன்' என்ற திருநாமங்களால் இவ் வாழ்வாரைச் சிறப்பிக்கலாயினர் முன்ஞேர் என்க.

ஸ்ரீவைஷ்ணவ பரமாசாரியரான இராமாநுஜ முனிவரரை—'குறையற் கலேப்பெருமான், ஒலிமிக்க பாடலேயுண்டுதன் னுள்ளந் தடித்ததனல், வலிமிக்க சீயம்''[1] என்று அவர்காலத்தான்ருேர் புகழ்வரெனின், இப் பெரியாரது வாக்கின்பெருமை நம்மனேரால் மதிப்பிட வல்லதோ?

அம்முனிவர்க்குப் பின் பரமாசாரியபதம் வகித்தவரும், ஆழ்வார் திருவாக்குக்களின் அருமைபெருமைகளே யெல்லாம் உலகிற்கு வியாக்கியான ரூபமாக வெளியிட்டருளியவருமான ஸ்ரீ பராசரபட்டர்[2] ஏனையாழ்வாரினும் இப்பெரியாரிடமே பெரிதும் ஈடுபாடுடையரெனின், வேறு யாம் கூறற்குரியது யாது?

பட்டரின் திருத்தந்தையாரும் ஸ்ரீ ராமாநுஜரது பிரதமசிஷ்யருமான கூரத்தாழ்வான் இவ்வாழ்வாரைப் பற்றி அருளிய அழகிய தனியனேக்கூறி இப்பெரியார் வரலாற்றை இவ்வளவில் நிறுத்துகின்றேன்:

'' நெஞ்சுக் கிருள்கடி தீப மடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல்ல வமுதந் தமிழநன் னூற்றுறைகள்
அஞ்சுக் கிலக்கிய மாரண சாரம் பரசமயப்
பஞ்சுக் கனலின் பொறிபர காலன் பனுவல்களே''

---

1. இராமாநுச நூற்றந்தாதி, 88.

2. ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளே வியாக்யானம் (பெ. தி. 6, 3, 4.)

## ஏழாம் அதிகாரம்

# தொண்டரடிப்பொடியாழ்வார்

### பிறப்பும் வாழ்வும்

**சோ**ணாட்டில் காவிரிக்கரையிலுள்ள மண்டங்குடி[1] என்ற ஊரிலே புரச்சூடரான பிராமணோத்தமர் குலத்தில் அவதரித்து ஸ்ரீவிப்பிரநாராயணர் என்ற திருநாமமுடையராய் வாழ்ந்த இப்பெரியார் திருவரங்கத்தில் துளசித்திருநந்தவனம் வைத்துவளர்த்து அந்நகரத்தெம்பெருமானுக்குத் திருமாலைத் தொண்டு புரிந்து வந்தவர் என்றும், அக்காலத்தே தேவதாசி யொருத்தியின் மோகத்தில் இவர் மூழ்கும்படி நேரத் திருவரங்கமுடையான் இவரை அக்காதலினின்று நீக்கி உய்யக் கொண்டருளினர் என்றும் வழங்கும் சரித்திரம் மிகப் பிரபலமானதாகும்.

இவர் அருளிச்செய்த திவ்வியப்பிரபந்தங்கள்:—திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்பன.

இப்பெரியார் வரலாறு, இவர் அருளிச் செயல்களினும் குறிப்பிடப்படுகின்றது. சிற்றின்பத்தே மூழ்கிக் கிடந்த தம்மைத் திருவரங்கப் பெருமான் தம் நிர்ஹேதுக பரமகிருபையால் உய்யக்கொண்டருளிய செய்தியை—

---

1. தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ளது (I. M. P. Tj. 1405). இந்தக் கிராமம் எழுநூறு பிராமணர்களை உடையதாயிருந்ததென்று திவ்யசூரிசரிதம் கூறும். (பக். 42).

" சூதனாய்க் கள்வ னாகித் தூர்த்தரோ டிசைந்த காலம்
மாதரார் கயற்க ணென்னும் வலையிற்பட் டழுந்து வேனைப்
போதரே யென்று சொல்லிப் புந்தியிற் புகுந்து தன்பால்
ஆதரம் பெருக வைத்த அழகனூர் அரங்க மன்றே"

(திருமாலை, 16)

" மெய்யெலாம் போக விட்டு விரிகுழ லாரிற் பட்டுப்
பொய்யெலாம் பொதிந்து கொண்ட போழ்க்கனேன்"

(ஷை, 33)

என்பவற்றாலும், தாம் துளவுத்தொண்டு புரிந்து வந்தவர் என்பதனை—

" துளவத்தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடி"

(ஷை, 45)

"தொடையொத்த துளவமுங் கூடையும் பொலிந்து
தோன்றியதோள் தொண்டரடிப்பொடி"

(திருப்பள்ளி, 10)

என்பவற்றாலும் இப்பெரியாரே கூறிக்கொள்ளுதல் காண்க. இவர் காலத்தே அணியரங்கன் திருமுற்றத்தை யோகிகளான பரமபாகவதர்கள் பலர் அலங்கரித்துவந்தனர் என்பது—

" மேம்பொருள் போகவிட்டு மெய்ம்மையை மிகவு ணர்ந்து
ஆம்பரி சறிந்து கொண்டே யைம்புல னகத்த டக்கிக்
காம்பறத் தலைசிரைத்துவ கடைத்தன் னிருந்து வாழும்
சோம்பரை யுகத்தி போலுஞ் சூழ்புன லரங்கத்தானே" (38)

என நிந்தாஸ்துதியாக இவர் பாடுதலால் அறியலாம். இவர்காலத்தே சமணரும் சாக்கியரும், வைதிகரையும் அவர் வழிபடும் கடவுளரையும் தாங்க முடியாவண்ணம் இகழ்ந்து தம் மதப்பிரசாரஞ் செய்து வரலாயினர் என்பது—

16

"புலையற மாகி நின்ற புத்தொடு சமண மெல்லாங்
கலையறக் கற்ற மாந்தர் காண்பரோ கேட்ப ரோதான்
தலையறுப் புண்டுஞ் சாவேன் சத்தியங் காண்மினையா
சிலையினு லிலங்கை செற்ற தேவனே தேவ ஞுவான்" (7)

"வெறுப்பொடு சமணர் முண்டர் விதியில்சாக் கியர்கள் நின்பாற்
பொறுப்பரி யனகள் பேசிப் போவதே நோய தாகிக்
குறிப்பெனக் கடையு மாகிற் கூடுமேற் றலையை யாங்கே
அறுப்பதே கருமங் கண்டா யரங்கமா நகரு ளானே' (8)

என்ற பாசுரங்களினின்று தெரியவருகின்றது. இவற்றால் திருமால்பால் இப்பெரியார்க்கிருந்த பத்தித்திறம் இத்தகையதென்பது விளங்கும். மிக உயர்குலத்தோரும் மிகத் தாழ்குலத்தோருமான திருமாலடியார் பலர் திருவரங்கப் பெருமான் திருமுன்றிலில் சாதிவேற்றுமையற ஒருங்கு குழுமி, ஒருவரையொருவர் தெய்வ சமானராகக் கருதி வழிபட்டு வந்தனர் என்பதும், அக்குழுவினருள் அத்தகைய வேற்றுமை பாராட்டுதல் பெரியதோர் அபசாரமும் இழுக்குமாகக் கருதப்பட்டு வந்ததென்பதும்—

"பழுதிலா வொழுக லாற்றுப் பலசதுப் பேதிமார்கள்!
இழிகுலத் தவர்க ளேனு மெம்மடி யார்க ளாகில்
தொழுமினீர் கொடுமின் கொண்மி னென்றுநின் னேடு மொக்க
வழிபடவருளி னுய்போன்ம் மதிட்டிரு வரங்கத் தானே"
(திருமாலை.42)

"அமரவோ ரங்க மாறும் வேதமோர் நான்கு மோதித்
தமர்களிற் றலைவராய சாதியந் தணர்க ளேனும்

நுமர்களைப் பழிப்ப ராகி னுடிப்பதோ ரளவி னுங்கே
அவர்கடாம் புலையர் போலு மரங்கமா நகரு ளானே''
(ஷை 43).

என்ற இவர் அருளிச்செயல்களால் நன்கறியப்படும். சாதிச் சிறப்பினும் ஞானச்சிறப்பை இத்துணையாக மதித்த உயர்குலத்துத் திருமாலடியாருள் இப்பெரியாரினும் சிறந்தார் வேறிலர் என்னலாம.

இனி, திருமங்கை மன்னன் திருவரங்கப் பெருநகரின் சுற்றுத் திருமதிலையும் சிகரங்களையும் பெருஞ் செலவிட்டுக் கட்டுவித்துவந்த காலத்தே

''ஸ்ரீ தொண்டரடிப் பொடியாழ்வார் பெரியபெருமாளுக்குத் திருமாலைசேர்க்கிற இடம் நேர்பட, அவ்விடத்தைத் தப்பியொதுங்கத் திருமதில் கட்டுவித்தருளத் தொண்டரடிப் பொடிகள் பார்த்தருளித் திருவுள்ள முகந்து, தாம் திருமாலை கொய்கிற ஆயுதத்துக்கு **அருள்மாரி** என்ற இவருடைய திருநாமஞ் சாத்திப் பிரீதராயருளினுர்''[1]

என்ற வரலாறு குருபரம்பரைகளிற் கூறப்படுகின்றது. இச்செய்தியால் திருமங்கையாரும், தொண்டரடிப் பொடிகளும் ஒருகாலத்தவர் என்பது பெறப்படும். ஆழ்வார்களெல்லாம் ஒருகாலத்தவராகத் திவ்யசூரி சரிதம் குறிப்பிடும் செய்தியோடு, இஃது ஒருபுடை ஒத்திருத்தல் அறியத்தக்கது.

அன்றியும், மேலே கூறியவாறு, 7-ஆம் நூற்றுண்டில் திருமங்கையார் காலத்தே சமணர் முதலிய புறச்சமயிகள் வைதிகசமயக் கடவுளரை இகழ்ந்து வந்த

1. ஸ்ரீ பின்பழகியபெருமாள் சீயர் ஆருயிரப்படி குருபரம்பரை. பக். 55.

செய்தியைத் தொண்டரடிப் பொடிகளும் கூறுவது அன்றோரெல்லாம் சம காலத்தவரே என்பதை உணர்த்துவதெனலாம். தொண்டரடிப் பொடிகள் அருளிய திருமாலையின் 17-ஆம் பாசுரத்தே—

**"சுரும்பமர் சோலை சூழ்ந்த வரங்கமா கோயில் கொண்ட**
**கரும்பினைக் கண்டு கொண்டேன் கண்ணிணை களிக்கு மாறே"**

எனவரும் பின்னிரண்டடிகள், திருமங்கை மன்னன் அருளிய திருக்குறுந்தாண்டகத்து 12 ஆம் பாசுரத்தின் பின்னடிகளாகச் சிறிதும் வேறுபாடின்றியிருத்தல் ஈண்டு ஒப்பிடத்தக்கது. இது, முன்னோர் மொழியையும் பொருளையும் பொன்னேபோற் போற்றிக் கொண்டதாகும்.

---

எட்டாம் அதிகாரம்

# திருப்பாணாழ்வார்.

இவ்வாழ்வார் சோழராசதானியாகிய உறையூரிலே அந்திம குலமான பாணவமிசத்தில் அவதரித்தருளியவர்.

இப்பெரியார் காவிரியின் தென்கரையோரத்தே திருவரங்க முடையாரான பெரிய பெருமாளிடத்தே பரமபக்தியுடையராய் அப்பிரானையே தியானித்து நின்று கொண்டு, அப்பெருமான்மேல் செவிக்கினிய பாடல்களை நாளும் யாழிலமைத்துப்பாடி உருகிவந்தன

ரென்றும், கருணாமிருதமான இவரது கானங்களைச் செவிமடுத்துவந்த சேஷசாயியான அவ்வெம்பெருமான் அப் பெரியாரைத் தமக்கு அந்தரங்கராகச் செய்து கொள்ள விரும்பித் தம் திருமுற்றத்தடியார் குழுவில் ஒருவரான **லோக சாரங்க முனிவர்க்கு** 'நம் பேரடியானான பாணனை நெகிழநினையாதே நம்பக்கல்அழைத்து வருக' என்று கனவில் ஆணையிட்டருள, அவ்வாறே அம் முனிவர் சென்று நதிக்கரையில் வழக்கம் போல் நின்றுருகும் பாணரை வலிந்தெடுத்துத் தம் தோளிற் கொண்டுவந்து அரங்கமுடையான் திருமுன்பு நிறுத் தினர் என்றும், அப்போது அழகிய மணவாளனான அப் பெருமானைத் திருவடிமுதல் திருமுடிகாறும் அனு பவித்த பாண் பெருமாள், அவ்வனுபவ மிகுதியால் தமக்குண்டான பரவசநிலையை "அமலனாதி பிரான்" என்று தொடங்கும் பத்துப்பாசுரங்களால் உலகத் தார்க்கு வெளியிட்டருளி, முடிவில் அத்திருமால் திருவடி களில் ஐக்கியமாயினர் என்றும் குருபரம்பரைகளில் வைபவங் கூறப்பட்டுளது.

இவ்வரலாறு தவிர இவ்வாழ்வார் காலநிலையாகத் தெரியக்கூடிய செய்தி வேறில்லை. இவர் திருவரங்கச் செல்வரை நேரில் அனுபவிக்க நேர்ந்தபோது—

> **"அமல னாதிபிரா னடியார்க்கென்னை யாட்படுத்த விமலன்**
> * * * * *
> **கமலபாதம்வந்தென் கண்ணினுள்ளன**
> **வொக்கின்றவே"**

> **"அணியரங்கன் என்னமுதினைக் கண்டகண்கள்**
> **மற்றொன்றினைக் காணாவே"**

என்று பாடிய பாசுரங்கள் பத்தும், இவரது உருக்கமும் உண்மையுமான அடிமைத்திறத்தை விளக்கவல்லன.

'குளித்து மூன்றனலை யோம்புங் குறிக்கொளந் தண்மைக்குரிய தொண்டரடிப்பொடிகள், மேலே காட்டியவாறு—

''இழிகுலத் தவர்களேனு மெம்மடி யார்களாகில்........
நின்னொடு மொக்க வழிபட வருளினாய்போன்ம்''
''நுமர்களைப் பழிப்பராகி, லவர்கடாம் புலையர்போலும்''

என்று பாடுதல், முனிவாகனராய்ச் சென்று அணியரங்க முடையானை அனுபவித்த இப்பாண்பெருமாள் போன்ற பேரடியாரைத் திருவுளத்துக் கொண்டு போலும் என்று கருதக்கூடியதாம்[1].

திவ்யசூரிசரிதமும் இவ்வடியாரை ஏனையாழ்வார் காலத்தவராகவே கூறுதல் அறியத்தகும்.

---

ஒன்பதாம் அதிகாரம்

## குலசேகரப்பெருமாள்.

இவ்வாழ்வார் சேரநாட்டை ஆட்சி புரிந்துவந்த வேந்தர் பெருந்தகை என்றும், திருமால்பத்தி தலை சிறக்கப்பெற்று அதனால் அப்பெருமானையும் அவனடியார்களையும் பெரிதும் ஆராதித்துப் போந்தவரென்றும்,

---

1. திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்ற சிவனடியார், திருவாலவாய் திருவாரூர்க் கோயில்களின் வாயில்களில் நின்றுபாட, அவரைச் சிவபிரான் தம் திருமுன்பு அழைத்துக் கொண்ட செய்தி பெரியபுராணத்துக் கூறப்படுதல், இப்பாண்பெருமாள் வரலாற்றுடன் ஒப்பிடற்பாலது.

பெ - திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் புராணம் 2-4.

திருவரங்கத்துத் திருமால்பாற் பெருகிய காதலுடைய ராய் அப்பிரானைத்தரிசித்து அவன் திருமுற்றத்தடியார் குழாத்துள் வாழ்தலையே விரும்பி உலகவாழ்வில் நசையற்றிருந்தவ ரென்றும், இவரது உலகப் பற்றின்மைக்குக் காரணமானவர் திருமாலடியார்களே என்று, அவர்கள்பால் அரசர்க்கு வெறுப்புண்டாக்கக் கருதி, அரண்மனையிற் களவுபோன அரதனமாலை யொன்றைக் கவர்ந்தவர் அவ்வடியாரே என்று அமைச்சர்கள் ஒருகாற் சார்த்திய பழியை இவ்வாழ்வார் 'பரமனடியார் ஒருபோதும் அது செய்யார்' என்று பாம்புக் குடத்திற் கையிட்டுச் சூளுறவு செய்து அவ்வடியார் பெருமையை நிலைநாட்டினர் என்றும், இராமபிரானது திவ்வியசரிதமே செவிக்கினிய செஞ்சொல்லாய் மடுத்தனுபவித்துக் கொண்டு அப்பிரானிடம் விசேடப் பிரதிபத்தி புரிந்துவந்தவர் இவர் என்றும், பின் தம்பெரு வாழ்வில் வெறுப்பு மிகுதியுடையராய் அரசுதுறந்து அணியரங்கன் திருமுற்றத்தை அடைந்து, அந்நகர்ப் பெருமானையும் ஆங்குள்ள அவனது தொண்டர் குழாத்தையும் கண்டுகளித்து அவ்வடியாருள் ஒருவராக விளங்கித் திருநாடலங்கரித்தவர் என்றும் இவரது வைபவம் கூறப்பட்டுள்ளது.

**''ஆரங் கெடப்பர னன்பர்கொள் ளாரென் றவர்களுக்கே**
**வாரங் கொடுகுடப் பாம்பிற்கை யிட்டவன் மாற்றலரை**
**வீரங் கெடுத்தசெங் கோற்கொல்லி காவலன் வில்லவர்கோன்**
**சேரன் குலசே கரன்முடி வேந்தர் சிகாமணியே''**

என்று, ஸ்ரீமந் நாதமுனிகளின் பிரசிஷ்யரான மணக்கால் நம்பிகள் திருவாக்கும் இவ்வாழ்வார் வரலாற்றைச் சுருங்கக்கூறுதல் காண்க.

இச் சேரவேந்தர் பெருந்தகை அருளிச்செய்த திவ்யப்பிரபந்தம், 105-பாசுரங்கள் கொண்ட **பெருமாள் திருமொழி** என்பது. இத்திருமொழியுள்—தாம் க்ஷத்திரிய வருணத்தைச் சார்ந்தவர்[1] எனவும், கொங்குநாட்டின் வேந்தர்[2] எனவும், கொல்லி என்ற தலைநகரையுடையர்[3] எனவும்—தம்குலம் நாடு நகர்களை இப்பெரியார் கூறுவர்.

இவர் காலத்தே பரமபாகவதர்களான தொண்டர் பெருங்குழாம் அணியரங்கன் திருமுற்றத்தை அலங் கரித்து விளங்கியது[4] என்பதும், அக்குழுவினர் அரங்கநகரினின்றும தமிழ்நாடெங்குஞ் சஞ்சரித் தவராய், உத்தமமான வைஷ்ணவதர்மங்களை உலக மறிய உபதேசித்து யாவரையும் அடியராக்கிவந்தன ரென்பதும்—

> **" ஆறு போல் வருங் கண்ண நீர்கொண்**
> **டரங்கன் கோயிற் றிருமுற்றஞ்**
> **சேறுசெய்யுந் தொண்டர்" (2, 3)**

> **" ஆதி யந்த மனந்த மற்புத மான வானவர் தம்பிரான்**
> **பாத மாமலர் சூடும் பத்தி யிலாத பாவிக ளுய்ந்திடத்**
> **தீதில் நன்னெறி காட்டி யெங்குந் திரிந்த ரங்கனெம்**
> **மானுக்கே**
> **காதல் செய்தொண்டர்க் கெப்பி றப்பினுங் காதல்**
> **செய்யுமென் னெஞ்சமே" (2, 6)**

என்ற இவர் பாசுரங்களால் வெளியாகின்றன.

---

1. **'எங்கள்குலத் தின்னமுதே யிராகவனே தாலேலோ'** (பெருமாள் திருமொழி, 8. 3)

2. **'கொங்கர்கோன் குலசேகரன்'** (ஷை. 3. 9.)

3. **'கொல்லிநகர்க் கிறை'** (ஷை. 6. 10) **'கொல்லி காவலன்'** (ஷை. 9. 10)

4. **"அணியரங்கன் திருமுற்றத் தடியார்தங்கள், இன்பமிகு பெருங்குழுவு கண்டியானு மிசைந்துடனே யென்றுகொலோ விருக்குநாளே"** (1. 10)

வைஷ்ணவ தர்மமான பிரபத்தி மார்க்கத்தைத் "தீதில் நன்னெறி" என இப்பெரியார் இருமுறை வழங்குதல்[1] இங்கறியத்தக்கது. இத்தகைய உத்தம தர்மத்தை நாடெங்கும் பரப்பிவந்த அவ்வடியார் குழாத்துள் தாமுங்கூடி ஆடிப்பாடி அகங்களித்து நிற்கும் நிலையையன்றி அரசவின்பத்தே தமக்குச் சிறிதும் பற்றின்மையைப் பல பாடல்களாலும் வெளியிடுவர் இப்பெரியார். அப்பாசுர மொன்றனுள்—

" ஆடிப் பாடி யரங்க வோவென்
றழைக்குந் தொண்ட ரடிப்பொடி
ஆட நாம்பெறிற் கங்கை நீர்குடைந்
தாடும் வேட்கையென் னாவதே" (2, 2)

என்ற அடிகளிலே, தொண்டரடிப்பொடி என்ற தொடரை இவர் ஆளுதல் இங்குக் குறிப்பிடத்தகும். இதனினின்று தொண்டரடிப் பொடியாழ்வாரைத் தம் திருவுள்ளத்துக் கொண்டு இத்தொடரை வழங்கினரோ இப்பெரியார் என்ற சங்கை தோற்றுகின்றது இஃதன்றேல், குலசேகரப் பெருமாள் வழங்கியதொடரை விப்பிரநாராயணரான அப்பெரியார் தம் தாஸ்யநாம மாகத் தரித்தனரெனல் வேண்டும்.

ஆனால் அணியரங்கன் திருமுற்றத் தடியார் குழுவில் தொண்டரடிப்பொடிகளும் ஒருவராயிருந் தலையும், அக்குழுவின் பெருமைகளையே தம் திருமொழி இரண்டாம் பதிகத்தினும் பிறவிடங்களினும் இவ் வாழ்வார் பலபடச் சிறப்பித்தலையும் நோக்குமிடத்து, முற்கூறிய கருத்தே ஏற்புடையதாகின்றது.

எங்ஙனமாயினும், திவ்யசூரிசரிதங் கூறுமாறு திருமங்கையார், தொண்டரடிப் பொடிகள், குலசேகரப்

---

1. 'தீதில் நன்னெறி நிற்கவல் லாதுசெய், நீதியார்' (3,5).

பெருமாள் என்ற மூன்று திருநாமங்களும் சமகாலத்தவர் களே என்று நாம் ஒருதலையாகக் கருதத் தடையில்லை.

இனி, திருமங்கைமன்னன்—

**" பரனே பஞ்சவன் பூழியன் சோழன்**
**பார்மன்னர் மன்னர் தாம்பணிந்தேத்தும், வரனே"**

என்று, தங்காலத்திருந்த தமிழ்ப் பேரரசர்கள் திருமாலடியராக விருந்த செய்தி குறித்ததலை மேலே விளக்கியுள்ளேன் (பக். 206-3). இவருள்ளே, பூழியன் என்பான் சேரனுவன். இங்ஙனம் பேரடியராகத் திருமங்கையார்நாளில் விளங்கிய சேரர் பெருந்தகை, இக்குலசேகரப்பெருமாள் என்றே மேற்கூறியவற்றுக் கியைய நாம் கொள்ளக் கூடியதன்றோ? இக் கொள்கையை வலியுறுத்த மற்றொரு சிறந்த சான்றும் உண்டு.

மேலே, 138-ம் பக்கத்துக்காட்டிய பல்லவ வமிசாவளியில், 6-ம் எண்ணுக்குரியவனும், பரமசிவபத் தனுமான இராஜசிம்மன் காலத்தே சுந்தரமூர்த்தி நாயனர் விளங்கியவரென்பது, 202-ம் பக்கத்திற்கண்ட நீண்ட கீழ்க்குறிப்பால் தெளிவாக விளங்கும்.

சுந்தரமூர்த்திகள் சிவனடிமைத் திறத்துச் சிறந்து நின்ற காலத்தே, கேரளவேந்தரான சேரமான் பெரு மாணுயனர் வாழ்ந்தவர் என்பது பெரியபுராண வரலாறு கும். சேரர்குடியில் உதித்துப் பெருமாக் கோதையார் என்ற பெயர் பெற்றிருந்த இவ்வேந்தர் திருவஞ்சைக் களத்துச் சிவபிரான்பால் வைத்த பத்திமிகுதியால் ஆங்குச் சிவதொண்டு புரிந்து வந்தனர் என்றும், அக் காலத்துச் சேரநாட்டை ஆட்சிபுரிந்துவந்த பொறையன் ஆகிய சேரன் உலகப்பற்றற்றுத் தன் அரசாட்சியைத் துறந்து தவம் பூண்டனன் என்றும், அதனுல் ஆட்சி

செய்தற்குரியாரை அமைச்சர் ஆராய்ந்து, முடிவில் அஞ்சைக்களத்து வாழ்ந்துவந்த பெருமாக் 'கோதை யாரை அழைத்துவந்து முடிசூட்ட, அவர் நீதிவழுவாது அரசியலை நிகழ்த்திவந்தனர் என்றும்,[1] இச்சேரர் தம் மாட்சியிறுதியில் சுந்தரமூர்த்திகளுடன் அளவளாவி அவருடன சேர்ந்து கயிலைசென்றனர் என்றும் சேக்கிழார் தம் நூலுட்பாடுதல் பலரும் அறிந்தது.

இவ்வரலாறுகளுள், சேரமான்பெருமாளுக்கு முன்பு ஆட்சிபுரிந்த கேரளவேந்தன் தன்னரசு துறந்து தவசியாயினன் என்ற செய்தியே இங்குச் சிறப்பாகக் குறிக்கொண்டு நோக்கத்தக்கது. இது பற்றிய சேக்கிழார் பாடல் அடியில்வருமாறு:—

" **நீரின் மலிந்த கடலகழி நெடுமால் வரையிற்**
**கொடிமதில்சூழ்**
**சீரின் மலிந்த திருநகர மதனிற் செங்கோற்**
பொறையனெனும்
**காரின் மலிந்த கொடைநிழனமேற் கவிக்குங் கொற்றக்**
**குடை நிழற்கீழ்த்**
**தாரின் மலிந்த** புயத்தரசன் றரணி நீத்துத்
தவஞ்சார்ந்தான்"

எனக் காண்க. முற்கூறியபடி சுந்தரமூர்த்திகளும் சேர மான்பெருமாளும் சமகாலத்தவர் எனவே, அச் சேர மானுக்கு முன் ஆட்சிபுரிந்து அரசுதுறந்த பொறை யனும் சிறிதுமுன் அக்காலத்தவனே என்பது சொல்ல வேண்டுவதன்று.

இங்ஙனம் 'தரணி நீத்துத் தவஞ்சார்ந்தவ'ராகக் கூறப்பட்ட சேரவேந்தர், 7,8-ஆம் நூற்றுண்டினரான

1. பெரிய புராணம்—சேரமான் பெருமாணயனுர் புராணம் 1-முதல் 16-வரையுள்ள செய்யுட்களை நோக்குக.

திருமங்கைமன்னனுக்குச் சமகாலத்தவராகவும் தம்மரசு துறந்தவராகவும் தெளியப்பட்ட நம் குலசேகரப் பெருமாள் என்றே நாம் கொள்ளக்கூடியதன்றோ? இப் பெருமாள், தம் திருமொழியின் 2, 3 ஆம் திருப்பதிகங்களிலே—

**' கம்பமத யானைக் கழுத்தகத்தின் மேலிருந்தே**
**இன்பமருஞ் செல்வமு மிவ்வரசும் யான்வேண்டேன்''**

**'' வானாளு மாமதிபோல் வெண்குடைக்கீழ் மன்னவர்தங்**
**கோனாகி வீற்றிருந்து கொண்டாடுஞ் செல்வறியேன்''**

**'' மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளுமிவ்**
**வையந் தன்னொடுங் கூடுவ தில்லையான்''**

என்று இவ்வாறே தம் துறவுநிலையைப் பலவிடங்களினும் பாடியருளுதல் அறியத்தக்கது. அரசு துறந்த சேரவேந்தரை இன்னசமயத்தவர் எனச் சிறப்பியாது 'அரசன் தரணிநீத்துத் தவஞ்சார்ந்தான்' என்று பொதுப்படவே சேக்கிழார் கூறிச்செல்லுதலும் ஈண்டு நோக்கற்பாலது.

இவற்றால், சேரமான்பெருமாளுக்கு முன்பு ஆட்சிபுரிந்தவர் நம் குலசேகரப்பெருமாள் என்றே கருதற்குப் பெரிதும் பொருத்தமுண்மை கண்டுகொள்க.

இவ்வாழ்வார் தம்குமாரர்க்குப் பட்டங்கட்டிவிட்டுத் துறவுபூண்டனர் என்று திவ்யசூரிசரித முதலியவை கூறுகின்றன. பின்பட்டமெய்துதற்கு உரிமையுடைமையால் சேரமான்பெருமாளே புத்திரராக இவ்வாறு உபசரித்துக் கூறப்பட்டனர் என்று நாம் கொள்ளற்பாலது. இங்ஙனமன்றேல், திவ்யசூரிசரித வரலாற்றுக்கு இயையப் பெரியபுராணச் செய்தியை அமைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

எங்ஙனமாயினும், தரணிநீத்துத் தவஞ்சார்ந்த வராகச் சேக்கிழார் கூறும் பொறையன் (=சேரன்) தம்மரச வின்பத்தை நீத்து அணியரங்கன் திருமுற்றத்தை யடைந்து பிரபத்தி நிஷ்டையிற்சிறந்த தபோதனராய்விளங்கிய இவ்வாழ்வாரின் வேறல்லர் என்றே தோற்றுகின்றூர்.

குலசேகரப்பெருமாள் தம்மைக் 'கொங்கர்கோன்' என்றும் 'கொல்லிநகர்க்கிறை' என்றும் கூறிக் கொள்ளுதல் மேலே அறியப்பட்டது. இத்தொடர்களால் கொங்கு நாடு இவரது ஆட்சிக்குள்ளடங்கிய தேசமென்பதும், கொல்லிநகரென்பது அந்நாட்டுள் விளங்கிய இவ்வரசரது தலைமைநகரம் என்பதும் நன்குபெறப்படும்.

## கருவூர்-வஞ்சிநாடு

சேரநாடு என்பது சேலம் கோயம்புத்தூர் ஜில்லாக்களும், குடகு மலையாள தேசங்களும் ஏறக்குறைய அடங்கியதாய்ச் சங்ககாலமுதலே சேரர்க்கு உரிமையாக நின்ற பிரதேசமாம். இக்காலந்தொடங்கிச் சேரரது இராசதானியாக விளங்கிய நகரம் கருவூரேயாம். கொல்லிமலைப் பக்கத்ததும் ஆன்பொருநை என்ற ஆமிராவதிநதியின் கரைக்கண்ணதுமாகிய இப்பேரூரையே பண்டைநூல்கள் யாவும் வஞ்சிமாநகர் என்று கூறுவன.

இங்ஙனம் கருவூரைத் தலைநகராகக்கொண்ட சேரமண்டலத்துள், அவ்வூரைத் தன்னுட்பெற்றுள்ள கொங்குநாடு ஒரு சிறந்த பகுதி என்பது சொல்லாதே அமையும். இதுபற்றியே 'கொங்கர் கோமான்' என்பதைச் சேரன்பெயர்களுள் ஒன்றுக நிகண்டு முதலியவை

வழங்கலாயின. 'கொங்கரை யட்ட களத்து' 'வஞ்சிக்கோ வட்ட களத்து' எனக் கொங்குநாடும் வஞ்சிநகரும் சேரர்க்குச் சிறப்புடையனவாகப் பொய்கையார் கூறுதலும்[1] இக்கருத்துப்பற்றியே என்க. 'தென்னுடன் குடகொங்கன் சோழன்' என்றார், திருமங்கை மன்னனும்.

இங்ஙனம் சேரமண்டலத்துத் தலைநகராக விளங்கிய கொங்குநாட்டுக் கருவூரின் நிலைமை பிற்காலத்தே மாறலாயிற்று. சங்ககாலத்துக்குப் பின்னர், அஃதாவது உத்தேசம் 7-ஆம் நூற்றாண்டு முதலாக, ஆற்றல் மிக்கிருந்த பாண்டியரால் கொங்கு பலமுறை படையெடுக்கப்படவும், அதன்கணுள்ள தலைநகர் சிலசமயங்களில் அவ்வரசர் கைவசப்படவும், நேர்ந்தது.[2]

அக்காலமுதற்றான் சேரவேந்தர் தம் பழைய தலைநகரையே முற்றும் நம்பியிராமல், மேல்கடற் பக்கத்

1. களவழி நாற்பது, 14, 39.

2. 7 ஆம் நூற்றாண்டிலே சம்பந்தமூர்த்திகளால் திருத்திப்பணி கொள்ளப்பெற்ற நெடுமாறன், கொங்குநாட்டிற் சேரனுடன் பலபோர்கள் நடத்தி அதன் பகுதியைக் கைப்பற்றியவன் என்பது இறையனார்களவியலுரை, வேள்விகுடிச் சாஸனங்களால் அறியப்படும். இவ்வாறே, அப்பாண்டியன் மகன் கோச்சடையனைக் 'கொங்கர் கோமான்' என்றும், அவன் மகன் மாறவர்மனை 'வஞ்சி...மதில்புதுக்கியவன்' என்றும், அவன் மகன் நெடுஞ்சடையனைக் 'கொங்கபூமியடிப்படுத்தவன்' என்றும் வேள்விகுடி சீவரமங்கலச் செப்பேடுகள் கூறுதலும், சேரர், பல்லவருதவியால் தம் தலைநகரான கருவூரை ஒருகால் மீட்கமுயன்ற செய்தியை— 'உலகுடை மன்னவன் தென்னவனைக் கன்னிமா மதில்சூழ் கருவூர்வெருவ...வென்றான்' என்று திருமங்கையாழ்வார் குறிப்பிடுதலும் கண்டுகொள்க.

துள்ள மகோதை என்ற கொடுங்கோளூரினுந் தங்கி ஆட்சிபுரியலாயினர். [1]

இக்கடற்கரையூர் மேற்றேயத்து யவனமரக்கலங்கள் மிளகு முதலிய பண்டங்களை ஏற்றி வியாபாரஞ் செய்து வந்த பழந்துறைமுகமும், சுள்ளி என்ற நதிப் பக்கத்ததுமான முசிரியின் ஸ்தானத்தில் தோன்றிய பட்டினமாகும். சோழர்க்குக் காவிரிப்பூம் பட்டினமும் பாண்டியர்க்குக் கொற்கையும்போலச் சேரர்க்குக் கருவூரையடுத்துச் சிறந்த பேரூர் இதுவே யெனலாம்.

கொடுங்கோளூரைக் கருவூரென்றேனும், கருவூரைக் கடற்கரைப் பட்டினமென்றேனும் முன்னோரும் பின்னோரும் யாண்டும் வழங்கக் காணாமையின், கருவூராகிய வஞ்சி சேரரது உண்ணாட்டுத் தலைநகரென்பதும், மகோதையாகிய கொடுங்கோளூர் அவரது துறைமுகநகரம் என்பதுமே தெளிவாமென்க[2].

---

1. **'வஞ்சியை விட்டிகலஞ்சிய கோதை மகோதை மூதிற்கதவும், பறிப்ப ..பெயரும்...மன்னவனே' என்ற கூத்தர் வாக்கினும் (குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்) இக்கருத்தே தெளிவாதல் அறியத்தக்கது. (தக்க. பக். 362)**

2. கருவூராகிய வஞ்சியே சேரர் தலைநகர் என்பது, யான் எழுதி வெளியிட்ட "சேரன்-செங்குட்டுவன்" சரித்திரத்தாலும், மகாவித்வான் ஸ்ரீ உப. வே. ரா **இராகவையங்கார் ஸ்வாமி**பால் பேராராய்ச்சிகாட்டி எழுதப்பெற்ற "வஞ்சிமாநகர்" என்ற தனிநூலாலும் வெள்ளிடைமலைபோல் விளக்கமாம். இக்கருவூர், 2200-ஆண்டுகட்கு முன்பே, தமிழகத்தின் தலைமை நகரங்களில் ஒன்றாயிருந்தது என்பது, அந்நகர்க்கு 10-மைலில், புகழூர்க் குன்றில் உள்ள **பிராம்மி** சாஸனத்தில்—**கருவூர்ப் பொன்வாணிகன்** என்று குறிக்கப்பட்ட தொடரால் தெளிவாம். கருவூரையடுத்த நெரூர்க்

பாண்டிய சோழரது ஆதிக்கம் பெருகிநின்ற பிற்காலத்தே, முற்கூறியவாறு கொங்குநாடுங் கருவூரும் சேரரால் முற்றுங் கைவிடப்படவே, குடன்மலைநாடான மலையாளமே கேரள பூமியாகவும், அதன் துறைமுகமான இக்கொடுங்கோளூரே சேரரது தனித்தலைநகராகவும் ஆயின. அன்றியும் ஆதித் தலைநகர்க்கு வழங்கிய வஞ்சியென்ற சிறப்புப் பெயர், இப்பட்டினத்துக்கும் பிற்பட வழங்கியது.[1]

இங்ஙனம் முற்றும் மாறி நின்ற காலத்திலன்றிக் கருவூருங் கொடுங்கோளூருமாகிய இரண்டு தலைநகரங்களையுங் கொண்டு சேரவேந்தர் ஆண்டுவந்த கால விசேடமே நம் குலசேகரர்க்கு உரியதெனலாம்.

மேற்கூறியவாறு 8-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தவர் என்று தெளியப்பட்ட இவ் வாழ்வார் குடன்மலை நாடான மலையாளப் பிரதேச மொன்றனையே ஆண்டுவந்த கேரள வேந்தராயின் தமக்கு அந்நாட்டுத் தொடர்புண்மையைத் தவறாது அவர் குறிப்பித்தற்கு உரியரன்றோ? அங்ஙனம் ஒரு குறிப்பும் அவர் வாக்கில் இல்லாமையோடு, "கொங்கர் கோன்" "கொல்லிநகர்க்கிறை" என்றே அவர் தம்மைக் கூறிக்கொள்ளுதலின் கொங்கு நாட்டை உட்கொண்ட பழைய சேரமண்டல முழுமைக்கும் அவர் தனியரசராயிருந்தவர் என்பதும்,

---

கோயிலிற் கண்டதும், குலோத்துங்கசோழன் ஆட்சியில் அமைந்ததுமான சாஸனமொன்றில் 'வெங்கால நாட்டு வஞ்சிமாநகரமான கருவூர்' என்று வரையப்பட்டிருத்தலும் எங்கொள்கையின் உண்மையை விளக்கக் கூடியது. (An Rep. Nos. 335, 349 of 1928.)

1. பெரியபு. சேரமான்பெருமாள், 46; சிலப். பதிகம், 1. அடியார் உரை.

அக்கொங்கு நாட்டுக் கொல்லிமலைப்பக்கத்தே தம் தலைநகரை உடையராயிருந்தவர் என்பதும் நன்கு பெறப்படக் கூடியன.

ஆழ்வார் கூறும் கொல்லிநகர் என்பது பழைய தலைநகரான கருவூராகக் கருத இடமுண்டு. கொல்லி மலையைத் தன் பக்கத்துக்கொண்ட நகரைக் கொல்லி நகர் எனல் ஏற்புடைத்தாதல் காண்க. கொல்லிமலைக்குங் கருவூர்க்கும் நெருங்கிய தொடர்புண்மையை—

**"குடையவர் காந்தட்டன் கொல்லிச் சுனைவாய்த்**
**தொடையவிழ் தண்குவளை சூடான்"**

(புறப். வெண். 10,1)

**"கொல்லிப், பெருவாய் மலரோடு பசும்பிடி மகிழ்ந்து...**
**ஒடுங்கீ ரோதி யொண்ணுத லணிகொள...**
**பூண்க மாளநின் புரவி நெடுந்தேர்"**

(பதிற்றுப். 81)

என்ற முன்னோர் கூற்றுக்களால் உய்த்தறியலாகும்.[1]

இஃதன்றேல் கொல்லிமலையைச் சார்ந்து அரண்வலி பெற்றிருந்த ஊரொன்றே குலசேகரரது தலைநகரெனல் வேண்டும்.

கொல்லிமலையைச் சூழ்ந்த மலைகளையுடைய நாடு கொல்லிக்கூற்றம் என முன்னோரால் வழங்கப் பெற்றுளது. இக்கூற்றத்தில் தம் தாயாதியரான அதிக

---

1. 'வஞ்சிமாநகர்' என்ற நூலுள், 143-5-பக்கங்களிலே இத் தொடர்களின் உள்ளீடான கருத்துக்களை மகாவித்வான் -ஐயங்காரவர்கள் நன்கு விளக்கியிருத்தல் காண்க.

மான்கட்கு உரியவாயிருந்த[1] மலையரண்களைச் சேரர் ஒருகாற் கைப்பற்றியவர் என்பது சங்கச் செய்யுட்களால்[2] நன்கறியப்படுதலின், ஆழ்வார்க்குரிய கொல்லி நகரும் அவற்றுள் ஒன்றாகக் கொள்ளத்தகும்.

'கொல்லிகாவலன் கூடல்நாயகன் கோழிக்கோன் என்று இவ்வாழ்வாரே பாடுதலின், தம் தலைநகர் 'கொல்லி' என்னும் பெயர்பெற்றிருந்தமை வெளியாம். குறுந்தொகையின் 34ஆம் செய்யுள் பாடியவர் **கொல்லிக் கண்ணன்** என்ற பெயர்பெற்ற புலவராவர். இப்பெயரினின்று கொல்லியென்ற ஊரொன்று பழைமையாகவே உண்டென்பது தெரிய வருதலின், குலசேகராழ்வார் காலத்தில் சேரராஜதானியாக இக்கொல்லி அல்லது கொல்லிநகர், அப்பெயர் பெற்றுள்ள மலையிடை அமைந்திருத்தல் கூடியதேயாம்.

கொல்லிமலையின் உள்ளிடமான ஊர்கள், பிறர் எளிதிற்செல்லக் கூடாத அரணுடையன என்பது இக்காலத்தவரும் நன்கறிவர். இத்தகைய மலையரணுள்ள ஊரொன்று பிற்பட்ட சேரவேந்தரால் தம் தலை நகராகக் கொள்ளப்பட்டதற்கு, குலசேகரர் காலத்தோ அவர்

---

1. "அதிகனவ னணித்தாக ஓங்கெயில்சூழ் மலையரணத் துள்ளுறைவான்" (பெரியபு. புகழ்ச்சோழ. 17) என, கருவூர்க்கு அணித்தாகக் கடிய மலையரண் பெற்றிருந்த கொல்லி மலையின் இயல்பைச் சேக்கிழார் குறிப்பிடுதலுங் காண்க.

2. இங்ஙனம் கைப்பற்றிய சேரன், தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை என்பான்; 'கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசைப், பல்வேற்றானை யதிகமானோடு, டிருபெரு வேந்தரையு முடனிலை வென்று" என இவனைப்பற்றிக் கூறப்படுதல் காண்க (பதிற்றுப். 8-ம் பத்துப் பதிகம்.). தகடூர்யாத்திரை என்ற பழையநூலும் இச்சேரன் போரினைச் சிறப்பிப்பதாகும்.

முன்னோர் காலத்தோ பாண்டியர் போன்றவரது படையெடுப்புக்களாற் கருவூர் பலமுறை தாக்கப்பெற்றுக் கைவசப்படுத்தப் பட்டதே காரணமாகவேண்டும்.[1]

ஒருசிலர் ஆழ்வார் தலைநகரான இக்கொல்லிநகர் மேலைக்கடற்கரையிலுள்ள கொல்லம் என்று கருதுவர். அக்கொல்லம் பழைய சேர ராஜதானியாக இருந்தது என்பதற்கும், அதற்குக் கொல்லி என்ற பெயர் வழக்குண்டு என்பதற்கும் ஓராதாரமும் இன்மையால் அவர் கொள்கை போலியே என்க.

"குரக்கேணிக் கொல்லம்" என முன்பு வழங்கப் பெற்ற அந்நகரம், இப்போது 'ஸிரியன்—கிறிஸ்தவர்' எனப்படுவோரின் ஆதிமுன்னோரான வியாபாரி யொருவரால் 825-ம் ஆண்டில் உண்டாக்கப்பட்டு அவர்க்குரிமையாகக் கேரளாதிபதியால் நீரோட்டிக் கொடுக்கப்பெற்ற தென்பதும் அந் நகரந்தோன்றிய காலந் தொட்டு வழங்குவதே கொல்லமாண்டு என்பதும்—

"இந்நகரங் கண்டு[2] நீரேற்ற மருவான் சபீர் ஈசோ"
(T. A. S. ii 80, 82,)

"கொல்லந் தோன்றி......(இன்ன) யாண்டு"
(Ibid. 44, 73)

என வரையப்பட்ட சாஸனத்தொடர்களால் தெளிவாக அறியப்பட்டவை. அதனால் பிற்பட்டுத் தோன்றிய

---

1. சங்கநாளினும் பகையரசராற் கருவூர் தாக்கப்பட, அதனாற் சேரர் தம் தலைநகரைக் கடற்பக்கத்து மாற்றியதுண்டு. ஆய் அண்டிரன் 'கொங்கரைக் குடகடலோட்டியவன்' என்று புறநானூறு (130) குறிப்பிடுதல் காண்க (கொங்கர்-சேரர்).

2. இந்நகரங் கண்டு என்பதற்கு, இந்நகரத்தை உண்டாக்கி என்பது பொருள்; 'திருநகரங் கண்ட படலம்' என்பர் பரஞ், திருவிளையாடல்).

கொல்லத்தை முற்பட்டவரான இவ்வாழ்வார்க்கு உரிய தாக்குதல் பொருந்தாது என்க.

எனவே, மேற்கூறியவாறு கருவூர் அல்லது கொல்லி என்ற நகர்க்கு அரசர் என்பதே 'கொல்லி நகர்க் கிறை' என்பதற்குப் பொருளாதல் கண்டு கொள்க.

இவ்வாறு இவ்வாழ்வார் உண்ணூட்டுத் தலைநகரில் இருந்து ஆட்சி நடத்தியவரே யாயினும், இவர் மரபின ரான யுவராசர்களும் பிரதிநிதிகளும் கொடுங்கோளூரில் வாழ்ந்து சேரநாட்டின் பகுதியை ஆண்டுவந்திருத்தல் கூடியதேயாம். உறையூர்ச் சோழர் குலத்தோர் புகாரை யும், மதுரைப் பாண்டியர்மரபினர் கொற்கையையும் இராஜஸ்தலங்களாகக் கொண்டு இவ்வாறே ஆட்சி புரிந்து வந்தமையும் ஒப்பிடத்தககது. இவற்றால், கொடுங்கோளூர்க்கு மிகவணித்தாயுள்ள திருவஞ்சைக் களத்தில் வாழ்ந்துவந்த சேரமான் பெருமாள், குல சேகரர் அரசு துறந்தபின் பட்டம் பெற்று, தமக்கு விருப்பமுள்ள கொடுங்கோளூரையே தம் தலைநகராகக் கொண்டு கொங்குநாடு உட்பட்ட சேரமண்டல முழுமை யும் ஆண்டு வந்தனர் என்று கொள்வதே மிகவும் பொருத்தமாகின்றது.

10ஆம் நூற்றாண்டினனாகத் தெரியும் வீரநாரா யண வீரகேரளன் என்ற சேரன் காலத்தும் கொங்கு நாட்டின் பகுதி சேரவேந்தர்க்கு உரியதாயிருந்த செய்தி சாஸனத்தால் அறியப்படுதலின்[1], குலசேகராழ்வார் சேரமான் பெருமாளாயனார் காலங்களில் அவ்வுரிமை யாட்சி அவர்க்கிருந்த தென்பதில் ஐயமில்லையாம்.

---

1. **Ep Rep.** 706 **of** 1905.

**"ஆதியந்த வுலாவாசு பாடிய**
**சேரர்கொங்குவை காவூர்நன் ஞடதில்**
**ஆவி நன்குடி வாழ்வான**
**தேவர்கள் பெருமாளே"**

(திருப்புகழ்)

எனச் சேரமான் பெருமாளுக்கு உரிமையுடையன வாகவே கொங்கின் பிரிவான வைகாவூர் நாட்டையும் ஆவிநன்குடியையும் அருணகிரிநாதர் பாடுதலும் இங் கறியத்தக்கது. இதனுல் 15ஆம் நூற்ருண்டுவரை சேரதேசமாகவே கொங்குநாடு கருதப்பட்டுவந்தமை தெளிவாதல் காண்க.

கொல்லிநகர்க் கிறையான நம் குலசேகரப் பெருமாள் கடன்மலைநாடான மலையாள தேசத்துக்கும் அரசராயினும், அங்நாட்டுப் பரிசயம் மிகுதியும் உடையவரல்லர் போலவே தோற்றுகின்ருர். பரிசய முள்ளவராயின், அங்நாட்டுத் திருமால் திருப்பதிகளை யெல்லாம் விடாது பாடவேண்டியவ ரன்ருே? அங்ஙனம் பாடாததோடு, திருவரங்கம், திருக்கண்ணபுரம், தில்லைத் திருச்சித்திரகூடம் போன்ற சோணுட்டுத் தலங்களையே இவர் அபிமானித்திருத்தலின், கீழ்நாடே இவரது பழக்கத்துக்குப் பெரிதும் உரியதாயிருந்த தென்றும் தோற்றுகின்றது.

வித்துவக்கோடு என்ற பெயருடன் மலைநாட்டில் இன்றுமுள்ள திருப்பதி, குலசேகராழ்வாராற் பாடப் பெற்றுள்ளதே எனிற் கூறுவேன்.

ஆழ்வார் பாடிய வித்துவக்கோடு மலைநாட்டதே யாயின், தென்பாண்டிநாட்டவராய் அம்மலையாளத் திருப்பதிகளையெல்லாம் விடாதுபாடிய நம்மாழ்வார்

இவ்வித்துவக் கோட்டைமட்டும் அடியோடு மறந்து சென்றதற்கும், வித்துவக்கோட்டைப் பாடிய இவ்வாழ்வார் மற்ற மலையாளத்திருப்பதிகளை முற்றும் மறந்ததற்கும் காரணமென்னை? மலைநாட்டை அடுத்திருந்தவரால் அறிந்தபிமானிக்கப் பெற்ற அதன் பழந் திருப்பதிகள் அந்நாடாண்ட அடியரான அரசரால் அபிமானிக்கப் படாமற் போனது வியப்புக்கு உரியதேயன்றோ?

ஆகவே, குலசேகராழ்வார்க்குப் பரிசயமுள்ளதும் நம்மாழ்வார்க்குப் பரிசயமில்லாததுமான பிரதேசத்துள்ளதே, பெருமாள்திருமொழியிற் பாடப்பெற்ற வித்துவக்கோடு—என்று கொண்டாலன்றி மேற்கூறிய கேள்விக்கு ஏற்ற சமாதானங் காண்டல் அரிதாகும்.

இனி, வித்துவக்கோடு எனப்பெயரிய திருப்பதி, குலசேகரர்க்குரிய கொல்லிநகர்ப் பக்கத்தினும் ஒன்று உள்ளதாகத் தெரியவருமாயின், அதுவே அப்பெரியாரால் மங்களாசாஸனம் செய்யப்பெற்றது என்று எளிதிற் கருதக்கூடியதன்றோ? **மாகவித்வான் ஸ்ரீரா. இராகவையங்கார் ஸ்வாமி** என்னிடம் இதுபற்றிக் கூறிய அரியசெய்தியொன்று ஈண்டு வெளியிடற்குரியது. அஃதாவது—

"சேரரது பழந்தலைநகரான கருவூரிலே ஆன்பொருநை நதிக்கரையில் திருமால் திருக்கோயில் கொண்டுள்ள பகுதிக்கு வித்துவக்கோடு என்ற பெயர் வழக்குண்டு என்பது அக்கோயிலைச்சூழப் பிராமணர் வாழுந் தெருக்களை **வித்துவக்கோட் டக்கிரகாரம்** என்று அப்பக்கத்தார் இன்றும் வழங்கி வருவதால் விளக்கமாகின்றது" என்பதேயாம்.

ஆகவே, தம் பழைய தலைநகரிற் கோயில்கொண்ட திருமாலே, குலசேகரப் பெருமாளால் மிகவுருக்கமும் இனிமையும் பெருகப் பாடப்பெற்ற மூர்த்தி என்பது வெள்ளிடை மலையாகின்றது. கருவூரின் இப்பகுதி வித்துவக்கோடு எனப் பெயர்பெற்றதற்குப் பொருத்தமுமுண்டு.

வஞ்சியாகிய இப்பெருநகரின் எயிற்புறவிருக்கையில் தேவாலயங்களும், பௌத்த சைனப் பள்ளிகளும், கல்வியறி வொழுக்கங்கள் நிரம்பிய அறிஞர்வாழிடங்களும் முற்காலத்தே விளங்கியிருந்தன என்பது மணிமேகலை வஞ்சிமாநகர் புக்க காதையால் தெரியலாம். பிக்குணியான மணிமேகலை, சமயக்கணக்கர் பலரை நேரிற்கண்டு அவ்வவர் கொள்கைகளை உசாவியறிந்த கருவூர்ப்பகுதி இதுவேயாம். திருமால்கோயிலையுடைய இவ்வித்துவக்கோடும், தேவாலயங்க ளுடையதாக மணிமேகலை குறித்த அவ்வெயிற்புற விருக்கையில் ஒன்றென்னத் தடையில்லை.

வித்துவக்கோடு என்பதற்கு. "வித்துவான்கள் வாழும் நீர்க்கரை" என்பது பொருள்; [கோடு—நீர்க்கரை].[1]

கடற்கரையிலுள்ள முசிறியை (=கொடுங்கோளூர) 'முயிரிக்கோடு' என்று சாஸனம் வழங்குதலுங் காண்க.[2]

---

1. ("குளவளாக் கோடின்றி நீர்நிறைந் தற்று" என்பது குறள் (553); 'குளப்பரப்புக் கரையின்றி நீர்நிறைந்தாற் போலும்' என்பது இதன் பொருள்.)

2 Inscriptions of the Madras Presidency, p. 1691.

"தேவ குலமுந் தெற்றியும் பள்ளியும்
பூமலர்ப் பொழிலும் பொய்கையு மிடைந்து
நற்றவ முனிவருங் கற்றடங் கினரும்
நன்னெறி காணிய தொன்னூற் புலவரும்
எங்கணும் விளங்கிய வெயிற்புற விருக்கை" (72-6)

எனச் சாத்தனார் எயிற்புறவிருக்கையைச் சிறப்பித்தலினின்று, வஞ்சியில் தேவகுலங்களுடன் அறிஞர்க்கெல்லாம் வாழ்விடமாக விளங்கியது இப்பகுதியே என்றும், அதுபற்றியே இது வித்துவக்கோடு என்னும் பெயர் பெறலாயிற்று என்றும் கருதற்குரியன.

"விண்டோய் மதில்புடைசூழ் வித்துவக்கோடு"

என்று குலசேகரப்பெருமாள் அருளிய தொடராலும் வஞ்சியின் எயிற்புறவிருக்கையில் உள்ளதே அத்தலமென்பது புலனும். இங்கே கோயில்கொண்டருளுந் திருமாலே 'ஆடகமாடத் தரவணைத் துயின்றோன்' என இளங்கோவடிகளாற் சிறப்பிக்கப்பெற்ற பழைய மூர்த்தியாவர். இதனைச் 'சேரன்-செங்குட்டுவன்' சரித்திரத்துள் 'சேரர் தலைநகர்' என்ற பகுதியில் நன்கு விளக்கியுள்ளேன்.

குலசேகராழ்வார் அருளிய வித்துவக்கோட்டுப் பதிகத்தை ஊன்றி நோக்குமிடத்து, அத்தலத்தெம்பெருமானை ஒருநாளேனும் பிரிந்து தரியாதவர் இப்பெரியார் என்பது விளங்கக்கூடியது.

"தருதுயரந் தடாயேலுன் சரணல்லாற் சரணில்லை
விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட் டம்மானே
அரிசினத்தா லீன்றதா யகற்றிடினு மற்றவடன்
அருணினைந்தே யழுங்குழவி யதுவேபோன் றிருந்தேனே"

"வித்துவக்கோட் டம்மானீ வேண்டாயே யாயிடினும்
மற்றாரும் பற்றிலேன்"

என்றும், 'நீ கொண்டாளா யாகிலும்' 'மீளாத்துயர் தரினும்' 'வெந்துயர் வீட்டாவிடினும்' என்றும் இவ்வாறே இவ்வாழ்வார் கூறுவனவற்றால், ஏதோ ஓர் இடையீடு தமக்குண்டாக அதனால் தம் நித்திய வழிபாட்டுக்குரிய அவ்வெம்பெருமானைப் பிரியநேரவே, அதனை ஆற்றாது புலம்பியுருகின்றார் இவர் என்றே தோற்றுகின்றது. அவ்விடையூறு தம் பழம்பகைவரான பாண்டியரது படையெடுப்புக்களால் ஒருகால் கருவூர்க்கு நேர்ந்திருத்தல் கூடும்.

கொங்குநாடு பாண்டியர் கைவசப்பட்டிருந்த செய்தி பற்றி முன்பே குறிப்பிட்டுள்ளேன். ஆழ்வாரது துயர நிலைக்குக் காரணம் எதுவாயினும், வித்துவக்கோட்டுப் பாசுரங்களினின்றும் இவர் நாளுந்தவறாது வழிபட்டு வந்த மூர்த்தி அத்தலத்தெம்பெருமானே என்னத் தடையில்லையாம். ஆகவே, கொங்குநாட்டில் இவர் தலைநகர்ப் பக்கத்து விளங்கியதே அத்தலம் என்பது ஐயமின்றிப் பெறப்படுதல் காண்க. இதுபற்றிப் போலும் "கொங்குங் குடந்தையும்...எங்குந்திரிந்து விளையாடு மென்மகன்" என்று பெரியாழ்வார்—கொங்குநாடும் திருமால் திருப்பதிகளுடையதேயெனக் குறிப்பிட்டருளிய தூஉம் என்க.

இவற்றால், கொல்லிகாவலரான இப்பெரியார் பாடிய வித்துவக்கோடு அப்பெயருடன் இப்போதுள்ள மலையாளத்தூர் அன்றென்பதே முடிவாகின்றது. அதனால் அம்மலையாளத்தூர், சேரவேந்தர் தம் பழையதலைநகரான கருவூர்வஞ்சியைக் கைவிட்டுக் கொடுங்களூரை அவ்வஞ்சிநிலையிற் கொண்டு ஆட்சிபுரிய நேர்ந்த பிற்

காலத்தே, அப் பழையதலைநகர்த் திருமாலையும் தாம் ஆளும் பிரதேசத்தே புதியதாகப் பிரதிஷ்டித்து, வித்துவக்கோடு என்ற பழம்பெயரை அதற்கு வழங்கி அபிமானித்துவந்த தலமாகவே கருதத்தகும்.

இவ்வாழ்வார் அவதரித்தருளிய நகரம், மேலைக் கடற்கரையிலுள்ள **கோழிக்கூடு**[1] என்று திவ்யசூரி சரிதமும், **கொல்லிநகர்** என்று பின்பழகிய பெருமாள்சீயர் குருபரம்பரையும், **வஞ்சிக்களம்** என்று வேறு பெரியார் பாடல்களுங் [2] கூறுகின்றன.

திவ்யசூரிசரிதங் கூறும் கோழிக்கூடு என்பது மட்டும் வேறுபாடுடையதாகத் தோன்றினும், கொல்லி நகரமும் வஞ்சிக்களமும் ஒன்ருகவே கூறவியலும்.

கொல்லிமலைப்பக்கத்து நகர் என்பதும், வஞ்சி யாகியதானம் என்பதும் உறுப்புப் பொருள்களாய்க் கொல்லிக்கும் கருவூர்க்கும் அவ்விரண்டுபெயர்களும ஏற்புடையவாதல் காண்க. வஞ்சிக்களம் என்பதை அஞ்சைக்களம் எனத் தேவாரப் பாடல்பெற்ற சிவதலத் துடன் சிலர் இயைபுபடுத்தல் பொருத்தமற்றதென்க. இனி இவ்வாழ்வார் தம்மை—

> ''**கொல்லி காவலன் கூடல் நாயகன்**
> **கோழிக்கோன் குலசேகரன்**'' (3, 10)

---

1. *'குக்குட கூடஸம்' என்பது அந்நூல்கூறும் வட மொழிப்பெயர்.*

2. *''பொன்புரையும் வேற்குலசேகரனே மாசிப், புனர் பூசத்தொழில் வஞ்சிக் களத்திற்ருேன்றி'' என* ***ஸ்ரீமத்- வேதாந்ததேசிகனும்*** *(தேசிகப் பிரபந்தம்), ''எண்டிசையும், ஏத்துங் குலசேகரனூ ரெனவுரைப்பர், வாய்த்ததிரு வஞ்சிக் களம்'' என* ***ஸ்ரீவரவரமுனிகளும்*** *(உபதேசரத்தினமாலை) அருளிச்செய்தல் காண்க.*

"கொல்லி நகர்க்கிறை கூடற்கோன்
குலசேகரன்" (6, 10)

"கோழியர்கோன் கொடைக் குலசேகரன்" (9, 11, 10, 11)

எனக் கூறிக்கொள்ளுதல் காணலாம். இதனால், கூடல் (மதுரை), கோழி (உறையூர்) வேந்தர்களுடன் தொடர்புடையவர் இச்சேரர் பெருந்தகை என்பது பெறப்படும்.

சேரமன்னர், சோழபாண்டியரின் நாடுகளையும் தம்முடையனவாகக் கூறிக்கொள்வதுண்டு என்பது சங்க நூல்களால் [1] அறியப்படுதலின், இவ்வாழ்வாரும் அம்முறையில் தம்மைப் புனைந்து கூறிக் கொண்டவர் போலும்—என்று கருதுவாரும் உளர். இவ்வாறு ஆழ்வார் கூற்றுப் புனைந்துரைகளே என்பதற்குத் தக்க காரணம் ஒன்றும் அவர் கூறுமையால் அக் கருத்து ஏற்கத்தக்க தன்றும். அதனால், ஏதோ சோழபாண்டியர் தொடர்பு தமக்கு உண்மைபற்றியே, ஆழ்வார் கூடல் நாயகன் கோழியர் கோன் என்று தம்மைக் கூறலாயினர் என்றே தோற்றுகின்றது. ஆயின், அத்தொடர்பு யாது?

கொங்குநாடாண்ட சேரவரசர் வரலாறுகளில் ஒரு சில இப்போது நமக்குத் தெரியவருகின்றன. கோயம்புத்தூர் சேலம் பிரதேசங்களினும் பிறவிடங்களினும் 10-ம் நூற்றாண்டுமுதற் காணப்படும் இச்சேரர் சாஸனங்களால், [2] இவருட்சிலர் 'சோழன்' என்றும், சிலர்

1. "புகாஅர்ச்செல்வ பூழியர் மெய்ம்மறை...கொல்லிப் பொருந" என்பது அவர்காட்டிய மேற்கோள் (பதிற்றுப் 73).

2. சேலம் ஜில்லா வொள்ளாற்றுச் சாஸனம்(Ep. Rep. 657of 1905.)

பாண்டியன்' என்றும் சிறப்புப்பெயருடையராயிருந்தவர் என்பது தெரியலாம்.

வீரசோழன்[1] என்பான் முதற்பராந்தகசோழன் காலத்தே அவன் கீழ்ப்பட்டிருந்த சேரவேந்தனுவன். இவ்வாறே வீரபாண்டிய தேவன் என்ற கேரளவரசன் 'பாண்டியன்' என்ற பட்டப்பெயரோடு இராசகேசரி வர்மன்[2] என்ற சோழர்க்குரிய சிறப்புப்பெயரையுந் தரித்திருந்தான். இவற்றினின்று, கொங்கரசர், சோழ பாண்டிய மரபுகளோடு தொடர்புடையராயிருந்தவர் என்பது பெறப்படுகின்றது.

## குலமுறை

இதற்கேற்ப, முதலாம் ஆதித்தன் காலத்தவனுன கோக்கண்டன் இரவி, வீரநாராயணன் என்ற சேரர் தம்மைச் **சந்திராதித்த குலத்தவர்**[3] என்று கூறிக் கொள்ளுதல் குறிப்பிடற்பாலது. இதற்குப் பாண்டியரது சந்திரவமிசமும் சோழரது சூரியவமிசமும் ஆகிய இரு பெருமரபினையுஞ் சார்ந்தவர் என்பது பொருளாகும். ஆகவே, கொங்குநாடாண்ட சேரர், பாண்டியசோழ மரபினரென்பதே தெளிவதால் காண்க.

மருமக்கட்டாயமுறை இக்காலத்தே தோன்றிய தாயின், கேரளப்பெண்களை மணந்துவந்த தந்தையர்

---

1. இவன் முன்னேருள, மணிகுட்டுவன் என்பவனெருவன் நாமக்கல் சாஸனத்திற் காணப்படுதல், சேரன்-செங்குட்டுவனை நினைப்பூட்டுகின்றது. (Ep.Rep. No 29 of 1906; Ind. Ant. Vol ix. pp 47—50).

2 Ep. Rep. 544, 546.

3. கோயம்புத்தூர் ஜில்லா, வெள்ளளூர்ச் சாஸனம் (Ep. Rep. 147 of 1910; Ep. Ind. iii, pp. 79—82).

வழியாகச் சேரர்க்குச் சந்திராதித்தகுலம் வந்ததாக வேண்டும். அன்றேல், பாண்டியசோழ வமிசங்களி னின்று சேரர் ஓரொருகாலத்தே தெரிந்தெடுக்கப்பட்ட செய்தி கேரளவரலாறுகளால் அறியப்படுதலின், அம் முறையில் இம்மரபு அமைந்ததாயினும் ஆம்.

எவ்வகையினும், 'கூடல் நாயகன்' கோழிக்கோன் என்று ஆழ்வார் கூறுகின்றவை, பாண்டிய சோழ நாடாட்சியில் தமக்கிருந்த தலைமைபற்றியன என்பதி னும், அவ்விருவர் மரபுடனும் தங்குலத்தவர்க்கிருந்த தொடர்புபற்றியன என்று கொள்ளுதலே பெரிதும் பொருத்த மெனலாம்.

சளுக்கியவமிசத்தவனாய்ச் சோழகுலத்துப் புக்க முதற்குலோத்துங்கன் அவ்விருமரபினர்க்கும் தனிப் புதல்வனாயிருந்தமையால் அவன் தந்தைவகையார் சந் திரகுலத்தவனாகவும் தாய்வகையார் சூரியகுலத்தவனா கவும அவனைப் பாராட்டலாயினர் என்பது—

**" திங்களி னிளங்குழவி செம்மலிவ னென்றும்**
**செய்யபரி திக்குழவி யையனிவ னென்றுந்**
**தங்களின் மகிழ்ந்திரு குலத்தரசர் தாமுந்**
**தனித்தனி யுவப்பதொர் தவப்பயனு மொத்தே''**

எனச் செயங்கொண்டார்[2] பரணியில் அழகுபெறப் பாடுதலால் அறியலாம். அத்தகையநிலைமையே குலசேக ரரும் கொண்டனராதல் வேண்டும்.

---

1. ''எங்கள்குலத் தின்னமுதே யிராகவனே'' (பெரு மாள் திரு. 8-3) என்று இவ்வாழ்வார் அருளியதனுள், 'எங்கள் குலம்' என்பதற்குப் பொதுவாக க்ஷத்ரியவருணம் என்று பொருள் கூறப்படுமாயினும், சிறப்பாகச் சோழர்க் குரிய சூரியவமிசம் என்று பொருள்கோடலும் இயைபாதல் காண்க.

2. கலிங்கத்துப்பரணி, அவதாரம், 7.

மேற்கூறிய கொங்குச்சேரர்களுள் 9ஆம் நூற்ருண்டில் ஆதித்த சோழனுக்கு நட்பினனுயிருந்த **கோக்கண்டன் இரவி** என்ற சேரவேந்தனைச் சந்திராதித்த குலத்தவனென்று சாஸனங் கூறுதலின், அவனுக்கு ஒன்றரை நூற்ருண்டுகட்குமுன் சேர்பாண்டியத் தொடர்புடையராயும், கொங்கர்கோனுமாயிருந்த நம் குலசேகரப்பெருமாளை, அவன் முன்னேருள் ஒரு வராகவே கொள்வது பெரிதும் ஏற்புடைத்தாதல் காணலாம்.

இனி, குலசேகராழ்வார், வடமொழியில் சுலோக ரூபமாய் அமைந்த **முகுந்தமாலை** என்ற துதிநூலையும் இயற்றியவர் என்று கூறப்படுகின்றனர். அந்நூலின் இறுதிச்சுலோகத்தின் முற்பகுதி, தமிழ்நாட்டார் பாடப் படி, அடியில் வருமாறு:—

> " **யஸ்ய ப்ரியௌ ச்ருதிதரௌ** கவிலோக வீரௌ
> **மித்ரே த்விஜன்மவர** பத்ம சராவபூதாம்"[1]

இதனால், பத்மன், சரன் என்ற அந்தணக் கவிசிரேஷ்டரிருவர் குலசேகரர்க்கு அன்புமிக்க நண்பினராக இருந்தவர் என்பது புலப்படும்.

இனி, மலையாள நாட்டிலுள்ள அச்சுப் பிரதிகளில் "மித்ரே த்விஜன் மவரசிவாவபூதாம்" என்ற பாடங் காணப்படுகின்றதென்றும், ஆனால் அந்நாட்டிலே உரையுடனுள்ள முகுந்தமாலைப் பிரதிகளில்—

> "**யஸ்ய ப்ரியௌ சருதிதரௌ** ரவிலோக வீரௌ
> **மித்ரே த்விஜன்மவர பாரசவாவபூதாம்**"

---

1. "யாவரொருவர் (குலசேகரர்)க்கு—வேதவித்துக்களாயும், கவிகளுக்குள் தலைவராயும், பிராமண சிரேஷ்டர்களாயும் உள்ள பத்மன், சரன் என்னும் இருவர் அன்பார்ந்த நண்பினரா யிருந்தனரோ" என்பது இதன் பொருள்.

என்ற பாடமும், (நம்பூரிப்) பிராமணரான **ரவி** என்ப வரும் (வாரியப்) பாரசவரான **லோகவீரன்** என்பாருமாகிய வித்வான்கள் இருவர் குலசேகரர்க்குப் பெரு நண்பிரான வர் என்ற கருத்தமைந்த பொருளுங் காணப்படுகின்றன என்றும், குலசேகரர் என்ற கேரளவேந்தரை 'யுதிஷ்டிர விஜயம்' என்ற தம் நூன்முகப்பிற் புகழும் வாசுதேவர் என்ற கவி, தம்மை 'ரவிபூ' என்று—தாமியற்றிய 'திரிபுர தகனம்' என்ற வேறு நூலில்—கூறுவதனாலும், 'ரவிபூ' என்பதற்கு ரவிபுத்திரரான வாசுதேவர் என்று—அத்திரி புரதகன உரையாசிரியரும் 13-ம் நூற்றுண்டினருமான —நீலகண்டர் பொருள் குறித்திருப்பதனாலும் 'ரவி' என் பவர்க்குப் புத்திரரே வாசுதேவர் என்பது தெளிவா மென்றும், அதனால் அந்த ரவியே குலசேகரர் காலத்தவ ராய் அவரால் முகுந்த மாலையிற் கூறப்பட்டவராதல் வேண்டுமென்றும், ஆகவே குலசேகராழ்வார்காலம் அப் பெயர்பெற்ற கேரளவேந்தர் விளங்கிய 9ஆம் நூற் றுண்டின் முற்பாதியாம் என்றும் அறிஞர்[1] கூறுவர். இக் கருத்து அருமையுடையதேயாம்.

• ஆயினும் இதன் முடிபை ஒருதலையாக நாம் துணி யக் கூடவில்லை. முகுந்தமாலைக்குத் தமிழ்நாட்டும் வழக்குமிகுதியுண்டு. 'கவிலோகவீரெள' என்பதும் பத்ம சராவ பூதாம் என்பதுமே இங்கெலாம் வழங்கும் பாடங் கள். இதனால், மலையாள நாட்டிலுந் தமிழ் நாட்டிலும் வழங்கும் அவ்விருவகைப் பாடங்களுள் எது ஆழ்வார் காலத்தது என்பது தெளியப்படாத நிலையில் அக் கருத்து ஏற்கக்கூடியதன்று.

---

1, திருவனந்தபுரம் சாஸனவிலாகாத் தலைவரான **ஸ்ரீமான். இராமநாத ஐயரவர்கள் இங்ஙனம் கருதினர். (T. A S. Vol. pp. 109—11.)**

ஒருகால் மலையாளப்பாடமே உண்மையுடையதாகக் கொள்ளினும், அதனுல் முகுந்தமாலை இயற்றியவர் குலசேகரர் என்பது பெறப்படுமேயன்றிக் குலசேகராழ் வாரே அக்குலசேகரர் என்பது தெளிவாக வழியில்லை.

ஆழ்வார் அருளியதே முகுந்தமாலை என்ற கொள் கையில் ஸம்ப்ரதாயஸ்தரான பெரியோர் பலர்க்கு ஐயப் பாடு பெரிதுமுண்டு. அன்னோர் ஐயுறுதற்குரிய காரணம் அடியில்வருமாறு:—

முகுந்த மாலை ஆழ்வார் அருளிச் செயலாயின், பெருமாள் திருமொழியைப் பாடியதாகக் கூறும் பழைய நூலான திவ்யசூரிசரிதம் அம்மாலையையுங் குறிப்பிடா மற் போகாதென்பது திண்ணம். குலசேகரர் நட்பினரைப்பற்றி முகுந்தமாலை கூறும் முக்கியமான செய்தியையும் அந்நூல் கூறியதில்லை.

இவைபோயினும், திவ்யப் பிரபந்த முதலியவற்றின் வியாக்கியானங்களிலே, கூரத்தாழ்வான் பட்டர் முதலிய பெரியோர் திருவாக்குகள் உதகரிக்கப்படுமாறு ஆளப்படுஞ் சிறப்பும், கோயில் முதலிய சந்நிதிகளிலே விசேடசமயங்களில் ஓதப்பெறும் பெருமையும் இம் முகுந்தமாலையும் பெற்றிருத்தல் வேண்டுமன்ருே? அவை யொன்றுமே இந்நூலுக்கு இல்லாமையால், சம் பிரதாய நூல்களுள்ளே அம்மாலை சேர்ந்ததன்று என் பதே முன்னோர் கருத்தாகத் தோன்றுகின்றது[1] என்பதே யாம்.

---

1. காஞ்சீபுரத்தில் ஸ்ரீவைஷ்ண ஸம்ப்ரதாய கிரந்தங் களில் வல்லவராக விளங்கும் வித்வான் ஸ்ரீ: உப வே. **அண்ணங்கராசாரிய ஸ்வாமி** எழுதி வெளியிட்டுள்ள முகுந்த மாலைத் தமிழ் வியாக்யான பீடிகை பார்க்க.

ஆகவே, பண்டிதரும், திருமாலடியாரும் குலசேகரர் என்ற பேருடையாருமாய்ப் பிற்காலத்து விளங்கிய கேரளவேந்தரொருவரால் அருளிச் செய்யப்பட்டதே அம் முகுந்தமாலை என்பது பொருத்தமென்க.

அவ்வேந்தர்க்கு ஐயரவர்கள் குறித்த 9ஆம் நூற்றாண்டு ஸ்ரீமந்-நாதமுனிகள் காலத்தோடு நெருங்கியதாதலால், குலசேகராழ்வார்க்கும் அதனையே கொள்ளுதல், ஆழ்வார் ஆசாரியர் என்று வேறுபடுத்தப்பட்டு வழங்கும் பிரபல வரலாறுகளோடு பெரிதும் மாறுபடுதலும் அறியத்தக்கது. இவற்றால் முகுந்தமாலை பாடிய குலசேகரர், குலசேகராழ்வார்க்குப்பின் அவர் வழித்தோன்றலான திருமாலடியார் எனக்கொள்வதே மேலே கூறிப்போந்த ஆழ்வார் செய்திகளோடு பெரிதும் ஏற்புடையது என உணர்ந்து கொள்க.

குலசேகரப்பெருமாள் தம் திருமொழி 7ஆம் பதிகத்தின் இறுதிப் பாசுரத்தே—

**" மல்லை மாநகர்க் கிறையவன் றன்னை**
**வான்செலுத்திவந் தீங்கணை மாயத்**
**தெல்லையில் பிள்ளை செய்வன காணாத்**
**தெய்வத் தேவகி புலம்பிய புலம்பல்"**

என்று அருளிச்செய்தனர். இவ்வடிகட்குக் காலஞ்சென்ற **ஸ்ரீ கோபிநாதராயர் அவர்கள்**—'குலசேகர பூபதியானவர் மல்லைமாநகர் (கடன் மல்லை)க்கு ராஜாவாகிற பல்லவனைப் போரிற் கொன்று விண்ணூடு புகவிட்டுப் போர்க்களத்தினின்றும் போந்து இங்குள்ள மாயத்தோடு விளையாடிய பிள்ளையாகிய கண்ணனைக் கண்டு' என்று பொருளும், இதனால் பல்லவமல்லன் மகனான தந்திவர்மனைக் குலசேகரர் போரிற் கொன்றவராதல் வேண்டும் என்ற கருத்துங் கொண்டு, தம் ஸ்ரீவைஷ்ணவ

சரித்திரத்துள் எழுதியுள்ளார்[1]. இது பொருளாலும் சந்தர்ப்பத்தாலும் சிறிதும் பொருத்தமற்றதாகும்.

கண்ணபிரானைத் தன் திருவயிறு வாய்க்கப் பெற்றும், மாமனான கஞ்சனுக்கு அஞ்சிக் கோகுலத்து ஒளித்து வளர்ந்த அப்பிரானது பாலசரிதைகளைக் கண்டுகளிக்கும் பாக்கியம்பெறாத தேவகி, தன் திருக் குமரன் கம்ஸவதம் செய்துவிட்டுத் தன்னிடம் வரக் கண்டுருகி, அப்பெருமானது இளமைச் செய்திகளை நினைந்து ஒவ்வொன்றாக எடுத்துக்கூறிப் புலம்பிய தன்மையை ஆழ்வார் கொண்டுமொழிந்தனவற்றுள் இஃது இறுதிப் பாட்டாகும்.

இதற்கு—" மல்லரையும் அவரையேவிய மதுரை மாநகர்க்கு அரசனான கஞ்சனையும் வீரசுவர்க்கம் அடையச் செய்து விட்டுத் தன்பால்வந்த கண்ணனது செயல்களைக் கண்டு தேவகி புலம்பியதை" என்பதே நேர்பொருளாகும்.

மேற்பாசுரங்களிற் கூறிப்போந்த தேவகிபுலம்பல் இன்னது பற்றியது என்பதனை விளக்குவதற்காகவே ஆழ்வார் இவ்வாறு விசேடித்துக் கூறுகின்றார் என்பது நோக்குவார்க்கு எளிதின் விளங்கும். மல்லரையும் கஞ்சனையும் ஒரே சந்தர்ப்பத்தில் கண்ணன் கொன்றிட்ட செய்தியை—

" மல்லையட்டு...கஞ்சனுக்கு நஞ்சானானை"
(பெ. தி. 2, 10, 7)

" மல்லடர்த்துக் கஞ்சனைக் காய்ந்தான்" (ஷை, 6, 7, 5)

" மல்லொடு கஞ்சனுந் துஞ்சவென்ற" (ஷை, 11, 2, 3)

---

1. The History of Sri Vaisnavas, p 22

என்று திருமங்கை மன்னனும் இவ்வாறே அருளிச் செய்தல் காண்க. 'பல்லவனைப் போரிற் கொன்று திரும்பிவந்து கண்ணனைக் கண்டு குலசேகரர் தேவகி புலம்பலைக் கூறினர்' என்பது இவ்வடிகளின் கருத் தாயின், அப் போர்ச்செயற்குப் பின் தேவகிபுலம்பலை ஆழ்வார் பாடுதற்குப் பொருத்தமேனும், அத்தேவகி புலம்பல் இன்னது பற்றியது என்பதேனும் பெறப் படாமையால், அவ்வுரை போலியே என்பது தெளிவு.

மேற்பாசுரங்களிற் கூறப்பட்ட கண்ணபிரான் செய்திகளின் தொடர்பாலும், இப்பாசுரத்தின் முதலில் 'மல்லை' எனவருவதனுலும் 'மாநகர்க்கிறையவன்' என் பான் கஞ்சனே என்பது பெறப்படத் தடையில்லையாம். இனி, 'வளம் பொருந்திய மாநகர்' என்ற ஸ்ரீ பெரியவாச் சான்பிள்ளை வியாக்கியானப்படியும் பொருள் கொள் ளுதல் பொருந்தும். மல்லை-வளம்; 'மல்லைமா முந்நீர்' என்றார் திருமங்கைமன்னனும்.[1]

ஸ்ரீரங்கவரலாறு கூறும் "கோயிலொழுகு" என்ற சரித்திர நூலிலே, இவ்வாழ்வார் வரலாருகக் காணப் படுஞ் செய்தி அடியில் வருமாறு:—

> "கல்யப்தம் 50-வருஷத்துக்கு மேல், குல சேகரப் பெருமாள் சேர சோழ பாண்டிய மண்டலங் களுக்குப் பிரபுவாய், உறையூர் மதுரை கொல்லி நகர்களிலே திருமாளிகைகட்டி ராஜ்யபாரம் பண்ணுகிற நாளையிலே, நீளாம்சையான தம் முடைய புத்திரி சோழவல்லியை அழகியமண வாளப் பெருமாளுக்குத் திருமணம் புணர்ப்பித்துத் தம்முடைய ஸ்வத்தையும் ஸ்திரீதனமாகப் பெரு

---

1 பெரிய திருமொழி 4, 3, 6; 8, 6, 4.

மாளுக்கு ஸமர்ப்பித்து, மூன்றும் ஆவரணத்தின் தென்மேற்கிலே சேனைவென்றான் திருமண்டபமுங் கட்டி அந்தத் திருச்சுற்று ஜீர்ணோத்தாரணம் பண்ணுகையில், அந்தத் திருவீதிக்குக் 'குலசேகரன் திருவீதி' என்று பெயராயிற்று"—என்பதே.

இதனுள், தம் கன்னியை அரங்கமுடையானுக்கு அளித்த வரலாறு, திவ்யசூரிசரிதத்தும் கூறப் பட்டுள்ளமை அறியத்தக்கது. இங்ஙனம், திருமால் பத்தியின் மேலீட்டால் தம் அரசு துறந்து, எம்பெரு மானிடம் உள்ளுருகி நூறு இன்றமிழ்ப் பாசுரங்களை உலகுய்யவருளிய இவ்வாழ்வார் தென்பாண்டிநாட்டிலே பிரமதேசம் - மன்னார் கோயிலிலே[1] தன்னடிச் சோதிக் கெழுந்தருளினர் என்று கூறுவர்.

---

பத்தாம் அத்தியாயம்

# சடகோபரும் அவர் அருளிச்செயல்களும்*

இப்பரத கண்டத்தின் வடகோடியில் அவதரித்துத் தம் ஞான ஒளியால் உலகிருளை நீக்கிய உத்தமபுருடர் புத்தபகவான் என்று கூறுவர். அவ்வாறே இக்கண்டத் தின் தென் கோடியில் அவதரித்துப் பரஞானச் சுடரை வீசிய பெரியார் ஒருவர் உண்டு. அவரே ஸ்ரீ சடகோபர் என்ற நம்மாழ்வார். வைகாசி மாதமும் விசாகத் திரு

1. இவ்வூர் திருநெல்வேலிஜில்லா அம்பாசமுத்திரந் தாலுகாவில் உள்ளது. குலசேகரப் பெருமாள் கோயில் ஒன்று இங்குண்டு.

* ஆசிரியரின் கட்டுரை மணிகள். பக். 92.

நாளுடைய அப்பெரியார் இருவருக்கும் அவதார காலமா யமைந்த ஒப்புமையும் குறிப்பிடத் தக்கது. இமையச் சார்பான உத்தர கோசலத்திலே அரச வருணத்து உதித்த சாக்கிய முனிவரின் ஞான வெள்ளம், தெற்கே குமரிக் கடலையும் கடந்து சென்றது. அம்முறையே குமரிச் சார்பான தென்பாண்டி நாட்டு வேளாளர் மரபில் உதித்த சடகோப முனிவரின் ஞானப் பெருக்கு, கங்கை நாடுகளினும் பரவியதாகும். இம்முனிவர் விதைத்த ஞானப் பயிரின் பயனே 'இராமநுஜ சித்தாந்தம்' என்று கூறுவர். அதனாலன்றோ இப்பெரியாரை 'ஸ்ரீ வைஷ்ணவ குலபதி' என்றும், இவரது அருளிச் செயல்களைத் 'தமிழ் மறை' என்றும் போற்றுவதோடு, கோயில்களிலும் இல்லங்களிலும் இவரைத் தம் தொழுகுலமாக வைத்து நித்தமும் வழிபடுவதும் வைணவ சமயத்தார்க்கெல் லாம் பொதுக்கடமை யாயிற்று.

இவ்வாழ்வார்மூலம் விளைந்த ஞானமெல்லாம், கங்கை நாடுகளிலும் பரவியதென்பது புனைந்துரை யன்று. இன்றைக்கு 250 ஆண்டுகட்கு முன் வாழ்ந்த வரும், ஹிந்தி—ராமாயண ஆசிரியராய் வடநாட்டா ரெல்லாராலும் போற்றப் படுபவருமான ஸ்ரீ துளஸீ தாசரைப்பற்றி அறியாதார் இல்லை. இப்பெரியார் சட கோபரைத் தலைவராகக் கொண்ட வைஷ்ணவ ஆசாரி யரின் சம்பந்தம் பெற்றவரென்பது பிரமாணமூலம் தெரிய வருகின்றது.[1] இக்காலத்தும் வடநாட்டு மடாதி

1. 1957ஆம் ஆண்டு சுதேசமித்திரன் தீபாவளி மலரில் வெளிவந்தது இக் கட்டுரை. 'ஆழ்வார்களின் காலநிலை' நூலில் பன்னிரு ஆழ்வார்களுள் ஸ்ரீ சடகோபர், மதுரகவி இருவரையும் பற்றிய ஆராய்ச்சி முன்னர்ச்சேராத குறையை இக்கட்டுரை போக்குகிறது.

பதிகளான மகந்துக்களில் நூற்றுக்கணக்கானவர்கள் அவ்வாறே வைஷ்ணவ ஆசாரியத் தொடர்புடையவரா யிருத்தலை நாம் கேட்டறியலாம்.

## ஆழ்வார் வரலாறு

ஸ்ரீ சடகோபர் வைபவங்களாக வழங்குவன யாவரும் நன்கறிந்தவை. கற்பனைக் கதைகளாக இவர் வரலாற்றில் அமைந்தவை கிடையா. 'ஆழ்வார் திருநகரி' என வழங்குந் திருக்குருகூரிலிருந்து ஆண்டு வந்த சிற்றரசர் குலத்து உதித்தவர் இப்பெரியார். அவ்வரசருள் ஒருவரான காரியார் என்பவருக்கு மலைநாட்டுத் திருவண்பரிசாரம் என்ற தலத்தினரான உடைய நங்கையார் என்ற தேவியிடம் புத்திரராய் அவதரித்தவர். மிக்க இளம் பருவத்தே இறைவன் அருள் கைகூட்டி, அவனை நேரே தரிசிக்கப் பெற்றுப் பரம ஞானியாய் உலகப் பற்றற்று யோகத்தில் இருந்தவர். இதனை,

''சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாமை தேவர் பிரானறியும்'' (திருவாய். 7—10—10) என்னை நெகிழ்க்கினும் என்னுடை நன்னெஞ்சந் தன்னை நெகிழ்க்கத் தானுங் கில்லான்' (ஷை 1-7-8) 'குழுமித் தேவர் குழாங்கள் கைதொழச் சோதி வெள்ளத்தினுள்ளே, எழுவதோ குரு என்னெஞ்சுள் எழுமஃதி யார்க்கும் அறிவரிதே' (ஷை-5-5-10) என்பவற்று லறியலாம். அக்காலத்தில் திருக்கோளூர் அந்தண முனிவரான **மதுரகவிகள்** என்பார் இவர் மகிமைகளை உணர்ந்து, இவரை வழிபட்டுப் பேரருள் பெற்றனர். பரஞான பரம பக்திகளாலும் ஈசனருளாலும் தாம் கண்ட உத்தம தத்துவங்களைத் திருவாய்மொழி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி என்ற நான்கு திவ்யப் பிரபந்தங்களால் உலகோருய்ய அருளிச் செய்து, இளம்

பருவத்தே அவாவற்று வீடு பெற்றருளினர் என்பது அவர் சரித்திரச் சுருக்கம்.

**வாழ்ந்த காலம்**

இவ்வாழ்வார் வாழ்ந்த காலம் இன்னதென்பது பற்றிய கருத்து வேறுபாடுகள் உண்டு. ஆயினும், சரித்திர முறையில் ஆராயுமிடத்து கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கமே இவருக்கு உரியதாகக் கொள்ளத்தகும். இதன் காரணங்களை இங்கு விரிப்பிற் பெருகுமாதலால், தனியே வேறிடத்தில் வைத்துக் கூறு வேன்.

இப்பெரியாரின் வரலாறும் அருளிச் செயல்களும், மக்களின் ஆன்ம ஞானக் குறைவாலோ, புற மதத்த வரின் சூழ்ச்சியாலோ சிலகாலம்வரை வழக்கற்றிருந் தன என்றும், பின் 9-10-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீமந் நாதமுனிகள் என்ற ஆசாரியத் தலைவர் திருவாய் மொழி முதலியவற்றைக் கண்டுபிடித்து இயலிசைகள் வகுத்துப் பிரபலம் பெறச் செய்தனர் என்றும் குரு பரம்பரைகள் கூறுகின்றன.

சடகோபருக்கு மாறன், பராங்குசன் என்ற வேறு திருநாமங்களும் உண்டு. மாறன் என்பது இவர் தந்தை பெயருடனிணைந்து காரிமாறன் எனவும் வழங்கும். முன்னோரான திருமாலடியார்களை ஆழ்வார் என்று அழைப்பது வழக்கு. ஏனை ஆழ்வார்களினும் தலைமை யும் பெருமையும் உடையவரானதால் நம்மாழ்வார் என்ற திருநாமம் இவருக்குச் சிறப்பாக உரியதாயிற்று.

> **நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை**
> **என்ப தவரவர்தம் ஏற்றத்தால்**
>
> (உபதேச ரத்ந மாலை)

என்பர் ஸ்ரீ மணவாள மாமுனிகள்.

**கொள்கைகள்**

இவ்வாழ்வாரது அருளிச் செயல்களில் திருவாய்மொழி சிறப்பாகப் போற்றப்படுவதாகும். இத் திவ்யப் பிரபந்தத்துள், இறை நிலை, உயிர் நிலை, உபாய நிலை, விரோதி நிலை, புருடார்த்த நிலை என்ற ஐந்தன் உண்மைகளும் கூறப்பட்டுள்ளன. இந்த அர்த்த பஞ்சக ஞானமே முக்தி யடைவிக்க வல்லதென்பர் சமய நூலோர். இவற்றுள், இறை நிலையில் வேதவேதாங்கங்களால் முடிவாக எடுத்துரைக்கப்பட்ட பரம்பொருள், திருமாலே என்பது இவர்தம் துணிபு. அப் பரமான்மா தன்போல நித்தியமாய் உள்ள சித்து (அறிவுடைய பொருள்) அசித்து (அறிவில் பொருள்) என்ற இரண்டினையும் தன் அவயவங்களாகக் கொண்டிணைந்து, எல்லாக் காரணங்களும் தானேயாய் சிருட்டி, திதி, லயங்களை நிகழ்த்திய எண்ணம் உள்ளது. அப் பரம்பொருள் தூலமாய் விரியும் நிலையே சிருட்டி யென்றும், சூக்கும மாய்ச் சுருங்கிய நிலையே லயம் என்றும் இவற்றின் இடைப்பட்ட காப்புநிலையே திதி என்றும் கூறப்படும். இம் முத்தொழில்களையும் அப்பரமான்மாவே மூவுருவ மாக நின்று இயற்றுவதென்பதும், இச்செயல்கள் அவனது நித்தியமாய விளையாட்டுக்களே என்பதும் ஆழ்வார் கொள்கைகள்.

> **'தானே யுலகெல்லாந் தானே படைத்திடந்து**
> **தானே யுண்டுமிழ்ந்து தானே யாள்வானே'**
>
> (திருவாய். 10-5-3.)

> **'தானே ருருவே தனிவித்தாய்த் தன்னில் மூவர் முதலாய்...**
> **வானோர் பெருமான்'** (திருவாய்-1-5-4)

பரம்பொருளான மூலத் தனிவித்து ஒரு பெரு மரமாகி வளர்ந்து ஓங்குங்கால், அதன் அடிப்பகுதி பின்

மூன்று கவடாய் முளைத்தெழுந்த தன்மை போன்றதே, முத்தொழில் புரியும் மூர்த்திகளாக அது தோற்றி நிற்கும் நிலையாம்.

'தானுஞ் சிவனும் பிரமனுமாகிப் பணைத்த தனி முதலை' என்பது இவர் திருவாக்கு. தேவர் மக்கள் முதலிய சேதனர்களும், பிற அசேதனங்களும் அம்மூல வித்தின் பரிணாமமாக அமைந்தனவே. இவ்வுத்தம தத்துவத்தைக் கடைப்பிடித்து, அச் சேதனுசேதனங்கள் எல்லா வற்றினும் பரமான்ம சம்பத்தைக் கண்டு மகிழ்ந்தவர் இவ்வாழ்வார்.

**'அடங்கெழில் சம்பத்து அடங்கக்கண் டீசன்**
**அடங்கெழில் அஃதென்று அடங்குக உள்ளே'** (1-2-7)

இங்ஙனம் மகிழ்வித்தவருக்குச் சமயவாதியர் நிகழ்த்தும் மதப் போராட்டங்களில் வெறுப்புண்டாதல் இயல்பன்றோ? அவரவர் தகுதிக்கும் பக்குவத்துக்கும் ஏற்ப சமய பேதங்கள் அமைந்துள்ளன என்றும், அச் சமய தெய்வங்கள்யாவும் மூலப்பரம்பொருளின் திரு வுருவங்களே என்றும், அதனால் அவரவர் தத்தம் கடவுளரை வழிபடக் குறைவில்லை என்றும், அவ் வழி பாடுகள் யாவும் முடிவில் முதற் கடவுட்கே உரியவாம் என்றும் கூறுவர். இப்பெரியார்,

**'' அவரவர் தமதம அறிவறி வகை வகை**
**அவரவ ரிறையவர் என அடி அடைவர்கள்**
**அவரவ ரிறையவர் குறைவிலர் இறையவர்**
**அவரவர் விழிவழி யடையநின் றவரே.''** (1-1-5)

**'' உணர்ந்துணர்ந் துரைத் துரைத்து**
**அரியயனரன் என்னு மிவரை**
**உணர்ந்துணர்ந் துரைத் துரைத்**
**திறைஞ்சுமின் மனப்பட்ட தொன்றே ''** (1-3-6)

தாமுணர்ந்து தெளிந்த பரம்பொருள் திருமாலே யாயினும், மேற்கூறிய தத்துவங்களின்படி பரம் பொருள் எதனையும் கொள்வதில் இவ்வாழ்வார் வெறுப் புடையவர் அல்லர். தம் திருவாய்மொழி முடிவில், 'முனியே நான்முகனே முக்கண்ணப்பா' என்று அப் பரமனை விளித்தும், 'அரியை அயனை அரனை அரற்றி' விடு பெற்றதாகத் தம்மைக் கூறியும் போந்த இவர் பாசுரங்கள் மேற்கூறிய கருத்தையே குறிக்கின்றன.

## உய்யக்கண்ட உத்தம நெறி

சீவான்மா தன் மாயா பந்தங்களை அகற்றிப் பரமான்மாவை அடைதற்குத் தம் ஞான விசேடத்தால் ஆழ்வார் தெளிந்த உத்தம நெறி 'பிரபத்தி' என்ற மார்க்கமாகும். அஃதாவது-இருவகைப் பற்றுமற்று, ஈசன் அருளையே இடையறாது நினைந்து, தனக்கொரு பாரமுமின்றி அவன் ஒருவனையே சரணமடைதலாம். கண்ணபிரான் அருச்சுனற்குக் கீதை முடிவில் அருளி யதும் இந்நெறியே. நேர்மையும், எளிமையும்,யாவர்க்கும் உரியதுமான முக்தி வழி இதுவே என்றும், பரம ஞானிகட்கும் இது வேண்டத்தக்கது என்றும் ஆழ்வார் தெளிய அருளிச் செய்வர். (திருவாய்-4-1-10, 3-10-6)

## ஈசனிடம் ஈடுபாடு

இனி தாமுகந்த பரம்பொருளான திருமால் காத்தற் றொழிலை மேற்கொண்டு உலகோர்க்கு அருள் புரிந்த வரலாறுகள் ஆழ்வார் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. அப்பகவானது அவதார விசேடங்களிலும், திருக்கோயில் இருப்புக்களிலும் ஈடுபட்டு முக்திபெற்ற பக்திமான்கள் எண்ணிறந்தவர் அன்றோ? இவரெல்லாம்

மேற்குறித்த பிரபத்தி நெறியில் நின்று பேறு பெற்றவர்களே. அன்னோரைப் பின்பற்றித் தம் பக்திப் பெருக்கைச் செலுத்துவதற்கு இவ்வாழ்வார் பெரிதும் உவந்தருளிய மூர்த்தி கண்ணபிரானே ஆவார்.

'துயரின் மலியும் மனிசர் பிறவியுள் தோன்றி, கண் காண வந்து, துயரங்கள் செய்து தன் தெய்வ நிலை உலகிற்புக உய்க்கும் அம்மான்' அன்றோ அவர்? ஆகவே, அப்பெருமானிடம் இவர் காட்டிய காதல் வெள்ளத்துக்கு ஓரளவே இல்லை. பிருந்தாவனத்தில் கோபியரிடம் காட்டிய பிரேமாவிலாசத்தை அப்பெருமானும் இவரிடம் நிகழ்த்தி மகிழ்ந்தவனே. இவ்வாறு கண்ணனைத் தாம் சிறப்பாகப் பற்றுதற்கு அவன் தன் மனத்துள் நின்றுகொண்டு தன் காரியமாகவே 'எனக்கே யாட்செய் எக்காலத்தும்' என்று இடைவிடாது உணர்த்தி வருதலே காரணம் என்கின்றார் இவ்வாழ்வார்.

**' எனக்கே யாட்செயெக் காலத்து மென்றென்**
**மனக்கே யாகவந்து இடையீடின்றி மன்னி**
**தனக்கே யாகஎனைக் கொள்ளு மீதே**
**எனக்கே கண்ணனை யான்கொள் சிறப்பே'** (2-7-4)

இவ்வாறு பகவானது அருள்மழை ஆழ்வாரிடம் தேங்கிய நிலையில், அவனும் இவரும் தாயும் குழந்தையும் போலவும், உத்தம நாயக நாயகியர் போலவும் ஒருவரை யொருவர் ஆர்வத்தோடு பருகியும், சிறிது பிரியினும் தரிக்க மாட்டாது புல்லியும், கூடி அனுபவிக்கும் நிலையில் தன்வச மற்றும் புகழ்ந்து பாடியும் ஈடுபட்டு நிற்கும் திறம் நம்மால் எழுதுந்தரத்தன்று.

'வாரிக்கொண்டுன்னை விழுங்குவன் காணின் என்று
ஆர்வுற்ற என்னை ஒழிய என்னின் முன்னம்
பாரித்துத் தான் என்னை முற்றப் பருகினான்
காரொக்கும் காட்கரை யப்பன் கடியனே' (9-6-10)

முதலியவை காண்க. இத்தகைய பேற்றுக்குத் தானாகவே பெருமான் புரிந்த கருணையன்றி, வேறு காரணமில்லை யென்பர், ஆழ்வார்.

"இன்றென்னைப் பொருளாக்கித் தன்னை யென்னுள் வைத்தான்
எந்நன்றி செய்தேனோ என்னெஞ்சில் திகழ்வதுவே" (6-8-9)

பரமனை யடையும் பெரும்பேறு அவனருளால் கைகூடுவதேயன்றிக் கேவலம் ஆன்மாவின் முயற்சியால் அடையக் கூடிய தன்று என்பதே இவர் திருவுள்ளம். ஒரே துவு மின்றிப் பொழியும் ஈசனது கருணா வருஷம் பாழ்போகாமல் தேங்கிப் பயன் விளைவிப்பதற்கு உரிய நிலைக்களமாகத் தன்னை ஆக்கிக் கொள்ளும் அளவே, ஆன்மா செய்யக் கூடிய தாகும். இதற்குச் சிறந்ததோர் உவமையை,

'வளத்திடரை ஏரியாம் வண்ணம் இயற்றும் இதுவல்லால்
மாரியார் பெய்கிற்பார் மற்று' (2 ஆம் திருவந்தாதி- 16)

என்ற முன்னோர் திருவாக்கிற் காணலாம்.

இம்முறையில் பரமனருளை நோக்கிப் பிரபத்தி செய்து போந்த நம் ஆழ்வாருக்கு, அவன் அருள் மட்டு மன்றி, இவருடன் அப்பரமனே கலந்து இணைந்து ஒன்றாகும் அதிசய நிலைமையும் வாய்த்தது. தன் பேறாகவே இவருடன் பகவான் இணைந்த நிலையில் இவர் அருளிச் செய்த பாசுரங்கள் அருமை பெருமை வாய்ந்

தவை. 'அது நீ ஆகிறாய்' என்பதன்றி, 'அவன் நான் ஆகிறான்' என்பதே இவர் கொள்கை.

"தானே இன்னருள் செய்து என்னை முற்றவும் தானானான்" (4-1-10)

"தானே எம்பெருமான் அவன் என்னாகி யொழிந்தான்" (5-1-2)

"யானுந் தானா யொழிந்தானே" (8-8-4)

என்பன முதலிய காண்க.

## ஆழ்வாரும் கவிஞர்களும்

ஆழ்வார் தாம் அருளிய திருவாய் மொழியைத் தாமே பாடிய பிரபந்தமாகக் கூறவுந் துணிந்திலர். பகவானே தம் வாக்கில் நின்று கொண்டு தன்னைத் தானே பாடிய 'இருந்தமிழ் நூல்' ஆக அதனைக் கூறுகின்றார். (10-6-4)

'சீர்கண்டு கொண்டு திருந்துநல் லின்கவி
நேர்பட யான்சொலு நீர்மை இலாமையின்
ஏர்விலா என்னைத் தன்னாக்கி யென்னால் தன்னைப்
பார்பரவு இன்கவி பாடும் பரமரே' (7-7-5)

என்று தன் ஆற்றலின்மையை இதற்குக் காரணமாக இவர் கூறுதல் காணலாம். இங்ஙனம் எதிர்பாராத இறையருள் தமக்கு வாய்த்தது போலவே இன்கவி பாடும் பரம கவிகளாகத் தம் காலத்து விளங்கும் புலவர் களிடமும் அவ்வருள் வெள்ளம் பாயத் தடையில்லை என்பதே இவர் கருத்து. ஆகவே, அப்புலவர் குழாத்தை நோக்கி

செஞ்சொற் கவிகாள் உயிர்காத்தாட் செய்ம்மின் (10-7-1)

என்று கூவி அழைத்துத் தாம் பெற்ற பேற்றை அவர்க்

கெடுத்துரைப்பாராயினர். இவ்வாறு ஆட்செய்யும்படி ஆழ்வார் வேண்டியதற்கு, உலகத் தொடர்புமிக்க அப் புலவர்கள் செவி சாய்க்கவும் கூடியவரோ? நிலையற்ற பொருளை விரும்பி, அரசர் தலைவர்கள் மேல் தம் அரிய வாக்கைக் கொட்டி இரந்துண்ணும் அவரது வாழ்வு, இவர்க்கு இரக்கமும் துக்கமும் விளைத்தது. மானிடரைப் பாட்டுடைத் தலைவராக்கி அகப் பொருள்களமைய அருங்கவிகளைப் பாடி வரிசை பெற்று வாழ்வதே அக் காலப் புலவர்கள் கொண்டிருந்த பொதுமுறை. அம் முறையை மாற்ற முயல்வோர் அவர் தம் வினையே கெடுப்பவராய் அவர் பகைமைக்கும் உரியவராவர். ஆயினும் அப்பகைமை விளைவதனையும் பொருட் படுத்தாமல் இவர்,

**"சொன்னால் விரோதமிஃது ஆயினும் சொல்லுவன் கேண்மினோ**
**என்னாவி லின்கவி யானொருவர்க்குங் கொடுக்கிலேன்"**
(3-9-1)

என்று தொடங்கிப் பற்பல நன்மொழிகளை அவர் பொருட்டுக் கூறுதல் குறிப்பிடத் தக்கது. அவற்றுள் 'வம்மின் புலவீர் நும் மெய்வருந்திக் கைசெய் துய்ம்மினோ' என்று தொடங்கும் பாசுரம் அற்புதம் வாய்ந்தது

அகப்பொருள் துறைகளை, இழிவான விஷய காமம் ஆகவே கொண்டு மானிடர் தலைவராகப் பாடிவந்த பழைய புலவர் மரபை மாற்றி, அவற்றை உத்தமமான பகவத் விஷய காமம் ஆக்கிப் பரமனிடம் காதல் பெருக பாடும் முறைக்கு வழி கற்பித்தவருள் நம்-ஆழ்வாரே தலை சிறந்தவரெனலாம். புருடோத்தமரான பகவானைத் தலைவனாகவும் தம்போன்ற சீவான்மாவைத் தலைவி யாகவும் கொண்டு அகப்பொருள் நயங்கள் திகழும்படி

இவ்வாழ்வார் பாசுரங்கள் பலவும் அமைந்திருத்தல் யாவரும் அறிந்ததே

சீவான்மாவுக்கும் பரமான்மாவுக்கும உள்ள தொடர்பு பலவகையில் உத்தம நாயக நாயகியர்க்கு உள்ளவற்ருேடு ஒற்றுமை யுடையது. அத்தகைய பகவத் விஷயத்தில் தம் காமத்தை ஈடுபடுத்துவது பரமனேடு ஐக்கியப் படுத்துவதே என்பதும் வீடுபேறும் அதுவே என்பதும் முன்ஞேர் திருவுள்ளம்.

**'சேமநல் வீடும் பொருளும் தருமமும் சீரியநற்**
**காமமும் என்றிவை நான்கென்பர் நான்கினும் கண்ணனுக்கே**
**ஆமது காமம்; அறம் பொருள் வீடிதற் கென்றுரைத்தான்**
**வாமனன் சீலன் இராமா நுச னிந்த மண் மிசையே'**
(இராமாநுச நூற்றந்தாதி)

**ஈசுவர சாம்ராஜ்யமும் ஆழ்வாரும்**

இனி, பரம்பொருளான திருமாலே ஒரு சாம்ராஜ்யம் ஆளும் சக்கரவர்த்தி ஆகவே கொண்டு ஆழ்வார் கூறும் அரிய செய்தி ஒன்றும் இங்கே குறிப்பிடத் தகும். இவ்வாட்சிச் சிறப்பை—

**''வீற்றிருந் தேழுல குந்தனிக் கோல்செல்ல வீவில் சீர்**
**ஆற்றல்மிக் காளும் அம்மானே''** (4—5—1)

**''இன்பம் பயக்க எழில்மலர் மாதருந் தானுமிவ் வேழுலகை**
**இன்பம் பயக்க இனிதுடன் வீற்றிருந்தாள்கின்ற**
**எங்கள் பிரான்''** (7—10—1)

என்ற இவர் திருவாக்குக்களிற் காணலாம்.

பரமான்மாவின் ஆட்சிக்குரிய பேரிடங்கள், இக லோகம் பரலோகம் என்ற இரண்டும் ஆகும். பரலோகத் தவரான நித்திய முத்தர்களும் அஃதல்லாத உலகங்

களிலுள்ள ஆன்மகோடிகளும் அவனது பிரஜைகளாவர் இவ்வுலகத்தவரை ஈசன் தனிக்கோல் செலுத்தி ஆளும் முறையில் ஒருதலைச் சார்பு மலிந்துள்ளன என்று ஆழ்வார் பெரிதும் வருந்துகிறார். "சாம்ராஜ்யக் கொள்கை" என்றால், அது ஈசனதே ஆயினும், ஆட்சிக் கேடுகள் உடையது தானே! அங்ஙனமே பகவானாட்சியில் அமைந்த குறைகளும் பல.

அப் பிராகிருதமான பரலோகத்து ஆன்மாக்களை மாயாபந்தம் அற்றவராகவும், பிறப்புப் பிணி மூப்பு இறப்பற்ற நித்தியராகவும், ஞான பரிபூரணராகவும் தன் சாம்யத்தோடு அந்தமிலின்பமான சுதந்திரம் பெற்றவராகவும் வைத்து, பரமன் அவரைப் பராமரிக்கின்றான். பிராகிருத உலகத்தவரான தேவர் மனிதர் முதலிய ஆன்மாக்களை மாயை வசப்படுத்தியும் ஆன்ம ஞான மற்றவராக்கியும் மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்தும் செத்தும் உழலும்படி செய்தும் தெய்வபேதம் சமய பேதங்களால் பிளவு படுத்தியும் பெருந் துயரங்களில் ஆழ்த்துகிறான். இத்தகைய ஆட்சி அநீதிகளை எடுத்துக் கூறி ஆன்மகோடிகளை உய்யச் செய்வார் உளராயின் அவர்களைப் பலவகையானும் சோதிக்கிறான் பகவான். அச்சோதனைக்குந் தளராது நிற்பாரானால், அவர்க்கு முத்திபத மளித்து தன் வசப்படுத்தி விடுகிறான். இவை யாவும் அவனது மாயமயக்குகளே. இம் மயக்கெல்லாம் நீங்கி ஆன்மாக்கள் உய்யுமாறு செய்யும் திருவுள்ளம், தம் பெருங் கருணையால் நம் ஆழ்வார்க்கு உண்டாகியது. அதனால், இவர் தாம் பெற்ற பேற்றைத் தம் போன்ற பெத்தான் மாக்களை நோக்கி—

**போற்றி மற்றோர் தெய்வம் பேணப் புறத்திட்டு உம்மை இன்னே**
**தேற்றி வைத்தது எல்லீரும் வீடுபெற்றால் உலகில்லை யென்றே**

**சேற்றிற் செந்நெற் கமல மோங்குந் திருக்குரு கூரதனுள்
ஆற்றவல்லவன் மாயங்கண்டீர் அஃதறிந்தறிந் தோடுமினே.**
(4—10—6)

என்றும் உபதேசிக்க லாயினர். மேலே கூறியபடி பிராகிருத லோகத்தவரை வேறுபடுத்திச் சமய பேதங்களால் அவர்கள் தம்முள் எதிர் வழக்கிட்டுப் பிளவு படும்படி செய்து வரும் ஈசனது மாயமெல்லாம், தன தத்துவ நிலையை அறியாமல் உலகோர் மயங்குமாறு வைத்த உபாயங்களே என்றும், இவ்வுண்மை உணர்ந்து ஆன்மாக்கள் ஒருமிக்கத் தன்னைப் பற்றுவராயின் நித்தியமாகத் தான் திருவிளையாடல் புரிதற்கு வகுத்துக் கொண்ட லீலாவிபூதியான இவ்வுலகம் யாவும் பாழடைந்து போம் என்ற கருத்தே அவ்வாறு வேறுபடுத்தற்குக் காரணம் என்றும் இவற்றை நன்குணர்ந்து அனைவருமே அவனைச் சரணாகதியாகப் பற்ற விரையுங்கள் என்றும் ஆழ்வார் உபதேசிக்கும் முறை அருமையும் பெருமையும் வாய்ந்ததன்றோ? இவ்வுபதேசத்துக் கேற்ப, தம் காலத்தில் அடியார் குழாங்கள் நாடெங்கும் திரண்டு உலகோரை ஆட்கொண்டு வரும் செயல் இவர் கருத்துக்கு ஆக்கமளித்தது. அதனால் குதூகலங்கொண்டு 'இவர் பொலிக, பொலிக!' என்ற திருப்பதிகத்தில்—

**"கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியனகண்டோம்
தொண்டீ ரெல்லீரும் வாரீர் தொழுது தொழுது நின்றார்த்தும்"**
(5—2—2)

என்று பெருங்குரலிட்டு உலகோரை அழைக்கலானார்.

அருமையாக வாய்த்த இவ்வமையத்திலே யாவருந் திரண்டு சரணாகதியான சத்தியாக்கிரகத்தைப் பகவானிடம் புரிவோராயின் மேற்கூறிய அவனது மாய

ஆட்சிமுறை முற்றும் மாறவும், அதனால் நம்மவரெல்லாம் விடுதலை பெற்று நித்தியானந்த வாழ்வான சுதந்திரத்தை இம்மையிலே அடைந்துய்யவும் தடையில்லை என்பது, நம்மாழ்வாரின் அற்புத உபதேசம். இங்கு அவரருளிய முடிவான பொன்மொழி—

**''ஒக்கத் தொழு கிற்றீராகில் ஒன்றுங் கலியுக மில்லையே''**

என்பது.

## முடிவுரை

இவ்வாறே இம்மையும் மறுமையும் பற்றிய உபதேசப் பொன் மொழிகளை இவர் திருவாக்கில் நெடுகக் காணலாகும், வேதாந்த முடிவுகளான அரிய பெரிய தத்துவங்கள் இவரருளிச் செயல்களில் மலிந்து திகழ்கின்றன. இவை யாவும் முன்னோர் அருளிய ஈடு முதலிய பேருரைகளால் அறியத் தக்கவை. இங்ஙனம் தென்னாடு உய்ய அவதரித்த பெரியாரைத் தம் குலதெய்வமாகக் கொண்டு வைஷ்ணவ உலகம் போற்றுவது அதன் பெரும் பேறேயன்றோ?

**அந்தணர்க் கோநல் லருந்தவர்க் கோஅன்றி யோகியராய்**
**வந்தவர்க் கோமத வாதியர்க் கோமக ரக் குழைசேர்**
**சுந்தரத் தோளனுக்கோ அவன் தொண்டர்கட் கோ**
**சுடர்தோய்**
**சந்தணச் சோலைக் குருகைப் பிரான் வந்து சந்தித்ததே—**
கம்பர்

அந்நிய சாம்ராஜ்யத்தின் ஆட்சிக் கேடுகளை நீக்க வேண்டி காந்தியடிகள் கையாண்ட முறைகளையும் உபதேசங்களையும் மேற்கூறிய ஆழ்வார் முறை யுபதேசங்களோடு ஒப்பிட்டு உணரத்தகும்.

பதின்றோம் அத்தியாயம்

# 11. அருளிச்செயற் பாடவமைதி

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் அருளிய திவ்யப்ரபந்தங்களுக்குப் பூர்வாசாரியர்கள் எழுதியுள்ள வியாக்யானங்கள் அருமை பெருமை வாய்ந்தவை. அப்பேருரைகள் இல்லையேல் தமிழ்வேதம் என்று போற்றப்படும் அருளிச்செயல்களின் உண்மைப் பொருள்களை நம்மனோர் உணர்ந்துகொள்ள இடமே இல்லை. அவற்றை நன்கறிந்து போற்றுவதால், திவ்யப்ர பந்தங்களை யாவரும் சுத்தமாகவே ஓதியுய்யலாகும்.

அவ்வாறு அறிந்தோதாக் குறையால், பிறழ்ந்த பாடங்கள் பலவிடங்களில் அமையநேர்ந்தன. இவற்றை யெல்லாம், செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவின ரான ஸ்ரீ. உ.ப. வே. **அண்ணங்கராசாரிய ஸ்வாமியும்** பிறரும் உரை நூல்களிலும் பத்திரிகைகளிலும் விளக்கி வருகிறார்கள்.

பழமையான நூல்களிலே பாடாந்தரங்கள் அமைதல் எம்மொழியிலும் உண்டு. பின்வந்த உரையாசிரியர்கள் அவற்றுள் ஏற்புடையவற்றைக் கொண்டு ஏலாதவற்றை விலக்கியுள்ளதை அறிஞர்கள் நன்கறிவர். அம்முறையில் அருளிச் செயல் வியாக்யாதாக்கள் காலத்திலும் பாடாந்தரங்களாக வழங்கியவை பலவுள. உதாரணமாக:

---

**செந்தமிழ் தொகுதி 40-ல் வெளியீடு.**

திருவாய்மொழி முதற்பத்து 5-ஆம் திருப்பதிகத்திலே, முதலிரண்டுபாசுரங்களின் அந்தமும் ஆதியுமாகத் தங்கள் காலத்து வழங்கிய 'நினைந்துநைந்தே" நினைந்துநைந்து' என்ற பாடங்களோடு, 'இனைந்து, நைந்தே' 'இனைந்துநைந்து' என்ற பக்ஷாந்தர பாடங்களையும் பன்னீராயிரப்படி குறிப்பிட்டிருத்தலும்,

திருமாலை 45-ஆம் பாசுரத்தில் 'கவளமால்யானை" என்ற பாடத்தோடு, 'களவமால்யானை' என்ற பக்ஷாந்தர பாடத்தையும் குறித்திருத்தலும் காண்க:

இவற்றால், அத்யாபகர்களின் பாடபேதங்கள், வியாக்யான பாடங்கள், அவ்வியாக்யானங்களிற் கண்ட பக்ஷாந்தரபாடங்கள் என முக்கியமாக மூன்று வகைப் பாடங்கள் இப்போது அறியப்படுகின்றன. வேறு வகையும் இருக்கலாம். இவற்றுள் எதனையும் பற்றி எழுத யான் முன்வரவில்லை. இவற்றின் வேறான நான்காம் வகை ஒன்றையே இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஆழ்வார்கள் திவ்யப்பிரபந்தங்கள் யாவும தமிழ் நன்னூற்றுறைகள் ஐந்துக்கும் இலக்கியமாக விளங்குவன என்பதே முன்னோர் முடிபு. சொற்பொருள் மரபுகளாலும் வழக்கு வரலாறுகளாலும் தமிழ் வரம்பை அவை சிறிதும் கடந்தனவல்ல. இவற்றிற் குறைபாடு காணப்படுமாயின், அங்கே ஏதோ திருத்தமேனும் பாடபேதமேனும் உண்டு என்றே சொல்லலாம்.

இதனை நன்குணர்ந்து, தமிழ் முன்னூல்களோடு ஒப்பிட்டு நோக்குவோமானால், அருளிச் செயல்களிலே பொருட்சிறப்புள்ள பழம் பாடங்கள் பல நமக்கு விளங்கக்கூடியன. பழைய சாஸனங்களும் இவ்வாராய்ச்சிக்கு

ஓரளவு துணையாகும். திவ்யப்ரபந்த வியாக்யாதாக்களும் இம்முறையை அறிந்தவர்களே; ஆயினும், அவர்க்கும் முன்பிருந்தோர் பலரும் வழக்கமாய் ஓதிவந்த பாடங்களை மதித்துத் தழுவியும், அவற்றுக்கு அர்த்த ரஸங்களை யூட்டுவதில் அதிக நோக்கங்கொண்டும் அவர்கள் உரையிட்டார்கள்.

மேலே காட்டிய திருவாய்மொழி திருமாலை வியாக்யானங்களின் பக்ஷாந்தர பாடங்களே இதற்குச் சான்றுகளாகும். அப்பாடங்கள், மோனை எதுகை நயங்களும் பொருளிற் குறைவில்லாமையும் உடையவாயினும், தலைமைப் பாடங்களாக அவற்றை வியாக்யாதாக்கள் கொள்ளாமைக்கு இதுவே காரணமாகவேண்டும்.

இவ்வாறு, முன்னோர் ஓதிவந்த பாடங்களைப் பொன்னே போற் போற்றி அதற்கு உரையிட்டு வந்ததனால், ஏனைய பாடங்களின் ஆராய்ச்சியில் அவர்கள் அதிகமாக ஈடுபடவில்லை. எனினும், பழந்தமிழ் நூல்களும் சாஸனங்களும் பல்கிவரும் இக்காலத்தே சொற்சுவை பொருட்சுவைகளாலும், வழக்கு வரலாறுகளாலும் சிறந்து காணப்படும் பாடங்கள் ஆராய்ச்சி முறையில் அறியப்படுமாயின், முன்னோர் பாடங்களுடன் மாறுபட்டன என்ற காரணத்தால் அவற்றை அடியோடு ஒதுக்கி விடுதல் சிறிதும் உற்றதன்று. அதனால், அவ்வாராய்ச்சி முறையில் நான் கண்டவற்றை இங்கெழுதுகின்றேன்; பேரறிஞர்கள் ஏற்புடையன கொள்க.

1. பெரியாழ்வார்திருமொழி முதறபத்துள்:—

**" வண்ண மாடங்கள் சூழ்திருக் கோட்டியூர்**
**கண்ணன் கேசவ நம்பி பிறந்தினில்**
**எண்ணெய் சுண்ண மெதிரெதிர் தூவிடக்**
**கண்ணன் முற்றங் கலந்தள ருயிற்றே"** (1)

" பேணிச் சீருடைப் பிள்ளை 'பிறந்தினில்
காணத் தாம்புகு வார்புக்குப் போதுவார்'' (3)

என்ற பாசுரங்களிலே 'நம்பி பிறந்தினில்', 'பிள்ளை பிறந்தினில்' என்று வழங்கப்படுகின்றன. 'பிறந்தினில்' என்பதற்குப்—பிறந்த போது, பிறந்தவளவில் எனவும்' 'பிறந்தவிதனில்' என்பதன் விகாரமாகவுமாம்' எனவும் அறிஞர்சிலர் பொருளுரைத்துள்ளார். வழங்கி வரும் பாடத்துக்கு இவ்வாறு சொல்முடிவும் பொருளும் கூறினும், இவை பெரிதும் அமைவுடையன என்பது அவர்கட்கும் கருத்தன்று. அதனால், ஏதோ பழைய சுத்தபாடம் இங்கு மாறியது என்றே தெரியலாம். அஃது, இச்சொல்லில் ஒரெழுத்தின் ஒரு மாத்திரையை நீட்டுவதால் எளிதில் அமைதல் குறிப்பிடத்தக்கது. அஃதாவது:—

'நம்பி பிறந்தீனில்', 'பிள்ளை பிறந்தீனில்'

என்பதே. கண்ணன் அவதரித்த சூதிகாகிருகம் என்பது இங்கே பொருளாம். பிறந்த ஈனில் பிறந்தீனில்; பிறந்தகம் என்பது போல. ஈன் இல்-பிரஸவவீடு. பிறந்த பிள்ளையைக் காணப் புகுவதற்கும், புக்குப்போதுதற்கும் பிரஸவவீடு என்ற பொருளே மிகவும் ஏற்றதாதல் அறியத்தக்கது. ஈனில் இப்பொருளில் வழங்குதலை.

" சேவல், சூன்முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர்''
(குறுந்தொகை. 85)

" சினைமுதிர் பேடைச் செவ்வி நோக்கி
ஈனில் இழைக்க வேண்டி''
(பதிற்று. திருவாரூர். 19)

**"சேவலன்னம்......ஈனில் இழைத்துப் பாதுகாக்கின்றாற்போல"**
(திருக்கோ. 369 உரை.)

என்ற முன்னோர்கூற்றுக்களால் அறிக. பிறந்த இன் இல் (=அவதரித்த இனிய வீடு) எனப் பிரித்துப் பொருள் கண்ட பெரியாரும் உளர். அவர்க்கு, பிறந்த ஈன் இல் என்ற இப் பிரிப்பும் பொருளும் பெரிதும் ஏற்புடைய வாகத் தடையில்லை.

2. அத்திருமொழி நான்காம்பத்து 'மரவடியை' என்ற பதிகத்தின்முதற்பாசுரத்தில்—

**"திருவடிதன் திருவுருவுந் திருமங்கை மலர்க்கண்ணுங்
காட்டிநின்ற
உருவுடைய மலர்நீலங் காற்றாட்ட** வோசலிக்கு
**மொளியரங்கமே"**

எனவரும் அடிகளில் 'ஓசலிக்கும்' என்பது வழங்குகிற பாடம். இதற்கு 'நீலம் காற்று ஆட்டுதலால் அசையப் பெற்ற' என்றும், "ஓ-வியப்பு; அசையுமாம்" என்றும் பொருளும் குறிப்பும் தரப்பட்டுள்ளன. ஓதப்படும் பாடத்துக்கு ஏற்றபடி, இப்பொருள் அமைந்துளது என்றே சொல்லவேண்டும்.

எனினும், **ஓசனித்தல்** என்ற வினைச்சொல் ஒன்று பழைமையாகவே தமிழில் உண்டு. இதற்குத் தலையெடுப்பாதல், இடம் விட்டுப் பெயரமுயலுதல், சிறகடித்தல் என்ற பொருள்கள் கூறப்பட்டுள்ளன.

" **வேனில் வேந்தன் வேற்றுப்புலம் படர**
ஓசனிக் கின்ற **வுறுவெயிற்கடைநாள்**"
(சிலப். 10, 124-5)

"உடைதிரை முத்தஞ் சிந்த ஓசனிக்கின்ற அன்னம்"
(சீவக. 2652)

என்ற முன்னூற்றொடர்களின் பழைய உரைகளை நோக்குக. ஆகவே காற்று ஆட்டுதலால் நீலமலர்கள் தலையெடுத்து நிமிரும், (அன்றி) இடம்விட்டுப் பெயர முயலும் என்ற பொருளில் 'நீலம் காற்றூட்ட ஓசனிக்கும்' என்று ஆதியில் அமைந்திருந்த தொடரே, பின்பு ஓசலிக்கும் என்று எழுத்துமாற்றம் அடைந்ததாக வேண்டும். ஒருசொல்லாய்ப் பொருளாலும் குறைவற்று நிற்கும் இப்பாடமே, இருசொற்காளக்கி ஒன்றை இடைச்சொல்லாகக் கொள்ளும் பாடத்தினும் சீரியது என்னத் தட்டில்லை.

3. ஷை மூன்றும்பத்து 7-ம் திருமொழி 'நாடுமூரும் அறியவே போய்' என்ற 5-ஆம் பாசுரத்தில்,

"கேசவனோ டிவளைப், பாடுகாவலிடுமின் என்று பார்தடு
மாறினதே"

என்பது முன்னோர்பாடம். இதற்கு—'கேசவனோடு இவளைப் (பாடு-) பக்கத்தில் காவலில் வையுங்கள்' என்று பொருள் கூறப்பட்டுள்ளது.

ஆனால் இங்கே கொள்ளத்தகுந்த பழம்பாடம் 'பாடிகாவ லிடுமின்' என்பதாம். பாடிகாவல்-சிறைக்காவல், ஊர்த் தலையாரிகளின் காவல்.

"பாடிகாவலிற் பட்டுக்கழிதிரே"

"பாடிகாவலிற் பட்டுக்கழியுமே" (தேவா)

"ஒரு நகரியைக் காப்பான் பாடிகாவலிட்டாங்கு"
(சிவஞானபோதம். 2 அதி)

என்ற முன்னூல் வழக்கும் காண்க. இச்சிறைகாவலர், தலையாரிகளைப் பாடிகாப்பார் என்பர் :

**"ஒன்றுகெட்டவாறே பாடிகாப்பாரைப் பிடிக்குமாபோலே"**
**(ஈடு. 10-1-4)**

"பாடிகாப்பாரே **களவுகாணுமாபோலே"**
**(பெரிய திரு. வியாக். 8—5—1)**

சாஸனங்களிலும் இச்சொல்வழக்கு மிகுதியும் பயிலும், (I. M. P. pp. 190. 1634, 1655). 'கேசவனோடு இவளைக் காவலிடுமின்' என்பதே, கேசவன் பக்கத்தில் என்ற பொருள் பயப்பதாம். அதனால் 'பாடிகாவல்' என்பதே பழம்பாடமாதல் வேண்டும்.

4. ஷை, 4-ஆம் பத்து, 5-ஆம் திருமொழி, "சோர் வினுற் பொருள்" என்ற பாசுரத்தில்—

"**ஆர்வமென்பதோர் பூவிடவல்லார்க்கு** அரவதண்டத்தி **னுய்யலுமாமே"**

என்ற அடியிலே, அரவதண்டம் என்பதை **அறவதண்டம்** என்று கொள்ளத்தகும். அறவன்-தருமனுகிய யமன், தருமபுத்திரனை 'அறவோன்மகனே' என்பர் முன்னோர் (புறம்). அறவதண்டம் யமதண்டனை. "தண்டமுடைத் தருமன்" என்பர் (தேவா).

அப்பாசுரத்தில் 'ஆர்வினவிலும்' என்பது ஓசை குன்றுதலால், 'ஆர்வினுவிலும்' என்ற பாடமே கொள்ளத்தகும்.

5. ஷை, 9-ஆம் திருமொழி 4-ஆம் பாசுரத்தே—

**"பதினறு மாயிரவர் தேவிமார் பணிசெய்யத் துவரை யென்னும்**
அதில்நாயகர் **ஆகி வீற்றிருந்த மணவாளர் மன்னு கோயில்"**

என்ற அடிகளில் 'துவரையென்னும் அதில்' என்று பிரித்துக் கொண்டு அதற்கேற்பப் பொருளும் கூறப்படுகின்றது. ஆனால் மோனைநயமும் பொருட்சிறப்பும் கொண்ட பழம்பாடம் 'துவரையென்னும் **மதில்நாயகர்'** என்பதாகவே கொள்ளத்தகும். இத்தொடர்க்கு 'துவாரகையென்ற மதிலரணுள்ள நகரத்துக்கு அரசர்' என்பது பொருளாம். திரிபுரங்களை, 'எயிற்குலமூன்று' (திருக்கோவை. 36) என்று கூறும் வழக்கும் ஒப்பிடுக. அம்மூவெயிலையும் -' இரும்புறுமாமதில் பொன்னிஞ்சி வெள்ளிப் புரிசை'' என்று வாதவூரடிகள் பாடியதற்கு (திருக்கோவை. 167)-பேராசிரியர் ''இரும்பு பொன் வெள்ளிகள் பொருந்திய மதில்களையுடைய ஊரும் (திரிபுரம்)'' என்று பொருள்கூறியிருத்தலும் காண்க. மதிலரண்கள் கொண்ட மூன்றூர்களையுடைய பாண்டியனை 'மும்மதில்வேந்தன்' என்ப (இறை. களவியலுரை. பாட். 252). துவரையைக் கூறுந்தோறும அதனை மதிற்பெருமையால் விசேடித்துக் கூறுவர் முன்னோர்:

**''செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசைத் துவரை''**

**''துன்னரு நீண்மதிற் றுவராபதிக்கிறை'' (பெருங்கதை)**

எனக் காண்க. ''வடநடமும் வைகுந்தமும் மதிற்றுவராபதியும்'' என்று இவ்வாழ்வாரே அருளிச்செய்தலும் குறிப்பிடத்தக்கது.

இப்பாட்டின் 3-ஆம் அடியில் 'புதுநாள் மலர்க் கமலம்' என்றுள்ளதை; 'புதுநாளமலர்க்கமலம்' என்று கொள்வது சிறக்கும். 'நாள்மலர்' என்பதாயின், நாள் என்பதே புதுமை குறிக்கும்; அதனால், புதியதும் தண்டையுடையதுமான கமலமலர் என்ற பொருளில் 'புதுநாளமலர்க்கமலம்' என்ற பாடம் ஏற்புடையதே.

நாளம்-தண்டு (கம்பரா. மிதிலைக். 75), "தாளதாமரை" என்ப (திருவாய்).

6. திருப்பாவை, 4-ஆம் பாசுரத்தில்,

**"ஆழிமழைக்கண்ணு வொன்றுநீ கைகரவேல்"**

என்பது, இப்போது வழங்கும்பாடம். மழைக்கண்ணு என்பதற்கு 'வர்ஷத்துக்கு நிர்வாஹகனே!' என்று பொருளும் "அவயவங்களுள் கண் பிரதானமாயிருப்பதுபோல், பர்ஜன்யன் மழைக்குப் பிரதானன் என்பதுபற்றிக் 'கண்ணு' என்கிறது" என்று குறிப்பும் வியாக்யானங்களிற் காணப்படுகின்றன. கண்ணன் என்ற சொல் நிர்வாஹகன் என்ற பொருளில் நேரே வழங்குவதன்று என்பது, மேற்கூறிய குறிப்பாலே பெறப்படும். குறிப்பிற்பெறும் பொருளிலும், ஒரு சிறு வளைவுக்கீற்றால் நேர்பொருள் அமையுமாயின், அப்பாடம் சிறந்ததாகுமன்றோ? அஃதாவது—

**"ஆழிமழைக் கண்ணு லொன்றுநீ கைகரவேல்"**

ஏன்பதாம். மழைக்கு **அண்ணல்**-மழைக்கு ஸ்வாமியே, நிர்வாஹகனே! என்றவாறு. லகர வகரங்கள் ஏட்டெழுத்துக்களில் மாறுபட்டு வழங்குவதற்கு எத்தனையோ உதாரணங்கள் காட்டலாம். **"நலங்களாய நற்கலைகள் நாவிலும்** நவின்றிலேன்" (திருச்சந்த. 90) என்று, வியாக்யானத்துக் கேற்ப அமைந்துள்ள பாடத்துக்கு; லகர வகரங்களின் எழுத்தொற்றுமையால், 'நாலிலும் நவின்றிலேன்' என்று பாடாந்தரம் வழங்குதல் காண்க; 'மக்கட் கிறை' 'வேந்தர்க்கொளி' என்பனபோல 'மழைக்கண்ணல்' என வந்தது.

7. ஷை, 16-வது, நாயகனாய்நின்ற என்ற பாசுரத்தில்—

'**தூயோமாய் வந்தோம் துயிலெழபாடுவான்**"

என்பது இப்போது ஓதும் பாடம். இங்கு ஒற்றுமிக வேண்டுதலால் 'துயிலெழப்பாடுவான்' என்று பதிப்பிட்டாரும், கலியோசை நயங்குன்றுவதுகண்டு, 'துயிலெழல்பாடுவான்' என்று பாடங் கூறுவாரும் உளர். ஆனால், இவற்றில எதுவும் பழம்பாடம் ஆகாது. துயில் கொள்ளும் அரசரை வந்திகள் இன்னிசைபாடித் துயிலுணர்த்துதல் மரபு. இது 'துயிலெடைநிலை' என்ற புறத்துறையாகும். "சூதர் ஏத்திய துயிலெடைநிலையும்" என்பர் தொல்காப்பியனார் (பொருளதி. 91).

**"பயில்பூம் பள்ளித் துயிலெடை மாக்கள்**
**இசைகொ ளோசையின் இன்றுயி லேற்று"**

என்பது பெருங்கதை (4-6-81). துயில் எடை—உறக்கத்தினின்று எடுப்புதல். எடுப்புதலெனினும் எழுப்புதலெனினும் ஒக்கும். இவ்வொப்புமைபற்றியே, 'துயிலெடைபாடுவான்' என்றிருந்த பழம்பாடம், 'துயிலெழபாடுவான்! என டகர ழகரங்களோடு அபேதமாய்ப் பாடம் மாறியதென்றே கொள்ளத்தகும்.

8. நாய்ச்சியார்திருமொழி, 2-ம் பதிகம், 7-ம் பாசுரத்தில்,

**"ஓதமா கடல்வண்ணவுன் மணவாட் டிமாரொடு** சூழறும்
**......................எங்கள் சிற்றில் சிதையேலே"**

என்ற அடிகளுள் 'சூழறும்' என்பது வியாக்யானபாடம், "உன் மணவாட்டிமாரொடு சூழறும்-உனக்கு நல்லாரொடு சூழறுங்கிடாய், இத்தை அழிப்பாயாகில்!" 'சூழறுகை – ஆணையிடுகை' என்பன வியாக்யான பந்திகள். இவ்வாறு, ஆணைப்பொருளதாயின், இது '**சூளறும்**' என்றிருத்தல்வேண்டும். சூள் அறுதல்-ஆணையறுதியிடுதல். வஞ்சினத்தைச் 'சூளறவு' என்பர் (திருக்கோவை 187). ஆணைப் பொருளில் இச்சொல் வழங்கு

தலே, சந்தரமூர்த்திநாயனுரது திருப்புனவாயில் தேவாரப் பதிகம் முழுதும் – 'மனமே ! என்னெடு சூளறும்' என்ருற் போலும் தொடர்கள் பயிலுதலால் நன்கறியலாம்.

இனி, "மணவாட்டிமாரொடு சூளுறும்" என்ற பாடமும் வழங்குகின்றது. இச்சூளறும் என்பதற்கும் ஆணையிடல் என்பதே பொருளாம். சிந்தாமணியில்— சீவகனது பவனியைக் காணவேண்டி, விரைந்து செல்லும் அவனது ஊர்தியான பிடியை நிற்குமாறு கூறும் பெண்டிர்கூற்றில்—

**"சிறுபிடி! கேள்வன் அயிராவணத்தொடு** சூளுறும்" (2126)

என்று இவ்வாணைச்சொல் வழங்குதல் இங்கே ஒப்பிடத் தக்கது. இதற்கு—நச்சினர்க்கினியர், "சிறுபிடி ! நின் கேள்வனுகிய அயிராவணத்தோடு சூளுறுவோம்" என்று பொருளும், "சூளுறும் என்பது 'சேறும்' என்ருற்போலப் பன்மையுரைக்கும் தன்மைச் சொல்" என்று குறிப்பும் எழுதுகின்ருர். இப்பொருளுங் குறிப்பும் ஆண்டாள் திருவாக்குக்கும் பெரிதும் ஏற்பனவே. ஆனுல், முற் கூறிய தேவாரத் தொடரான சூளறும்' என்பது முன் னிலே யொருமையினும் வழங்குதல காணலாம். இதனுல் சூளறும், சூளுறும் என்ற இருவகையும் ஒருபொருளில் வழங்குவதே என்பதும், 'சூழறும்' என்ற பாடம் திருத்தத் தக்கது என்பதும் அறியலாம்.

9. யாப்பருங்கலவிருத்தி என்ற செய்யுளிலக்கண நூலுரையுள், பொய்கையாழ்வார் அருளிய முதற்திரு. வந்தாதியில் உள்ள

**"எளிதிலிரண்டடியும்"** (51)

**"பாலன்றனதுருவாய்"** (69)

என்ற பாசுரங்க ளிரண்டு, இறுதி, முற்றுகரமாய் முடிந்த வெண்பாக்களுக்கு உதாகரிக்கப் பட்டு, 'பொய்கையார் வாக்கு' என்ற குறிப்பும் தரப்பட்டுள்ளன. இவற்றுள் முதற்பாட்டு—

"எளிதி லிரண்டடியுங் காண்பதற்கென் னுள்ளம்
தெளியத் தெளிந்தொழியுஞ் செவ்வே—களியிற்
பொருந்தா தவனைப் பொரலுற் றரியா
யிருந்தான் திருநாம மெண்"

என்ற முற்றுகர வீருகவின்றியே இப்போது பாடம் வழங்குகின்றது. இஃதன்றி, இப்பாட்டு, அவ்விருத்தி யுரையுள்,

"எளிதி னிரண்டடியுங் காண்பதற்கென் னெஞ்சே
தெளிதிற் றெளிந்துரைப்பன் செவ்வே—அளிகள்
பொருந்தா ரிரணியனைக் கொல்லுற் றரியாய்
இருந்தான் றிருநாம மெண்ணு"

என்று பாடபேதம் பலகொண்டு உள்ளது. "பாலன்றன துருவாய்' என்ற பொய்கையார் பாசுரம் முற்றுகர வீருக இப்போதும் ஓதப்படுவதாம். அதனில் 'ஆலிலை யின் மேலன்று நீ கிடந்தாய்', 'வேலை சூழ்நீரதோ' என்பன தவிர, மற்றவை ஒற்றுமை கொண்டுள்ளன. இப்பாசு ரங்களை உதாகரித்த யாப்பருங்கலவிருத்திகாரர் 11-ஆம் நூற்றுண்டினராகத் தெரிகின்றார். இதனால், மணிப் பிரவாள வியாக்யானங்கள் அதிகமாக நடை யாடாத காலத்தே இப்போது ஓதுமுறையினும் வேருக வழங்கிய பாடங்கள் அருளிச் செயல்கட்கு அமைந் திருந்தன என்பது தெரியலாம். இப் பழம்பாடங்களிலும் நயமுடையன கொள்ளத்தகும்.

10. இயற்பாவில், பூதத்தாழ்வார் அருளிய இரண் டாந்திருவந்தாதி, 53-ஆம் பாசுரம், பின்வருமாறு:—

"நெறியார் குழற்கற்றை முன்னின்று பின்தாழ்ந்
தறியா திளங்கிரியென் றெண்ணிப்—பிறியாது
பூங்கொடிகள் வைகும் பொருபுனற் குன்றென்னும்
வேங்கடமே யாம்விரும்பும் வெற்பு"

"வழியிடையே அசையாது இருந்துகொண்டு தியானிக்கும் ஆசிருதர்களுடைய, முன்புறத்திலிருந்து பின்புறமாகத் தாழ்ந்துள்ள கூந்தற்றொகுதியை, அறியாதே சிறுமலை யென்று எண்ணி, பூக்களையுடைய கொடிகள் தங்குகிற...பொரும் புனலையுடைய குன்றான திருவேங்கடமே நாம் விரும்பும் மலை" என்ற கருத்தில் இப்பாடற்குப் பழைய வியாக்யானம் அமைந்துளது. இங்கு, 'நெறியார்' என்பதற்கு 'ஸ்தாவரப் பிரதிஷ்டராயிருந்து தியானிக்கிறவர்கள்' என்றும், 'குழற்கற்றை' என்பதற்குக் 'கூந்தற்றொகுதி' என்றும் பொருள் கொள்ளப்பட்டமை தெரியலாம். இதனால் தம் காலத்தில் முன்னோர் ஓதிவந்த பாடத்துக்கு அமைந்ததொரு பொருளை வியாக்யாக்யாதாக்கள் விளக்கியுள்ளார்கள் என்றே கொள்ளவேண்டும்.

ஆயினும், குழற்றொகுதியை இளங்கிரி என்று எண்ணிப் பூங்கொடிகள் அதன்மேற் படர்ந்து தங்குவன என்ற கருத்தில், அக் குழற்கும் கிரிக்கும் ஒப்புமை நன்கு அமையாததோடு, இளங்கிரி என்ற இளமை விசேடணம் ஏற்புடையதாகவும் தோன்றவில்லை. அதனால், பழையபாடம் வேறாயிருந்து பின்பு மாறியதாகவே தோற்றுகின்றது. அப்பாடம்,

"நெறியார் குழக்களிற்றை முன்னின்று பின்தாழ்ந்
தறியா திளங்கிரி றயன்றெண்ணிப்—பிறியாது
பூங்கொடிகள் வைகும் பொருபுனற் குன்றென்னும்
வேங்கடமே யாம்விரும்பும் வெற்பு"

என்றிருந்ததாதல் வேண்டும். இதன்படி நேரக்கூமிடத்து, 'முன் புறம் உயர்ந்தும் பின்புறம் தாழ்ந்தும் வழியைிட்டயே தங்கிக் கிடக்கும் இளங்களிற்றியானையை, அறியாமல் சிறிய குன்று என்று நெருங்கியப் பூங்கொடிகள் அதன் மேலே தங்கும.......... வேங்கடம்' என்பது பொருளாகும். இளங்கிரி என்று கருதற்குக் குழக்களிறு ஏற்றதாதலும், அதனைத் திரண்டுயர்ந்த பாறையான **துறுகல்** என்று நெருங்கிப் பூங்கொடிகள் படர்தல் இயற்கையாதலும் காண்க. இதுவே, பொருட்பொருத்தமுள்ள பழம்பாடமாதல் வேண்டும் என்பது சங்கநூலான குறுந்தொகையுள் (36)

> **''துறுகல் அயலது மாணை மாக்கொடி[1]**
> **துஞ்சுகளி றிவரும் குன்ற நாடன்''**

என்னும் சான்றோர்கூற்றுற் பெறப்படும். ஈண்டு 'மாணைமாக்கொடி' என்பதனோடு (திருவந்தாதியிலே) 'பூங்கொடி' என்பதும், 'துஞ்சுகளிறு' என்பதனோடு 'நெறியார் குழக்களிறு' என்பதும், 'அயலது மாணை மாக்கொடி இவரும்' என்பதனோடு, 'பூங்கொடிகள் வைகும்' என்பதும் பெரிதும் ஒப்புமைபெற்றிருத்தல் நோக்கத்தக்கது. துறுகல், யானைபோலத் தோன்றும் என்பர்.

> **''மாசறக் கழீஇய யானை போலப்**
> **பெரும்பெய லுழந்த இரும்பிணர்த் துறுகல்''** (குறுந். 13)

---

1. **'துறுகற்பக்கத்துள்ள மாணை என்ற பெருங்கொடியானது அங்கே கிடந்துறங்கும் களிற்றின்மேல் வேற்றுமை தெரியாது படரும் குன்றஞ்சூழ்ந்த நாடன்' என்பது இதன் பொருள். மூங்கில்களைப் பிணைத்துத் தெப்பம் கட்டுவதற்கு உறுதியானது இம்மாணைக்கொடி என்பது கம்பர்வாக்கால் தெரிகின்றது (இராமா. வனம்புகு. 36).**

"புகர்முக வேழம், இரும்பிணர்த் துறுகற்
[1]பிடிசெத்துத் தழூஉம்" (ஐங்குறு. 239)

இவற்றால், குழக்களிற்றை என்பது 'குழற்கற்றை' என்றும், மோனைக்கியைய அண்ணிப் பிறியாது என்றிருக்க வேண்டியது 'எண்ணிப் பிரியாது' என்றும் மாறின என்பது தெரியலாம். குழக்களிறு-இளங்களிறு. 'குழக் கன்று' என்பதுபோல (மூன்றாந்திரு. 71; நீலகேசி. 402)' **'குலக்களிற்றை'** என்பது குழக்கற்றை எனத்திரிந்த தெனினும் பொருந்தும். ஏட்டெழுத்துக்களில் லகரழகர வேறுபாடில்லாமல் இருத்தலும், அவ்விடங்களில் பொருட்பொருத்தம் பெறச் சில எழுத்துக்களைக் கூட்டியும்குறைத்தும் வழங்குதலும் முன்னூல்களிலும் காண லாம். உதாரணமாக—திவாகரம் பிங்கலந்தை நிகண்டு களில் 'வராகக்கொடிவேள் புலவரசர்க்கு(சளுக்கரசர்க்கு) உரியது' என்ற பொருளில் அமைந்த 'கேழல் வேள்புல வரசர் கொடியே' என்ற சூத்திரப்பாவைக்,

"கேழல்வேழம்புலவர் கொடியே"

என்று படித்துக்கொண்டு, அதற்கேற்ப, பன்றியும், யானையும் புலவர்கொடி என்ற பொருளிற் பாடிவிட்ட பின்னோரும் உண்டு.[2]

11. மூன்றாந்திருவந்தாதி 12-ஆம் பாசுரத்தில்—

"... ... ... ... —மறைசெயன்றும்
நன்கோதி நன்குணர்வார் காண்பரே நாடோறும்
பைங்கோத வண்ணன் படி"

---

1. பிடிசெத்து - பிடியாகக்கருதி.
2. ஆராய்ச்சித்தொகுதி பக். 477-8 காண்க.

என்பது இக்காலத்துப் பாடம். இதனுள், பசுமை + **ஓதம்** = பைங்கோதம் என்று பண்பீறு திரிந்ததென்றும், பை-இங்கு (= தங்கிய)—ஓதம் என்று பிரித்தும் பொருள் கூறுவர். இச்சொற்புணர்ப்பும் பொருளும் ஏற்கத்தக்கனவாகா. பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானத்தில்—

**''ச்ரமஹரமான வடிவையுடையவனுடைய படி''**

என்றே உள்ளது. 'ஓதம்' என்பதற்குரியபொருள் இதனிற் காணப்படாமை குறிப்பிடத்தகும். அதனால், அவ்வியாக்யானத்துக்கு ஏற்றவாறு, ''பைங்கோல வண்ணன் படி'' என்ற பாடம் இருந்து பின் மாறியதாக் கருத இடமுண்டு. 'கார்க்கோலமேனியானை' என்ற கம்பர்வாக்கும் ஒப்பிடுக.

இனி 'பங்கோத வண்ணன் படி' என்று பாடங் கொள்ளினும் பொருந்தும். பங்கோதம்-அளறுபட்ட கடல், 'பங்கமார்கடல்' என்பர் (தேவா. திருவேட்டகுடி,5). பங்கு -சேறு, பங்கம் என்பதன் திரிபு; (சங்கு போல) + ஓதம் என்றேனும், பங்க (சேறு) + ஓதம் என்றேனும் பிரித்துக்கொள்க. எவ்வகையினும், 'பைங்கோத வண்ணன்' என்பது திருத்தம் பெறத் தக்கது.

12. ஷை திருவந்தாதி, 27-ஆம் பாட்டில்—

''ஆரே **துயருழந்தார் துன்புற்றார்** ஆண்டையார்
... ... **நீரணைமேற் பள்ளி**
**அடைந்தானை நாளும் அடைந்து''**

என்று பாடம் ஓதப்படுகின்றது. 'திருமாலையடைந்து துயருழந்தவரும் துன்பமுற்றவரும் யாவர், எங்குள்ளார்' என்பது பொருள். ''எக்காலத்தில் எத்தேசத்தில் யார்

அவனைப்பற்றி துஷ்கர்ம பலத்தை அனுபவித்தார்" என்பது வியாக்யானபங்தி. இக்கருத்தின்படியும், முன் பாட்டின் அந்தத்துக்கியையவும்—

"யாரே **துயழருந்தார் துன்புற்றார்** யாண்டையார்"

என்ற பாடமே பொருந்துவதாம். யாண்டையார் எங்குள்ளார் எ-று. 'இன்று யாண்டையனோ தோழி- (குறுங். 379) என்ப. ஆண்டையார் எனின் அங்குள்ளார் என்றாகும். 'ஆண்டை-அங்கு; யார்-யாவர்' என்று பிரித்துப் பொருள் கூறலாம். அப்போது, ஆண்டை என்பது நின்றுவற்றுதலோடு பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானத்துக்கு இயைவதும் அன்று. "ஆண்டை யார்—எங்குள்ளார்" என்று அச்சிடப்பட்டுள்ள அவ் வியாக்யானபங்தியினும் 'யாண்டையார்' என்று திருத்திக்கொள்க.

13. ஷை திருவந்தாதி 31-ஆம் பாசுரத்தில்—

"**நறவேற்றான்**, பாகத்தான் பாற்கடலு ளான்"

என்பது வழங்கும் பாடம். நறவு ஏற்றான் என்பதற்கு நறவை ஏற்ற ருத்ரன் என்றும், நறவையும் ஏற்றையும் உடைய ருத்ரன் என்றும் இருபொருள்களை வியாக் யானம் கூறுகின்றது. "நறவு தேனாய, தேன் போலே போக்யமான கங்கையை உடையவன்" என்று அரும் பதம் இதற்கு விளக்கம் கூறும். பரம்பரையாக வழங்கிய பாடத்தை இப்பொருள்கள் நயப்படுத்து வனே. ஆயினும், சப்தத்தை நெருக்கியே இப்பொருள் கொள்ளப்படுதலால், ஆதிப்பாடம் அவ்வாறு கொள் ளாதபடி அமைந்திருந்து பின் மாறியதுபோலும் என்றே கருத நேர்கின்றது. அப்பாடம்—

**''நரையேற்றான் பாகத்தான்''**

என்றே சொல்லலாம். நரையேறு-வெண்மைநிறமுடைய எருது.

**"நரைவிடை நற்கொடியுடையநாதன்'' (தேவா. திருநாரையூர். திருத்தாண் 5)**

**''நரையார்ந்த விடையேறி'' (ஷை, திருவொற். 4; திருப்பறிய. 7)**

என்பர். எருத்துக்கு நரை என்ற பெயரு முண்டு; ''கருநரைமேற் சூடேபோல்'' (நாலடி.) எனக் காண்க. நரையேற்றையொப்ப, இடியேற்றையும் 'நரையுருமேறு' என்ப. இஃது, அதன் வெண்மையும் கடுமையும்பற்றி யாகும். இவற்றால் நரையேற்றான் என்பது நறவேற்றான் என யகர வகரங்களின் ஏகதேச எழுத்தொற்றுமையால், ஆதிப்பாடம் மாறியதாகக் கொள்ளத்தகும்.

திருப்பள்ளியெழுச்சி முதற்பாசுரத்தில், 'கனவிருள கன்றது' என்று ஓதப்படுவதாயினும், 'கனையிருள்' என்பதே தமிழ்வழக்கான பாடம்; 'கனையிருள்கடிவன' என்பர் (நீலகேசி. 455). **நறவேற்றான்போல** மாறி வழங்கியதே இக் '**கனவிருள்**' என்க.

14. ஷை திருவந்தாதி, 96-ஆம் பாசுரத்தில்—

..................................... — கேழ்த்த
**அடித்தா மரைமலர்மேன் மங்கை மணாளன்**
**அடித்தா மரையாம் அலர்**

என்று இப்போது ஓதப்படுகின்றது. கேழ்த்த அடித் தாமரை மலர்' என்பதற்கு 'நிறம்பொருந்திய தாளைக் கொண்ட தாமரைப்பூ' என்ற பொருளை அரும்பதம் கூறும். இப்பாசுரத்தின் மூன்றாமடியிலே, பின்மூன்று சீர்களின் மோனையெழுத்துக்களை நோக்குமிடத்து,

அவற்றுடன் இயையாதது இம்முதற்சீர்ப்பாடம் என்றும், அதனால், 'கேழ்த்த வடி' என்பதில், வகரத்தை உடம்படுமெய்யாக்கிப் பிரித்தமுறை பொருந்தா தென்றும் எளிதில் அறியலாம். ஆகவே,

**''வடித்தா மரைமலர்மேல் மங்கை மணாளன்''**

என்பதே ஏற்பதென்க. வடி-தேன்.

**'வடியுறுமலர்' (சூளாமணி. இரதநூ. 45)**

**'வடிகொள்பொழிலின்' (தேவா. பக். 116. 3)**

என்ற பிரயோகங்கள் காண்க. பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானத்தில் அடி-தாள் என்ற பொருள் காணப் படாமையும்நோக்கத் தக்கது.

15. திருமழிசைப்பிரான் அருளிய நான்முகன் திரு வந்தாதியில்—

**"பாட்டும் முறையும் படுகதையும் பல்பொருளும்**
**ஈட்டிய தீயும் இருவிசும்பும்—கேட்ட**
**மனுவுஞ் சுருதி மறைநான்கும் மாயன்**
**தனமா யையிற்பட்ட தற்பு''**

என்பது 76-ஆம் பாசுரம். இதனுள், 'பாட்டும் முறையும்' என்று ஓதப்படும் பாடத்துக்கு— 'பாசுரங்களும் இராமாயணமும்' என்றும், 'இயலும் இசையும்' என்றும் பலபொருள் கூறுவர். பெரியவாச்சான் பிள்ளை வியாக் யானத்தில்— ''இப்படிப் புராணங்களிற் பரக்கச் சொல்லப்பட்ட அர்த்தங்கள்'' என்று முதலடிக்குப் பொருள் அமைந்துளது. இதன்படி நோக்குமிடத்து, 'பாட்டுமுறையுமாய் அமைந்த புராணங்களிற் சொல்லப் பட்ட பலவகைப்பொருள்களும்' என்ற பொழிப்புடைய

**''பாட்டு முறையும் படுகதையிற் பல்பொருளும்''**

என்ற பாடம் அவர்காலத்து வழங்கியதுபோலத் தோற்றுகின்றது.[1] "கதையின் பெரும் பொருளாங் கண்ணா" என்ற பூதத்தார்பாசுரமும் ஒப்பிடத்தக்கது.

இனி, 'பாட்டும் உரையும்' என்ற பாடம் தமிழ் முறைக்குப் பெரிதும் ஏற்பதாகும். கத்தியரூபமும் பத்தியரூபமுமான காவ்யங்கள் என்பது பொருள் யாப்பின்வகைகளாகப் "பாட்டுரை நூலே" என்று தொல்காப்பியனார் கூறுகின்றார் (பொருளதி. 391). பெருங்கதை, சிந்தாமணிபோல்வன பாட்டுநூல். பெருந் தேவனார்பாரதம், தகடூர் யாத்திரை போல்வன உரை நூல்.[2] 'பாட்டு முரையும்' என்ற தொடர் இக்கருத்தில் வழங்குவதென்பது—

"இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே
குருடேயு மன்றுநின் குற்றம்—மருடீர்ந்த
பாட்டு முரையும் பயிலா தனவிரண்
டோட்டைச் செவியு முள"

என்று, ஏழிற்கோமானை ஔவையார் பாடிய அங்கத வெண்பாவாலும் அறிக (தொல். பொருளதி. 471, பேரா; தமிழ்நா...தை). 'பாட்டு முரையும்' என்ற இப்பாடம், பெரியவாச்சான் பிள்ளை கொண்டதன்று என்று சொல்

1. 'பாட்டு முறையும் படு—பாட்டும் முறையுமாய் அமைந்த; கதையில்—புராணங்களிற் சொல்லப்பட்ட; பல் பொருள்—பரந்த அர்த்தங்கள்'—என்று பிரித்துப் பொருள் கொள்க. பெரியவாச்சான்பிள்ளைவியாக்யானப்படி, இப் பாடம் கொள்ளப்பட்டது.

2. உரை நூல் என்றது, முழுதும் வசனமாக வன்றிப் பெரும்பான்மை உரையும் சிறுபான்மை பாட்டும் உள்ள உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளை என்க.

வதற்கு அவர் உரையில் ஆதார மில்லாமையும் நோக்குக.

16. சிறியதிருமடலில் திருமங்கை மன்னன்—

**"பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே அம்மூன்றும்**
**ஆராயிற் றானே அறம்பொரு ளின்பமென்று**
**ஆரார் இவற்றி னிடையதனை யெய்துவார்**
**சீரார் இருகலையும் எய்துவர் சிக்கெனமற்று**
**ஆரானு முண்டென்பார் என்பது தானதுவும்**
**ஓராமை யன்றே உலகத்தார் சொல்லுஞ்சொல்**
**ஓராமை யாமா றதுவுரைக்கேன்"**

என்று பாடியருளுதல் பலரும் தெரிந்ததே. "உலகோர் கூறும் புருஷார்த்தங்கள் அறம் பொருளின்பம் என்ற மூன்றேயாம். வேறொன்றும் உண்டு என்பது அறியாமை. அவ்வறியாமையை விளக்கிக் கூறுவேன்" என்று மடலெடுக்கப்புகுந்த தலைவி, தொடக்கத்தே கூறுவது இது. ஈண்டு, "அறம் பொருளின்பமென்று இவற்றின் இடையதனை எய்துவார்......இருகலையும் எய்துவர்" என்பதன் வியாக்யானத்தே ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளை—

எய்தும்' என்பதனோடு 'இருகலையும் எய்துவர்'

"நடுவண தெய்தின் இருதலையும் எய்தும்" என்று தமிழர் சொல்லுகிறபடியே சொல்லுகிறார் அன்று. இவை மூன்றிலும் வைத்துக் கொண்டு, அதனை எய்துவார் என்றது, தமக்கு உத்தேச்யமான காமத்தை எய்துவார் என்றபடி......இத்தை லபிக்கும் ஸம்பத்தை உடையவர்கள் இதுக்குக் கலாமாத்ரமான தர்மார்த்தங்கள் இரண்டையும் லபித்தாராகக் கடவர்"

என்று அருளிச்செய்தார். இப்பெரியார் தமக்கு முன்பு வழங்கிய 'இருகலையுமெய்துவர்' என்ற பாடத்தைத் தழுவி, பகவத்விஷய காமமே தன் உத்தேசியமாகத் தலைவி கொண்டவளாதலால், அக்காமத்தை அடைந்தவர்கள் அதன் கலாமாத்ரமான ( = ஏகதேசமான) அறம் பொருள்களையும் அடைந்தவர்களாவர் என்ற கருத்தில் அவள் கூறியதாக எழுதியபொருள் போற்றத் தக்கதே. இதன்படி,

''அவற்றினிடை-அறம் பொருளின் பங்கள் தம்மில்; அதனை எய்துவார்-அக்காமத்தை அடைபவர்; இருகலை-அக்காமத்துக்குக் கலா மாத்ரமான (ஏகதேசங்களான) தர்மார்த்தங்கள்''

என்று பொருள் கொள்க. இனி, '''நடுவண தெய்தின் இருதலையும் எய்தும்'' என்று தமிழர் சொல்லுகிறபடியே சொல்லுகிறார் அன்று' என்று பக்ஷாந்தரமொன்றையும் கூறி அப்பெரியார் மறுத்தெழுதுவதால், 'இருதலையுமெய்துவர்' என்ற பாடமும அவர்க்கு முன் வழங்கியதாகவே தெரிகின்றது. இத்தமிழர் கூற்று—

**''வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்**
**நடுவண தெய்த இருதலையு மெய்தும்**
**நடுவண தெய்தாதா னெய்தும் உலைப்பெய்து**
**அடுவது போலுந் துயர்''**

என்ற நாலடியார்ப் பாட்டில் உள்ளது. [ஈண்டு, மூன்றில் -அறம் பொருளின்பங்களில்; நடுவணது-இடையிலுள்ள பொருள்; இருதலை-அறம் இன்பங்கள், 'இருதலைக் கொள்ளி' என்ப.]

இம் மேற்கோளின்படி, 'வையத்து மன்னிய மூன்று' என்பதனோடு இம்மடலிலுள்ள 'பாரோர் சொல்லப்பட்ட

மூன்று' என்பதும், 'நடுவண தெய்தின்' என்பதனோடு 'இடையதனை எய்துவார்' என்பதும், 'இருதலையும் எய்துவர்' என்பதும்—சொல்லாலும் பொருளாலும் பெரிதும் ஒப்புமை பெற்றிருத்தல் அறியலாம். இக்கருத்தையே—

"அறனீனும் இன்பமும் மீனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்" (குறள்.)

என்று வள்ளுவனாரும கூறினார். இவ்வாறு, முன்னூற் கருத்தோடு பெரிதும் ஒப்புமைகொண்ட பாடமே, இருந்தமிழ் நூற்புலவரான ஆழ்வார்க்குந் திருவுள்ள மானது என்று தமிழறிஞர்கள் கருதக் கூடியதேயாகும். ஆயின், காமத்தையே சிறப்பிக்கப்புக்க திருமங்கை மன்னன், அறமும் இன்பமும் பொருளால் அடையக் கூடியவை என்று ஈண்டுக் கூறியதென்னை? என்ற கேள்வி எழுகின்றது. இதற்கு—

'ஐஹிகமான புருஷார்த்தங்களுள் ஒன்றாகிய இன்பம் என்பது, விஷயாந்தரகாமம் அல்லது சிற்றின்பமாகும். அஃது இடையிலுள்ள பொருளால் அடையக்கூடியதே. ஆமுஷ்மிகமான நான்காவது புருஷார்த்தம் ஒன்றில்லை. பகவத் விஷயகாமம் அல்லது பேரின்பப்பேறே அது. இம்மையிலே, திருநறையூர் எம்பெருமானைக் கூடிக் கலத்தலே அப்பேறாகும். அஃது எளிதில் அடைய முடியாதிருப்பதால், மடலேறுதலாகிய கடினமார்க்கத் தால் அதனை அடையத்துணிகின்றேன்' என்றும் 'சிற்றின்பப்பேற்றை அந்த மார்க்கத்தால் முன்புபெற்ற மகளிர்போலவே, அப்பேரின்பப் பேற்றையும் அவரது முறையில் நின்று யான் அடைவது திண்ணம்' என்றும் தலைவி கருதிக் கூறுகின்றாள்- என்பது இத்திருமடலின் கருத்தாகக் கொள்ளத்தகும். எனவே, தலைவியின்

உத்தேசிய இன்பமானது, ஐகிகமான சிற்றின்பத்தின் வேருனது என்பது பெறப்படுதலால், பெரியவாச்சான் பிள்ளை திருவுள்ளத்துக்கும் மேற்கூறிய கருத்து மாறு படாமை காண்க. இதனல், 'பாரோர் சொலப்பட்ட' அச்சிற்றின்பப்பேற்றுக்குப் பொருள்கருவியாவது என்ற ஆழ்வார்திருவாக்குப் பொருந்துமாறு அறியத்தக்கது.

17. பெரிய திருமடலில் வேகவதி என்பவளது வரலாற்றைத் திருமங்கைமன்னன்—

**''பின்னும், கருநெடுங்கட் செவ்வாய்ப் பிணைநோக்கின்**
**மின்னனைய நுண் மருங்குல் வேகவதி யென்றுரைக்கும்**
**கன்னிதன்இன்னுயிராங் காதலனைக் காணது**
**தன்னுடைய முன்தோன்றல் கொண்டேகத் தான் சென்றங்கு**
**அன்னவனை நோக்கா தழித்துரப்பி வாளமருள்**
**கன்னவில்தோட் காளையைக் கைப்பிடித்து மீண்டும்போய்ப்**
**பொன்னவிலும் ஆகம் புணர்ந்திலளே''**

என்ற கண்ணிகளிற் கூறுவர். இங்கு, பெரியவாச்சான் பிள்ளை அருளிய வியாக்யானத் தின்பதிப்பில் ''இதற்குக் கதை தெரியவில்லை'' என்ற கீழ்க்குறிப்பு இடப்பட்டுளது. ஊகமாகக் கதை கற்பித்தாரும் உளர். ஆனல், குணுட்யரது **பிருஹத்கதையின்** வழி நூலான பெருங்கதையிலும்.[1] வடமொழியிலுள்ள

---

1. பெருங்கதை நரவாணகாண்டத்தின் **பிற்பகுதி** கிடையாமையால் **உதிதோதயகாவ்யம்** முதலிய வடநூல் களிலிருந்து அப்பிற்பகுதிக்கதையை, **உதயனன்** சரித்திரச் சுருக்கத்தில் மஹாமஹோபாத்யாய-ஐயரவர்கள் எழுதியுள் ளார்கள். அக்கதாபாகத்தில், **வேகவதிவரலாறு சிறு** மாறு பாடுகளுடன் காணப்படுகின்றது (பக்- 119-201).

நரவாகனதத்தன்சரிதத்திலும்[1] இம்மடல்வரலாற்றின் விவரம் தெளிவாகக் காணப்படுவதாம். அதன் சுருக்கம் வருமாறு:—

உதயனகுமாரனுன நரவாகனதத்தன், கணிகையர் தலத்தவளும் ஒப்புயர்வற்ற கட்டழகியுமான மதன மஞ்சுகையைக் காதலித்து மணந்து வாழ்ந்துவந்தனன். அக்காலத்தே, மானசவேகன் என்ற வித்யாதரவேந்தன் அவளைக் கண்டு மோகித்து நரவாகனனை மயங்கும்படி செய்துவிட்டு, மதனமஞ்சுகையைத் தூக்கிச்சென்று தன் நகர்க்குக் கொண்டு வந்துவிட்டான். உறங்கி விழித்த நரவாகனன் காதலியைக் காணுமல் மயங்கி தன் நகர்ப்புறங்களில் தேடித் திரிந்தனன். இஃது இவ்வாருக, மேற்கூறிய மானசவேகன் தங்கை வேகவதி என்பாள் அந்த நரவாகனதத்தனிடம் மோகங்கொண்டு மதனமஞ்சுகையின் வடிவோடு அவனிடம் நெருங்கிப் பழகிவந்தாள். ஒருகால் தன் உண்மைநிலையை அவனுக்கு உணர்த்தநேர்ந்தபோது, அவள் பின்வருமாறு கூறலாயினள்.

"என்பெயர் வேகவதி. என் தமையன், வித்யாதர வேந்தனுன மானதவேகன் என்பான். அவன் மதன

---

1. புதஸ்வாமி என்பார் இயற்றிய நேபாளமான்மியத்திலே, 'பிருகத் கதா ச்லோகஸங்க்ரஹம்' என்ற பகுதியில், உதயனன்சரிதம் சுருக்கமாகவும், அவன் மகன் நரவாகனதத்தன்சரிதம் பெருக்கமாகவும் கூறப்பட்டுள்ளன என்றும், பின்னவனுன நரவாகனன் மணந்த மனைவியர்பலருள் அறுவருடைய கதைகளே இப்போது கிடைப்பன என்றும், இக்கதை 'வேகவதீ லாபம்' என்ற ஸர்க்கத்தில் விவரிக்கப்படுவது என்றும் கூறுவர் (சோமசுந்தரதேசிகர் வெளியிட்ட நரவாகனதத்தசரிதம், பக். 2; 21-23).

மஞ்சுகையைத் தூக்கிச் சென்றனன். ஆனால், ஒரு சாபத்தால் அவளுக்குத் தீங்கொன்றும் செய்ய இயலவில்லை. அவளைச் சிறைவைத்து என்னைப் பாதுகாக்கும்படியும், நற்புத்தி புகட்டித் தன்னை மணந்துகொள்ளுமாறு தூண்டும்படியும் வேண்டினன். மதனமஞ்சுகையோ, எப்பொழுதும் அழுதகண்ணுடன் உன் பேரெழிலையும் பெருமைகளையுமே பேசியும் நினைந்தும் வருந்தினள். அதனால் நான் அவள்மேல் இரக்கங் கொண்டு, அவளுடைய நிலைமைகளை உன்னிடஞ் சொல்வதாக ஏற்றுக்கொண்டேன். அவள் வார்த்தைகளால் எனக்கும் உன்னைக் காணும் விருப்பம் பெரிதும் உண்டாயிற்று. உன்னைக் கண்டபின் உன்பால் உண்டான காதல்மிகுதியால் மதனமஞ்சுகைக்குச் சொன்னசொல்லைக் காப்பாற்ற என்னால் முடியவில்லை. இனி, மதனமஞ்சுகை உள்ள இடத்துக்கு உன்னை அழைத்துச்செல்லுகிறேன்'' என்று கூறி, வேகவதி தன் இயற்கையுருவோடு அவன்முன் தோன்றினள். தோன்றியவளைக் கண்ட நரவாகனன் காதல்மிக்கவனாய் அவளைக் கலந்து மணந்து, மதனமஞ்சுகையையும் மறக்கலாயினன்.

மானதவேகன், தன் தங்கை வேகவதியைக் காணாமையால் வருந்தி அவளைத் தேடச்சென்றவன், முடிவில் அவள் நரவாகனனோடு வாழ்க்கைக் கண்டனன். ஒருநாள் நரவாகனன் உறங்கிக் கொண்டிருக்கும்பொழுது இவ்விஞ்சைவேந்தன் அவனை ஆகாய மார்க்கமாகத் தூக்கிச்செல்ல, நரவாகனன் வழியில் விழித்துக் கொண்டான். அக்காலத்தில் இருவருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. கீழே, உறங்கி விழித்துக் கொண்ட வேகவதி தன் காதலனைக் காணாது திகைத்து, நடந்ததை அறிந்தவளாய், **விண்ணிடை**

விரைந்து பறந்து சென்று, தன் தமையனைச் சந்தித்து அவனுடன் பெரும்போர் புரியலானாள். அதனில், மானதவேகன் நரவாகனனைக் கைவிட்டுவிட வேண்டியதாயிற்று. அதனால், அந்தரத்தினின்று வீழ்ந்த அவனை அமிர்தபதி என்ற அவனது பழைய நண்பன் காப்பாற்றினன். பின்பு, வேகவதி தன் காதலனான நரவாகனதத்தனை அடைந்து இன்புற்று வாழ்ந்தனள் என்பது அவ்வரலாறு.

இவற்றால், பெருங்கதையிலும் நரவாகனசரிதத்திலும் கண்ட வேகவதீலாபமென்றகதையே திருமங்கையார் பாடியருளிய வேகவதி வரலாறு என்பது நன்குதெரியவரும்.

இனி, மேற்கூறிய மடற்கண்ணிகளில் "வேகவதி... வாளமருள்......காளையைக் கைப்பிடித்து" என வருவதனால், மானதவேகன் தன் முன்னோனென்றலாயினும் வேகவதி அவனைப் போரில் வென்று தன் கணவனைக் கைப்பற்றிய செய்தி அறியப்படும். மேலேகாட்டிய நரவாகனசரிதத்தில், வேகவதிக்கும் அவள் தமையனுக்கும் ஆகாசத்தில் போர் நடந்ததாகக் கூறப்பட்டுளது. இதனால், அச்சரிதத்துக்கு ஏற்ப, மடலில் 'வாளமருள்' என்று ஆதிப்பாடமாக அமைந்திருந்ததுபோலும். வான் அமர் - ஆகாசப்போர். ணகர ளகரங்கள் ஏட்டெழுத்துக்களில் மாறிய இடங்கள் பலவாம்.

இக்கதைபோலவே, சிறிய திருமடலில்—

> **"வாரார் வனமுலை வாசவ தத்தையென்று**
> **ஆரானுஞ் சொல்லப் படுவாள் அவளுந்தன்**
> **பேராய மெல்லா மொழியப் பெருந்தெருவே**
> **தாரார் தடந்தோள் தளைக்காலன் பின்போனாள்**
> **ஊரா ரிகழ்ந்திடப் பட்டாளே"**

என்று இவ்வாழ்வார் பாடிய வரலாறு, மேற்கூறிய நரவாகனனுடைய தந்தை உதயனனால் காதலித்து மணக்கப்பெற்ற வாசவதத்தையின் சரிதம் என்றும், மேற்கூறியது அவன் மகனைக் காதலித்தவளது சரிதம் என்றும், இவற்றுக்கெல்லாம் மூலம் குணாட்யரது பிருகத்கதையும்; அதன் வழி நூல்களுமே என்றும் நாம் அறியலாகும்.

18. பெரிய திருமொழி 2-9-1 ஆம் பாசுரத்தில்—

"பல்லவன் **வில்லவ னென்றுலகிற் பலராய்ப்**
**பலவேந்தர் வணங்குகழற்**
**பல்லவன் மல்லையர் கோன்பணிந்த பரமேச்சுர**
**விண்ணகரமதுவே"**

என்ற அடிகளில், 'பல்லவன் வில்லவன்' என்பது 'வல்லவன்' என்று திருத்தம் பெறவேண்டும். [வல்லவன்-சளுக்கியன். வில்லவன்-சேரன்.]

திருமங்கை மன்னன் அருளிய பரமேச்சுர விண்ணகரப் பதிக முழுவதும் இரண்டாம் நந்திவர்மன் என்ற பல்லவமல்லனது வரலாறுகளைக் கூறுவதென்பதும், பெருவீரனும் பரம வைஷ்ணவனுமான இவ்வேந்தர் பெருமானது நீண்ட ஆட்சிக்காலத்தில், இவ்வாழ்வாரும் விளங்கியவர் என்பதும் முன்பே தெளிவிக்கப் பட்டுள்ளன.[1] இப்போது வழங்கும் மேற்கண்ட பாட முறையில், இப் பல்லவ மன்னனுக்குப் பணிந்தடங்கிய வேற்றரசர்களிலே, பல்லவ மன்னனும் ஒருவன் என்று கொள்ள நேர்கின்றது. பல்லவ மன்னரிருவரிருந்து ஒருவரை யொருவர் இவ்வாறு வணங்கியவராக ஆழ்வார்

1. **ஆழ்வார்கள் காலநிலை, திருமங்கைமன்னன்வரலாறு காண்க.**

ஒருகாலும் பாடியிரார் என்றே சொல்லலாம். பல்லவரின் பழம் பகைவருள்ளே தலை சிறந்தவர், சளுக்கியவேந்தர் என்பது சரித்திரப் பிரசித்தம். இவர்களே வல்லபர், வல்லவர், என்று நூல்களும் சாஸனங்களும் வழங்குவன இவற்றுள் 'வல்லவன்' என்பதே பல்லவன் என்று இங்கு மாறியதெனச் சொல்லலாம்.

**' யஸ்ய வல்லப களப்ர கேரளாः பாண்ட்ய சோள**
**துளு கோங்கணாதய:**
**த்வாரதேச ஸமயா பிகாங்க்ஷிணஸ் ஸேவிதும் நிரவகாச**
**மாஸதே''**

என்பது மேற்கூறிய மல்லவபல்லனது 61-ஆம் ஆண்டில் அமைந்த சாஸன சுலோகம். ''எவனுடைய அசார வாசலிலே வல்லபர், களப்பிரர், கேரளர், பாண்டியர், சோழர், துளுவர், கொங்கணர் முதலிய மன்னர்கள் சமயத்தைவிரும்பியவர்களாய், அது கிடைக்காமற் காத்திருக்கின்றனரோ'' (அந்த நந்திவர்மபல்லவன்) என்பது இதன் பொருள்[1] தம் காலத்தில் இச்சாஸனம், வல்லபரைத் தலைமையாகவைத்துக் கூறியவாறே,

**''வல்லவன் வில்லவ னென்றுலகிற்**
**பலராய்ப் பல்வேந்தர் வணங்குகழற், பல்லவன்''**

என்று ஆழ்வாரும் பாடினர் என்பதே பொருத்தமாகும். இவ்வடியின் நான்காஞ்சீரிலே **பலராய்** என்பதிலுள்ள பகரத்தை மோனை யெழுத்தாகக்கருதி அதற்கேற்பப் பல்லவன் என்று முதற்சீரைப் பின்னோர் மாற்றிக் கொண்டனர்போலும். இனி,

**'உலகிற் பலராய்ப் பலவேந்தர்'**

1. *பட்டத்தான்மங்கல தாம்பிரசாஸனம்.*

என்பதனுள், 'பலராய்' என்ற பின்னரும் 'பல' என ஆழ்வார்திருவாக்கில் திரும்பப் பயிலக்கூடியதன்று. 'பலபெயர்களாலேசொல்லக் கூடிய பல அரசர்கள்" என்று, உள்ளபாடத்துக்குப் பொருள்சொல்லக்கூடும். 'வல்லவன் வில்லவன் என்று பலராய்' என்பதே அப் பொருள் தரக்கூடுமாதலால், புனருத்தியாக இவ்வாறு பாடப்பட்டிராது என்றே சொல்லலாம். ஆகவே 'வல வேந்தர்' என்றிருந்தது 'பலவேந்தர்' என மாறியதோ என்று தோன்றுகிறது.[2] பழைமையான தமிழ் கிரந்த எழுத்துக்களிலே, வகர பகரங்கட்குள் அதிக வேற்றுமை யில்லை. இதுபோலும் மாற்றங்கட்கு அவ்வெழுத்துக் களின் ஒற்றுமையும் ஒரு காரணமாகும். 'வல்லவன்' என்ற பாடத்துக்கு, மேற்குறித்தபடி, ஐந்து ஆறுஞ்சீர் களில் மோனை பயிலுதல் நோக்கிக்கொள்க.

19. ஷை திருமொழி 3-4-4-ஆம் பாசுரத்தில்—

"பஞ்சியமெல் லடிப்பின்னை திறத்துமுன்னாள்
பாய்விடைக ளேழடர்த்து"

என்றுள்ள தொடரிலே, 'பஞ்சியமெல்லடி' என்பது 'பஞ்சி மெல்லடி' என்று திருத்தம்பெறத் தக்கது.

"பஞ்சி மெல்லடிப் பரல்வடுப் பொறிப்ப"
(பெருங்கதை 2-9-162)

"பஞ்சிமெல்லடியனார்தம் பாடகந்திருத்தி"
(சீவக. 2318)

"பஞ்சிமெல்லடிப்பாவை" (கம்பரா. கங்கை. 20.)

ஷை ஷை ,, (பெரியபு. தடுத்தாட். 160)

---

2. இவ்வாறன்றி, பலவேந்தர் - வலிபொருந்திய என்று பொருள் கொள்ளுதலும் அமையும்.

என்ற முன்னோர்தொடர்களை நோக்குக. பஞ்சுதல் என்று ஒரு வினையின்மையாலும், பண்பீறன்றிப் பெயரீறுகள் இவ்வாறு திரிதலருமையாலும், வ்யாக்யானத்துக்கும் இப்பாடம் விரோதமாகாமையாலும் திருத்தப் பாடமே பொருத்தமாதல் அறியலாம். 'பஞ்சிமெல்-லடிப்பின்னை-திறத்து-முன்னாள்' என்று விருத்தச்சீரோசை பிரிவனவாம். பஞ்சி எனினும் பஞ்சு எனினும் ஒக்கும். இனி, 'பஞ்சியன்மெல்லடி' என்பது பழம்பாடமாயினும் ஆகலாம். இப்பாசுரத்தின் ஈற்றடியின் முதற்சீரிலும் **'செஞ்சுடரவெயில்'** என்று, ஓசை நயம்பெறத் திருத்தங் கொள்க.

20. ஷை திருமொழி 6—6—4 ஆம் பாசுரத்தில்—

**''வெங்கண்மா களிறுந்தி விண்ணி ஏற்ற**
**விறன்மன்னர் திறலழிய வெம்மா வுய்த்த**
செங்கணான் **கோச்சோழன் சேர்ந்த கோயில்**
**திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே''**

என்று வீரவேந்தனான சோழன் செங்கணானது வெற்றிச்செயலைச் சிறப்பிக்கின்றார் திருமங்கைமன்னன். இவ் வேந்தனது வீரப் பெருமைகள் அகநானூறு புறநானூறுகளிலும் களவழிநாற்பதிலும் கூறப்பட்டுள்ளன. இவனைப்பற்றிய அவ்அடிகளில், 'விண்ணி' என்றசொல் **வெண்ணி** என்று திருத்தம் பெறற்குரியது. வெண்ணி என்பது தஞ்சாவூர்க்குக் கிழக்கே 15 மயிலில் ரயில்வே ஸ்டேஷனாகவும், தேவாரப்பாடல் பெற்றதாகவும் உள்ள **திருவெண்ணி, கோயில் வெண்ணி** என்று வழங்கப் படும் தலமாகும்.

**''வெண்ணித் தொன்னகர் மேயவெண் டிங்களார்''**

என்பது அப்பர் வாக்கு. ''வெண்ணிக் கூற்றத்து வெண்ணியே'' என்ற தேவாரத்தொடரால் இது முன்பு ஒரு

கூற்றத்தின் தலைநகராயிருந்தமை தெரியலாம். சங்க காலத்தில், சேரசோழர்க்குள் பெரும்போர் நிகழ்ந்த களங்களுள் இவ்வெண்ணியும் ஒன்று (அகம். 55, 246; புறம். 66). **வெண்ணிக்குயத்தியார்** என்று, சங்கநாளிற் பேர்பெற்றிருந்த பெண்பாற்புலவரும் இவ்வூரினரே யாவர். செங்கணான் போர் நிகழ்த்திய களம் இவ்வூரே யாதலின், இதனை 'வெண்ணி' என்றே படித்துக் கொள்க.

21. ௸, திருமொழி 6-ஆம் பாசுரத்தில்—

**''மின்னாடு வேலேந்து** விளைந்த **வேளை**
**விண்ணேறத் தனிவேலுய்த் துலக மாண்ட...சோழன்',**

என்ற அடிகளிலே, மேற்கூறிய சோழனது வேறொரு வெற்றிச்செயலும் கூறப்பட்டுள்ளது. இதனில் '**விளைந்த**வேளை' என்பதை **விளந்தை**வேளை எனத் திருத்திக் கொள்க. இத்திருத்தம்பற்றி, 16-வருஷங்கட்கு முன்பே **ஆழ்வார்கள் காலநிலை**யுள் குறிப்பிட்டுள்ளேன். விள்ந்தை என்பது, திருச்சிராப்பள்ளி ஜில்லா உடையார் பாளையம் ஜமீனைச் சார்ந்து, கோட்டை முதலிய பழஞ்சின்னங் களுடன் இன்றும் உள்ள ஊராகும். இவ்வூரைத் தலைமையாகக் கொண்டு இதனைச்சூழ்ந்துள்ள பகுதி **விளந்தைக்கூற்றம், விளந்தைப் பற்று** என வழங்கி வந்தது. சோழன் செங்கணானுக்கும் சேரமான் கணைக்காலிரும் பொறைக்கும் பெரும்போர் மூண்ட களமான **கழுமலம்** என்ற அரண் பெற்ற ஊர் இவ்விளந்தைக்கூற்றத்தைச் சார்ந்ததே. அப்போரில், சேரன்படை முதலியான **கணையன்** என்பவனை வென்று அக்கழுமலத்தைச் செங்கணான் கைப்பற்றினான் என்று அகநானூறு முதலிய சங்க நூல்கள் கூறுகின்றன. இவற்றினின்று

விளந்தைக்கூற்றத்தில் நடந்த போரையே அந்நூல்கள் கூறுவன என்றும், அவ்விளந்தைத் தலைவனான வேளே சேரன்படை முதலியான கணையன் என்றும் கருத இடந் தருகின்றது. இவ்வாறாயின் விளந்தைவேளான சேரன் படைத்தலைவனைப் போரில் வென்று சோழன் உலக மாண்டசெய்தியைச் சங்கநூல்கள்போலவே, திருமங்கை மன்னனும் கூறினாராயிற்று. ஆராய்ச்சித்தொகுதி யிலும் இதனை நன்கு விளக்கியுள்ளேன் (பக். 245—8).

22. பெரியதிருமொழி 7-7-2-ஆம் பாசுரத்தின் முதலிலே-

**''பரனே ! பஞ்சவன் பௌழியன் சோழன்**
**பார்மன்னர் மன்னர் தாம்பணிந் தேத்தும்-வரனே !''**

என்ற தொடருள், 'பௌழியன்' என்று ஓதும் பாடம் 'பூழியன்' என்று திருத்தற்குரியது. பூழியன்-பூழி நாட்டுக்குரியவன். பூழி-சேரமண்டலத்தின்பகுதியான கொடுந்தமிழ்நாடுகளில் ஒன்று; ''குடங்கற்கா வேண் பூழி'' என்ப. இந்நாட்டுரிமைபற்றிச் சேரனைப் பூழியன் என்ற பெயரால் பழைய நூல்களும் நிகண்டுகளும் வழங்குவன. இப்பூழிநாடு பாண்டியர்வசமான பிற்காலத் தில் அப்பாண்டியனைப் பூழியன் என்ற பெயரால் வழங்கியது முண்டு. ஆனால் பழையவழக்கு அவற்கு இல்லை. பௌழியன் என்ற தத்திதம்போன்ற பெயர் வழக்கு சேரர்க்கு யாண்டும் காணப்படாமையால் இதுவும் திருத்தம் பெறத்தக்கதே.

23. ஷை திருமொழி 10-2-4-ஆம் பாசுரத்தில்—

**''மாமயிலன்ன அஞ்சலோதியைக் கொண்டுநடமின்''**

என்ற தொடரில், 'அஞ்சலோதி' என்பது வ்யாக்யான பாடம். இதற்கு—''அஞ்சு-(இருட்சி, சுருட்சி, நீட்சி

குளிர்ச்சி, அழகு என) அஞ்சுவகைப்பட்டிருக்கை, அல் என்று ராத்ரி; அத்தால் இருட்சியை நினைக்கிறது. ஓதி என்று மயிர்முடி'' என்பது அவ்வியாக்யானபந்தி. இப்பாடத்தின் பழம்பொருளை நாம் கௌரவிப்போமாக. ஆயினும் '**அஞ்சிலோதி**' என்பது, பழைய தமிழ் வழக்கானபாடம் என்பதை நாம் மறக்கமுடியாது. சங்கச்செய்யுட்களிலும் பின்னூல்களிலும் அழகிய பெண்பாலைக் குறிக்குமிடத்து இத்தகைய தொடரே வழங்குவதாம்.

**ஐங்குறுநூறு** (49, 299, 391,448) **குறுந்தொகை** (280)
**சிலப்பதிகாரம்** (25, 75) **சீவகசிந்தாமணி** (134, 691)

என்பன முதலிய இடங்களிற் கண்டுகொள்க. அம் சில் ஓதி-அழகிய, சிலவாகிய, கூந்தலையுடைய பெண். 'சின்மெல்லோதி' என்றும் வழங்குப (பெருங்கதை. 1-41-76). பெண்ணின் இளமைபற்றிக் கூந்தற்குச் சின்மை கூறப்பட்டதென்க. சின்மை-சிலவாந்தன்மை; குறுமையுமாம் (பதிற். 76- உரை).

24. ஷை திருமொழி 11-8-3, 4-ஆம் பாசுரங்களிலும், மற்ற ஆழ்வார் அருளிச்செயல்களிலும்—

**''தூங்கார் பிறவிக்கள் இன்னம் புகப்பெய்து''**

**''உருவார் பிறவிக்கள் இன்னம் புகப்பெய்து''**

**''உன்னடிக்கள் எந்நாள்வந்து கூடுவனே''**

**''கூட்டரிய திருவடிக்கள் எஞ்ஞான்று கூட்டுதியே''**
(திருவாய் 6-10-6; 4-10-6)

**''மெல்லடிக்கள் குருதிசோர''** (பெருமாள். 6-4)

என்பன முதலிய பலவிடங்களில் '**பிறவிக்கள்**' '**திருவடிக்கள்**' என்றிவ்வாறுள்ளவை '**பிறவிக்கண், திருவடிக்கண்**'

என்று திருத்தமாக ஓதற்பாலன. 'தேகாத்மாபிமான மானஜன்மங்களிலே...பிரவேசிப்பித்து'' என்பது முதல் மேற்கோளின் வ்யாக்யானம். அதனுல் இவ்விடங்களி லெல்லாம் 'கண்' என்ற ஏழாம் வேற்றுமையுருபே முன்னோர் வழங்கிய பாடம் என்பது தெரியலாம்.

25. ஷை திருமொழி 8-10-6, 7-ஆம் பாசுரங்களிலும், 5-2-ம் திருமொழி முழுதினும்—

**''நமன்றமர் பற்றுது காத்திபோல் கண்ணபுரத்
துறையம்மானே''**

**''உன்றமர்க்கென்றும் நமன்றமர் கள்ளர்போல்''**

எனவருந் தொடர்களிலே, 'போல்' என்பவை '**காத்தி போன்ம்**' '**கள்ளர்போன்ம்**' என்றே ஓதற்பாலன. போன்ம்-போலும் என்பதன் திரிபு. இதனை ஒப்பில்போலியில் வரும் உரையசை என்பவர். முற்றுவினையிலும் 'திசையறி மீகானும் போன்ம்' (பரிபா.) என்று இவ்வாறு திரிந்துவழங்கும். ளகர லகரங்கள் திரிந்து, மருண்ம் (=மருளும்), போன்ம் (=போலும்) என ணகர னகரங்களின் முன் வரும் மகரம் மாத்திரை குறுகலின் மகரக்குறுக்கம் என்பர் இலக்கணநூலோர். இம் முறையே திருமாலையில்—

**''நின்னோடு மொக்க வழிபட அருளினய்போன் மதிற்றிரு
வரங்கத்தானே''**

என்ற தொடருள், 'போன்மதில்' என்று புணர்ந்துள்ள தைப் '**போன்ம்** மதில்' என்று பிரித்து ஓதுக. இவ்வாறு பிரித்தோதாக் குறையிலிருந்தே, 'போல்' என்பதே நேருருவம் என்றுகொண்டு, பலவிடங்களிலும் அதுவே வழங்கலாயிற்று.

**'சோம்பரை உகத்திபோலும்'**

**'அவர் கடாம் புலையர்போலும்'**

என ஏனையிடங்களில், இச்சொல்லின் திரிபில்நிலை தொண்டரடிப் பொடியாழ்வார் வாக்கால் விளங்கியவாறே,

**'வழிபட அருளினாய்போன்ம்'**

என அதன் திரிந்தநிலையும் அவர் திருவாக்கிற் பயின்றுள்ளமை உணரத்தக்கது.

26. பெரிய திருமொழி 1-4-6-ஆம் பாசுரத்தில்—

**''காரணந் தன்னாற்** கடும்புனற் கயத்த
**கருவரை பிளவெழக் குத்தி**
**வாரணங் கொணர்ந்த கங்கையின் கரைமேல்**
**வதரியாச்சிராமத்து ளானே''**

என்ற அடிகளின் முதலில் 'கடும்புனற் கயத்த' என்ற பாடம் இப்போது வழங்கிவருகின்றது. இதற்குத் திவ்யார்த்ததீபிகை ஆசிரியரான ஸ்ரீ. உ.வே. அண்ணங்கராசாரியஸ்வாமி,

''வேகமாகப் பெருகுகின்ற ஜலம் நிறைந்த பள்ளங்களையுடைய......'' (மலை அல்லது கங்கை) என்று பதப் பொருளும்,

''கயத்த என்பதற்குத் 'தகைந்த' என்று சிலர் பொருள்கூறுவர். அஃது ஆதராமற்றதாகும். **கைத்த** என்ற பாடமிருப்பின், அப்பொருள் கொள்ளலாகும்...... பெரியவாச்சான்பிள்ளை அருளிய வ்யாக்யானத்தில்— 'பகீரதன் கங்கையை அவதரிப்பிக்கிறபோது, நடு வழியிலே ஒரு மலை **தகைந்துகொடு**நின்றதாக, அத்தை

இருபிளவாம்படி குத்தி யானைகளையும் உருட்டிக் கொண்டு இவ்வருகேபோந்து இழிந்ததாகச் சொல்லக் கடவது' — என்று அருளிச்செய்திருப்பதைக் கண்டு, 'கயத்த' என்பதற்குத் **தகைந்த** என்று சிலர் பொருள் வரைந்திட்டனர் ......அவ்வாறுகொள்ள வழியுமில்லை, அவசியமுமில்லை."

என்று விரிவுரையும எழுதியருளினர். ஆனால் ஸ்வாமி கூறிய பொருள், பெரியவாச்சான்பிள்ளை எழுதாத அர்த்தாந்தரமேயாகும். அப்பொருளின்படி, 'கடும்புனற் கயத்த' என்பது கங்கையை விசேடிப்பதானல், அது தூரான்வயமாகின்றது. அவ்விசேடணத்தால் பெறப் படும் பொருணயத்தினும், பிளவெழக்குத்தப்பட்டதற்கு ஏதுவைக் குறிக்கவேண்டி மலை அவ்வாறு விசேடிக்கப் பட்டதென்பதே சிறப்பாகும். பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானத்தில் 'ஒருமலை **தகைந்து** கொடுநின்றதாய்', 'அம்மலை **தகைந்த**வளவிலே' என்று இருமுறை **தகைதற் சொல்** பயில்வதாலும், இதற்கேற்ப, 'ஜலத்தைத் தகைந்த' என்று பதவுரைகாரரும் எழுதியிருப்பதாலும், 'ப்ரஸக்தியை நிருபணஞ்செய்வதற்காக' அன்றி, ஏதோ ஒரு மூலச்சொல்லைத் திருவுளத்துக்கொண்டே தகைதற் பொருளை அப்பெரியார் குறிக்கலாயினர் என்பதில் ஐய மில்லை. ஆழ்வாரது சொல்தொடரமைதிகளை அடி யொற்றியே பெரியவாச்சான்பிள்ளையின் வ்யாக்யான பந்திகள் பெரும்பாலும் அமைந்துள்ளன என்பதையும், பாடவுண்மைகள் விளங்குவதற்கு அவை பேருதவியா யிருப்பதையும் தீபிகையாசிரியான ஸ்வாமியே பல இடங்களிலும் நிருபணஞ்செய்திருக்கிருர். சிறிது நுணுகிநோக்கினல், பிரஸ்தாபப்பாடத்திலும் அவ்வாறு

உண்மைப்பாடம் உள்ளடங்கியிருப்பது புலனாகக் கூடியதாம். அதனைச் சிறிது இங்கே விளக்குகிறேன்.

பழைய தமிழ்நூல்களெல்லாம், சுவடிகளினின்றே பெயர்த்தெழுதிப் பதிப்பிடப்பெற்றவை என்பதை அறியாதாரில்லை. அவ்வேட்டெழுத்துக்களிலே, ஒற்றுக்களுக்குப் புள்ளிகுத்தும் வழக்கம் பெரும்பாலும் கிடையாதென்பதையும் அவைகளிற் பயின்றார் நன்கறிவர். அம்முறையில், இப்போது எடுத்துக் கொண்ட தொடர்,

'கடுமபுனறகயதத கருவரை'

என்று பழைய ஸ்ரீகோசங்களில் அமைந்திருப்பதைப் பொதுவாகவே காணலாம். இதனை ஒற்றிட்டுப் படிப்போர்,

'கடும்புனற்கயத்த...' என்றேனும்

'கடும்புனற்கய்த்த...' என்றேனும்

'கடும்புனறகய்த்த...' என்றேனும்

வாசித்துப் பாடங்கொள்ளுதல் இயல்பேயாகும். இவற்றுள், முதலிற் காட்டியதே, இப்போது பாடமாகிப் பதிப்பும்பெற்றது. ஆனால், பெரியவாச்சான்பிள்ளை காலத்துப் பாடமோ,

'கடும்புன றகைத்த கருவரை'

என்பதே. 'வேகமாகவரும் நீர்ப்பெருக்கைத் தடுத்து நின்ற கரிய மலை' என்பது பொருள். [கடும்புன றகைத்த-கடும்புனல் தகைத்த.] தகைத்த என்பதன் இடையிலுள்ள 'கை', ஓசையொற்றுமையால், 'கய்' எனப் போலியாகப் பின்னோரால் எழுதப்பட்டதேயாம். ஆகவே, 'கடும்புனல் தகைத்த' என்ற ஆழ்வார்

திருவாக்கை அடியொற்றியே 'ஒருமலை **தகைந்ததாக, தகைந்தவளவிலே'** என்று பெரியவாச்சான்பிள்ளை பொருளருளிச்செய்தனர் என்க. 'நினைத்த, நினைந்த' என்பனபோலத் தகைத்த, தகைந்த என்பவை ஒத்த செயப்படுபொருள் குன்றுவினைகளேயாம். ஸ்வாமி குறித்தபடி, 'கைத்த' என்று பாடங்கொள்ளின், அது, தகைந்த என்ற பொருளை நேரே பயவாமையும காண்க. 'கடும்புனற்கயத்த' என்பதுபோல, ஏட்டெழுத்துக்களின் மயக்கத்தால் வழங்கிய பாடங்கள் அருளிச்செயல் வியாக்யானங்களிலும், முன்னூல்களிலும் உண்டு. உதாரணமாக :—'பொருள்வயிற் பிரிகிறேன்' என்றிருத்தற்குரிய வியாக்யானத்தொடரை, 'பொருளவையிற் பிரிகிறேன்' (பெரியதிருமொழி. 9—3—2) என்றும், 'நானவல் அப்பம்' என்ற தொடரை 'நான் வல அப்பம' (ஷை 10-5-6) என்றும் பின்ஞோர் பிரித்திடர்ப்பட்டமை ஒப்பிடத்தக்கது. இவற்றுள், பொருள்வயின் என்பதில் **வயி** என்பது **வை** என ஓசையொப்புமையால் மாறியது போன்றதே தகைத்த என்பது தகய்த்த என மாறியதும் என வுணர்க. பரிபாடல் உரைப்பாயிரத்தில்,

> **''எழுதினர் பிழைப்பும் எழுத்துரு வொக்கும்**
> **பகுதியின் வந்த பாடகர் பிழைப்பும்**
> **திருந்திய காட்சியோர் செவிமுதல் வெதுப்பலின்**
> **மதியின் றிகைப்பு விதியுளி யகற்றி''ப்**

பரிமேலழகர் அந்நூற்கு உரையிட்ட அருமையை அவர் காலத்து அபியுக்தரொருவர் பாராட்டியிருத்தலும் காண்க.

27. இனி, இப்பாடலைக்கொண்ட பதிகமுழுதினும்—

> **''வதரியாச்சிராமத்துளானே''**

என்றே திருப்பதியின்பெயர் வழங்குகின்றது. இப்பெயர் வழக்குப் பற்றித் திவ்யார்த்த தீபிகையில்,

(ஆச்சிராமம் என்பதனுள்)—"ரா என்று நீட்ட வேண்டிய காரணமொன்றும் இல்லை. 'பதரிகாச்ரமம்' என்ற வடசொல், வதரியாச்சிரமம் என்று திரியுமே யன்றி, ரகரம் நீண்டுவரக் காரணமில்லை.............. ஆயினும் (பெரியோர் வழங்குவதால்) அப்பாடத்தையே ஆதரிக்கமுற்பட்டோம்."

என்று எழுதப்பட்டுளது. இதனால், ஆச்சிராமம் என்ற வழக்குத் தவறுனதாயினும் பெரியோர்பாடம் என்று தீபிகையாசிரியர் கருதினர் என்பது தெரியலாம். இவ்வாறு, ஆச்சிராமவிஷயத்தில் எவரும் சிரமங் கொள்ளவேண்டிய அவசியமில்லை. வடமொழி தென் மொழிச் சொற்றொடர்களிலே, இடையில்வரும் அகரம் நீண்டு மருஉவாய் வழங்குவது தொன்றுதொட்ட தமிழ் வழக்கேயாம். காண்டாவனம், இட்டாதெய்வம், வயிச்சி ராவணன் முதலாக ஆழ்வார்கள் வழங்கியுள்ளமை காண்க. வயிச்சிராவணன் என்ற சொல்வழக்கை முன்னோர் அருளிய வ்யாக்யானக்குறிப்பும் நன்கு வலியுறுத்துகின்றது. [இக்குறிப்பை ஸ்வாமி இடைச் செருகலாகக்கொண்டது என்னே?] உலகவழக்கிலும், காலாகாலம், சகாதேவன், கத்தாரிக்காய், அஞ்சாறைப் பெட்டி என, இடையில் அகரம்நீண்டு வழங்குதல் காண லாம். சிவதலங்களிலே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர், சுந்தரமூர்த்திநாயனர்—இருவராலும் பாடப் பெற்ற திருப்பதியொன்று, பாச்சிலாச்சிராமம் என்ற பெயர்பெற்றிருத்தலும், தேவாரத்தில்,

**''பாச்சி** *லாச்சிராமத்***துறைகின்ற சங்கொளிவண்ணர்''**
**''பாச்சி** *லாச்சிராமத்தெம்* **பரமர்''**

என்று இவ்வாறே, அந்நாயன்மார்களால் பதிகமுழுதும் பாடப்பெற்றிருத்தலும் மேற்கூறிய உண்மையைக் கரதலாமலகமாக்குவனவாகும்.

28. ஷெ 9, 5. 7-ஆம் பாசுரத்தில்—

**—''தேவ ரொருவ ரிங்கே புகுந்தென்**
**அங்க மெலிய வளைகழல** ஆதுகொலோவென்று
**சொன்னபின்னை**
**ஐங்கணை வில்லிதன் னுண்மையென்னோ டாடும்''**

என்ற அடிகளில், 'ஆதுகொலோ வென்று' என்ற தொடர்,

**'யா(ஆ)துகோலோவொனறு'**

என்று திருத்தம்பெறத்தக்கது. தேவரொருவர் இங்கு எழுந்தருளி, ஏதோ ஒன்றை என்னிடஞ்சொல்லிச் சென்ற பின்பு, 'என் உடலம் கிருசமாயிற்று. காமவேதனை மிக்கது' என்பது கருத்து. இப்பாடமே பெரியவாச்சான் பிள்ளை திருவுள்ளம் என்பது—

> ''(அங்கம் மெலிய வளை கழல) **ஒன்று** சொன்னாராயிற்று; பிரிவைப் பிரஸங்கித்தாராக இவை (அங்கம் வளைகள்) தன்னடைவே போய்க்கொடு நின்றது. (யாதுகொலோவொன்று) பிரியேன் என்கிற பாசுரத்தாலே பிரிவை உணர்த்தினாயிற்று, வ்யதிரேகத்தாலே அறிந்துகொள்ளுகிறாள் என்று. அதுவும் வாய்கொண்டு சொல்ல மாட்டாமை 'யாதுகொலோ' என்கிறாளாயிற்று இவள்''

என்ற வ்யாக்யானத் தொடர்களால் அறியப்படும். "ஒன்று சொன்னார், அதனால் அங்கம் மெலிய வளைகள் கழன்றன. அங்ஙனம் சொன்னசொல்லும் உடன் பாடன்றி மறைவினையான தொன்று (பிரியேன் என்பது) அதுவும் வாயாற்சொல்லி யாற்றுந் தரத்த தன்று" -என்பது போந்தபொருள்.

திவ்யார்த்த தீபிகைக்காரர்—"ஆதுகொலோ என்று சொன்னபின்னை - அப்படிப்பட்ட பிரிவை உணர்த்தினது முதலாக" என்று பதவுரையிலும், "ஆதுகொலோ வென்று'—**அது** என்பது **ஆது** என நீண்டுகிடக்கிறது; "உன்னை ஒருநாளும் விட்டுப்பிரியமாட்டேன்' என்று காதலர்கூறும் வார்த்தையுண்டே, அதுவே இங்கு விவக்ஷிதம்" என்று விசேஷவுரையிலும் எழுதியுள்ளார். இப் **பதபாடம்** பெரியவாச்சான்பிள்ளை எழுதாதது. மூலத் தொடர்க்கோ, வ்யாக்யானபந்திக்கோ இப் பதவுரை கருத்துரைகள் எவ்வாறு பொருந்துவன என்பதும் தெரியவில்லை. மேற்கூறிய வ்யாக்யானபந்திகளையும் அதன் கருத்தையும் ஆராயும் அறிஞர்க்கு 'யாது கொலோ ஒன்று' அல்லது 'ஆதுகொலோவொன்று' என்பதே ஆழ்வாராசாரியர்கள் திருவுள்ளமான பழம் பாடமென்பது மிகத் தெளிவாகும். ஆது-யாது. (பெ. திருமொழி. 9-3-9.)

29. திருமங்கையாழ்வார் அருளிய திருவெழு கூற்றிருக்கையில், 'கற்போர் **புரிசெய்** கனகமாளிகை' என்று பாடமும், அதற்கு 'வித்வான்கள் படுகாடு கிடக்கும் நகரி,' 'பொன்னாலே செய்யப்பட்டமாளிகை' என்று வ்யாக்யானமும் காணப்படுகின்றன. திவ்யார்த்த தீபிகையாசிரியரும் இங்கு—"பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்திக்குத் தகுதியாகப் **புரிசெய்** என்ற பாடம்

கொள்ளத்தக்கது......கற்போர்களுடைய புரியாகச் செய்யப்பட்டதென்க" என்று குறிப்பெழுதியுள்ளார். ஆனால் இவ்வாசிரியர் திருவுளப்படி, 'புரிசெய்' என்று, பெரியவாச்சான்பிள்ளை பதபாடம் குறிக்கவில்லை. கற்போர் புரி (-வித்வான்கள் வாழும் நகரி) என்றும், செய்கனக மாளிகை (-கனகம்செய் மாளிகை) என்றுமே அப்பெரியார் பிரித்துப் பொருள் எழுதினர். இது கிடக்க. இனி, பெரியதிருமொழி 5-1-4ஆம் பாசுரத்தில்,

**'கற்பார் புரிசை செய்குன்றம் கவினார்கூடம் மாளிகைகள்'** என்று அவ்வாழ்வாரே அருளியதினும் 'கற்பார்புரிசை' என்று இதனோடொத்த தொடரைக் காணலாம். 'தொழில் மிக்கிருந்துள்ள புரிசை' (-மதில்) என்பது, இதற்குப் பெரியவாச்சான்பிள்ளை அருளிய வியாக்யானம். இத்தொடரே சிறிதுமாறித் திருவெழுகூற்றிருக்கையிலும் பயில்வதாயிற்று என்றும், அதனால் 'கற்போர்புரிசை' என்ற பாடமே திருமங்கைமன்னன் திருவுள்ளமென்றும் கொள்ளக் கூடுமன்றோ? இவற்றால், 'கற்போர் புரிசெய்' என்ற திருவெழு கூற்றிருக்கைப்பாடமும், அதற்கிணைந்த வ்யாக்யானத் தொடர்களும் பெரியவாச்சான் பிள்ளை கருத்துக்கு மாறானவையென்றும், "கற்போர் புரிசை - தொழில் ஓரப்படுதற்கரிய மதில்" என்று பாடமும் பொருளும் முன்பு அமைந்திருந்தவையே பின்னோரால் மாற்றப்பட்டன என்றும் கருத இடந்தருகின்றது. இப்பாடமும் பொருளும் வேறு வ்யாக்யானமொன்றில் காணப்படுவதாக, தீபிகையாசிரியர் குறிப்பிட்டிருப்பதும் அறியத்தக்கது.

30. திருவிருத்தம் 61-ஆம் பாசுரத்தில்—

**"ஞாலமுற்றும்,**

**வேயகமாயினுஞ் சோரா வகையிரண் டேயடியால் தாயவன்"**

என்பதில் 'வேயகமாயினும்' என்பது 'ஏயகமாயினும்' என்றிருத்தல் மோனைக்கு மிகவும் சிறக்கும். ஏயகம் - அம்புக்குத்திடம்; மயிர்க்குத்திடம், அம்புக்குத்திடம், கோற்குத்திடம் என்ற தொடர்கள், இடச்சிறுமைகுறிக்க வழங்குவன. வேய்ங்கழிபோலவே, அம்பும் கோல் என வழங்குவதேயாம். 'பிழையார் தாம் தொடுத்த **கோல்**' என்றார் குறிஞ்சிக்கலியிலும் (39). 'ஐங்கோலை வென்று முக்கோலைக் கைக்கொண்டவன்' என்றார் பின்னோரும். ஆதலால், வேயகம் எனினும் ஏயகமெனினும் கோற் குத்துநிலம் என்ற பொருளொற்றுமை உடையதேயாம். ஆனால் 'ஏயகம்' என்ற பாடம் மோனையின்பமுடைய தாதல் கண்டுகொள்க. திவ்யார்த்த தீபிகைகாரரும் மோனைநயம்பெறப் பாடாந்தரங்களைக் கண்டு கூறி யுள்ளது ஒப்பிடத்தகும். (பெரிய திருவந்தாதி, 24; திருவிருத். 45. உரை).

31. பெரியதிருவந்தாதி 14-ஆம் பாசுரத்தில்

**"..........................நீயார் போய்த்**
**தேம்பூண் சுவைத்தூ னறிந்தறிந்தும் தீவினையாம்**
**பாம்பார்வாய்க் கைநீட்டல் பார்த்தி"**

என்று இப்போது ஓதப்பட்டு வருகின்றது. திவ்யார்த்த தீபிகையாசிரியரான ஸ்வாமியும், இப்பாடத்தை ஏற்றுக் கொண்டே உரையிட்டருளினர். வெண்பாவீறு 'பார்த்தி' என முடிவது தமிழ்விதிக்கு முற்றும் மாறானதென்பது, அறியத்தக்கது[1]. வெண்பாவீறு, நாள் மலர் காசு பிறப்பு

1. முதற்றிருவந்தாதி 97-ஆம் வெண்பா ஈற்றடி, "புனற்கங்கை யென்னும் பெயர்ப்பொன்' என்றும் பாடம் வழங்குவதென்றும், இதனில் 'தளைதட்டுதல் இல்லையாயினும் மோனையின்பம் குறையுறுகின்றதென்க.' என்றும் தீபிகை யாசிரியர் எழுதியுள்ள குறிப்புரையும் மேற்கூறியதை வலியுறுத்தும்.

என்ற வாய்பாடொன்றால் இறுவதும், அவற்றுள் காசு பிறப்பு இரண்டும், குற்றுகரமாகவும் சிறுபான்மை முற்றுகரமாகவும் முடிவதுமே விதி. ஆழ்வார்கள் திருவாக்குக்களிலும் வேறெந்த நூல்களிலும் இவ்விதி வரம்பு மீறப்பட்டதில்லை. 'பார்த்தி' போன்றவற்றை ஆர்வமாகக்கொண்டு சிலர் வழுவமைப்பது, ஆழ்வார் திருவாக்குக்களை, விதிக்கடங்காத சித்தர் பாடலாக்க முயல்வதேயாகும். ஆகவே, 'பார்த்தி' என்று ஓதும் பாடத்தைப் 'பார்த்து' என்று திருத்தம்பெற ஓதல் வேண்டும்.

இத்திருத்தம் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானத்துக்கு விரோதமானதே அன்று. 'பாம்பின் வாய்ப்பார்த்துக் கைநீட்டல் நீ' என்று அன்வயித்து, நீட்டலைச்செய்யும் நீ' என்று திருவுளங்கொண்டு 'நீட்டு வார்போலேயிருக்கிற நீ' என்று அப்பெரியார் உரையருளினர். தீபிகையாசிரியர், 'பார்த்தி - முடியப்பார்க்கிறாய்' என்று எழுதிய பொருள், பெரியவாச்சான்பிள்ளை கூறுததேயாம். அவரது வ்யாக்யானமுடிவில் 'கிட்டுகிறாயன்றோ' என்பதற்கு, பாம்பின்வாயிலே கைநீட்டக் கிட்டுவார்போல, கிட்டுகிறாயன்றோ என்பதே பொருள் என்க. இனி, கைநீட்டல் (நீட்டுகிறது) யார்? என்று இயைத்து உரைப்பினும் அமையும். 'அங்கே கதவைத் திறத்தல் யார்' என்ற வழக்குங் காண்க.

இவ்வாறு, வெண்பாவீறு மரபுசிதையாமற் காக்கப்படவேண்டியதுபோலக் கட்டளைக் கலித்துறையீறும் காக்கப்படவேண்டியது ஒன்றுண்டு.

32. திருவிருத்தம் 40-ஆம் பாசுரத்தின், 3, 4-ஆம் அடிகள்—

**'ஞாலப்பொன் மாதின் மணாளன் துழாய்நங்கள் சூழ்குழற்கே**
**ஏலப் புனைந்தென்னை மாரென்னை நோக்குவ தென்று** கொலோ

என்று இப்போது ஓதப்படுகின்றன. இவ்வடிகளி னீற்றில் 'என்று **கொலோ**' என வந்துளது, புதுமையே யாம். கட்டளைக்கலித்துறையீறு இவ்வாறு வருவதை அருளிச்செயல்களிலோ, தமிழ்நூல்களிலோ எங்குங் கண்டதில்லை. **அது ஏகாரமாகவே முடிதல் விதி**. ஆனால் திபிகையாசிரியர்— 'என்று கொலோ' என்பதையே ஆதரிக்கிறார். இவ்வாதரவுக்குப் பெரியவாச்சான்பிள்ளை யின் 'பதபாடம்' கிடையாது. இனி, 'என்றுகொலே' என்ற பாடமும் உண்டென்பர். இதற்கு, என்றுகொல்— என்றோ; ஏ-கட்டளைக்கலித்துறை யிறுதியசை என்க. யாப்புவிதிக்குமாறாக என்றுகொலோ என்பதைக் கொள் வதினும், இப்பாடம் கொள்ளலாகும்.

ஆயினும், 'கொலே' என்ற வழக்கு அருகியதே யாம். ஏட்டெழுத்தில், ககரசகரங்கட்குள் பெரும் பான்மை எழுத்தொப்புமை உண்டு. அதனால், பாட மயக்கம் நேர்தல் இயல்பே. அம்முறையில், 'என்று **சொலே**' என்பது 'என்று **கொலே**' என்று பாடங் கொள்ளப்பட்டதுபோலும். என்று சொல்லே - எந்நாள் சொல்லுகை எ-று. 'தன்கிளியைச் சொல்லே என்று' எனத் திருமங்கைமன்னன் அருளியதும் ஒப்பிடுக. ஆயின், நேரிழையீர்......சொல்லே' என்று முடிந்துளதே. எனின்,

**''என்னீ ரறியாதீர்போல இவைகூறின்**
**நின்னீர வல்ல நெடிந்தகாய்''**

**''பேசில் நங்காய்; மாமாயன் என்மகளைச் செய்தனகள்**
**மங்கைமீர் மதிக்கிலேனே''** (பெரியதிரு. 5-5-4)

என்ற இடங்களிற்போல, ஒருமைபன்மை மயக்கமாகக் கொண்டு அமைத்துக்கொள்ளத்தகும்.

33. வெண்பாவும் கட்டளைக்கலித்துறையும் தளை வரையறை பெரிதுமுடையன என்பதும், தளைபிறழ நேருமாயின் அவை செய்யுளெனப்படா என்பதும் யாவரும் அறிவர். பெரிய திருவந்தாதி, 40ஆம் வெண்பாவில்—

**"வாய்ப்போ இதுவொப்ப மற்றில்லை வாநெஞ்சே**
போய்ப்போய் வெந்நரகிற் **பூவியேல்"**

என்புழி, 'போய்ப்போய்' என்பது தளை தவறிநிற்றலால் தீபிகையாசிரியர்—

"வெண்டளை பிறழாமைக்காக இரண்டாமடியின் முதற்சீர், தேமாங்காய்ச்சீராய் அமையவேண்டுதல் பற்றிப் 'போய்ப்**போஒய்**' என்று அருளிச் செய்யப் பட்டது" [அருளிச்செய்தவர் தாமே என்றபடி]

என்று எழுதியுள்ளார். இவ்வாறு, தளைபிறழாமற் காத்தலை மேற்கொண்ட அவ்வாசிரியர் கருத்துப் போற்றற்குரியது. ஆனால், இப்பிறழ்வுகள், திவ்யப் பிரபந்தத்திற் பலவிடங்களிலும் அமையும்படி அவர் விட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. [பின்வரும் பாட வமைதிகள் காண்க.]

இனி, 'போய்ப்போஒய்' என்று தீபிகையாசிரியர் செய்த திருத்தத்துள் இரண்டாம் 'போய்'க்கு மட்டும் அளபெடை கூட்டி, பின்னதற்குக் கூட்டாமல் விடப் பட்டுளது. இது, முன்னோர் முறையன்று.

"பாஅய்ப் பாஅய்ப் **பசந்தன்று நுதல்"**
"**வெரீஇ வெரீஇ வருதியோ"**
"**விடாஅ விடாஅ வெரீஇப் பெயரும்"** (யாப். வி.)

என அடுக்குத்தொடர்கள் முழுதும் அளபெடுத்தவாறு, **'போஒய்ப் போஒய்'** என அமைதலே ஏற்கும். ஆனால் இது வெண்பாச்சீர் அன்றாகும். இவ்வாறு தளையமைதிக்காகப்

பின்வருஞ் சொல்லில் அளபெடை சுட்டுவதினும், அச் சொல்லில் பின்னோர் அறியாதிட்டுவழங்கிய புள்ளியை மட்டும் நீக்கிவிடின் வெண்டளை பிறழாத உண்மைப் பாடம் வெளியாதல் காணலாம். அஃதாவது—'போய்ப் **போய** வெந்நரகில்' என்க. 'போய்ப்போய் + அ + வெந் நரகில்' எனப் பிரித்துப் பொருள்கொள்க. போய்ப் போயவ் வெந்நரகில்' என வகரக்கேடில்லாமற் பாடங் கொள்ளினும் அமையும். பெரியாழ்வார்திருமொழியில் (2—6—9)

**''மின்னிலங்கு பூண் விபீடண நம்பிக்கு''**

என்று தீபிகையாசிரியர் பதிப்பித்துப்போந்ததையும் ''பூண(வ்) விபீடணநம்பிக்கு' என்று திருத்தி ஓசைநயம் பெற அமைத்துக் கொள்க. ''மன்னியநாகத் தணைமேல்'' என்ற பெரிய திருமடற்றொடரில், தீபிகையாசிரியரே, 'மன்னி + அ + நாகத்தணைமேல்' என்று பிரித்துப் பொருள்கொண்ட முறைபோன்றதே, மேற் காட்டிய திருத்தம். இவ்விடங்களிலெல்லாம், அகரச்சுட்டு உலகறி பொருண்மேற்று.

34. நான்முகன் திருவந்தாதி 23ஆம் பாசுரத்தில்,

**"வித்து மிடவேண்டுங் கொலோ விடையடர்த்த''**

என்ற முதலடி மூன்றுஞ்சீரைத் தளைபிறழாமல், 'கொல்லோ' என்று திருத்திப்படிக்க. இங்ஙனமே, பெரியதிருவந்தாதி 76ஆம் பாட்டில்—

**''உலகளவும் யானு முளனுவ னென்கொல்லோ''**

என்று தீபிககாரர்கொண்ட பாடத்தையும் 'என்கொல்' எனத்திருந்த ஓதத்தகும்.

**'கொலோவி டையடர்த்த'**

**'ஆவனென் கொல்லோ'**

என்று பிரித்துத் தளைகொள்ளின், செப்பலோசையும் மோனைகளும் சிறந்து திகழும் முன்னோர் திருவாக்குத்

களைக் கெடுப்பதேயாகும். இவ்வபோலக் கொல், கொலோ, கொல்லோ—என்பவை, வெண்பா முதலிய வற்றில் தடுமாறியமைந்த இடங்கள் தீபிகையுரையுட் பலவாகும். அவ்வவ்விடங்களிலே, அவை விளக்கப்படும்.

35. நான்முகன் திருவந்தாதி 26ஆம் பாசுரத்தில்—

**"கண்டுகொள் கண்டாய் கடல்வண்ணு யானுன்னைக்**
**கண்டு கொள்கிற்கு மாறு"**

என்பதனுள், 'கண்டு கொள்கிற்கு மாறு' எனத் தீபிகையாசிரியர் கொண்ட பாடம்,

**'கண்டு கொளகிற்கு மாறு'**

என்று திருத்தற்குரியது. கண்டுகொள்ளவல்லனும்படி என்பது பொருள். 'பணிந்தேத்திக் காண்கிலா' என்ற பெரிய திருமொழித் தொடரிலும் (2-1-9) **'காணகிலா'** எனப் புள்ளிநீக்கி ஓசைநயம்பெற ஓதத்தகும். மேற் காட்டியபடி 'கொள்கிற்கும்' என ஒற்றிட்டோதின் தளைசிதைவதாம். அவ்வாசிரியர் காட்டிய பதவுரை யிலும் ஒற்றிட்டே மூலங்காட்டப்பட்டிருத்தலாலும், தளைப்பிறழ்வுபற்றி அவர் குறிப்பிடாமையாலும் இத்திருத்தம் எழுதப்படலாயிற்று.

36. சிறியதிருமடலில்—

**'பேரா யிரமுடையா** னென்ருள் **பேர்த்தேயும்"**

என்பதனுள், தளைசிதையாவாறு, **'பெயர்த்தேயும்'** என்று திருத்திப்படிக்க. இதுவும் மேற்கூறியபடி, திருத்தம் குறிப்பிடப்படாமையாற் காட்டப்பட்டது.

37. மூன்ருந்திருவந்தாதி 67ஆம் பாசுரம்—

**"ஆங்கு மலருங் குவியுமால் உந்திவாய்**
**ஓங்கு கமலத்தி னெண்போது—ஆங்கைத்**
**திகிரி சுடரென்றும் வெண்சங்கம் வானிற்**
**பகரு மதியென்றும் பார்த்து"**

என்பது. இவ்வெண்பாவில் 'ஒண்போது—ஆங்கை' என்றுள்ள தொடர், 'ஒண்போ—தாங்கை' என்று புணர்தல் விதி. அப்போது வெண்டளை சிதைவதாம். அவ்வாறு தளைதட்டுவது ஆழ்வார்கள் திருவாக்குக்குச் சிறிதும் உரியதன்று. அதனால், 'போது' என்ற குற்றுகரத்தின்பின் நின்ற மெய்ம்முதலான சொல்லொன்று, எப்படியோ கேடுற்றது என்பது அறிஞர்க்கு எளிதிற் புலனாகும். அக் கேடுற்றசொல் யாது? அது, 'தான்' என்பதேயன்றி வேறன்று. அஃதாவது—

**"ஓங்கு கமலத்தி னொண்போது—தான்கைத்**
**திகிரி சுடரென்றும்.........."**

என்று ஆதியிலிருந்த பாடமே, 'ஒண்போ—தாங்கை' எனப் பிற்காலத்துச் சிதைந்து வழங்குவதாயிற்று என்க. **தான்** என்றது, மலர்ந்தும் குவிந்தும் வரும் அஃது என்னும் குறிப்பிற்று; அசைச் சொல்லுமாம். இப்பாடம் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யான விரோதம் ஆகாமையும் நோக்கிக்கொள்க. முதற்றிருவந்தாதி 77-ஆம் பாட்டில் வேங்கடம், பூங்கிடங்கில்-என்பவற்றுக்கு, **நான்கும்** என்ற தனிச்சீர் எதுகையானவாறே, ஈண்டும் ஆங்கு, ஓங்கு என்பவற்றுக்குத் **தான்கை** என்பது எதுகையாயிற்று. இப்போதைப் பாடம், அத்யாபகர் ஓதிய முறையில் சிதைந்துவந்ததேயாகும். இத்தகைய சிதைவுகள் நூல்களிலும் உலகவழக்கிலும் உண்டு. ஈண்டுப் போது தான்கை என்பதன் திரிபான **'போதாங்கை'** என்பது, **சங்கதை** (சங்கு + கதை) போலவும் தான்கை யென்பதன் திரிபான தாங்கை என்பது, புங்கு (புன்கு), நஞ்சை (நன்செய்) போலவும் வந்தன என்க.

38. இராமாநுச நூற்றந்தாதி 48ஆம் பாசுரத்தில்—

**"நிகரின்றி நின்றவென் னீசதைக் குன்னரு ளின்கணன்றிப்**
**புகலொன்று மில்லை யருட்குமஃ தேபுகல்........"**

என்பது பழைய வியாக்யானப்பதிப்பின் பாடம். இதன் முதலடியைத் திவ்யார்த்த தீபிகையாசிரியர்—

**"நிகரின்றி நின்றவென் நீசதைக்கு நின்னரு ளின்கணன்றி"**

என்று திருத்திப் பாடங்கொண்டுள்ளார். நான்முகன் திருவந்தாதி 70ஆம் பாசுரவுரையிலும் இத்திருத்தப் பாடமேகொண்டு, தம் தீபிகையில் இவ்வடியை அவர் மேற்கோள்காட்டியிருப்பது காணலாம். இதனுல், வெண்டளைபிறழாதிருப்பதொன்றே, கட்டளைக் கலித் துறையடியின் இலக்கணம் என்பது அவ்வாசிரியர் கருத்தென்று தெரிகின்றது. இவ்வாருயின், வேறிலக் கணமும் அதற்குச் சிறப்பாக உண்டென்பது அவர் அறியத்தகும். அஃதாவது—நேரசை முதலாகிய கட்டளைக்கலித்துறை, ஓரடிக்கு எழுத்துப் பதினுறும், நிரையசை முதலாகிய அதனடிக்கு எழுத்துப் பதினேழு மாய் வருதல் நியதி என்பதாம். 'நீசதைக்கு நின்னருள்' என்பதனுள் தளைதட்டல் இல்லையேனும், அத்தொடர் கொண்ட அடி, பதினெட்டெழுத்தாய் ஓசைசிதைதல் நோக்குக. ஆகவே, 'நீசதைக் குன்னருள்' என்ற முன்னோர்பாடமே, திருத்தமான பாடம் என்க.

39. பெரிய திருமொழி 9-3-3ஆம் பாசுரத்தில்—

**"தாதுமல்கு தடஞ்சூழ்பொழில் தாழ்வர்த் தொடர்ந்துபின்
பேதை நின்னைப் பிரியேனென் றகன்ரு னிடம்"**

என்பதனுள் 'தாழ்வர்த் தொடர்ந்துபின்' என்று வியாக்யானப் பழம்பதிப்பினும், திபிகைப்பதிப்பினும் காணப்படுகின்றது. ஈண்டு, பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்:—

"(தாதுமல்கு தடஞ்சூழ்பொழில் தாழ்வர்) பூக்கள் உதிர்த்த தாதுக்கள் மிக்கிருந்துள்ள தடாகங்களாலே சூழப்பட்ட பொழில் **பர்யந்தம்**

> **களிலே;** ஒத்த நிலங்களிலே என்றபடி, (தொடர்ந்து) ...போகஸ்ரோதஸ்ஸில் இவள் போனபோன வகைதொறும் வடிம்பிட்டுக்கொண்டு வந்தானு யிற்று. இவளுக்கு ஒருவகையால் ஓர் ஏற்றமுண்டாமபடி பண்ணிற்றிலன். எவ்வளவாகக் கலந்து பிரிந்தால் இவளை இழக்கலாவது, அவ்வளவும் கலந்து விட்டானுயிற்று''

என்று உள்ளது. தடம்சூழ்பொழிலான ஒத்தமைந்த இடத்திலே, கலவியிடைத் தன்மேம்பாடே தோன்றவும், தலைவிக்கு அதனில் ஏற்றமில்லையாம்படியும் அவளை விடாது தொடர்ந்து கலந்து பின் பிரியலாயினன் தலைவன் என்பது கருத்து. இதனுல் '**தாழ்வறத்** தொடர்ந்து பின் அகன்றுன்' என்பதே மூலபாடமாதல் தெளியலாம். தாழ்வு அற–கலவியில் (தலைவனது) குறைவு இல்லை யாம்படி; எனவே, தலைவிக்கு அதனில் ஏற்றமின்மை பெறப்படும். இங்ஙனம்பெற்ற கருத்தையே, வ்யாக்யானத்தின் பின்வாக்கியங்கள் நன்கு விளக்கின. 'ஒத்தமைந்த நிலத்திலே' என்பது பெறும்படி 'பொழிலை **பர்யந்தங்களிலே'** என்றுள்ள தொடரில் பர்யந்தப் பொருளுக்குத் 'தாழ்வர்' என்பது மூலச்சொல்லாக வேண்டுமென்று கருதி 'தாழ்வர்த் தொடர்ந்து' என்ற பாடத்தைப் பின்னுேரெல்லாம் வழங்கிவிட்டனர். உண்மையில், மூலத்தில் 'தாழ்வர்' என்ற சொல் கிடையாது. தாழ்வர் என்பதற்குப் பர்யந்தங்களில் என்ற பொருளும் தமிழ்மொழியில் இல்லை. 'பொழில் பர்யந்தங் களிலே' என்ற அச்சுத்தொடரும் சேராச்சேர்த்தியானது. ஆகவே,

> "**தாதுமல்கு தடஞ்சூழ்பொழில்** தாழ்வறத் **தொடர்ந்துபின்**''

என்றே திருத்தமாக ஓதத்தக்கது.

**40.** பெரியதிருமொழி 6—10—1ஆம் பாசுரத்தில்
"எறிஞர் **அரணழியக் கடந்தநம்பி**"

என்பதனுள் 'எறிஞர்' என்பதை **இரிஞர்** என்று திருத்திப் படிக்க. அரிஞர் - பகைவர் என்பது திவாகரம். "இரிஞர் மகளிர் இலை நெஞ்மலுளீன்ற, வரியிளஞ் செங்காற் குழவி" என்றார் முத்தொள்ளாயிரத்தும். எறிஞர் என்ற வழக்கு முன்னூல்களிற் பயிலாதது. இகர எகரங்களும், ரகர றகரங்களும் ஓதுமுறையிலும் எழுது முறையிலும் மாறிய இடங்கள் பலவாம்.

**41.** பெரிய திருமொழி 6—9—10 ஆம் பாசுரத்தில்,
**"பண்களகம் பயின்றசீர்ப் பாடலிவை பத்தும் வ(ல்)லார்**
**விண்களகத் திமையவராய் வீற்றிருந்து வாழ்வாரே"**

எனபதனுள் 'விண்களகத்து' என்பது 'விண்கழகத்து' என்றோதல் சிறக்கும். விண் கழகம் - விண்ணுலகங்கட்கு ஓலக்கமண்டபமாய்த் தலைமைபெற்ற பரமபதம் எ - று. பரமபதத்துத் திருமாமணி மண்டபமெனினும் ஆம். தீபிகையாசிரியரால்,

"ஈற்றடியில் 'விண்கள் அகத்து' எனப்பிரித் துரைப்பதல்லாமல், 'விண் களகத்து' என்று கொண்டும் உரைக்கலாம். களம் + அத்து, களகத்து (நன்னூல் உருபு. 13); சபையின்கண் என்றபடி"

என்று குறிப்புரை எழுதப்பட்டுள்ளது. இவ்வாறுயின், களம் + அத்து = களத்து என்று புணருமேயன்றிக் களகத்து என்று இடையில் கப்பிரத்யயம் வருதல் தமிழில் இல்லை. இப்பொருளும் புணர்ப்பும் பெரிய வாச்சான்பிள்ளை அருளிய **பதபாடமும்** அல்ல. ஆகவே, களகம் என்று முழுச்சொல்லாகவே கொள்ளத்தகும். பவழம் பவளம் முதலியனபோல, கழகம் களகங்கள் செய்யுளெதுகைகளில் வருதல் மரபேயாம்.

42. பெரியதிருமொழி 9—5—3ஆம் பாசுரத்தே,

**"காலையும் மாலையொற்றுண்டு கங்குல்**
**நாழிகை யூழியின் நீண்டுலாவும்"**

என்ற முதலடியுள், 'ஒற்றுண்டு' என்பது 'ஒத்துண்டு' என்று ஓதத்தக்கது. 'காலையும் மாலையொத்து உண்டு' என்பதற்கு—பாதகவர்க்கம் என்பதை எழுவாயாக வருவித்து, (அது) "காலையிலும் மாலையிற்போலே யிருக்க பாதித்துமுடியாநின்றது" என்றும், காலை என்பதனையே எழுவாயாக்கி—'காலையும் மாலைபோலே பாதகமாகாநின்றது' என்றும் இரண்டுபொருள்கள் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானத்திற் காணப்படு கின்றன. இவ்விரண்டு பக்ஷங்களிலும் 'ஒத்து' என்பதற்குப் 'போலே' என்ற பொருளைக் குறிப்பிட்டு, உவமத்தின் பொதுத்தன்மை விளங்க 'உண்டு' என்பதற்குப் 'பாதகமாக உள்ளது' என்று கருத்து விரித்து அப்பெரியார் உரையருளினர். இஃதறியாமல், 'பாதகமாகாநின்றது' என்ற தொடர் வ்யாக்யானத்தில் உள்ளதைக்கொண்டு, அதற்கு மூலம்வேண்டுமென்று, ஒத்துண்டு என்றிருந்ததை 'ஒற்றுண்டு' என்று மாற்றிப் பின்புள்ளோர்கொண்டபாடம் ஏற்கத்தக்க தன்றாம். என்னை? 'காலை மாலை பாதகமாகாநின்றது' என்று, இடையே உவமவுருபு விரியாமலேகூறின், அது குறித்தபொருளை விளக்காமையோடு, ஒற்றுண்டு என்பது, 'பாதகமாகாநின்றது' என்ற பொருளைச் செவ்வனம் பயவாமையாலும் என்க. எனவே, **மாலையை** யடுத்து 'ஒத்து' என்ற உவமச்சொல் இருப்பது இன்றியமையாதது என்பதும், **உண்டு** என்பது பாதகமாக உள்ளது என்ற பொருள்பட நின்றது என்பதும் அறியத்தக்கன.

---

# மணிவாசகர் நூலகத்தின்

## சிறந்த வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| **டாக்டர். வ. சுப. மாணிக்கம் டி. லிட்.** | |
| கம்பர் (தமிழக அரசின் பரிசு பெற்றது) | 5-00 |
| சிந்தனைக் களங்கள் | 16-00 |
| இலக்கிய விளக்கம் | 5-00 |
| ஒப்பியல் நோக்கு | 6-00 |
| தொல்காப்பியப் புதுமை | 7-00 |
| **டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை டி. லிட்.** | |
| தமிழகப் பெண்மணிகள் | 3-00 |
| சிலம்பின் கதை அமைப்பு | 3-00 |
| **டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்** | |
| தமிழ் பயிற்றும் முறை | 37-50 |
| **டாக்டர் இரா. சாரங்கபாணி** | |
| பரிபாடல் திறன் | 9-00 |
| **டாக்டர் மெ. சுந்தரம்** | |
| நாட்டுப்புற இயல்: தாலாட்டு | 22-00 |
| **டாக்டர் சோ. ந. கந்தசாமி** | |
| தமிழும் தத்துவமும் | 15-00 |
| திருக்குறள் கூறும் உறுதிப்பொருள் | 8-50 |

| | ரூ. பை. |
|---|---|
| **டாக்டர் ந. வீ. செயராமன்** | |
| பாட்டியல் திறனாய்வு | 3-50 |
| பள்ளு இலக்கியம் | 9-50 |
| சதக இலக்கியம் | 6-50 |
| சிற்றிலக்கியச் செல்வம் | 11–50 |
| சிற்றிலக்கிய அகராதி | 10-00 |
| **டாக்டர் சு. சண்முக சுந்தரம்** | |
| தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள் | 13-50 |
| நாட்டுப்புற இலக்கிய வரலாறு | 10-00 |
| நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு | 7-00 |
| **டாக்டர் சு. சக்திவேல்** | |
| பழங்குடி மக்கள் | 10-00 |
| மொழியியல் கலைச்சொல் அகராதி | 5-00 |
| மானிடவியல் கலைச்சொல் அகராதி | 6-00 |
| **டாக்டர் இரா. மோகன்** | |
| டாக்டர் மு. வ. வின் நாவல்கள் | 9-50 |
| **டாக்டர் மா. சு. திருமலை** | |
| தமிழ் கற்பித்தல் | 15-00 |
| **கி. வா. ஜகந்நாதன்** | |
| கவி பாடலாம் | 6-50 |
| வீரர் உலகம் (பரிசு பெற்றது) | 6-00 |
| **எஸ். ஆர். மார்க்கபந்து சர்மா** | |
| சிலம்பின் தனித்தன்மை | 14-00 |
| சிலம்பின் கற்பனை | 15-00 |
| சிவஞான போதம் | 6-50 |
| **மு. சண்முகம் பிள்ளை** | |
| சிற்றிலக்கிய வளர்ச்சி | 10-00 |
| **மு. வை. அரவிந்தன் எம். ஓ. எல்.** | |
| உரையாசிரியர்கள் | 30-00 |
| **பி. எஸ். ராமையா** | |
| மணிக்கொடி காலம் | 18-00 |
| **வல்லிக்கண்ணன்** | |
| பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை | 11-50 |

| | ரூ. பை. |
|---|---|
| **மு. இராகவையங்கார்** | |
| *ஆழ்வார்கள் கால நிலை* | 16-00 |
| **வெ. சாமிநாத சர்மா** | |
| *சமுதாய சிற்பிகள்* | 6-00 |
| **ஜி. சுப்பிரமணிய பிள்ளை எம்.ஏ. பி.எல்.** | |
| *கம்பர் விருந்து* | 6-00 |
| *தமிழ் உள்ளம்* | 5-00 |
| **தி. வை. சதாசிவப் பண்டாரத்தார்** | |
| *இலக்கியமும் கல்வெட்டுக்களும்* | 5-00 |
| *கல்வெட்டுக்கள் கூறும் உண்மைகள்* | 4-00 |
| **ப. கோதண்டராமன் எம்.ஏ. பி.எல்** | |
| *இலக்கியமும் திறனாய்வும்* | 8-50 |
| **வி. எஸ். வி. இராகவன்** | |
| *தாலமி* | 20-00 |
| *மெகஸ்தனிஸ்* | 16-00 |
| *பாஹியான்* | 12-00 |
| *மார்க்கோபோலோ* | 7-00 |
| **அ. லெ. நடராசன்** | |
| *மாவீரன் நெப்போலியன்* | 12-50 |
| **பி. எல். ராசேந்திரன்** | |
| *வெற்றி வீரன் வின்செண்ட் சர்ச்சில்* | 6-00 |
| **சோமலெ** | |
| *இமயம் முதல் குமரிவரை* | 7-00 |
| **மது. ச. விமலானந்தம் எம்.ஏ.** | |
| *சிலப்பதிகாரத் திறனாய்வு* | 5-00 |
| **முல்லை முத்தையா** | |
| *தசாவதாரக் கதைகள்* | 4-25 |
| *பாரதிதாசன் அறுசுவை விருந்து* | 3-75 |
| *தமிழர் வாழ்வியல்* | 5-00 |
| *உலகப் பெரியார் புத்தர்* | 5-00 |
| *டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்* | 3-50 |
| **வ. பெருமாள்** | |
| *இலக்கியமும் வாழ்க்கையும்* | 4-00 |

| | ரூ. பை. |
|---|---|
| **த. மணிமாறன் எம். ஏ.** | |
| இலக்கியக் கலை | 4-00 |
| **மு. அண்ணாமலை எம்.ஏ. எம்.லிட்.** | |
| *வள்ளுவர் தனித்தன்மை* | 7-75 |
| **செ. வைத்தியலிங்கம் எம்.ஏ., எம்.லிட்.** | |
| அருள்வாக்கு | 3-75 |
| **மு. சதாசிவம் எம்.ஏ., எம்.லிட்.** | |
| எதிர்ப்பத அகராதி | 9-50 |
| **வெ. கிருட்டினசாமி எம்.ஏ., எம்.பில்.** | |
| குழந்தைக் கவிஞரின் இலக்கியத் திறன் | 7-50 |
| **அரங்க சீனிவாசன்** | |
| கம்பன் திருப்புகழ் | 3-50 |
| **ச. மெய்யப்பன் எம்.ஏ.** | |
| கபிலர் | 4-00 |
| தாகூர் | 7-75 |
| புதிய ஆத்தி சூடிகள்—12. | 2-00 |
| **சு. சமுத்திரம்** | |
| உறவுக்கு அப்பால் | 5-00 |
| ஒரு சத்தியத்தின் அழுகை | 6-00 |
| காகித உறவு | 5-75 |
| ஊருக்குள் ஒரு புரட்சி | 9-00 |
| வளர்ப்பு மகள் | 7-00 |
| உயரத்தின் தாழ்வுகள் | 7-00 |
| **எம். வி. வெங்கட்ராம்** | |
| ஒரு பெண் போராடுகிறாள் | 20-00 |
| அரும்பு | 20-00 |
| வேள்வித் தீ! | 6-00 |
| நித்திய கன்னி | 6-00 |
| **ப. ஜீவகன்** | |
| ஓர் ஆத்மாவின் அந்தரங்கம் | 8-50 |
| **அக்ர முதல்வன்** | |
| ஒரு அக்ரஹாரம் ஒளியிழக்கிறது | 4-25 |

மணிவாசகர் நூலகம்
சிதம்பரம்



மணிவாசகர் நூலகம்
சிதம்பரம்

